# உதயன்

www.onlineuthayan.com

54: பக்கங்கள் சுடர் 27 கதிர் 316 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 21 ஞாயிற்றுக்கிழமை (07/10/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 20.00





# தமிழர் தூக்கப் போகும் ஆயுதத்தை இனிமேல் சர்வதேசமே முடிவு செய்யும்

## ஐ.நா. குழுவினரிடம் யாழ்.பொது அமைப்புக்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 7

தமிழர்கள் எதிர்காலத்தில் எந்த ஆயுதத்தைத் தூக்க வேண்டும் என்பதைச் சர்வதேசம் தான் தீர்மானிக்கப் போகின்றது. இலங்கை அரசை நம்புவதற்கு தமிழர்கள் இனியும் தயாராக இல்லை. இவ்வாறு நேற்று யாழ். வந்த ஐ.நா.துணைச் செயலாளர் அஜய் சிப்பரிடம் யாழ்.பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உறுதியாக எடுத்துரைத்தனர்.

யாழ்.மாவட்டத்துக்கு நேற்று சனிக்கிழமை வருகை தந்த ஐ.நா. துணைச் செயலாளர் அஜய் சிப்பர் தலைமையிலான குழுவினர் யாழ்.பொது அமைப்பின் பிரதிநிதிகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் சந்தித்துக் கலந்துரையாடினர். சுமார் ஒன்றரை மணி நேரத்துக்கும் மேலாக இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின் ஆரம்பத்தில் இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி சுபைனோ நண்டி உரை நிகழ்த்தினார். இதில் மனிக்பாம் முகாம் மூடப்பட்டதை வரவேற்றார்.

இதன் பின்னர் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்தனர்.

சர்வதேசத்துக்கு வெளியாவில் மனிக்பாம் மூடப்பட்டதாகக் காண்பித்து, நந்திக் கடல் அருகே சூரியபுரம் காட்டுப் பகுதியில் இலங்கை அரசு இன்னொரு மனிக்பாம் முகாமை திறந்து வைத்துள்ளது. இந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு மீளவும் திரும்ப முடியாமல் அடிப்படை வசதிகள் எதுவுமற்றுக் காட்டுக்குள் வாழ்கின்றனர் என்று அவர்கள் ஐ.நா. குழுவிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அபிவிருத்தியூடாக நிரந்தரத் தீர்வை அடைய முடியாது. நிரந்தர தீர்வின் மூலமே அபிவிருத்தியை அடைய முடியும். வீதிகள் திருத்தப்படுகின்றன. கட்டடங்கள் கட்டப்படுகின்றன. இவையெல்லாம் உங்களின் பார்

பார்க்க பக்கம் 4

## 60 போராளிகளுக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டுக்கள்

### அரசு அதிரடி நடவடிக்கை

கொழும்பு, ஒக் 7

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தீவிர உறுப்பினர்களாக இருந்த 60 போராளிகளுக்கு எதிராக போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தி இலங்கை அரசு வழக்குத் தொடரவுள்ளது.

இலங்கையில் இடம் பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது இலங்கைப் படைத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-

பார்க்க பக்கம் 4

## சிறுவனின் உயிரை குடித்தது டெங்கு

### மேலும் பலர் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ்.மாவட்டத்தில் மீண்டும் டெங்குக் காய்ச்சல் தலைதூக்கியுள்ளது. டெங்கு நோயால் பீடிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கொக்குவிலைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் சிகிச்சை பயனின்றி நேற்று அங்கு உயிரிழந்தான்.

இதேவேளை, நேற்று சனிக்கிழமை பிற்பகல் தாயொருவரும் அவரது பிள்ளையும், மற்றுமொருவருமாக 3 பேர் டெங்கால் பீடிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 5 பேர் டெங்குத் தாக்கத் துக்குஉள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. பார்க்க பக்கம் 4

**5** இந்த ஆண்டு இறுதிக்குள் மாங்குளம் வரை ரயில் சேவையை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

**6** புதுக்குடியிருப்பு பிரதேசத்திலிருந்த 530 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 605 பேர் கடந்த வெள்ளிக் கிழமை சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

**21** விலகல் முறையிலான கிரிக்கெட் போட்டி ஒன்றில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி அணியை 7 இலக்குகளால் வெற்றி கொண்டுள்ளது.

## மூதூர் படுகொலை குறித்து ஐ.நா. விசாரணை அவசியம்

### 'அக்ஷன் பெய்ம்' அமைப்பு கோருகிறது

கொழும்பு,ஒக்.7

2006 ஆம் ஆண்டு மூதூரில் கொல்லப்பட்ட எமது பணியாளர்களின் கொலைகள் குறித்த சுயாதீனமான விசாரணைகளை நடத்துமாறும், குற்றவாளிகள் யார் என்பதை கண்டறியுமாறும் ஐ.நாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது பட்டினிக்கு எதிரான நடவடிக்கைகள் அமைப்பு (அக்ஷன் பெய்ம்).

இந்தப் பணியாளர்கள் கொல்லப்பட்டு ஆறு ஆண்டுகள் கடந்த நிலையில் இது

பார்க்க பக்கம் 4

## முன்னாள் போராளிகள் 32 பேர் இம்மாத இறுதியில் விடுதலை

கொழும்பு,ஒக் 7

புனர்வாழ்வு பெற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் சிலர் இந்த மாதம் 30ஆம் திகதி சமூகத்துடன் இணைக்கப்படவுள்ளதாகப் புனர்வாழ்வு ஆணையாளர்

பார்க்க பக்கம் 4

## விடைத்தாள் திருத்தல் நாளை ஆரம்பமாகும்

### பரீட்சை ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.7

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் போராட்டத்தால் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்துவதில் ஏற்பட்டிருந்த சிக்கல்கள் தீர்க்கப்பட்டுள்ளன. நாளை திங்கட்கிழமை முதல் விடைத்தாள்களைத் திருத்தும் பணிகள் ஆரம்பமாகும் என்கிறார் பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.

பார்க்க பக்கம் 4

## செய்தியாளர் ஹரிசனின் குற்றச்சாட்டு பொய்யாம்

கொழும்பு,ஒக் 7

பி.பி.சி. சர்வதேச ஊடகத்தின் முன்னாள் ஊடகவியலாளரினால் சுமத்தப்பட்டு வரும் போர்க் குற்றச்சாட்டுக்

பார்க்க பக்கம் 4

## தமிழகத்தில் இலங்கையருக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல்கள்

### வெளிவிவகார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு,ஒக் 7

தமிழகத்துக்கான இலங்கையின் பயணக் கட்டுப்பாடுகளில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை.

இன்னமும் தமிழகத்துக்குச் செல்லும் இலங்கையர்களுக்கு அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன. எனவே இந்தியாவின் தமிழகத்துக்குப் பயணிக்கும் இலங்கையர்கள் எச்சரிக்கையுடன்

பார்க்க பக்கம் 4

## பேச்சுக்கள் வெற்றியளித்துள்ளன

கொழும்பு,ஒக் 7

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதத்தை கல்விக்கு ஒதுக்கீடு செய்வது தொடர்பாக நேற்று இடம்பெற்ற அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடனான சமரசப் பேச்சுக்கள் வெற்றியளித்துள்ளதாகப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் கலாநிதி தேவசிறி தெரி

பார்க்க பக்கம் 4

## பொய்காரர் ஆட்சி செய்யும் நாடு இலங்கை

கொழும்பு, ஒக் 7

பொய்காரர்கள் ஆட்சி செய்யும் நாடாக இலங்கை மாறியுள்ளதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

ஒரு காலத்தில் இலங்கை

பார்க்க பக்கம் 4

## தீர்வு குறித்த அரசின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும்

### வலியுறுத்துகிறார் சொல்ஹெய்ம்

ஒஸ்லோ,ஒக் 7

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினை, அதற்கான தீர்வு என்பன குறித்து தனது நிலைப்பாட்டை இலங்கை அரசு வெளிப்படுத்த வேண்டுமென நோர்வே அரசின் முன்னாள் அமைச்சரும் இலங்கை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான நோர்வேயின் சமாதானத் தூதுவராகச் செயற்பட்டவருமான எரிக் சொல்ஹெய்ம் இலங்கை அரசிடம் கோரியுள்ளார்.

முன்னாள் பி.பி.சி. செய்தியாளரான பிரான்ஸிஸ் ஹரிசனால் எழுதப்பட்ட இன்னமும் சாவுகள் கணக்கிடப்படுகின்றன (Still counting the Dead) என்ற நூலின் வெளியீட்டு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கோரியுள்ளார்.

இலங்கை அரசு, இலங்கைத் தமிழ் மக்களின் மனங்களைக் கவர்வதற்கான அவசர நடவடிக்கைகளை மேற்கொண்டாக வேண்டும். அதுவே இன்றைய அவசர - அவ

பார்க்க பக்கம் 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஐ.நா. துணைச் செயலரின் கேள்விகளுக்கு யாழ். அரச அதிபர் மழுப்பலான பதில்கள்



யாழ்ப்பாணம், ஒக்.7

யாழ்.மாவட்டத்தில் படையினரால் காணிகள் அபகரிக்கப்படுகின்றனவா? உயர் பாதுகாப்பு வலயங்கள் காரணமாக மக்கள் மீள்குடியமர்வில் தாமதம் ஏற்பட்டுள்ளதா? என்று ஐ.நா.துணைச் செயலாளர் நாயகம் அஜய் சிப்பர் எழுப்பிய கேள்விகளுக்கு யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மழுப்பலாக பதிலளித்ததுடன் யாழ்.மாவட்டத்தில் எதுவித பிரச்சினைகளும் இல்லையென்றும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் துணைச்செயலாளர் நாயகமும் ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் பிராந்தியப் பணிப்பாளருமான அஜய் சிப்பர், இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி சுபைனோ நண்டி, ஐ.நாவின் இலங்கைக்கான இயக்குநர் ராஷனா மற்றும் பிரதி இயக்குநர் இன்ரிகோ ஆகியோரைக் கொண்ட குழுவினர் யாழ்.மாவட்டத்துக்கு நேற்று சனிக்கிழமை வருகை தந்தனர்.

இந்தக் குழுவினர் யாழ்.மாவட்ட அரச அதிபர் தலைமையிலான குழுவினரை நேற்று முற்பகல் 11.45 மணியளவில் யாழ்.மாவட்டச் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போதுஐ.நா. துணைச் செயலாளரால், யாழ்.மாவட்டத்தில் படையினரால் காணிகள் அபகரிக்கப்படுகின்றனவா? என்றும், உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக மக்கள் மீள்குடியமர்வு தாமதிக்கப்படுகின்றதா? அளவுக்கு அதிகமான இராணுவப் பிரசன்னத்தின் மத்தியில் மக்கள் வாழ்வதாக சொல்லப்படுவது உண்மையா? என்றும் அரச அதிபரிடம் கேள்விகள் எழுப்பப்பட்டன.

இவற்றுக்கு மழுப்பலாகப் பதிலளித்த அரச அதிபர் யாழ்.மாவட்டத்தில் எதுவித பிரச்சினைகளும் இல்லை என்றும் சுமுகமான சூழ்நிலை நிலவுவதாகவும் ஐ.நா. துணைச் செயலாளர் நாயகத்திடம் தெரிவித்தார்.

ஐ.நா.குழுவினருடனான சந்திப்புத் தொடர்பில் உத்தியோகபூர்வமாகக் கருத்துத் தெரிவித்த யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம்,

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திச் செயற்பாடுகள், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் ஐ.நா.அதிகாரிகளுக்கு விளங்கப்படுத்தினோம்.

உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளில் உள்ளூர் மக்களின் பங்களிப்பு எந்தளவில் உள்ளது என்று ஐ.நா.அதிகாரிகள் கேட்டனர். இதன்போது வெளி மாவட்டத்தவர்கள், இங்குள்ள மக்கள் இணைந்து உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்று கூறினோம்.

இங்கு பல்வேறுபட்ட சமயத்தினரும் வசிப்பதால் அவர்கள் எவ்வாறு ஒற்றுமையாக வாழ்கின்றனர் என்று அவர்கள் கேட்டார்கள். சர்வ மத குழுவினரால் சகல மதங்களும் ஒன்றிணைந்து செயற்படுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவித்தேன்.

மேலும் சிங்கப்பூரின் தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஐ.நா.அபிவிருத்தித் திட்டம் இணைந்து மேற்கொண்டு வரும் நிர்வாக அலுவலர்களுக்கான சிறப்புப் பயிற்சிகளில் எங்களது அலுவலர்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் விடுத்த வேண்டுகோளை அவர் உடனடியாகவே ஏற்றுக்கொண்டார்.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு எவ்வாறான உதவிகள் வழங்கப்படுகின்றன தொடர்பிலும் ஐ.நா.அதிகாரிகள் ஆராய்ந்தனர் என்று அரச அதிபர் கூறினார்.

மீளக் குடியமர்த்தப்பட வேண்டிய மக்கள், இராணுவப் பிரசன்னம், உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பில் ஐ.நா.அதிகாரிகள் எதுவும் வினவவில்லையா எனக் கேட்டதற்கு, இல்லை என்று அவர் பதிலளித்தார். (த-5)

## பிரதித்திட்டமிடல் பணிப்பாளர்களாக 8 பேர் பதவி உயர்வு

வடமராட்சி, ஒக். 7

யாழ். மாவட்டத்தில் கடமைபுரியும் இலங்கைத் திட்டமிடல் சேவை வகுப்பு II ஐச் சேர்ந்த 8 அலுவலர்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சினால் பிரதித்திட்டமிடல் பணிப்பாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டச் செயலகத்தைச் சேர்ந்த திருமதி செ. நிக்கலஸ்பிள்ளை, திருமதி ஆர். மோகனேஸ்வரன், க.மகேஸ்வரன், தி.மகேஸ்வரகுமார், கரவெட்டி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஜி.ஸ்ரீபாஸ்கரன், சாவகச்சேரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த திருமதி இ.இரகுநாதன், உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த திருமதி ர.நகுலேஸ்வரன், பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த திருமதி த.ஜெயராசா ஆகியோருக்கே இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

பதவி உயர்வு பெற்ற இந்த 8 பேரும் முன்னர் உதவித் திட்டமிடல் பணிப்பாளராகப் பதவி வகித்து வந்துள்ளார்கள்.

இதேவேளை, இவர்களை திட்டமிடல் சேவையின் முதலாம் தரத்துக்கு உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 13ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. (த-5-8)

# இலங்கை அகதி குறித்த தீர்ப்பை மதிக்கத் தவறியது ஆஸி. அரசு

## சட்டத்தரணிகள் குற்றச்சாட்டு

கான்பரா,ஒக் 7

ஆஸ்திரேலிய அரசு இலங்கைத் தமிழ் அகதி தொடர்பில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உரியமுறையில் நடைமுறைப்படுத்தவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கூறி, தஞ்சக் கோரிக்கையை மறுக்க முடியாது. அத்துடன் அகதிகளை தடுத்து வைக்கவும் முடியாது என்று நேற்று முன்தினம் ஆஸ்திரேலிய உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இந்த நிலையில், குறித்த தீர்ப்பின்படி பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று தெரிவிக்கப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள 50 இற்கும் மேற்பட்ட அகதிகளை ஆஸ்திரேலிய அரசு விடுவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள ஆஸ்திரேலிய சட்டமா அதிபர் நிக்கலோ ரிக்சன், தாம் நீதிமன்றத்தின் தீர்ப்பை கவனமாகப் பரிசீலித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஆஸ்திரேலிய அரசு ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று குறிப்பிட்டுள்ள அகதிகளின் சட்டத்தரணிகள், நீதிமன்றத் தீர்ப்பின்படி தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

ஏற்கனவே நீதிமன்றம் அகதிகளுக்குச் சார்பாக வழங்கிய தீர்ப்புகளை ஆஸ்திரேலிய அரசு நடைமுறைப்படுத்தாமல் குடிவரவு கொள்கைகளை மாற்றுவதிலேயே கவனம் செலுத்தி வந்துள்ளமையையும் அகதிகளின் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (த)

# கூட்டமைப்பின் இந்தியப் பயணம் ரெலோவுக்குள் கருத்து வேறுபாடு

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இந்தியப் பயணம் தொடர்பில் ரெலோ இயக்கத்திற்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரெலோ இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் குறித்த பயணத்தில் தமது கட்சி பங்கேற்கும் என்று முடிவெடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ள அதேவேளை அதன் அரசியல் பிரிவுத் தலைவர் எம்.கே. சிவாஜிலிங்கம் அந்தப் பயணத்தில் தமது கட்சி பங்கெடுப்பது தொடர்பில் முடிவெடுக்கவில்லை என்று கூறியுள்ளார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் இந்தியப் பயணம் தொடர்பில், ரெலோவின் அரசியல் தலைவர்எம்.கே.சிவாஜிலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற ஐந்து கட்சிகளின் பிரதிநிதிகளையும் இந்தியப் பயணத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும். அதனைவிடுத்து மூன்றுகட்சிகள் அடங்கியதுதுக் குழுதான் செல்லும் என்ற முடிவு எடுக்கப்பட்டால் ரெலோ இயக்கம் அந்தப் பயணக் குழுவில் பங்குபற்றுவதா? இல்லையா? என்ற முடிவை எடுக்கும் என்று தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை தொடர்பில் ரெலோ இயக்கத் தலைவர் செல்வம் அடைக்கலநாதனிடம் கேட்டபோது,

குறித்த அறிக்கை எமது கட்சியின் அறிக்கையில்லை. அது சிவாஜிலிங்கத்தின் தனிப்பட்ட கருத்து.

அத்துடன் இந்தியாவுக்கு அந்தக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் அழைத்துச் செல்வதற்கு எமக்கு விருப்பமுண்டு. அவர்களை அழைத்துச் செல்லவில்லை என்பதற்காக குறித்த இந்தியப் பயணத்தில் நாம் பங்கெடுக்காமல் விடமாட்டோம். இந்தியப் பயணத்தில் எமது ரெலோ இயக்கம் பங்குபற்றுவது என்று ஏற்கனவே முடிவெடுக்கப்பட்டுள்ளது - என்றார். (த-5)

# வன்னியில் பெண்களின் துன்பங்களை நோக்காமல் பெண்ணுரிமை பேசுவதா?

## கொதிக்கிறார் பிரியாணி குணரத்ன

கொழும்பு,ஒக் 7

போரினால் சொல்லொணாத் துயரங்களை அடைந்து இன்று வன்னி பெரு நிலப்பரப்பில் நிர்க்கதியாகக் கண்ணீர் சிந்தி வாழும் தமிழ்ப் பெண் சகோதரிகளின் துன்பங்களைக் கணக்கில் எடுக்காமல், அவர்களின் உரிமைப் போராட்டங்களை உள்ளடக்காமல், இந்த நாட்டில் எந்த மூலையிலும் எவரும் பெண்ணுரிமை பற்றிப் பேசமுடியாது, பேசவும் கூடாது என ஜனநாயக மக்கள் முன்னணியின் நிர்வாக செயலாளரும், கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான பிரியாணி குணரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு மருதானை சி.எஸ்.ஆர் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சமூக நீதிக்கான பெண்கள் நடவடிக்கை அமைப்பின் மாநாடு இடம்பெற்றது. விக்கிரமபாகு கருணாரத்ன, சிறிதுங்க ஜெயசூரிய, ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளர் பாஸ்கரா ஆகியோர் கலந்துகொண்ட இந்த மாநாட்டில் உரையாற்றிய பிரியாணி குணரத்ன மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு - கிழக்கில் 90,000 விதவைகள் இருகின்றார்கள் என்ற ஒரு கொடும் உண்மையே அனைத்து கொடுமைகளையும் படம் பிடித்துக் காட்டுகிறது. இதைப் புரிந்துகொண்டாலே வடக்கு-கிழக்கு பெண்களின் அவல வாழ்வு பற்றிப் புரியும். குடும்பங்களை தலைமை தாங்கும் பெண்கள் நிலைமையில், வாழ்வாதார தேவைகள் கிடைக்காமை, பலவந்தமாக மாற்று இடங்களில் குடியேற்றம், காணிகள் பறிபோகின்றமை, இராணுவ நிர்வாகம், பாலியல் வன்புணர்வு, பிள்ளைகளின் கல்வித் தேவைகள் ஆகிய பல்வேறு சவால்கள் வன்னியிலே வாழும் தமிழ் பெண்களை விரக்தி நிலைமைக்குத் தள்ளியுள்ளன.

சொந்த நிலங்கள் பறிக்கப்பட்டுப் பரிச்சயம் இல்லாத காட்டு நிலங்களில் குடியேற்றப்படுகின்றமைக்கு, முல்லைத்தீவு கேப்பாபிலவு கிராம மக்களின் அவல வாழ்வு கண்முன் நிற்கும் உதாரணமாகும். இங்கே பெண்களே பெருந்துன்பங்களை எதிர்நோக்குகின்றார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

யுத்தத்தில் கொல்லப்பட்ட தமது பிள்ளையின், கணவரின், தந்தையின் நினைவுக் கல்லறைகளைப் படைத்தரப்பினர் அழித்துள்ளதைத் தமிழ் பெண்களால் மன்னிக்க முடியாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். கொல்லப்பட்டவர்களை நினைவுகூர முடியாதுள்ள வன்னி நிலதமிழ் பெண்களின் இன்றைய யதார்த்தத்தை நாம் அறியவேண்டும். இறந்தவர்களை நினைவுகூர அவர்களுக்குத் தேசிய துக்க தினத்தை நிர்ணயிக்கவாவது நாம் வழி காண வேண்டும்.

வடக்கு-கிழக்கின் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தமிழ்ப் பெண்களை ஆக்கிரமித்துள்ளன. இராணுவ வலயங்களும், படைத்தரப்பினரின் தொந்தரவுகளும் வன்னிப் பெண்களை அச்சுறுத்துகின்றன-என்றார். (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடிதண்ணீர்க் கிணற்றுக்குள் ஒயில்



வலி. வடக்கு, ஒக் 07

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள குடிதண்ணீர் கிணற்றுக்குள் ஒயில் விசிறப்பட்டமையால் பல நூற்றுக் கணக்கான மக்கள் குடி தண்ணீர் பெறுவதில் பெரும் சிரமத்துக்கு ஆளாகினர்.

கடந்த வெள்ளிக் கிழமை நண்பகல்வேளையில்யாழ். இந்துக் கல்லூரிக்கு அகில் உள்ள வீதியில் தார் இடும் பணிக்கு முன்பாக இயந்திரத்தின் மூலம் ஒயில் வீசப்பட்டது.

இவ்வாறு வீசும் வேளையில் குறிப்பிட்ட குடி தண்ணீர் கிணறு இருக்கக் கூடியதாக அதனை கருத்தில் கொள்ளாது ஒயில் வீசப்பட்டமையால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது. இதனால் பொது மக்கள் குடிதண்ணீரைப் பெற முடியாத நிலைமை ஏற்பட்டது.

குறிப்பிட்ட ஒயிலை வீசியவர்களுடன் குடி தண்ணீர் பெற வந்த பொது மக்கள் கதைக்க முற்பட்ட வேளையில் தமக்கு மொழி விளங்கவில்லை எனக் கூறி அந்த இடத்தில் இருந்து சென்றுவிட்டனர்.

இந்த நிலையில் குடி தண்ணீர் பெறுவதற்காக வந்த பலரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

குறிப்பிட்டகிணறு இறைக்கும் வரை அந்தக் கிணற்றில் இருந்து குடி தண்ணீர் பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளமையால் பொது மக்கள் குடி தண்ணீர் பெற அவலப்படும் நிலை இந்தப் பொறுப்பற்றவர்களால் ஏற்பட்டுள்ளது என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

# சேதமுற்ற கடற்கரை வீதி மதகு புனரமைக்கப்படாத நிலையில்



யாழ்ப்பாணம், ஒக்.7

யாழ்.கோட்டைக்குப் பின்புறமாகக் கடற்கரை வீதியில் உள்ள மதகு ஒன்று கடந்த பல வருடங்களாகப் புனரமைக்கப்படாமையால் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது.

கடற்கரை வீதியில் இராணுவ முகாமுக்கு அருகில் இந்த மதகு அமைந்துள்ளது.

கோட்டையில் மோதல் இடம்பெற்ற வேளையில் சேதமடைந்த இந்த மதகு இன்றுவரை புனரமைக்கப்படாமலேயே உள்ளது.

தற்போது மதகுக்குப் போடப்பட்டிருந்த இரும்புத் தண்டவாளங்கள் உக்கிச் சேதமடைந்துள்ளமையால் அதன் ஊடாகப் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி ஒருவரிடம் கேட்ட போது; மதகைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (த-17)

# அனுமதி பெறாத கட்டடங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.7

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் சபையின் அனுமதி பெறாமல் அமைக்கப்பட்டுள்ள சகல கட்டடங்களின் உரிமையாளர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளதாக சபையின் தலைவர் ப.வசந்தகுமார் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சபைக்கு உட்பட்ட பகுதியில் சபையின் அனுமதி பெறாமல் சில இடங்களில் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தக் கட்டடங்களை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளைச் சபை மேற்கொள்ளவுள்ளது.

எனவே கட்டடம் அமைப்போர் சபையின் முன் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும் .


அத்துடன் வியாபார உரிமத்தை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் சபையுடன் தொடர்பு கொண்டு அதனைப் பெற வேண்டும்.

இவ்வாறு வியாபார உரிமம் பெற்றவர்கள் அதை வியாபார நிலையங்களின் முன்னால் பார்வைக்கு வைக்க வேண்டும். அப்படிச் செய்யாத வியாபார நிலையங்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார். (த-17)



காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் இடம்பெற்ற வருடாந்த பரிசளிப்புவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரனிலாஸ் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார். (ம-250)

# யாழ்ப்பாணத்துக்கு கடத்தப்பட்ட 20 மாடுகள் பொலிஸாரால் மீட்பு



யாழ்ப்பாணம், ஒக்.7

கிளிநொச்சியில் இருந்து சட்டவிரோதமாக யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்பட்ட 20 மாடுகளை நேற்று முன்தினம் யாழ்.பொலிஸார் கைப்பற்றினர்.

இந்த மாடுகள் அனுமதி பெறாமல் சட்டவிரோதமாக வாகனம் ஒன்றில் யாழ்ப்பாணத்துக்குக் கடத்தி வரப்பட்டிருந்தன என்று பொலிஸார் கூறினர்.

யாழ்.பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் யாழ்.மனோகராச் சந்தியில் வைத்து பொலிஸார் இந்த மாடுகளைக் கைப்பற்றினர்.

மாடுகளைச் சட்டவிரோதமாக வாகனத்தில் கொண்டு வந்தவர்களைப் பொலிஸார் விசாரணைக்காகப் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். அத்துடன் மாடுகளும் யாழ்.பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன. (த-17)

# மாற்றுவலுவுள்ளோரின் சக்தியை சமூகத்துடன் இணைக்கும் பயிற்சி



மாற்றுவலுவுடைய மாணவர்களின் செயற்பாடுகளையும், கல்வியையும் ஆக்கத் திறன்களையும், ஊக்கப்படுத்துவதற்காக விசேட கல்வி ஆசிரியர்களுடன் சாதாரண ஆசிரியர்களையும் இணைத்து 'திதொற' அமைப்பினால் பயிற்சி வழங்கப்படுகிறது.

இந்தப் பயிற்சிப்பட்டறை சாதாரண ஆசிரியர்கள் 50 பேரையும், விசேட கல்வி ஆசிரியர்கள் 15 பேரையும் இணைத்தே நடத்தப்படு கின்றது என 'திதொற' அமைப்பின் இணைப்பாளர் கலாசூரி றோகண தேவா தெரிவித்தார்.

'திதொற' நிறுவனம் திருமறைக் கலாமன்றம் மற்றும் வலிகாமம் கல்வி வலயமும் இணைந்து நடத்திய மாற்றுவலுவுடையோரின் சக்தியை சமூகத்துடன் இணைத்துக் கொள்ளுதல் என்னும் தொனிப் பொருளில் அமைந்த பயிற்சிப் பட்டறை திருமறைக் கலாமன்றத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

மாற்றுவலுவுடையோரை சமூகம் வேறுபடுத்திப் பார்க்கிறது. இவர்களின் தேவைகள் குறித்து கவனம் செலுத்துவது இல்லை.

மாணவப் பருவத்தில் உள்ளவர்களுக்கு பாடசாலைகளில் சிறந்த ஆசிரியர்கள் வேண்டும். மாணவர்களை எப்போதும் மகிழ்ச்சியாக வைத்திருப்பதோடு அவர்களின் திறமைகளையும் கண்டுகொள்ளுதல் அவசியம்.

எமது நாடகக் கலைச் சிகிச்சை முறைகளில் பங்கேற்கும் மாற்றுவலுவுடைய மாணவர்கள் தமது திறமைகளை நன்கு வளர்த்துக் கொள்ள முடியும்.

யாழ். மாவட்டத்தில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த 13 மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது. இந்தப் பயிற்சிப் பட்டறையில் நடனம், நாடகம் ஆகியன பயிற்றுவிக்கப்படுவதோடு ஆசிரியர்களுக்கும் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இந்தப் பயிற்சிப் பட்டறைக்காக விசேடமாக பயிற்சியாளர்களையும் வரவழைத்து பயிற்சியளிக்கப்படுகிறது- என்றார்.

இந்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதரக அதிகாரி வி.மகாலிங்கம், வலிகாமம் விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் தி.முருகானந்தன், இந்தியாவிலிருந்து வருகைதந்த ஜூரி பலூவா மற்றும் மாற்றுவலுவுடைய மாணவர்கள், ஆசிரியர்கள், விசேட கல்வி ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-13-135)

## நிகழ்வுகள் இன்று

### பொதுக்கூட்டம்

மானிப்பாய் பொலிஸ் பிரிவிலுள்ள சிவில் பாதுகாப்புக் குழுவின் பொதுக் கூட்டம் இன்று மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இ.மல்கம் பிளேட் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் வட பிராந்திய பொலிஸ் மா அதிபர் எரிக்பெரேரா கலந்து கொள்வார். இந்தக் கூட்டத்துக்கு பிரதேச செயலர் பிரிவு சிவில் பாதுகாப்பு குழு, கிராமிய சிவில் பாதுகாப்பு குழு, மானிப்பாய் வர்த்தக சங்கம், சங்கானை வர்த்தக சங்கம், மானிப்பாய் ஓட்டோ சாரதி சங்கம், சங்கானை ஓட்டோ சாரதிகள் சங்கம் ஆகியன கலந்து கொள்ளவுள்ளன. (ம-100)

### சிறுவர் தினம்

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் வடமாகாண கிராமிய சிறுவர்கள் பங்கு பெறும் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கௌசல்யாதேவி அந்தோனிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ம-14)

### பாராட்டு விழா

சுன்னாகம் சூராவத்தை அறிவாலயா கல்வியகத்தின் ஏற்பாட்டில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டு விழா மாலை 4 மணிக்கு கல்வியகத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் இ.தேவகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரதி நகுலேஸ்வரன் கலந்து கொள்வார். (ம-14)

### நினைவு நிகழ்வு

யாழ்ப்பாண சர்வதேச மார்க்சிய குழு நடத்தும் ''கெக்டர் அபயவர்த்தன'' நினைவு நிகழ்வு மாலை 4.30 மணிக்கு டி.சி.எம்.தனியார் கல்வி நிறுவனத்தில் எ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் சொ.சிவபாலன் உரை நிகழ்த்துவார். (ம-14)

### ஆண்டு விழா

வல்வை கணபதி படிப்பகத்தின் 45 ஆவது ஆண்டு விழாவும், பாலர் தினவிழாவும் மாலை 4.30 மணிக்கு நெடியகாடு பிள்ளையார் கோயில் வடக்கு வீதியில் படிப்பக தலைவர் ச.ஜெயகணேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-14)

### வெளியீட்டு நிகழ்வு

நல்வழி நூல் வெளியீடு சம்பூர்ண அரிச்சந்திரா இறுவெட்டு அறிமுகம் என்பன காலை 9 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி உப அலுவலக பொது நூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. சாவகச்சேரி பிரதேச [illegible] பிரதம விருந்தினராக நிகழ்வில் கலந்து கொள்வார். கோவிலாக்கண்டி மேற்கைச் சேர்ந்த கந்தையா கனகம்மா தம்பதியரின் நினைவு நிதியம் சாவகச்சேரிப் பிரதேச சபையின் நாவற்குழி உப அலுவலகப் பொதுநூலகத்துடன் இணைந்து நிகழ்வை நடத்துகிறது. மாணவர்களின் வளர்ச்சியை நோக்காகக் கொண்டு வெளியிடப்படும் இந்த நூல் இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

### கைதடியில் பயிற்சிப் பட்டறை

கிராமிய உழைப்பாளர் அபிவிருத்தி மையம் நடத்தி வரும் ஆளுமை அபிவிருத்தி அரங்குசார் பயிற்சிப் பட்டறையின் இறுதி நாள் நிகழ்வுகள் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கைதடி நவீல்ட் பாடசாலை அரங்கில் நடைபெறவுள்ளன.

இன்றைய இறுதி நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட கலைஞர்களின் அரங்க நாடகமும் இடம்பெறும். (த-288)

Velono

உலகின் முதற்தரமான குழந்தைகளின் பாவனைக்கு உகந்த உற்பத்திப் பொருள்களை மீள் விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்களை வட மாகாணத்தில் தேடுகின்றோம்.

Baby Pompers மற்றும் 27 விதமான ஏனைய உற்பத்திகள் எம்மிடம் உள்ளன.

உடனும் பதிவு செய்து சிறந்த பலாபலன்களைப் பெறுவதற்கு அழையுங்கள் 0712444334

Baby Dry

அதிகாரம் பெற்ற விற்பனையாளர். (G/3336)(2-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழகத்தில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

செல்ல வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இது குறித்து வெளிவிவகார அமைச்சின் ஊடக வெளியீட்டுப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சரத் ஹெட்டியராய்ச்சி கூறுகையில், கடந்த காலங்களில் தமிழகம் சென்ற இலங்கையர்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பின்னர் தமிழகத்துக் கானபயண எச்சரிக்கையை இலங்கை அறிவித்தது.

இந்த எச்சரிக்கை இன்னும் தளர்த்தப்படவில்லை. எனவே தமிழகத்துக்குச் செல்லும் இலங்கைப் பிரஜைகள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். தமிழக சூழல் இலங்கையர்களின் பயணத்துக்கு இன்னும் அச்சுறுத்தலாகவே உள்ளது எனக் கூறினார். (த)

## செய்தியாளர்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

களில் உண்மையில்லை என இராணுவம் அறிவித்துள்ளது.

வன்னிப் போரின் போது படையினர் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக பி.பி.ஸி. ஊடகத்தின் முன்னாள் ஊடகவியலாளர் பிரான்சிஸ் ஹரிசன் குற்றம் சுமத்தியுள்ளார். எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களை முற்று முழுதாக நிராகரிப்பதாக இராணுவம் அறிவித்துள்ளது.

வன்னி வைத்தியசாலையில் கடமையாற்றிய நிரோஸ் என்ற மருத்துவரே தனக்குத் தகவல்களை வழங்கியதாக குறித்த ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார்.

எனினும், போர் இடம்பெற்ற காலத்தில் வன்னிப் பகுதியில் இவ்வாறான பெயரைக் கொண்ட எந்தவொரு மருத்துவரும் கடமையாற்றவில்லை என இராணுவம் மறுத்துள்ளது.

பிரான்சிஸ் ஹரிசன் இலங்கையை விட்டுச் செல்வதற்கு முன்னதாக நட்சத்திர ஹோட்டலில் விருந்துபசாரம் வழங்கியதாகவும், அதற்குப் புலித்தேவனுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததாகவும் இராணுவப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (த)

## தீர்வு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

சியத் தேவை எனவும் சொல்ஹெய்ம் இதன்போது குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழ் மக்களின் மனங்களைக் கவர்வதற்கு இலங்கை அரசுக்கு உண்மையான அக்கறை இருக்குமானால் இலங்கை தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், காணாமல் போதல் மற்றும் வெள்ளை வான் கடத்தல்கள் ஆகியன இடம் பெறாமல் தடுத்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவற்றுக்குச் சமமாக வடக்கில் இராணுவத்தினரின் பிரசன்னத்தைக் குறைத்தல், ஏற்கனவே உறுதியளித்தபடி, வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் அரச ஆதரவுடன் சிங்களமயமாக்கல் மேற்கொள்ளப்படமாட்டாதென்ற உறுதிமொழியை நடைமுறைப்படுத்தல் ஆகிய விடயங்களையும் இலங்கை அரசு உடனடியாக செயற்படுத்த வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இறுதிப்போர் வேளையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள் குறித்து விசாரிக்கும் ஐ.நா.குழுவின் உறுப்பினரும், தென்னாபிரிக்க உண்மை மற்றும் மீளமைப்பு ஆணையத்தின் முன்னாள் தலைவருமான யஸ்மின் சூகா, சர்வதேச மாற்றத்துக்கான குழுவைச் சேர்ந்த அலன் கீனன் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அத்துடன் ஐ.நா. புகைப்பட நிபுணர் பெஞ்சமின் டிக்ஸ் இந்த நிகழ்வில் உரையாற்றுகையில், வன்னி என்ற தலைப்பில் வெளிவரவிருக்கும் தமது நாவல் குறித்தும், படத்தயாரிப்பாளர் கல்லும் மைக்றோ தமது தயாரிப்பில் உருவாகவுள்ள இலங்கை சிவில் யுத்தத்தை அடிப்படையாகக் கொண்ட விவரணத் திரைப்படம் குறித்த தகவல்களையும் வெளியிட்டனர். (த)

## பேச்சுக்கள்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வித்துள்ளார். அநேகமாக எமது கோரிக்கைகளுக்கான தீர்வினை வழங்குவதற்கு அரசு தயாராக இருப்பதாகவும் ஏற்கனவே திட்டமிட்டபடி நாளை திங்கள்கிழமை கலாநிதி பி.பி.ஜயசுந்தர வுடனான சந்திப்பின் பின்னர் இவ்விடயம் சாத்தியப்படும் என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி தேவசிறி மேலும் தெரிவித்தார். (16)

## முன்னாள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யாளர் நாயகம் பிரிகேடியர் தர்ஷன ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

32 முன்னாள் போராளிகள் இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளனர். தற்போது 779 முன்னாள் போராளிகள் மாத்திரமே புனர்வாழ்வு மத்திய நிலையங்களில் இருப்பதாகவும் அவர்களில் 32 பேரே விடுவிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் 10,979 முன்னாள் போராளிகள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக புனர் வாழ்வு ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

விடுவிக்கப்பட்டவர்களுக்கு சுயதொழில் செய்யவென கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார். (த)

## விடைத்தாள்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

என்.எம்.கே.புஸ்பகுமார.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் போராட்டம் வயிற்றைக் கிழித்து குடலை வெளியே போட்டுவிட்டு வயிற்றை மீண்டும் தைக்க முடியாது என்று அடம் பிடிப்பது போல் உள்ளது. பரீட்சைக்கான வினாத்தாள்களைத் தயாரித்துவிட்டு அதனைத் திருத்த மறுக்கின்றனர் என்று உயர் கல்வி அமைச்சர் எம்.பி.திஸாநாயக்க விசனம் தெரிவித்தார்.

பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் விடைத்தாள்களைத் திருத்தும் பணியில் ஈடுபடாவிட்டால் தாங்களும் இந்தப் பணியில் ஈடுபடமுடியாது எனப் பட்டதாரிகள் மற்றும் ஆசிரியர் சங்கங்களும் தெரிவித்திருந்தன.

இந்த விடயம் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் புஸ்பகுமார பல்கலைக்கழக சமூகத்தினருடன் தொடர் பேச்சுகளை நடத்தியுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை பரீட்சை ஆணையாளர் நடத்திய கலந்துரையாடலில் 84 பேராசிரியர்கள் கலந்துகொண்டனர். இந்தச் சந்திப்பின்போது விடைத்தாள்களைத் திருத்தும் பணியில் 95 வீதமான விரிவுரையாளர்கள் கலந்து கொள்வார்கள் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் கூறினார்.

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் அதிகாரிகள், மேற்பார்வை அதிகாரிகள், பிரதி மேற்பார்வை அதிகாரிகள், அவர்களின் பொறுப்புக்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

இதனால் விடைத்தாள்கள் திருத்துவதில் ஏற்பட்டிருந்த சிக்கல்கள் தீர்க்கப்பட்டுள்ளன. எனவே திட்டமிட்டப்படி விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

(த-2)

## சிறுவனின்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

கொக்குவில் பகுதியைச் சேர்ந்த 17 வயதுச் சிறுவன் ஒருவரே சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தான்.

கொக்குவில் மற்றும் திருநெல்வேலி கலாசாலை வீதியைச் சேர்ந்த 5 பேர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் குருநகரைச் சேர்ந்த சுமார் 6 பேர்வரை டெங்கு நோயால் பீடிக்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதுதவிர கொக்குவில், திருநெல்வேலி கலாசாலை வீதியில் சில வாரங்களுக்கு முன்னரும் 11 பேர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுச் சென்றிருந்தனர். நேற்றுமுன்தினம் வரை பெரும்பாலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களே பெரும்பாலும் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இருவாரங்களுக்கு முன்னர் தெல்லிப்பழையிலும், வள்ளுவர்புரம் குடியிருப்பில் 3 பேர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையால் அது கட்டுப்படுத்தப்பட்டது.

ஆனால் இங்கு டெங்கு நடவடிக்கைகள் உடனுக்குடன் உரிய முறையில் செய்யப்பட்டிருந்தால் கட்டுப்படுத்தியிருக்கலாம். மேலதிகாரிகளான யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் யாழ்.பிராந்திய தொற்றுநோய் விஞ்ஞானப் பகுதி வைத்திய அதிகாரி ஆகியோர் இந்த விடயத்தில் தேவையான அளவு அக்கறை கொள்ளவில்லை என்று வைத்திய வட்டாரங்கள் குற்றம் சுமத்துகின்றன.

இதுதொடர்பில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது,

"டெங்கு யாழ்.மாவட்டத்தில் பரவ ஆரம்பித்துள்ளது. இதனால் யாழ்.மாவட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தவிர டெங்கு பரவும் இடங்களில் உடனுக்குடன் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவித்தார்.

(த-4-86)

## மூதூர்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

தொடர்பான விசாரணைகளில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. அந்த வழக்கு விசாரணைகள் கிட்டத்தட்ட கைவிடப்பட்டுவிட்டன.

2006 ஓகஸ்ட் 4 ஆம் திகதி நடைபெற்ற சம்பவத்தில் பட்டினிக்கு எதிரான நடவடிக்கைகள் அமைப்பின் 17 பணியாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

உலகிலேயே மனிதாபிமான பணியாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மிகமிக மோசமான குற்றச் செயல் என இது கருதப்படுகிறது.

இது தொடர்பில் 2006 ஆம் ஆண்டிலிருந்து அரசினால் 3 விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இதனை அடுத்தே பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதற்கான கடைசிச் சந்தர்ப்பமாக ஐ.நாவின் சுயாதீன விசாரணையை கேட்பதற்கு முடிவுசெய்துள்ளதாக அந்த அமைப்பினர் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மக்களின் கோரிக்கைகளை வலியுறுத்தும் பரப்புரை நடவடிக்கைகளில் பட்டினிக்கு எதிரான அமைப்பு இறங்கியுள்ளது.

'ஐ.நாவுக்கான எங்களுடைய மனுவில் கையெழுத்திடுமாறு பொது மக்களிடம் நாம் கேட்டுள்ளோம்.

சுயாதீனமான நடவடிக்கை ஒன்றுக்கு உத்தரவிடுவதன் மூலம் குற்றவாளிகள் தண்டிக்கப்படாமலிருக்கும் இலங்கையின் நடைமுறையை ஐ.நா. முடிவுக்குக் கொண்டுவரலாம். எங்களுடைய மனு எதிர்வரும் 22 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் கையளிக்கப்படும்' என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

(உ-16)

## பொய்க்காரர்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

தர்ம தேசமாகப் போற்றப்பட்டது. மஹிந்த அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஊழல் மோசடிகள் மற்றும் குற்றச் செயல்கள் பற்றி ஊடகங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டுவதில்லை.

இதன் காரணமாக நாடு முழுவதிலும் கூட்டங்களை வைத்து மக்களுக்கு அரசின் நடவடிக்கைகள் குறித்து தெளிவுபடுத்த வேண்டியுள்ளது என சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

ஆட்சி மாற்றத்தின் ஊடாக நாட்டின் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். பண்டாரகமவில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (த)

## 60 போராளிகளுக்கு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் மேற்கு நாடுகள் வலியுறுத்தி வரும் நிலையில் இலங்கை அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இந்தப் போராளிகள் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டமைக்கான போதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளதை அடுத்தே, இவ்வாறு வழக்குத் தொடரப்படவுள்ளதாக மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் சுகத் கம்லத் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தீர்ப்பு வழங்கப்படாமலுள்ள வழக்குகள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட சட்ட ஆலோசனைக் குழுவே இவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடிவு செய்துள்ளது.

பயங்கரவாத விசாரணைப் பிரிவின் விசாரணைக்கு உள்ளாக்கப்பட் டுள்ள 80க்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகள் தடுப்புக்காவலில் இருந்த நிலையில், அவர்கள் பிரிவினைவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளமைக்கான புதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளர்கள் மற்றும் நாடுகடந்த தமிழீழ அரசை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்ட புலம்பெயர்ந்த தமிழர்களுடன் தொடர்புகளைப் பேணியமை தொடர்பில் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு நம்பகரமான தகவல்கள் கிடைத்துள்ளன.

வவுனியா சிறைச்சாலையில் கடந்த ஜுன் மாதம் இடம்பெற்ற கலவரத்தின் போதே இவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் தெரிய வந்தது. இவர்கள் கைத்தொலைபேசிகள் மூலம் வெளிநாடுகளுடன் தொடர்புகளைப் பேணி, அவர்களின் ஆலோசனைகளுக்கு ஏற்ப செயற்பட்டமை தொடர்பிலான ஆதாரங்களைப் பயங்கரவாத விசாரணைப் பிரிவு பெற்றுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தீர்ப்பு வழங்கப்படாமலுள்ள வழக்குகள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட சட்ட ஆலோசனைக் குழு மேற்கொண்ட விசாரணைகளின்போது தடுப்புக் காவலிலுள்ள 300 விடுதலைப் புலிகளின் போராளிகள் தொடர்பிலான ஆவணங்களைப் பரிசீலித்துள்ளது.

இவர்களில் 150 பேர் மோசமான குற்றங்களை இழைத்தமைக்கான ஆதாரங்கள் இல்லாததால், அவர்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

அத்துடன், அனுராதபுரம், வவுனியா, மன்னார் மற்றும் வெலிக்கடை ஆகிய சிறைச்சாலைகளில் நான்கு புதிய உயர் நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன-என்றார்.(த)

## தமிழர்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வைக்கு அபிவிருத்தியாகத் தெரியும். வீதியிலிருந்து இறங்கி உள்ளே சென்று பார்த்தால் உண்மை நிலைமை தெரியும் என்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் அங்கு குறிப்பிட்டனர்.

ஐ.நா. குழுவிடம் அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போரின் பின்னரான காலப் பகுதியில், போருக்குள் அகப்பட்ட மக்களுக்குச் சிவில் சமூகப் பணிகளை முன்னெடுக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளபோதும், இலங்கை அரசு அந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு முட்டுக்கட்டையாக உள்ளது.

இலங்கை அரசு தொடர்ந்தும் இன அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த இன அழிப்பு பல்வேறுபட்ட வடிவங்களில் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றது.

தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த நிலங்கள் இராணுவத்தினரால் அபகரிக்கப்படுகின்றன. உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தமிழர்களின் பெருமளவு நிலங்கள் பிடுங்கப்பட்டுள்ளன. சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு இனப் பரம்பல் மாற்றியமைக்கப்படுகின்றது.

தமிழ் மக்களின் மொழியுரிமை புறக்கணிக்கப்படுகின்றது. நீதி நிர்வாகங்களில் அதிகரித்த அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றன.

நாம் இனி எமது சொந்தக் காலில் நடக்க முயற்சிக்கின்றோம். சேகுவாரா, நாம் எந்த ஆயுதத்தை எடுக்க வேண்டும் என்பதை எதிரிதான் தீர்மானிக்கின்றான் என்றார். ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இனி எந்த ஆயுதம் தூக்க வேண்டும் என்பதை சர்வதேச சமூகமே தீர்மானிக்கப் போகின்றது. இலங்கை அரசை தமிழர்கள் நம்பத் தயாரில்லை.

இலங்கை அரசின் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்தும் அதன் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்துவதை நாங்கள் வரவேற்கின்றோம்.

கொழும்பு, பேரதெனியா பல்கலைக் கழகங்களில் உள்ளதைப் போன்று மனித உரிமைக் கற்கை நெறி யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று கூறினார்கள்.

இறுதியாக கருத்துத் தெரிவித்த ஐ.நா. துணைச் செயலாளர் நாயகம், போர் முடிந்த பின்னரும் தமிழ் மக்கள் இவ்வளவு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என்பதை தெரிந்துகொண்டேன். இதனை ஐ.நாவுக்குச் சமர்ப்பிப்பேன்.

2009ஆம் ஆண்டு போர் முடிந்த பின்னர் இலங்கை வந்த போது, போரை வெற்றி கொள்வது சுலபம், சமாதானத்தை வெல்வது கடினம் என்று இலங்கை அரசிடம் தெரிவித்திருந்தேன். அதை மீளவும் அரசுக்கு நினைவூட்டவுள்ளேன் என்றார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தமிழர் கல்வி வளர்ச்சிக்கு நீண்டு செல்லும் சவால்கள்

பல இனங்கள் வாழும் நாடொன்றில் குறிப்பிட்ட ஓர் இனத்தின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு, அந்த இனத்தைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்குக் குந்தகம் விளைவிப்பதும் ஒரு படிமுறையாகும். இலங்கையில் சிறுபான்மையினரான தமிழர்களின் முன்னேற்றத்தையும் சமநிலையையும் முறித்து வீழ்த்துவதற்கு சுதந்திரத்துக்குப் பின்னர் பதவிக்கு வந்த சிங்கள அரசுகள், அதனைப் படிமுறை தவறாது ஒப்பேற்றி வந்தன.

மிகக் குறிப்பாக எழுபதுகளில் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் புகுத்தப்பட்ட, அறிமுகப்படுத்தப்பட்ட பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தல் முறை, தமிழ் மாணவர்களின் உயர் கல்வி வாய்ப்பை அரிந்தெடுத்தது. அதனால் அவர்களிடம் உறைகொண்ட விரக்தியே தமிழர் பிரதேசங்களில் ஆயுதப் போராட்டத்துக்கு வித்திட்டது.

வெளிநாட்டார் ஆட்சிகளின் போது, மிகக் குறிப்பாக ஆங்கிலேயர் ஆட்சியின் போது, தமிழ் மக்கள் கல்வியில் சிறந்து விளங்கினார்கள். அதனூடு அரச துறைகளில், திணைக்களங்களில் பெரும்பான்மை இனத்தவரை மேலோங்கி உயர்பதவிகளை வகித்தார்கள். இதனைத் தமக்குள் வன்மமாக்கிக் கொண்டு, சுதந்திரத்தின் பின்னர் சிங்களம் மட்டும் சட்டத்தை நிறைவேற்றி தமிழர்கள் அரச உயர் பதவிகளில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்.

அதன்தொடர்ச்சியே அல்லது மற்றொரு படிமமே பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தல் என்ற வாள் வெட்டு!

பிறநாட்டார் ஆட்சிக்காலத்தில் பலதுறைகளிலும் முன்னிலையும் முன்னணியும் வகித்த தமிழர்களை ஒடுக்குவதற்கு, சிங்கள மட்டும் சட்டம் ஆரம்ப உத்தியோகபூர்வ உத்தியாகப் பயன்படுத்தப்பட்டது. அதன் பின்னரும் மற்றும் பல நஞ்சார்ந்த நடவடிக்கைகளால் அவர்களை எல்லாத்துறைகளிலும் தள்ளி வீழ்த்தும் அரசியல் மற்றும் நிர்வாக மட்டச் செயற்பாடுகள் மலிந்தன; இப்போதும் தொடர்கின்றன.

காலவோட்டத்தில், சிங்களத்துடன் தமிழுக்கும் அரசகருமமொழி என்ற அந்தஸ்து ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தத்தின் பிரகாரம் வழங்கப்பட்டாலும், அது நடைமுறையில் செயலாக்கத்தில் எழுந்து உயர்ந்து நிற்பதற்கு வகை செய்யப்படவில்லை. அந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்து விட்டதாக வர்ணம் பூசிக் காட்டும் வகையில் தேசிய மொழிகள் செயற்பாட்டு அமைச்சு ஒன்றை, ஒப்பியாசாரத்துக்காக, அனைத்துலகத்திடம் நல்ல பெயர் கேட்பதற்காக, மஹிந்த அரசு இப்போது உருவாக்கியுள்ளது.

இன்னொரு புறத்தில், தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சி தொடர்ந்தும் தறுக்கணித்தே காணப்படுகிறது. முப்பது வருடகாலப் போர் அவர்களின் கல்வியை மிகப்பெரிய - கனத்த - பரிமாணத்தில் - சகதிக்குள் புதைத்துவிட்டது எனலாம்.

போர் பொதுவாகவே தமிழ் மக்களின் பொருளாதாரத்தை பல துறைகளிலும் பல வழிகளாலும் தலை கீழாக்கி விட்டது. அதன் விளைவாகத் தமிழ் மாணவர்களின் கல்வி நிலையும் ஆட்டம் காணும் நிலைக்குச் சரிக்கப்பட்டு விட்டது. கல்வி வளர்ச்சிக்குப் பக்கத்துணையாக நிற்கவேண்டிய பெற்றோர்களின் பொருளாதாரத்தை முந்திய முழுநிலைக்குக் கட்டி எழுப்புவதற்கு அரசாங்கம் பக்கத்துணையாக நிற்கும் என்று சாடைமாடையாக நினைத்துப் பார்ப்பதற்கேனும், எந்த வகையான சமிக்ஞையும் காணமுடியவில்லை.

மறுபுறத்தில், தமிழ் மாணவர்கள் தமது ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வி, உயர் கல்விக் கற்கைகளின் போது எதிர்கொண்ட பின்னடைவுகளுக்கு மிகுந்த கஷ்டங்களுடன் முகம் கொடுத்து, பல்கலைக்கழகம் சென்று பரீட்சைகளில் சித்தியடைந்தாலும்கூட அவர்தம் தகுதிக்கு ஏற்ற தொழில் ஒன்றை அரச மற்றும் தனியார் துறைகளில் பெறமுடியாது அல்லாடுகிறார்கள். அவர்கள் தமது கஷ்ட நிலையைக் கருத்தில் கொண்டு தமது கல்வித் தகைமைக்குத் தாழ்ந்த பணிகளில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

போரினால் பாதிக்கப்பட்ட வன்னியில், கல்வித் துறைசார் செயற்பாடுகள், மூன்றாண்டுகள் கழிந்தும் இன்னமும் முந்திய நிலையை எட்டிப்பார்க்கும் நிலைக்கும் வரவில்லை, வளரவில்லை.

மீள்குடியேற்றம் முற்றாக நிறைவேற்றப்பட்டு விட்டது. ஐ.நாவா? அமெரிக்காவா? இந்தியாவா? நோர்வேயா? எவரானாலும் வந்து பார்க்கலாம்; எமது செலவிலேயே கூட்டிச் சென்று காட்டுவோம் என்று எவரையும் கூவி அழைக்கும் நிலையை எய்தியுள்வது அரசாங்கம்.

ஆனால், போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கல்வி வசதிகள் ஓலைக்கொட்டில் மட்டத்திலேயே உள்ளன என்பதே இன்றைய யதார்த்தம்.

ஆயினும், போர் தீவிரமடைந்து பேரழிவைத் தராத தமிழ் மாவட்டங்களுக்கு நிகராக, வன்னி மாவட்டப் பாடசாலைகளில் பயின்ற மாணவர்கள், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் மற்றும் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களை வாழ்த்துகிறோம்; பாராட்டுகிறோம்.

வளங்கள், வசதிகள் குறைந்த வன்னிப் பிரதேச மாணவர்களை, ஏனைய மாவட்ட மாணவர்களுக்கு நிகராக கல்வி நிலையில் உயர்த்திய பெருமை அந்தப் பிரதேசங்களில் பயிற்றுவித்த ஆசிரிய மணிகளையே சாரும். அவர்களின் உழைப்பையும் ஊக்குவிப்பையும் பாராட்டுகிறோம். பல இல்லாமைகள், இயலாமைகளின் மத்தியிலும் அவர்களின் அடைவும் அர்ப்பணிப்பும் மெச்சத்தக்கவை என்பதில் இரண்டு கருத்துக்களுக்கு இடமில்லை.

இற்றைக்கு ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகளுக்கு முன்னரும், அதற்கு முந்திய அரை நூற்றாண்டு காலத்திலும் ஒவ்வொரு மாணவனுக்கும் அன்னையையும் பிதாவையும் போன்றே ஆசிரிய மணிகளும் முன்னறி தெய்வங்களாக விளங்கினர். பெற்றோருக்குச் சமனாக ஆசிரியர்களும் தமது மாணவரின் கல்வியில் அதீத அக்கறை கொண்டவர்களாக விளங்கினார்கள்.

ஒரு மாணவன் தனது தாயையும் தந்தையையும் போன்று நல்லாசானையும் உயிர் உள்ளவரை மறவாத, நன்றி பாராட்டும் அளவுக்கு அவர்கள் உயர்ந்து விளங்கினார்கள். குருபக்தி அக்காலத்து மாணவர்களின் நினைவழியாச் சொத்தாக விளங்கியது. தனது கல்வித்துறை வளர்ச்சியையும் உயர்ச்சியையும் உன்னும் போதெல்லாம் நல்லாசானின் உருவமும் அவரது பாடபோதனையும் மனக் கண்ணில் வந்து மின்னும்.

அந்த நிலை தமிழர் சமூகத்தில் மீண்டும் தலையெடுக்க வேண்டும்; வளர வேண்டும். அதற்கான முற்குறியாக வன்னிப் பிரதேசத்தின் - வளங்கள் குன்றிய பெருநிலப்பரப்பின் - ஆசிரியர்களைக் கணித்திடுவோம்.

# விவாகரத்து கேட்ட கணவனை கத்தியால் குத்தினாள் மனைவி

### நிந்தவூர் காதி நீதிமன்றில் சம்பவம்

அம்பாறை, ஒக்.7

தன்னையும், தனது கைக் குழந்தையையும் கைவிட்டு, விவாகரத்துப் பெற வேண்டாமென மன்றாடினாள் மனைவி. ஆனால் விவாகரத்துப் பெற்று, மற்றொரு பெண்ணை மீண்டும் மண முடிப்பேன் என அடம்பிடித்தான் கணவன்.

நான் தவறு செய்திருந்தால் பகிரங்கமாக இங்கு மன்னிப்புக் கோருகிறேன் எனவும் கெஞ்சிப்பார்த்தாள்.

கல்நெஞ்சுக் கணவனோ சிறிதும் நெகிழ்ந்து கொடுக்கவில்லை.

பொறுமையின் எல்லைக்கே சென்றாள் மனைவி, தான் கொண்டுவந்திருந்த கத்தி ஒன்றை தன் கைப்பையிலிருந்து எடுத்து ஆவேசத்துடன் கணவனைக் குத்தி விட்டு தன் கைக்குழந்தையுடன் அங்கிருந்து சென்று விட்டாள்.

இது கற்பனைக் கதையல்ல, அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த நிந்தவூர் காதி நீதிமன்றத்தில் நடந்த உண்மைச் சம்பவம்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது:-

நிந்தவூரைச் சேர்ந்த ஐ.எல்.எம். ஜூனைத் எனும் நபர் தனது இரண்டாவது மனைவியான நிந்தவூர் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த ஐ.பாத்திமா இர்பானை விவாகரத்துச் செய்வதற்காக நிந்தவூர் காதிநீதிமன்றத்தில் 'தலாக்' வழக்கு ஒன்றைத்தாக்கல் செய்திருந்தார்.

சம்பவ தினம் நிந்தவூர் காதிநீதிமன்றத்தில் குறித்த தலாக் வழக்குவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. கணவனும், மனைவியும் கைக்குழந்தையுடன் பிரசன்னமாகியிருந்தனர்.

விசாரணை தொடங்கியதும், தன்னையும், குழந்தையையும் விட்டுப் பிரிய வேண்டாம், நான் சேர்ந்து வாழவே விரும்புகின்றேன். நான் தவறு செய்திருந்தால் இங்கு பகிரங்கமாக மன்னிப்புக் கோருகின்றேன் என கணவனிடம் மன்றாடிய குறித்த பெண் கணவனைத் தன்னுடன் சேர்த்து வையுங்கள் என காதி நீதிபதியிடமும் கெஞ்சினாள்.

ஆனால் கணவனோ விவாகரத்து பெற்றே தீருவேன், நீதிமன்றம் தலாக் சொல்லி விவாகரத்துப் பெற அனுமதி தர வேண்டுமெனக் கேட்டான்.

காதி நீதிபதி இதற்கு இணக்கப்பாடு ஒன்று ஏற்படாத நிலையில் இருவரும் சேர்ந்து வாழ முன்வருமாறு ஆலோசனைகளைக் கூறி மற்றொரு தினத்தில் விசாரணைக்கு வருமாறு 'தலாக்' வழக்கை ஒத்திவைத்தார்.

இதனை அடுத்து காதி நீதிமன்றத்தை விட்டுச் செல்வதற்கு முன் மீண்டும் தன்னை விவாகரத்து செய்யாது சேர்ந்து வாழ வருமாறு கணவனிடம் கெஞ்சி மன்றாடினாள் குறித்த பெண்.

இதனை மறுத்துள்ளார் கணவன். ஆவேசம் கொண்டு பொங்கி எழுந்தாள் அந்தப் பெண். தன் பையிலிருந்து கத்தி ஒன்றை எடுத்தாள் கணவனைக் குத்தி விட்டு அந்த இடத்தை விட்டகன்றாள்.

வயிற்றில் காயமடைந்த குறித்த நபர் இரத்தம் கசிய, சம்மாந்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்தார். கல்முனை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார்.

குறித்த பெண்ணை சம்மாந்துறைப் பொலிஸ் பெரும் குற்றப் பிரிவினர் கைது செய்து சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது 2000 ரூபா ரொக்கப்பிணையிலும், 25 ஆயிரம் ரூபா சரீரப்பிணை யிலும் செல்ல நீதிபதி உத்தரவிட்டார்.

(ம-30)

## பிரதான தபால் அலுவலகத்துக்கு கிளிநொச்சியில் புதிய கட்டடம்

யாழ்ப்பாணம், ஒக்.7

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதிஉதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதானதபால்அலுவலகம்ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது என்று வட மாகாண பிரதி தபால் மா அதிபர் என்.ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 50 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்துக்கென புதிதாக பிரதான தபால் அலுவலகம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் புதிய பிரதான தபால் அலுவலகம் 2 மாடிகளைக் கொண்ட கட்டடமாக அமைகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 4 தபால் அலுவலகங்களும், 37 உப தபால் அலுவலகங்களும் உள்ளன.

இந்தத் தபால் அலுவலகங்களின் தேவைகளையும், பொது மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு இந்த பிரதான தபால் அலுவலகம் உதவியாக அமையும்.

இந்தக் கட்டடம் போரால் முற்றாக சேதமடைந்த நிலையில் காணப்பட்டது. தற்போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியுடன் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடம் அடுத்த மாதம் திறக்கப்பட்டு மக்களின் அஞ்சல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-13)

## சிறுவர் அரங்க மாகாணப் போட்டி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.7

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் சிறுவர் அரங்க நிகழ்வின் உபமாகாண மட்ட போட்டிகள் இன்று ஞாயிறு ஆரம்பமாகி மூன்று கட்டமாக இடம்பெறவுள்ளன என வட மாகாண கல்வித் திணைக் கள தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் அறிவித்துள்ளார்.

இதில் யாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலய பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகள் இன்று காலை 9 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கிடையிலான போட்டிகள் எதிர்வரும் 13 ஆம் திகதி வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு இடையிலான போட்டிகள் எதிர் வரும் 20 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரி கலாசார மண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

(ம-422)

## இந்த ஆண்டு இறுதிக்குள் மாங்குளம் வரை ரயில் சேவை

யாழ்ப்பாணம், ஒக்.7

இந்த ஆண்டு இறுதிக்குள் மாங்குளம் வரை ரயில் சேவையை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் பொறியியல் பிரிவினர் தெரிவித்தனர்.

ரயில் சேவையை மாங்குளம் வரை விஸ்தரிக்கும் வகையில் ஓமந்தைக்கும் புளியங்குளத்துக்கும் இடையிலான ரயில் பாதையில் அமைந்துள்ள பாலங்களைத் திருத்தியமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக அவர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

இதுவரை இந்தப் பகுதியில் 10 பாலங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. பாலங்கள் திருத்தியமைக்கப்பட்டதும் ரயில் பாதைகளுக்கான தண்டவாளங்களைப் பொருத்தும் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும். இதற்கென ஒரு தொகுதி தண்டவாளங்கள் அதற்குரிய அளவுகளில் இணைக்கப்பட்டுள்ளதாக பொறியியல் பிரிவு அதிகாரி ஒருவர் கூறினார்.

இதேவேளை அனுராதபுரத்தில் இருந்து ஓமந்தை வரைக்கும் ரயில்களுக்கான சமிக்ஞைப் பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

சேவையில் ஈடுபடும் ரயில்கள் வந்து கொண்டிருக்கும் தூரம், அவை தரித்து நிற்கும் இடம், ரயில் பழுதடைந்தால் அதன் விவரம் ஆகியவற்றைப் பயணிகள் அறிந்து கொள்ளும் வகையில் இலத்திரனியல் சமிக்ஞை பெட்டிகள் அமைக்கப்படுகின்றன என அந்த அதிகாரி மேலும் கூறினார்.

ரயில் பாதைகளைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் மாங்குளம், புளியங்குளம் பகுதிகளில் ரயில் நிலையங்களைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

2013 இறுதிக்குள் யாழப்பாணம் வரை ரயில் சேவையை விஸ்தரிக்க அரசு திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-17)

## மூத்த பிரஜைகளுக்கு மருந்துப் பட்டியலில் விலைக் கழிவுகள்

கொழும்பு, ஒக்.7

மூத்த பிரஜைகள், சிறுகுழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களின் மருந்துப் பட்டியல்கள் தொடர்பாக விலைக் கழிவு வழங்க இலங்கையின் அரச மருந்துக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய 5 வீதமான விலைக் கழிவு ஒன்றை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

55 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகள், 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மாரின் மருந்துப் பட்டியல்களுக்கு இந்த விலைக்கழிவுகள் வழங்கப்படவுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

(ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 530 குடும்பங்கள் மீள்குடியமர்வு

## அடிப்படை வசதிகள் எதுவுமே இல்லை

புதுக்குடியிருப்பு பிரதேசத்திலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் வசித்துவந்த 530 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 605 பேர் கடந்த வெள்ளிக் கிழமை சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள், வவுனியாவிலுள்ள அகதி முகாம்களிலும் ஏனைய மாவட்டங்களிலுள்ள உறவினர், நண்பர் வீடுகளில் வசித்து வந்தனர்.

முகாம்களில் வசித்து வந்த புதுக்குடியிருப்பு பிர தேசத்தைச் சேர்ந்த அனைத்து மக்களும் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கான குடிதண்ணீர் மலசல கூட வசதி, வாழ்விடம் போன்ற அடிப்படை வசதிகள் முழுமையாகச் செய்து கொடுக்கப்படாமையால் அநேக குடும்பங்கள் தறப்பாளினால் அமைக்கப்பட்ட குடிசைகளிலும் அக்கம் பக்கத்தில் உள்ள உறவினர் வீடுகளிலும் வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில் உறவிணர், நண்பர் வீடுகளில் வசித்து வரும் மக்கள் படிப்படியாகச் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள். கடந்த வெள்ளிக் கிழமை ஒன்பது கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த 530 குடும்பங்களை உள்ளடக்கிய ஆயிரத்து 605 உறுப்பினர்கள், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் வைத்துப் பதிவுகள் மேற்கொண்ட பின்பு சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

மந்துவிலைச் சேர்ந்த 258 குடும்பங்களைச் சேர்ந்த 782 உறுப்பினர், மல்லிகைத்தீவைச் சேர்ந்த 24 குடும்பங்களைக்கொண்ட 73 உறுப்பினர்கள், ஆனந்தபுரத்தைச் சேர்ந்த 29 குடும்பங்களைக் கொண்ட 80 உறுப்பினர்கள், தேவிபுரத்தைச் சேர்ந்த 2 குடும்பங்களைச் சேர்ந்த5 உறுப்பினர்கள், புதுக்குடியிருப்பு மேற்கைச் சேர்ந்த 155 குடும்பங்களைச் சேர்ந்த 782 உறுப்பினர்கள், புதுக்குடியிருப்பு கிழக்கைச் சேர்ந்த 45 குடும்கங்களைச் சேர்ந்த 136 உறுப்பினர்கள், சிவநகரைச் சேர்ந்த 7 குடும்பங்களைச் சேர்ந்த 23 உறுப்பினர்கள், கோம்பாவிலைச் சேர்ந்த 7 குடும்பங்களைச் சேர்ந்த 14 உறுப்பினர்கள், இரணைப்பாலையைச் சேர்ந்த 3 குடும்பங்களைச் சேர்ந்த 10 உறுப்பினர்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். (ம-115)

# கிளிநொச்சி விவசாயிகள் மஹிந்தவிடம் முன்வைத்த பல்வேறு கோரிக்கைகள்

## அலரி மாளிகையில் சந்திப்பு

அக்கராயன், ஒக்.7

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் ஜனாதிபதியை சந்தித்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இங்கு கிளிநொச்சி மாவட்ட விவசாய முயற்சிகளின் எதிர்கால வளர்ச்சி தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

நீண்ட காலமாகத் திருத்தப்படாதுள்ள நீர்வரி யாப்பைத் திருத்துதல், கிளிநொச்சியில் கிராமிய அபிவிருத்திச் சந்தையை உருவாக்குதல், அறுவடைக் காலங்களில் இறக்குமதியைத் தவிர்த்து உள்ளூர் உற்பத்தியைப் பாதுகாத்தல், மண்ணாய்வு நிலையம் ஒன்றைக் கிளிநொச்சியில் அமைத்தல், பழங்களைப் பதனிடும் தொழிற்சாலையை கிளிநொச்சியில் அமைத்தல் போன்ற பல்வேறு கோரிக்கைகள் விவசாயிகளினால் ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது முன்வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

# போக்குவரத்து வசதி பெற நீண்டதூரம் அலையும் மக்கள்

கிளிநொச்சி கல்மடு நகர்ப் பிரதேச மக்கள் போக்குவரத்து வசதிகளைப் பெறுவதற்குச் சுமார் எட்டு கிலோ மீற்றர் தூரத்துக்கு அலைய வேண்டிய நிலையில் உள்ளதாக இங்குள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்துக்கு உட்பட்ட கல்மடுநகர் கிராமத்துக்குப் போக்குவரத்து வசதிகள் எதுவும் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை.

குறிப்பாக இந்தப் பகுதி மக்கள் தமக்கான மருத்துவத் தேவையை அல்லது பிரதேச செயலக தேவைகள், கல்வித் தேவைகள் மற்றும் ஏனைய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதாயின் சுமார் எட்டு கிலோமீற்றர் தொலைவில் உள்ள தருமபுரம் அல்லது ஏனைய இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலையில் தற்போதுள்ளனர். இந்தப் பகுதி மக்கள் தாம் தினமும் சிரமப்பட்டு வருவதாகவும் தமக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

# அனுமதியின்றி மரங்களை வெட்டி கடத்தும் சம்பவங்கள் அதிகரிப்பு

## வவுனியாவில் கடந்த வாரத்தில் 7 பேர் கைது

வவுனியாவில்சட்டவிரோதமாக மரங்களை வெட்டுவது, சட்டவிரோதமாக அவற்றைப் பலகைகளாக்கி கடத்தும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கடந்த வாரம் மட்டும் இக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த காலங்களை விட தற்போது இவ்வாறான செயற்பாடுகள் அதிகமாக உள்ளன என்று பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா ஆசிகுளம் பகுதியில் வைரமரக்குற்றிகளைக் கடத்திய குற்றச்சாட்டில் கடந்த 28 ஆம் திகதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கணேசபுரம் பகுதியில் கடந்த 24 ஆம் திகதி ஓட்டோவில் மரப்பலகைக ளைக் கடத்திய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா பட்டாணிச்சூரில் சட்டவிரோதமாக மரக்காலை நடத்தி வந்த குற்றச்சாட்டில் கடந்த 28 ஆம் திகதி 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளதோடு அங்கு வைக்கப்பட்டிருந்த மரம் அரியும் இயந்திரங்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

வவுனியா நீலியா மோட்டைக் காட்டில் முதிரை மரக்குற்றிகளையும், பலகையில் செய்யப்பட்ட கதவு மற்றும் யன்னல்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பிறிதொரு இடத்தில் 10 முதிரை மரக்குற்றிகளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பெயரில் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். மற்றொரு இடத்திலும் 9 முதிரை மரக்குற்றிகளை வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கனகராயன் குளம் பகுதியில் அரச காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக மரங்களை வெட்டிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு அதற்குப் பயன்படுத்தும் உபகரணங்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-4-86)

# சுத்திகரிப்பு பணிகள்

மன்னாரிலுள்ள கழிவுநீர் வாய்க்கால்களைச் சுத்திகரிக்கும் பணியில் நகரசபைத் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த வாய்க்கால்கள் உரிய வகையில் பராமரிக்கப் படாமலும் இவற்றினுள் மண், குப்பை, கற்கள் என்பன காணப்பட்டதாலும் கழிவுநீர் வெளியேற முடியாத நிலை காணப்பட்டது. மக்களின் தவறான செயற்பாடுகள் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் மன்னார் நகரசபையைச் சேர்ந்த சுத்திகரிப்புப் பணியாளர்கள் இந்த வாய்க்கால்களைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். மன்னார் நகரசபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசத்தின் வேண்டுகோளுக் கமைவாக இந்த வேலைத் திட்டம் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-12)

# டிப்போ முகாமையாளரின் இடமாற்றத்தை ரத்துச் செய்யக் கோரி ஜனாதிபதிக்கு மனு

வவுனியா, ஒக்.7

வவுனியா டிப்போ முகாமையாளரின் திடீர் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு டிப்போ ஊழியர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை சமர்ப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா டிப்போ வளாகத்தில் பள்ளிவாசல் அமைக்கும் முயற்சிகளுக்குத் தடையாக இருந்தார் என்பதற்காகவே வவுனியா சாலை முகாமையாளர் வட பிராந்திய பொது முகாமையாளரால் யாழ்ப்பாணம் டிப்போவுக்குத் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டதாகவும், ஊழியர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். இந்த இடமாற்றத்தை ஆட்சேபித்து வவுனியா டிப்போவில் கடமையாற்றும் சுமார் 100 தமிழ் சிங்கள ஊழியர்கள் ஜனாதிபதிக்கு மனுவொன்றைச் சமர்ப்பித்துள்ளதாகவும் தெரியவரு கின்றது.

> 100 தமிழ் சிங்கள ஊழியர்கள் ஜனாதிபதிக்கு மனுவொன்றைச் சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

வவுனியா டிப்போவில் மூவினங்களையும் சேர்ந்த பணியாளர்கள் பணியில் உள்ளனர். டிப்போ முகாமையாளர் எந்தவித பாகுபாடுமின்றி டிப்போவை சிறப்பாக நடத்தி வருகின்றார்.

இந்த நிலையில் இந்த இடமாற்றம் இடம்பெற்றுள்ளமை கவலைதருகின்றது.

எனவே இந்த இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு கோருகின்றோம் என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-400)

# அக்கராயன் ஆரம்ப வித்தியாலய காணியில் மாணவர்கள் குதூகலித்துக் கொண்டாட்டம்

அக்கராயன்,ஒக்.7

சர்வதேசசிறுவர்தினநாளில் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயகட்டடங்கள் அமையவுள்ள காணியில் மாணவர்கள் மகிழ்வுடன் பொழுதைக் கழித்தனர்.

அக்கராயன் மகாவித்தியாலயம் 1000 பாடசாலைத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளதால், அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்கு 5 ஏக்கர் காணியில் பல கட்டடங்கள் அமைக்கப் படவுள்ளன. இதன் கீழ் கிளிநொச்சி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 13 பாடசாலைகளில் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயமும் ஒன்றாகும். கிடைக்கப் பெற்ற 5 லட்சம் ரூபா நிதியில் பாடசாலை காணி துப்புரவு செய்யப்பட்டு வேலிகள் அமைக்கப்பட்டு சிறுவர் தின நாளில் இந்தக் காணி திறந்து வைக்கப்பட்டது. பாடசாலை அதிபர் ப.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அக்கராயன் மகாவித்தியாலய அதிபர் க.மதுரநாயகம் நாடாவை வெட்டி காணி யைத் திறந்து வைத்தார். (க-18)

# மரம் வெட்டியவர்களை அச்சுறுத்திய சீருடையினர்

தமது காணியில் அனுமதிபெற்று மரங்களை வெட்டிக் கொண்டிருந்தவர்களை சீருடையினர் அச்சுறுத்தியதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது;-

மந்துவில் மல்லிகைத்தீவில் வீடுக் கட்டுமானப் பணிகளுக்காக சொந்தக் காணியில் அந்தப் பகுதி கிராம அலுவலரின் அனுமதி பெற்று மரங்களை வெட்டியுள்ளனர். அவ்வேளை அப்பகுதியால் வந்த சீருடையினர் , யார் உங்களுக்கு மரங்களை வெட்டுவதற்கு அனுமதி தந்ததென அச்சுறுத்தும் பாணியில் நடந்து கொண்டதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பின்னர் எம்மிடம் அனுமதி பெற்ற நீங்கள் மரங்களை வெட்டமுடியுமென அவர்கள் தம்மிடம் தெரிவித்தாக மக்கள் மேலும் கூறினர். (16-400)

# ஆஸி. மோகத்தால்; பணமும் போனது

ஆஸ்திரேலியா செல்ல முயன்ற மன்னாரைச் சேர்ந்த பலர், பணத்தையும் இழந்து ஏமாற்றமடைந்த நிலையில் காணப்படுகின்றனர்.

படகுமூலம் ஆஸ்திரே லியா அழைத்துச் செல்வதா கக் கூறிய தரகர்கள் சிலர், இவர்களிடம் இலட்சக் கணக் கில் பணத்தைப் பெற்றுள்ளனர். ஆனால் எதுவுமே இடம் பெறவில்லை. மூன்று லட்சம் ரூபா முதல் ஏழு லட்சம் ரூபா வரையில் தரகர்கள் பணம் பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது. மேலும் பணத்தைக் [illegible] திரும்பப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையிலுள்ளனர் என்று தெரிய வருகின்றது. (க-12)

# வன்னி மாவட்டங்களில் 4 இடங்களில் ஆயுத மீட்டு

## கடந்த வாரத்தில் மட்டும்

யாழ்ப்பாணம்,ஒக்.7

முல்லைத்தீவு, வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நான்கு இடங்களிலிருந்து கடந்தவாரம் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா இந்தத் தகவலைக் கூறியுள்ளார்.

முல்லைத்தீவு வெள்ள முள்ளிவாய்க்கால் பகுதியில் ஒரு தொகுதி ஆயுதங்கள் கடந்த திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளன. ரி.56 ரக துப்பாக்கி அதற்கான ரவைகள், ஆயிரத்து 437 விமானங்களைத் தாக்கும் குண்டுகள், விமானங்களைத் தகர்க்கக்கூடிய ரவைகள் 160 மற்றும் பல வகையைச் சேர்ந்த துப்பாக்கிகளின் ரவைகள் மீட்கப்பட்டுள்ளன என்று கூறினார்.

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பற்றைக்குள் இருந்து 6 குண்டு கள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகத்தின் பேரில் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார். மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்குப் பின்புறமாக உள்ள பற்றையில் இருந்தே இந்தக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, நாச்சிக்குடா பகுதியில் கைக்குண்டு ஒன்றும் மற்றொரு வகைக் குண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன. தவிர மாங்குளம் பகுதியில் கடந்த 29ஆம் திகதி இடியன் துவக்குடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வவுனியா புதுக்குளம் பகுதியில் கட்டுத்துவக்குடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பெரேரா மேலும் தெரிவித்தார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2012 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்த முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு உடையார் கட்டு மகா வித்தியாலய மாணவன்

செல்வன்

**சுந்திரமோகன் றெஜிஸ்தான்**

அவர்கள் கல்வியில் மேன் மேலும் பல பட்டங்களைப் பெற்று நீடூழி வாழ இறைவனை வேண்டி மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, தம்பிமார், அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், சித்திமார், அம்மப்பா, அம்மம்மா, மாமாமார்.
மு/ புதுக்குடியிருப்பு.

(20912) (2-6-7)

## அகவை அறுபதில் அஞ்சலிக்கின்றோம்

### சண்முகநாதன் ஜெயமோகன்

நித்தமும் நீ வருவாய்!
பற்பல கதைகள் சொல்லிடுவாய்!
அன்பொடு பண்பாய் - எமை
அரவணைத்த சித்தப்பாவே - இன்று
உங்கள் பிறந்தநாளில் - எம்மை
விட்டுப் பிரிந்துவிட்டீர்களே!
கதறுகிறோம் நாம் - நீங்களின்றி
எப்போது வருவீர்கள் எம் அன்பு
அப்பாவே - சித்தப்பாவே!
கண்ணீருடன் பிரார்த்திக்கின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
உங்கள் அகவை அறுபதிலே!

உங்கள் பிரிவால் துயருறும்
பெறாமகள்
**மகேந்திரன் கிரிசாந்தி,**
பிரான்ஸ்.
0033157421396

(ஈ/3868)(2.6.7)

## வீடு வளவு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி சந்தியிலிருந்து நல்லூர் பக்கம் பருத்தித்துறை வீதியில் 100 யார் தூரத்தில் $2\frac{3}{4}$ பரப்பில் ஐந்து அறைகள் மற்றும் சகல வசதிகள் கொண்ட வீடுவளவு விற்பனைக்குண்டு. (சி/3938)(5-6-7)
தொடர்பு: 0112715130, 0779775017, 021 7200467

## வீடு வாடகைக்குத் தேவை

கொக்குவில், கோண்டாவில், உடுவில், மானிப்பாய் பகுதியில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 0778460173 (23829)(2-7)

## வீடு விற்பனைக்கு

தெல்லிப்பழை துர்க்காபுரம் தோதரவை அம்மன் கோயிலுக்கு அருகில் $1\frac{1}{2}$ பரப்புக் காணி, வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 071 841 4614
(சி/3870)(5-6-7)

## விற்பனைக்கு உண்டு

மாருதி wagan R. 11000km பாவித்த KG-8 xxx என்ற தொடர் இலக்கமுடைய மாருதி கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 756 1148 (19349)(5-6-7)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1981 இல் பிறந்த உதயத்து செவ்வாய் 42 பாவமுடைய பிரான்சில் வசிக்கும் (PR இல்லை)இவருக்கு PR உடைய மணமகள் தேவை
(23730)(5-6-7) தொடர்பு: 077 538 2199

Study in
Minimum qualification G.C.E. (O/L)
GEORGIA (Europe)
Hotel Management (Duration 1 year)
Rs. 350,000/- Course Fee
No IELTS No Interview No Bank Balance
flex Institute
Step Towards a Bright Future
(A Subsidiary of Flex Graphic)
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
www.flexinstitute.lk (சி/3937)

## கூலர் விற்பனைக்கு

ரொயாட்டா 250 ரக(டயனா) கூலர் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 607 1675
(சி23733)(5-6-7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## பரிசளிப்பு விழா நேரமாற்றம்

08.10.2012 அன்று மு.ப.9.30 மணிக்கு நடைபெறவிருந்த யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் அன்றைய தினம் பி.ப. 12.30 மணிக்கு நடைபெறவுள்ளது என வித்தியாலய அதிபர் திருமதி ல. முகுந்தன் அறிவித்துள்ளார்.

(23798)(5-6-7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
09.03.1934

மறைவு
09.09.2012

### அமரர் நல்லதம்பி சிவசுப்பிரமணியம்

கடந்த 09.09.2012 ஞாயிற்றுக்கிழமை ஆவணி அட்டமித்திதியில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளும் நாளை (08.10.2012) திங்கட்கிழமை அந்தியேட்டிக் கிரியைகள் அதிகாலை 4 மணிக்கு காரைநகர் ஆலங்கண்டடி புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று. அன்று அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பயிரிக்கூடல், காரைநகர்.
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(23786) (2-6-7)

# மரண அறிவித்தல்

## சண்முகநாதன் ஜெயமோகன்



ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், குரும்ப சிட்டி வீதி, கட்டுவன், தெல்லிப்பழையை நிரந்தர வசிப்பிடமாகவும், இல.98, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் ஜெயமோகன் கடந்த 30.09.2012 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் -ஜெயபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கதிரித்தம்பி மற்றும் நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், சர்மிளா (லண்டன்), பிரசாத், பிரகாஷ்(நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், புலேந்திரன் (கனடா), ரேணுகா, டீபிகா சாந்தினி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற Dr. ஜெயக்குமார் மற்றும் ஜெயகௌரி (கனடா), ஜெயக்குமாரி (அமெரிக்கா), ஜெயரூபன், ஜெயநாதன் (கொழும்பு), காலஞ்சென்ற ஜெயராஜ் மற்றும் ஜெயந்தி, ஜெயபாலினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நவரத்தினம் - ராணி (கனடா), சீவரத்தினம் - நகுலேஸ்வரி, ஜெயரத்தினம் - விஜி (பிரான்ஸ்), லக்சுமி - காலஞ்சென்ற ஜெகரூபநாதன், சிவமணி- காலஞ்சென்ற சற்குண நாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெசாந் (லண்டன்), ஜெசானா (லண்டன்), லக்சிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.10.2012) திங்கட் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 98, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(சி/) (45.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 14.11.1981 — அரக்கர் குடியில் 21.09.2008

## சண்முகலிங்கம் ரமேஸ்

குடும்பத்தின் குதூகலத்தை அள்ளிக் கொடுத்தவனே
கடக்குட்டியாக செல்லப்பிள்ளையாக
எங்களுக்குள் உதித்தவனே ரமேஸ்
உன் கல்லூரி படிப்பும் கலை நிறைந்த மேடைகளும்
உனக்கென ஒரு கூட்டம் சூழ்ந்திருக்கும்
துள்ளித் திரிந்த காலமெல்லாம் தூரத்தே சென்றாலும்
துளியளவும் மறக்க முடியலயே!
நீ ஊருக்காய் உன் உறவுக்காய்
உன் உடன் பிறப்புக்காய் உன்னை உருக்கிக் கொண்ட
மெழுகுவரத்தியென ஒளியானாய்
உன் செயல்கள் எல்லாம் எம் மனக்கண்ணில்
நாளும் நடமாடும் நீங்காத உன் நினைவுடன்

முள்ளியவளை, 4 ஆம் வட்டாரம். — குடும்பத்தினர்.


அமெரிக்கா மற்றும் பிரித்தானிய பட்டப்படிப்புக்கள்
தற்போது MALAYSIA இல்

LINCOLN UNIVERSITY COLLEGE

No Sponsor
Tuition Fee After the VISA
NO IELTS * Free Consulting

Doctoral
PhD in Information Technology
Doctor of Business Administration

Master
Master in Contemporary Healthcare
Master of Business Administration

Bachelor
Doctor of Medicine (MD)
BSc (Hons) in Contemporary Healthcare
BSc (Hons) in Business Administration
BSc (Hons) in Creative Computing
BSc (Hons) in Hospitality Management
BSc (Hons) in Nursing
BSc (Hons) in Creative Multimedia Technology

Diploma
Diploma in Multimedia
Diploma in Hotel & Catering
Diploma in Nursing
Diploma in Traditional Chinese Medicine
Diploma in Business Administration
Diploma in Pharmacy
Diploma in Accounting
Diploma in Medical Assistant
Diploma in Physiotherapy
Diploma in Computer Science

Foundation
Foundation in Science
Certificate 'A' - Level Cambridge
Foundation in Business & Computing
Certificate Culinary Art

குறைந்த தகைமை Diploma - O/L Degree - A/L
Intakes : Nov, Jan, March
மருத்துவ கற்கைநெறிக்கு 33% கட்டணக்கழிவு
(Nursing, Pharmacy, Medical Assistant)

Exchange / Transfer Programme to USA & FINLAND

LUC-Malaysia KL Campus inviting reputed institutes to get the representative & affiliation for the programmes.

LINCOLN UNIVERSITY COLLEGE - MALAYSIA
SRI LANKA OFFICE
# 201-1/1A, Galle Road, Dehiwala.
Hot line : 0712-545000 , 0775-54500
www.lincoln.edu.my E-mail : silmy@lincoln.edu.my
(சி/3933)


# மரண அறிவித்தல்

## அருணாசலம் இலட்சுமி



கிளிநொச்சி வன்னேரிக்குளத்தை வதிவிடமாகக் கொண்ட திருமதி அருணாசலம் இலட்சுமி நேற்று (06.10.2012) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலத்தின் அன்பு மனைவியும், கயிலாயபிள்ளை (அதிபர், யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி), காலஞ்சென்ற சச்சிதானந்தன் மற்றும் வள்ளிநாயகி, பாலசிங்கம், துரைசிங்கம், கனகாம்பிகை, வசந்தி, வசந்தாதேவி, சற்குணநாதன், தயாமதி ஆகியோரின் அன்புத்தாயும், திலகவதி, இராசபாலாம்பிகை, புவனேந்திரன், ஜெயலட்சுமி, யோகேந்திரம், கமலநாதன், தெய்வேந்திரம், சுதாநந்தினி, கருணாநிதி ஆகியோரின் அன்புமாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வன்னேரிக்குளம் திக்காய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வன்னேரிக்குளம், கிளிநொச்சி.

தகவல்:
க. கயிலாயபிள்ளை (மகன்),
அதிபர் :
யா /சாவகச்சேரி இ. கல்லூரி, சாவகச்சேரி.

(C/9389)(6.7.8)

# அவசரம் தேவை புதிய அரசு

கொழும்பு,ஒக் 7

நாட்டு மக்களுக்கு நலன் வழங்க வேண்டுமாயின் புதிய அரசு ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். பண்டாரகம பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர் நிறைவடைந்து சில ஆண்டுகள் கடந்துள்ளன எனினும் மக்களின் வாழ்க்கைச் செலவு குறையவில்லை. நாளுக்கு நாள் வாழ்க்கைச் செலவு வெகுவாக உயர்வடைந்து செல்கின்றது.

இந்தப் பிரச்சினைகளுக்கு அரசு இதுவரையில் தீர்வு எதனையும் வழங்கவில்லை. மஹிந்த சிந்தனை என்பது குடும்ப அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதனை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்படுகின்றது.

சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வன்முறை, குற்றச் செயல்கள் பாரியளவில் அதிகரித்துள்ளன. அரசியலில் இருக்கும் ஒரு சிலர் இந்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

ஜனநாயக ஆட்சி நடைபெற்றால் இவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டும். மக்கள் அமைதியாகவும் சுபீட்சமாகவும் வாழக்கூடிய ஓர் ஆட்சி விரைவில் நிறுவப்படும்-என்றார். (த)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111



வீடு விற்பனைக்கு

மானிப்பாய் வீதியில் (ஓட்டு மடத்திற்கு அருகாமையில்) கடையுடன் கூடிய வீடு (பரப்பு 1-1/4) விற்பனைக்குண்டு.

தொடர்பு 0775148420
(சி/3948)



வேலைவாய்ப்பு

உங்கள் பண தேவையை தீர்க்க உங்களுக்கு ஒரு வேலை தேவை. பயிற்ச்சியுடன் கூடிய வேலை வாய்ப்பு நீங்களும் இணைந்து கொள்ளலாம்.

வயது - 18-30 வரை, தகைமை O/L, பயிற்சியின் போது குறைந்தது 15,000 [illegible] 45,000

தொடர்பு
0779994807
0114986066
(சி/3949)


# நன்றி நவிலல்



## துரையப்பா சிவஞானச்செல்வம்

எமது தந்தையார் செருத்தனைப்பதி இராஜமகாமாரி அம்பாளின் அறங்காவலர் துரையப்பா சிவஞானச்செல்வம் அவர்கள் அம்பிகையின் திருவடி பற்றிக் கொண்ட செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசி வாயிலாகவும் இணையத்தளங்கள் மூலமாகவும், கண்ணீர் அஞ்சலிகள் மூலமாகவும், இறுதிக்கிரியை களில் கலந்துகொண்டோருக்கும், மலர் அஞ்சலிகள் செய்தோருக்கும், நினைவஞ்சலி செய்தோருக்கும் மற்றும் எமது துயரில் கலந்து கொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

navamalar001@gmail.com
tsmaru@hotmail.com

தகவல்:
பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

(25831)(6.7.8)


# YOGIS

(Academy of Beauty Culture, Hair Dressing & Home Science)

## EXIBITION

Cake and Sugar Craft
Sponsored By : Pettah Essence Suppliers

கேக் கண்காட்சி 11.10.2012 முதல்

திருமண அலங்கார கேக் வகைகள்
பிறந்தநாள் கேக் வகைகள்
ஐசிங் பூக்களின் அலங்காரங்கள்
இன்னும் வித்தியாசமான கேக்களின் அலங்கார கண்காட்சி 11 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகி 12ஆம், 13 ஆம், 14 ஆம், 15 ஆம் திகதிவரை மு.ப. 10 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறும்.

நடைபெறும் இடம்:
75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயம் முன்பாக)

(சி/3869)(6-7-8)


# கண்ணீர் அஞ்சலி



## அமரர் புவனேந்திரன் ஈழநாதன்

ஈழம் தந்த ஈழவனே ஈழநாதா
ஈழமணித் திருநாட்டின் சிரசென ஒளிரும்
ஈகை நிறை உடுப்பிட்டிப் பதிதனில்
பார் போற்றும் பாவலனாய்
பல் துறை நிபுணனாய் இலங்கவென - அவதரித்தாய்
தனக்கெனத் தனி மெருகோடு மிளிரும்
தன்னிகர் இல்லா மேதைகளை உருவாக்கிய
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷனில்
உவப்புடனே கல்வி கற்று
பனுவல் பல இரசனையுடன் கற்று
பலதேர்விலும் பரிசில் பல பெற்று
கற்கை நெறி புகட்டிய ஆசானும்
களிப்புடனே உன் வளர்ச்சி கண்டு
உள்ளக் களிப்புடனே உன்னை வாழ்த்த
உன்னதமாய் உயர்ந்த பல பெறுபேறு பெற்றாய்
புலமை முதல் க.பொ.த உயர்தரம் வரை
புதிய பல சாதனைகள் நீ படைத்தாய்
பெற்றவரும் உற்றவரும் பெருமை கொண்டு நிற்கையிலே
அந்நிய தேசமதில் அடியெடுத்து வைத்து
அரும் பெரும் சாதனைகள் நீ படைத்த வேளையிலே
காலனும் உன்னைக் கவர்ந்தனனோ
கண்கலங்கி நிலை தளர்ந்து வாடுகின்றோம்
மீண்டும் உன் துடிப்போடு கூடிய திருமுகம் காண துடிக்கின்றோம்
மீளாத் துயரில் மூழ்கித் தவிக்கும் உன் நண்பர்கள்.

நண்பர்கள்
2000 A/L Batch,
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

(C/3940) (6,7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு

மலேசியா, ஆஸ்திரேலியாவில் ஆண்,பெண் இருபாலாருக்குமான உடனடி வேலை வாய்ப்பு.
மேலதிக தொடர்புகளுக்கு: Subraa2525@yahoo.com
T.P.:072 391 4486
தொழில் புரிய விரும்புவோர் எட்டு புகைப்படங் களுடனும் கடவுச் சீட்டுடனும் சமுகமளிக்கவும்.

## பகிரங்க அறிவித்தல்



பத்தனை, டிம்புள மவுண்ட் வேர்ணன் தோட்டத்தைச் சேர்ந்த மாயழகு தயானந்தன் (தயா) தேசிய அடையாள அட்டை இல. 741870150V தற்போது எங்கள் நிறுவனத்தில் தொழில்புரியவில்லை என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கின்றோம். இவர் சம்பந்தப் பட்ட கொடுக்கல், வாங்கல்களுக்கு நாங்கள் பொறுப்பாளர்கள் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

M/S. **SAIFI TRADING COMPANY**
**(Paper & Boards)**
No. 96, New Moor Street, Colombo - 12.
Tel : 2440793.

## 14 ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு
01.08.1934

இறப்பு
07.10.1998

### அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை
(ஓய்வுபெற்ற பொலிஸ் அத்தியட்சகர்)

குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து
எம்மை அன்புடன் அரவணைத்து
நன்நெறி காட்டி வாழ வைத்த
எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கண்டி வீதி, சாவகச்சேரி.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணில்
18.03.1938

விண்ணில்
09.09.2012

### அமரர் கந்தையா வல்லிபுரம்

உலகிலே பணிகள் செய்து தன் பணி என்ற
கொள்கையுடன் முன்னுதாரணமாக வாழ்ந்து
எமக்கெல்லாம் நல்வாழ்வு ஊட்டிய எங்கள் அன்புத்
தெய்வத்தை வந்தனை செய்து பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்ப ஒளிவிளக்கு கந்தையா வல்லிபுரம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.10.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் இடைக்காடு அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து 09.10.2012 செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின் றோம். மேலும் எங்கள் அன்புத் தெய்வத்திற்கு வைத் தியசாலையில் உதவி புரிந்த வைத்தியர்கள், தாதியர்கள், சக ஊழியர்கள் மரண ச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியோருக்கும் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட் டோருக்கும். மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், உள்நாடு வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் ஆறுதல் வார்த்தை கூறியோருக் கும் மேலும் சகல வழிகளிலும் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம்.
தயவு கூர்ந்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தேத்தாவடி, இடைக்காடு, அச்சுவேலி.
(23778)(5-6-7)
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் லண்டன் Citizen இலங்கை வந்துள்ளார், இவருக்கு இதே குலத்தில் 35 வயதிற்குட்பட்ட 30 பாவத்திற்குள் மணமகள் தேவை.
தொடர்பு: 075 400 5088
(சி/3841) (5.6.7)

## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு இராசபாதை வீதி சந்திக்கு அருகில் பிரதான பாதையில் மூன்று பரப்பு வெற்றுக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 072 623 6610, 011 247 3632
(சி/3842) (5.6.7)

## தையல் வகுப்பு

மகளிருக்கான காலை மாலை நேர
தையல் பயிற்சி
வகுப்புகள்
குழந்தைகள் சட்டை, சாறி பிளவுஸ், சுடிதார், பாவாடை சட்டை உட்பட சகலவிதமான ஆடைகளும் வெட்டித்தைப் பதற்கு பயிற்றுவிக்கப்படும்.
517, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
( ஓட்டு மடத்துக்கு இடையில்)
தொடர்பு : 077 7150883
(23823)(5.6.7)

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், 1982 இல் பிறந்த 2 இல் செவ்வாய், 11 பாவமுடைய லண்டனில் பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருக்கும் மணமகளுக்கும், 1984இல் பிறந்த, 8இல் செவ்வாய், 76 பாவமுடையஆசிரியையாகப் பணிபுரியும் மணமகளுக்கும் உள்நாட்டு/ வெளிநாட்டு தகுந்த மணமகன் தேவை
(23819)(5-6-7) தொடர்பு: 077 958 3944

## தேவை.

கிளிநொச்சியில் அமைந்துள்ள காரி யாலயம் ஒன்றில் பணி செய்யக்கூடிய பெண் ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு 077 416 9026

### பணியாளர் தேவை

புளியங்குளத்தில் சிமெந்து கற்கள் (வீட்டுக்கல்) உற்பத்தி செய்வதற்கு ஆண் இருவர் தேவை.
1சிமெந்து பைக்கற்றுக்கு 400/= வீதம் வழங்கப்படும். தொடர்பு: 077 416 9026
(20813)(5-6-7)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1975 சதயம் 12இல் செவ்வாய் 17 பாவம் Business U.K. Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
(23783)(5-6-7) தொடர்பு: 077 174 2921

## வேலையாள் தேவை

கொழும்பிலுள்ள வீட்டில் தங்கியிருந்து ஒரு வயதுக் குழந்தையைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.சம்பளம் பேசித்தீர் மானிக்கப் படலாம்.
(23816)(5-6-7) தொடர்பு: 077 337 7334

## வைத்தியம்

உடைவு முறிவு, மூட்டுக்கள், மூட்டுவாதம், பக்கவாதம்,. தசைநெரிவு நாள்பட்ட நோவு விசேஷமாக முள்ளந் தண்டு சம்பந்தமான நோய்களுக்கு சித்த ஆயுள் வேத முறைப்படி சிகிச்சைகள் அளிக்கப்படும். நாள்கள்: ஒவ்வொரு வியாழன், வெள்ளிக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை. பதிவுகளை முன்கூட்டியே செய்யவும்.
தொடர்புகளுக்கு : 077 6544338
இடம் : யாழ். சிவன் கோயிலடி வைத்தியசாலை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
(கோப்பாய் A.G.A காரியாலயத்திற்கு முன்பாக)
வைத்தியர் : Dr.சோமசுந்தரம், T.விஜயன் Reg No:8688
(23144)(5-7-6)


## காணி விற்பனைக்கு

வடமராட்சி, அல்வாய் தெற்கில் வியாபாரி மூலை வீதியில் மாலி சந்திக்கு அண்மையில் ஒரே அடைப்புக்குள் 4¼,6¾ பரப்பளவு கொண்ட காணிகள் தேவைக் கேற்ப பிரித்தும் இணைத்தும் விற்பனைக் குண்டு. 4½பரப்பு காணியில் கிணறும் வீடும் உண்டு. மின் இணைப்பும், பிரத்தியேக பாதையும் உண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்பு:
021 226 4685, 077 967 2385
(சி/3847) (5.6.7)

## விற்பனை முகவர் தேவை

**SEELAN FOOD AND BEVERAGES (PVT)LTD.**
எமது உற்பத்தி பொருள்களை விநியோகம் செய்வதற்கு விற்பனை முகவர்கள் வவுனியா, பருத்தித்துறை, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் முகவர்கள் தேவை.
தொடர்பு: 077 286 3251, 011 434 3910
(23787) (5.6.7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
28.06.1925

மறைவு
19.09.2011

### அமரர் கணபதிப்பிள்ளை சின்னத்துரை
(பிரபல வர்த்தகர், மானிப்பாய்)

திதி: சப்தமி (07.10.2012)

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவு
என்றென்றும் எங்கள் மனதில் நிறைந்திருக்கும்
காலங்கள் விடை பெறலாம் ஆனாலும்
கண் முன்னே நிழலாடும் உங்கள் நினைவுகள்
ஒரு போதும் எம்மை விட்டு அகலாது.
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உடுவில் வீதி, மானிப்பாய். குடும்பத்தினர்.
(23707)(5-6-7)

பாலமுருகன் துணை

## அந்தியேட்டி சபிண்டீகரண ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



நாரந்தனை கிழக்கு,
ஊர்காவற்றுறை

### தெய்வத்திருமகன் பாலகுமார் சண்முகராஜா

வதிவிடம்: கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

எங்கள் இதய தெய்வத்தின் அந்தியேட்டி - சபிண்டீகரணக் கிரியைகள், ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (08.10.2012) திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் கீரிமலை தீர்த்தக்கரை மண்டபத்திலும், சபிண்டீகரணம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை (10.10.2012 ) புதன்கிழமை காலை 9.00 மணிமுதல் எமது இல்லத்திலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மதிய போசனம் பிற்பகல் 1.00 மணிவரையில் இடம்பெறும்.
இந்நிழ்வுகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொண்டு எங்கள் இதய தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து மதிய போசனத்திலும் எம்முடன் இணைந்து கொள்ளும் வண்ணம் பணிவுடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.
அத்துடன் அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு நேரிலும், தொலை பேசி மூலமும் ஆறுதலையும் அனுதாபத்தையும் தெரிவித்தவர் களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

192, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.தொ.பே. 021 222 3636
தாய், சகோதர சகோதரிகள் மற்றும் மைத்துன, மைத்துனிகள்.
(23704)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் விற்பனைக்கு

டொல்பின் வான் PA xxxx 2000 ஆண்டு

நிசான் சணி FB 15, HI xxxx 2001 ஆண்டு

தொடர்பு : 077 1362202

(ச/3802)(6,7,8)

## காணி விற்பனைக்கு

பொற்பதி வீதியோடு மூன்று பரப்பு காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு : 077-711 1400

## வான் விற்பனைக்கு

59 - xxxx இலக்கமுடைய நல்ல நிலையிலுள்ள Toyata இனத்தைச் சேர்ந்த Hiace வான் விற்பனைக்குண்டு

தொர்பு : 077 6458168/169

(23818)(6,7,8)

## காணி விற்பனை

கொழும்புத்துறை ''தென்னந்தோட்டம்''காணி 10 பரப்பு விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0212226020

0777425484

(23478) (15-6)

## பிரேதங்கள் எடுத்து வழங்குவதற்கும் கழிவு உறுப்புக்களை அழிப்பதற்கும் கேள்விப்பத்திரம்

02.10.2012 வெளிவந்த உதயனின் 20B பக்கத்தில் பிரசுரமான மேற்படி விளம்பரத்தில் கேள்விப்பத்திரங்கள் 12.10.2012 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அனுப்பி வைத்தல் வேண்டும் எனச் சேர்த்து வாசிக்கவும்.

(ச/3865)(6,7,8)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு

advt@uthayan.com

0215671111



## திருத்திக்கொடுக்கப்படும்

அனைத்து வகையான மடிக்கணினிகளும் ( Hp, Acer, Compaq, Toshiba, Samsung, Sony, etc) திருத்திக் கொடுக்கப்படும்.

அனைத்து மடிக்கணினிகளுக்குமான உதிரிப்பாகங்களும் உண்டு.

தொடர்புகளுக்கு : i Buy Computers

75/10, Front Lane, Palaly Road Thirunelvely.

T.P : 077 7072092

(23817)(6,7,8)

## ஆங்கிலப் பயிற்சி நெறிக்கான புலமைப்பரிசில்கள் - 2012

★ 130 நாடுகளில் உலகப் பிரசித்தி பெற்ற TOEIC ஆங்கில தகைமைகள் பெறுவதற்குரிய வாய்ப்புக்கள் இப்போது இலங்கையில்

### கற்கை நெறிகள்

- ★ TOEIC Bridge (Basic English)
- ★ TOEIC Speaking (சகல வயதினருக்குமான ஆங்கில பேச்சு நெறி)
- ★ TOEIC Professional (அலுவலக உத்தியோகத்தர்களுக்கானவிசேட ஆங்கிலப் பயிற்சி)
- ★ Trainee English teachers (ஆங்கில ஆசிரியர்களாக வர விரும்புவர்களுக்கான பயிற்சித்திட்டம்)
- ★ TOEIC English Diploma (வெளிநாடு UK யில் உயர்கல்வி கற்பதற்கு செல்பவர்கள்/கணவன் மனைவி விசா அனுமதிக்கான கற்கை நெறிகள் A1,B1,B2 )

★ 120 நாடுகளிலுள்ள தொழில்சார் நிலையங்களால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்

★ UK மற்றும் பல நாடுகளில் Embassy யினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்

கற்கை நெறிகள் யாவும் விசேட விரிவுரையாளர்களினால் மாத்திரம் கற்பிக்கப்படும்.

விண்ணப்ப படிவம்:
விண்ணப்பதாரியின் பெயர்:
முகவரி:
தொலைபேசி இலக்கம்:
கற்க விரும்பும் நெறி:

விண்ணப்ப விவரங்களை பின்வரும் முகவரிக்கு / தொலைபேசி மூலம் SMS அனுப்பவும் 077 7172660

International Knowledge Pool
No. 19, 3rd Floor, Thanarajah building
(People 'S Bank), Stanly Road, Jaffna

Hotline: 077 7172660

(23752)(6,7,8)


## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





மலர்வு 30.11.1954

உதிர்வு 03.10.2007

### அமரர் கந்தப்பிள்ளை இராசரத்தினம்

(பலாலி)

ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
உறவென்ற கூடு விட்டு பறந்து தான் சென்றீரே
சிறகொடிந்த பறவைகளாய்
மனமுடைந்து வாழுகின்றோம்
ஆண்டுகள் எத்தனை ஆனாலும்
உம் நினைவுகள் மட்டும் அகலாது.
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

தாவளை, இயற்றாலை, கொடிகாமம். - குடும்பத்தினர்.

(23207)(6,7)

## 2 ஆம் ஆண்டு நினைவில்



அன்னை மடியில் 21 ★ 01 ★ 1949

ஆண்டவன் அடியில் 30 ★ 09 ★ 2010

### அமரர் Dr.K.V துரைராஜா

திதி : 07.10.2012

( ஓய்வுநிதியர் - யாழ் போதனா வைத்தியசாலை,
உரிமையாளரும் ஸ்தாபகரும் -
அகஸ்தியர் வைத்தியசாலை, மருந்து உற்பத்திசாலை
சித்த ஆயுள்வேத வைத்தியர் -
அகஸ்தியர் வைத்தியசாலை )

இரண்டு ஆண்டுகள் சென்றபோது
ஆறவில்லை எம் துயரம் அன்பும், பண்பும்
பாசமும் நிறைந்த எங்கள் அன்பான அப்பா
வாழ்ந்த வாழ்க்கையும் வாழ்ந்து கொண்டிருக்கும்
வாழ்க்கையையும் நான் அறிந்தது தான் ஆனால்
இனி மேல் வாழப்போகின்ற வாழ்க்கை எப்படிப்பட்டதோ
என்னால் சொல்லமுடியாது அப்பா?
எது எப்படி ஆனாலும் உங்களுடன் நாங்கள் சேர்ந்து வாழ்ந்த
வாழ்க்கைக்கு எதுவும் நிகரில்லை அப்பா
நீங்கள் தெய்வமாக இருந்து என்னையும் பிள்ளைகளையும்,
பேரப்பிள்ளைகளையும் வாழ்த்துங்கள் அப்பா
உங்கள் ஆத்மா சாந்தி அடைய சுட்டி வேரத்து அம்பாளைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
அகஸ்தியர் வைத்தியசாலை,
மருந்து உற்பத்திசாலை
Old - மூத்த விநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
New - மாதா கோவிலடி
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

T.R. Mobiles
மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம்

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சகோதரர்கள்






தோற்றம் 12 11 1932

மறைவு 06 10 2001

### மிருதங்க வித்துவான் கலாபூசணம்
### பிரம்மஸ்ரீ கணேஷ சர்மா

(வட்டுக்கோட்டை)

என்றென்றும் உமது நினைவால் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரிகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

A.G. SARMA & CO
&
A G S SHARMA & CO
(Chartered Accountants)
(Management & Staff)
swaminathan@agsarma.com
www.agsarma.com

க.சுவாமிநாதன் சர்மா (மகன்)
0777 802900

(ச/3552)(2,6,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆவது பிறந்தநாளும் நீங்காத நினைவில் ஆண்டுகள் மூன்றும்



தோற்றம்
07.10.1981

மறைவு
19.09.2009

## இரவி பிரசாத் (றாயு)



ஆறடி உயரமான அன்பு செல்வனே!
ஆண்டுகள் மூன்றா? நீ அமரராகி
அதிர்ச்சியோடு உறைந்து விட்ட இதயம்
உணர்ச்சியின்றித் துடிக்கிறதே
பெற்றவள் செய்த பாவமா
படைத்தவன் தந்த தண்டனையா
விடை தெரியாத
வினாவாகி விட்டதே
நீங்காத நினைவில் தனக்கு
ஒரு இடம் தேடி...
விட்ட றாயுவின்
உறவுகளே உதயனோடு
ஒருமுறை இணையுங்கள்
அவனின் உறவுகள் திரும்பட்டும்.
உன் பிரிவின் நினைவில்
வாழப் பழகிய

- அம்மா, அப்பா, சகோதரிகள்.

இ.இரவி, புகையிரத வீதி, கொடிகாமம்.

# மரண அறிவித்தல்



## திருமதி
## சிவானந்தராசா மீனலோஜினி (தேவி)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவானந்தராசா மீனலோஜினி (தேவி)நேற்றுமுன்தினம் (05.10.2012) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பார்த்தசாரதி - சரஸ்வதியம்மா தம்பதியரின் அன்பு மகளும், சிவானந்தராசாவின் அருமை மனைவியும், சிவலோஜினி, காலஞ்சென்ற தயானந்தன் மற்றும் ஜெயலோஜினி, ஜெயானந்தன், குணானந்தன், சுதானந்தன் ஆகியோரின் பாசமிகு தாயும், பிரேமஜெயந்தன், செல்வவிபூஸ் ஆகியோரின் மாமியும், தனுஷன், காயத்திரி, அபிஷன், மருத வாணன், கனிமதி, கஜீவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணிக்குப் பூதவுடல் தகனக் கிரியைக்காகச் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

புலவனார் வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

(23814)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுடன் கூடிய காணியும் அதனோடு தொடர்புபட்ட காணியும் விற்பனைக்கு

வீட்டுடன் கூடிய 9 பரப்புக் காணியும்,பனை தென்னைகளுடனான 11 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு. இவை நல்ல சுற்றாடலில் அமைந்ததும் இரண்டுக்கும் தனித்தனியே கிணறுகளை கொண்டதுமாகும். இவை சுன்னாகம் Bank Lanc இல் அமைந்துள்ளது.

தொடர்பு:- 071 847 4915, 071 248 2837

(23779)(5.6.7)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட டாக்டர்கள் சிபார்சு செய்வது

100% சுத்தமான

றோயல் குளுக்கோஸ்

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

Packed by:

Royal Industries, colombo -13

Hot line: 077 727 7670




ஏக விநியோகஸ்தர்கள்:

சிவா நறுமணப் பூங்கா 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 2567 சத்திரச் சந்திக்கு அருகில்.

## ஆடைகளில் அச்சுக் கலைப் பயிற்சி
## FABRIC PRINTING TRAINING

அரிய சந்தர்ப்பம்- வவுனியாவில்

நீங்கள் அணியும், ஆடைகள், சாறிகள் மற்றும் துணிகளில் இலகு முறையில் குறைந்த முதலீட்டில் வீட்டில் வைத்தே டிசைன்கள் பிரிண்டிங் செய்யும் முறையை தென்னிந்திய புகழ் அர்ச்சனா அக்கடமியின் அங்கீகாரம் பெற்ற ஆசிரியர் அன்ரோ டினேஸ்B.A,D.S.Tech.(S.India)செய்முறை பயிற்சியளிக்கிறார்.

இம்மாதம் ஒக்ரோபர் 20,21 (சனி,ஞாயிறு), சான்றிதழ் வழங்கப்படும்.

பிரவீனன் என்ரிபிரைசஸ்

35, கந்தசாமி கோயில் வீதி, வவுனியா.

விபரம் பதிவுகளுக்கு: 077 728 3192, 077 890 4131,071 586 3151

(திங்கள் Vijay TV இல் காலை 9.30 இக்கு இந்த நிகழ்ச்சியை பார்க்கலாம்.)

(23774)(5.6.7)

## மணமகள் தேவை

இந்து உயர் கௌரவ குடும்பங்களைச் சேர்ந்த

1) 1980 செவ்வாயற்ற 20 பாவம் வைத்தியருக்கும்,

2) 1983 செவ்வாயற்ற 32 பாவம் பொறியியலாளருக்கும்,

3) 1977, 8 இல் செவ்வாய் 47 பாவம் பொறியியலாளருக்கும்,

4) 1976, 7இல் செவ்வாய் 25 பாவம் விரிவுரையாளருக்கும்,

5) 1977 செவ்வாய்க்குற்றமற்ற வங்கி முகாமையாளருக்கும்,

தகைமையுள்ள மணமகள்களும், வெளிநாட்டு மணமகன்களுக்கும் மணமகள்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

தொடர்பு:

நாகபூஷணி திருமணசேவை.

125, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.


021 222 9306, 077 138 7596, 075 554 6000.

Fax 021 222 9306

Email:nakapoosanywedding@gmail.com

(23535)(5.6.7)

## நெஞ்சம் கனத்த 7 ஆம் ஆண்டு நினைவலைகள்



எழுகதிராய் 04.08.1984

உதிர்மலராய் 07.10.2005

### செல்வி தனுஷா மாதவராஜா

(2 ஆம் வருட கலைப்பீட மாணவி யாழ்.பல்கலைக்கழகம் பழைய மாணவி, மகளிர் மகா வித்தியாலயம், இறம்பைக்குளம், வவுனியா)

திதி: சதுர்த்தி

சிந்தனை செய்திடா நினைவும்.
சிந்தனை ஓங்கிடும் செயலும்
நொந்தொரு வார்த்தை சொல்லா மனமும்
சந்தக் கவிதையாய் நிலைத்திடும் குணமும்
வந்த வழி நொந்துவிடாப் பணிவும்
இந்த வாழ்வில் இருந்திட்ட தனுஷாவே
சிந்தையில்லா காலனவன் செயலாலே
ஆருயிரை இழந்தின்று சோருகின்றோம் கதறுகிறோம்
ஆருண்டு தேற்றி ஆறுவதற்கு

மீளாத்துயரில்

பொ.மாதவராஜா, அண்ணாவி வளவு, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

அப்பா, அம்மா, தம்பி, உடன்பிறவா தங்கை.

(23570)

## வீடு வாடகைக்கு

கொக்குவில், பிரம்படி ஒழுங்கையில், 4 அறைகளைக் கொண்ட, 3 பரப்பு காணியில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு

தொடர்பு: 077 6544 652

(23481) (45.6.7)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், வயது 36, கார்த்திகை 3, கி.பா. 76 செவ்-8, B.Sc, அரச உத்தியோகம் உடையவருக்கு பொருத்தமான புரிந்துணர்வுள்ள அரச உத்தியோக வரனை எதிர்பார்க்கின்றோம். சீதனம் முக்கிய மில்லை.

தொடர்பு: 077 8018 741

(23624) (45.6.7)

## வேலையாள்கள் தேவை

பண்ணை ஒன்றில் பணிபுரிவதற்கு பின்வரும் வேலைகளுக்கு வேலையாள்கள் தேவை.

★ சிட்டை எழுதுனர் (பில் போடுபவர்- பெண்)

★ கூடு பராமரிப்பாளர் (பெண்)

ஆர்வமுள்ளவர்கள் நேரில் வரவும்

தொடர்பு: வீனஸ் பாம்,
கலாசாலை வீதி,
முத்துத்தம்பி மகாவித்தியாலய வடக்கு ஒழுங்கை,
திருநெல்வேலி.

தொ.பே. 077 5201 921

(23595) (45.6.7)

## காணி விற்பனைக்கு

மல்லாகத்தில், காங்கேசன்துறை வீதிக்கு சமீபமாகவுள்ள வைரவர் கோயிலுக்கு அருகில் 4¼ (நான்கே கால்) பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 7732 164,021 3217 227.

(23795) (45.6.7)

## விற்பனையாளர் தேவை

பிரபல K.V. Printers புத்தக விற்பனை நிலையத்துக்கு ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. A/L சித்தியடைந்தவர்கள் யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. ஆரம்ப சம்பளமாக ரூ. 8000/= வழங்கப்படும், அதன் பின் அதிகரிக்கப்படும்.

தொடர்பு: 386, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே. 077 063 3116

(23364) (45.6.7)

## விற்பனைக்கு

வவுனியாவில் நல்ல நிலையிலுள்ள Photo Copy Cannon 2520, Cannon 7160 (இரண்டு) Duplicater Jw 5300 Model, Ac Machine 24 Bit(இரண்டு), Computer table 01 Photocopy Stand (நான்கு), Telephone Booth, Browsing Booth, Fitting Glading ஆகியன விற்பனைக்கு உண்டு.

தொ.பே. 077 6291 014, 077 6735 902

(20907) (45.6.7)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்திக்கு மிக அருகில் மணிக்கூட்டு வீதி, 351 இலக்கத்தில் நான்கு அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உள்ளது. விவரங்களுக்கு காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை நேரில் வரவும்.

(23770) (45.6.7)

## வீடு வாடகைக்கு தேவை

தனியார் நிறுவனம் ஒன்றிற்கு யாழ்ப்பாணம், நல்லூர், சுன்னாகம், அச்சுவேலி ஆகிய இடங்களில் போக்குவரத்து வசதியுடன் கூடிய வீடுகள் வாடகைக்கு தேவை.

தொடர்பு: 077 3627 055, 077 7069 148.

(23764) (45.6.7)

## விற்பனைக்கு

மிருசுவிலில் உள்ள மர அரிவு ஆலை விற்பனைக்கு உண்டு. தரகர் தேவை இல்லை.

தொடர்பு: 077 2557 761

(23764) (45.6.7)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் கேட்டை கிரகபாவம் 30, சூரியனும் செவ்வாயும் 2 ஆம் இடம் 1987 இல் பிறந்த பட்டதாரி மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.

தொடர்பு: 077 7905 438

(23587) (45.6.7)

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம் சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் உடுவில் மானிப்பாய் வீதியில் 7¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 075 0433 771,021 2240973

(23520)(45-6-7)

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

The Only Official French Language Centre in Jaffna

*Learn French the French Way*

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தரம் வாய்ந்த, யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய Alliance Francaise de Jaffna ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. France மற்றும் பிரெஞ்சு பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மற்றும் மொழி ஆர்வமுள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்.

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

61, Kachcheri - Nallur Road, Jaffna

Phone: 021 2228093

E-mail: alliance jaffna@yahoo. com

(கச்சேரி வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி கட்டடம்)

(23774) (45-6-7)

## 9ஆம் ஆண்டு ஓயாத நினைவலைகள்

பிறப்பு 07 ★ 01 ★ 1977

இறப்பு 07 ★ 10 ★ 2003



அமரர்

### மாசிலாமணி சிறிகாந்தன்

(காந்தன்)

உயிரிலே உறவாகினாய் காந்தா-எம்
உள்ளங்களில் நிலையான தடம் பதித்தாய் -உன்
இன்முகம் தனை மறைத்து இன்றோடு எமை பிரிந்து
ஆண்டு ஒன்பது ஆன போதும் ஆறவில்லை எம் துயரம்
உன் உயிர் சாந்தி பெற எம் இதய அஞ்சலிகள்
வழி நிறைய பெரு மழைகள்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

துயரால் வாடும்.
காந்தன் மாமா குடும்பம்.
[சோமஸ் கந்தராசா]

பாரதி வீதி,
இல.30, வள்ளிபுனம்,
புதுக்குடியிருப்பு.

(20561) (5.6.7)

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 18 ★ 04 ★ 1942

விண்ணில் 18 ★ 09 ★ 2011



அமரர் **கிருஷ்ணர்-வல்லிபுரம்**

நீங்கள் எம்மை விட்டு மறைந்து
ஆண்டொன்று ஓடி விட்டாலும்
என்றென்றும் உங்கள் முகம்
எங்கள் முன் தோன்றுகிறது.
காலத்தின் கோலத்தால் நீங்கள் மறைந்தாலும்
எம்மால் அதனை நம்பமுடியவில்லை
என்றும் நீங்கள் எம்முடன் இருப்பதாகவே
உங்கள் நினைவுகள் எங்களுடன் கலந்திருக்கின்றது.

161/1, சிவன்பண்ணை றோட், யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் வாடும் குடும்பத்தினர்.

(23592)(5.6.7)

## வயது ஒரு தடையா!

65 வயதிற்குட்பட்ட ஆர்வமுள்ள வேலை வாய்ப்பை நாடி நிற்போருக்கு, அரச காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி ஆலோசகராகப் பணியாற்றி நல்ல வருமானத்தை ஈட்ட ஓர் அரிய வாய்ப்பு.

குறிப்பு: முழுநேரமாகவோ, பகுதி நேரமாகவோ பணியாற்றலாம்.

★ 2 வார பயிற்சிக் காலமுடையது.

★ பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

★ பணி நிலையங்கள் வடபகுதிக் கிளைகளில்.

அடிப்படைத் தகைமைகள்:

★ G.C.E(O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி

★ 18- 65 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 20.10.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல. 4404
C/O உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


(23714)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 84

## சிசேரியன் சத்திர சிகிச்சையின் பின்னரான பிரசவம்

★சிசேரியன் சத்திர சிகிச்சையின் மூலமான பிள்ளைப் பேற்றின் பின்னர் எனக்கு முன்னுள்ள பிரசவத் தெரிவுகள் எவை?



இலங்கையில் 20-30 வீதமான கர்ப்பிணிப் பெண்கள் சிசேரியன் சத்திர சிகிச்சை மூலம் சிசுவைப் பெற்றெடுக்கின்றனர். சில பெண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட சிசேரியன் சத்திர சிகிச்சைக்குட்படுகின்றனர்.

★சிசேரியன் சத்திர சிகிச்சைக்குட்பட்ட நீங்கள் சாதாரண யோனி வழிப் பிரசவம் அல்லது மீண்டும் சிசேரியன் சத்திரசிகிச்சை மூலம் சிசுவைப் பெற்றெடுக்கலாம். இது பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது.

1.சிசேரியன் சத்திர சிகிச்சை மேற்கொண்டமைக்கான காரணம்.

2.உடனடியாக/ அவசரமாக மேற்கொள்ளப்பட்டதா?

3.கர்ப்பப்பை மீதான சத்திர சிகிச்சை வெட்டின் வகை.

4.தற்போதைய கர்ப்பம் அசாதாரண பிரச்சினைகளைக் கொண்டுள்ளமை.

★"சிசேரியன் சத்திர சிகிச்சையின் பின்னான யோனி வழிப் பிறப்பு" என்றால் என்ன?

ஒரு பெண் சிசேரியன் சத்திர சிகிச்சை மூலம் ஒரு பிள்ளையைப் பெற்றபின் யோனி வழியூடாக அடுத்த பிள்ளையைப் பெறுதல்.

இப்பிரசவம் சாதாரணமாக அல்லது கருவிகளின் உதவியுடன் நிகழ்த்தப்படலாம்.

★சிசேரியன் சத்திர சிகிச்சையின் பின்னரான யோனி வழிப்பிறப்பின் நன்மைகள் எவை?

1.சிக்கலற்ற சாதாரணமான பிறப்பு.

2. குறுகியகால மீளுகையும், குறுகிய கால வைத்தியசாலைத் தங்குதலும்.

3.குறைந்தளவு வயிற்று நோ.

4.சத்திரசிகிச்சை மூலமான சிக்கல்நிலைகள் இல்லாமை.

★சிசேரியனுக்கு பின்னரான யோனி வழிப்பிறப்பு வெற்றிகரமானதா? ஏறத்தாழ 75 வீதமான சிசேரியன் சத்திர சிகிச்சைக்குட்பட்ட பெண்கள் அடுத்த சிசுவை யோனி வழியூடாகப் பிரசவிப்பதில் வெற்றி கண்டுள்ளனர்.

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சிசேரியன் சத்திர சிகிச்சைக்குட்பட்டவர்கள் சிசேரியன் மூலமே பிள்ளையைப் பிரசவித்தல் நலம்.

★சிசேரியனின் பின்பான யோனி வழிப்பிறப்பைப் பாதிக்கும் காரணிகள் எவை?

1.சிசேரியன் மூலம் மட்டுமே சிசுவை பெற்றெடுத்திருத்தல்.

2.ஊக்கிகளைப் பயன்படுத்தல்.

3.பிரசவத்தில் முன்னேற்றமின்மை.

4.அதிகரித்த உடற்பருமன்.

★சிசேரியனின் பின்பான யோனி வழிப்பிறப்பில் உள்ள குறைபாடுகள் எவை?

1.அவசரமான சிசேரியன் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படலாம். இது 20 வீதமான பெண்களில் நிகழலாம்.

2.இரத்தப் பரிமாற்றமும் கிருமித் தொற்றும் அதிகளவில் நிகழலாம்.

3.சத்திரசிகிச்சை வடு பலவீனமாதலும் வெடித்தலும். இது 0.5 வீதமான பெண்களில் நிகழலாம்.

4.சிசுவின் மூளைப் பாதிப்பு. இது 0.2 வீதமான பெண்களில் நிகழலாம்.

★சிசேரியனின் பின்னரான யோனி வழிப்பிறப்பு எச்சந்தர்ப்பங்களில் பொருத்தமற்றது?

1.இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சிசேரியன் சத்திரசிகிச்சைக்குட்பட்டிருத்தல்.

2.கருப்பை வெடித்திருத்தல்.

3.கருப்பை நெடுங்கோடாக வெட்டிற்கு உட்பட்டிருத்தல்.

4.பிரசவ காலச் சிக்கல் நிலைகள்.

★மீண்டும் சிசேரியன் சத்திரசிகிச்சை செய்வதிலுள்ள அனுகூலங்கள் எவை?

1.கருப்பைச் சுவர் வெடிப்பு நிகழாது.

2.சிசுவைப் பாதிக்கும் மூளைப் பாதிப்பு, சிசு இறப்பு ஆகியவற்றை தடுக்கிறது.

3.பிரசவத் திகதியை திட்டமிட முடிதல்.

★மீண்டும் சிசேரியன் சத்திர சிகிச்சை செய்வதிலுள்ள தீமைகள் எவை?

1.இது ஒரு நீண்ட சிக்கலான சத்திரசிகிச்சையாகும். இதன்போது குடல், சிறுநீர்ப்பை பாதிக்கப்படலாம். சிசுவும் வெட்டுக்காயங்களுக்குட்படலாம்.

2.குருதிக் கலன்களினுள் குருதி கட்டியாகும் வாய்ப்பு அதிகம். இது உயிராபத்தை ஏற்படுத்தும். ஆயிரம் பெண்களில் ஒருவருக்கு நிகழலாம்.

3. மீளுகைக்கு கூடிய காலம் தேவைப்படும்.

4.சிசுவுக்கு சுவாசப் பிரச்சினைகள் ஏற்படலாம். சத்திரசிகிச்சை மூலம் பிறந்த சிசுக்களில் 3-4வீதமான சிசுக்களே பாதிக்கப்படுகையில் யோனிவழிப் பிறப்பில் பிறந்த சிசுக்களில் 2-3 வீதமான சிசுக்களே பாதிக்கப்படுகின்றன.

5.எதிர்காலத்திலும் சிசேரியன் மூலமே பிள்ளை பெற வழி வகுக்கலாம்.

★சிசேரியனின் பின்னரான யோனி வழிப்பிரசவத்திற்கு திட்டமிட்டுள்ள எனக்குப் பிரசவ வலி தோன்றினால் நான் என்ன செய்ய வேண்டும்?

1.உணவு, நீர் உள்ளெடுப்பதைத் தவிர்த்தல்.

2.உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று வைத்திய ஆலோசனையைப் பெறுதல். உங்களின் பிரசவம் மகப்பேற்று நிபுணர் உள்ள வைத்தியசாலையிலே நடைபெறவேண்டும்.

★சிசேரியனின் பின்பான யோனி வழிப் பிறப்புக்குத் திட்டமிட்டுள்ள எனக்கு பிரசவவலி பிரசவத் திகதி முடிந்த பின்பும் தோன்றாவிடின் என்ன செய்யலாம்?

1.காத்திருத்தல் (பிரசவ வலி தோன்றுமட்டும்)

2.பிரசவ வலியைத் தூண்டுதல் ஆபத்தானது.

3.சிசேரியன் சத்திர சிகிச்சைக்குட்படுதல்.

★சிசேரியன் சத்திர சிகிச்சைக்குத் திட்டமிட்டுள்ள எனக்குப் பிரசவ வலி தோன்றினால் என்ன செய்ய வேண்டும்.

1.உணவு, நீர் உள்ளெடுப்பதைத் தவிர்த்தல்.

2.மகப்பேற்று வைத்திய நிபுணர் உள்ள வைத்தியசாலையை உடனடியாக நாட வேண்டும். (அவசரகால அம்புலன்ஸ் வண்டி/ வாகனம் மூலம்)

**யோ.சிவாகரன்**
**வைத்தியர்**
**யாழ்.போதனா வைத்தியசாலை**

## குறையாத சுகத்துடன் வாழ்வோம்...

சிக்கனத்துக்கு பெயர் எடுத்தவர்கள் நாம். சேமிக்கும் பழக்கம் எம் பலத்துக்கு பக்கபலமாக இருந்தது. நாம் சிறுகச் சிறுகச் சேமித்த சேமிப்புகள் சத்துமா பேணிகளுக்கும், டொனிக்குகளுக்கும், பலத்துக்கு என்று சொல்லி வரும் மாத்திரைகளுக்கும், அநாவசிய மருத்துவச் செலவுகளுக்கும், இரசாயன உணவுகளுக்கும் இரையாகிக் கொண்டிருப்பது ஒரு வேதனையான விடயமாகும்.

சுகமும் ஆரோக்கியமும் கிடைக்குமென்று நம்பி, ஆபத்தான பலவற்றை வாங்கி உட்கொள்வது நோயை விலை கொடுத்து வாங்குவதுக்கு ஒப்பானது. இயற்கைதான் எமது இனிய வைத்தியன். தடிமன், குறுகியகால வயிற்றோட்டம், தசைப்பிடிப்பு, சாதாரண கை, கால் உளைவு, வயிற்றுக் குழப்பம் போன்ற இயற்கையாக குணப்படக் கூடிய சிறிய நோய்களுக்குக் கூட, வைத்தியம் செய்ய வேண்டும் என்று எண்ணி அநாவசியமாக செலவு செய்வதுடன் பல அவசியமற்ற மருந்துகளையும் பாவிக்கத் தலைப்படுகிறோம். நோய்த்தடுப்பு முறைகளில் ஆர்வமற்றவர்களாகவும், நோய் வந்த பின்பு அதிகம் சிரமப்படுபவர்களாகவும் இருக்கிறோம்.

நன்கு திட்டமிடப்படாத எமது நடவடிக்கைகளாலும், வாழ்க்கை முறையாலும் மருத்துவ செலவினங்கள் மலைபோல உயர்ந்து எம்மைப் பயமுறுத்தும் அளவுக்கு விசுவரூபம் எடுத்து நிற்கின்றன. இதன் காரணமாக எம்மில் பலர் உரிய மருத்துவ கவனிப்புகளை நா அஞ்சி, பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.



மருத்துவசெலவுகளை நல்ல முறையில் திட்டமிடுவோமாயின் அநாவசியமாக செலவிடப்படும் பணத்தை, எமது சுகாதார முன்னேற்றத்துக்கு பயன்படுத்தி நாமும் எம்மைச் சார்ந்தவர்களும் சுகமாக வாழ முடியும். இதனை நடைமுறைப்படுத்துவதற்கு பின்வரும் தகவல்களை நினைவில் நிறுத்துவோம்.

1.இயற்கையாக மாறக்கூடிய நோய்களுக்கு மருந்தெடுப்பதைத் தவிர்ப்போம்.

2.'சத்து நிறைந்தது' என்ற விளம்பரங்களுடன் செயற்கையாக தயாரிக்கப்பட்டு, பொதி செய்யப்பட்டு அதிக விலையில் விற்பனையாகும் பொருள்களைத் தவிர்த்து, இயற்கையான மலிவான உணவுப் பொருள்களான முட்டை, பால், மீன், இலைவகை, மரக்கறி, பழங்கள், உழுந்து, பயறு, பருப்பு போன்றவற்றை அதிகளவில் உணவில் சேர்த்துக்கொள்வோம்.

3. நோய்த் தடுப்பு முறைகளில் அதிக ஆர்வம் காட்டுவோம்.

4.சிறிய நோய்களுக்கு மருத்துவ நிபுணர்களைத் தேடிச்செல்வதைத் தவிர்த்து, அருகிலுள்ள உங்கள் குடும்ப வைத்தியரின் ஆலோசனையையோ, அல்லது அண்மையிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவு வைத்தியர்களின் ஆலோசனையையோ பெற்றுக்கொள்வோம்.

5.விற்றமின் மாத்திரைகளையும், டொனிக்குகளையும் தேவையற்ற முறையில் தொடர்ந்து பாவிப்பதைத் தவிர்த்துக்கொள்வோம்.



6.குடிப்பதையும், புகைப்பதையும் நிறுத்தி அந்தப் பணத்தை சுகாதார மேம்பாட்டுக்கு பாவிப்போம்.

7.மருத்துவர்களின் ஆலோசனை இன்றி அநாவசியமான சோதனைகளை திரும்பத் திரும்பச் செய்வதைத் தவிர்த்துக்கொள்வோம்.

8.முன்னைய மருத்துவ குறிப்புகளையும், மட்டைகளையும் தொலைக்காது பாதுகாப்பதுடன் மருத்துவரை சந்திக்கச் செல்லும் போது அவற்றை எடுத்துச் செல்வதன் மூலம், அநாவசியமான சோதனைகள் செய்யப்படுவதைத் தவிர்க்க முடியும்.

9.அரச வைத்தியசாலை கிளினிக்குகளில் சேருவதற்கு அல்லது நோய் கடுமையாக இருந்தால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதற்கு வைத்தியர்களை தனியார் வைத்திய நிலையங்களில் சந்தித்து அவர்களின் சிபார்சுக் கடிதம் பெறப்பட வேண்டும் என்ற ஒரு தப்பபிப்பிராயம் நிலவுகிறது. எந்த நோயாளர்களும் அரச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்குச் சென்று தாமாகவே இவற்றை ஒழுங்குசெய்து கொள்ளமுடியும்.

10.பிறரை நோயாளியாக்கும் பாவச் செயல்களான கன்டோஸ், இனிப்பு வகைகளை பரிசாகக் கொடுத்தல், வீட்டிற்கும், திருமண வைபவங்களுக்கும் வருபவர்களுக்கு சோடா கொடுத்தல் போன்றவற்றை நிறுத்திக்கொள்வோம். இவை மற்றவர்களின் மருத்துவ செலவுகளை அதிகரிக்கும் தீயசெயல்களாகும்.

11.தினமும் உடற்பயிற்சி செய்து உடல் நிறையை சரியான அளவில் பேணிவருவோமாயின் மருத்துவ செலவுகள் பெருமளவு குறைவடையும்.

12.உங்களுக்கு சாதாரணமாக ஏற்படும் கை, கால் உளைவுகள், நோக்கள், வயிற்றுக்குழப்பம், தடிமன், சாதாரண வைரஸ் காய்ச்சல், தசைப்பிடிப்பு, குறுகிய கால இருமல், தும்மல் போன்ற நோய்களை இயற்கையாக மாறவிடுவது நல்லது.

மருத்துவ செலவுகளிலும் சிக்கனத்தைக் கடைப்பிடித்து நோயுற்ற போதும் குறைவற்று வாழ்வோம். நோய்த்தடுப்பு முறைகளில் கூடிய கவனம் செலுத்தி நோயற்று வாழ முயலுவோம்.

**சி.சிவன்சுதன்**
**வைத்தியர்**
**யாழ்.போதனா வைத்தியசாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர்களைப் பிள்ளைகளே பராமரிக்க வேண்டும்

முதியோர் வாரத்தின் இறுதிநாள் இன்றாகும். முதியவர்கள் புதிய சமுதாயத்தை உருவாக்கியவர்கள், வழிகாட்டியவர்கள். இவர்களின் தார்ப்பரியங்களை இளையதலைமுறை பாடமாக்கிக் கொள்ள வேண்டும். பெற்றோரை மதிக்கும் பண்பும், பிள்ளைகளை வளர்க்கும் முறையும் முனைப்படைய வேண்டும். மழுங்கடிக்கப்பட்ட உணர்வுகளுக்கு மகுடம் சூட்டப்படவேண்டும்.


முதுமை என்பது புதுமை அல்ல. அது இளமையின் ஒரு தனிமை என்பதை உணர வேண்டும். உணர்வும், பகிர்வும் உருமாறும் நிலையில் இன்றைய சிந்தனையில் இறுதிப்பயணங்களில் பயணிப்போம். இந்த அனுபவப்பகிர்வின் விடயங்கள் எம்முள் புதுவகையான மறுமலர்ச்சிக்கு வித்திடட்டும்

புற்றுநோயின் உச்சக்கட்டத்தில் உழன்று கொண்டிருந்த அந்த மனிதனின் பூமிக்கான பயணத்தின் இறுதி அத்தியாயம் எழுதப்பட்டுக்கொண்டிருந்தது. ஆடி மாதத்தின் ஆவேசக்காற்றில் இலைச் சருகுகள் பறந்து கொண்டிருந்தன. இல்லத்தின் விடுதிகளில் கிடந்த நாய்கள் ஆவேசமாக ஊளையிட்டவண்ணம் ஓடித் திரிந்தன. மரணப்படுக்கைகள் ஆயத்தமாகிக் கொண்டன. மெத்தையில் கிடந்த முதியவர் படுக்கையிலிருந்து இறங்கி பாயில் மல்லாந்து படுத்துக்கொள்கின்றார். தனது கண்களால் அங்குமிங்கும் எதையோ தேடுவது போல விழியசைவின் போக்குகள் பலகதைகளை மௌனமாகச் சொல்லித் தீர்த்தன.

இரண்டு நாள்கள் மட்டும் படுத்த படுக்கையாகக் கிடக்கும் அந்த முதியவரின் தோற்றம் குழந்தையைப் போல் உருமாறிக் கிடந்தது. ஓடியோடி எத்தனையோ முதியவர்களுக்கு சேவை செய்தவர், உணவு எடுத்துக்கொடுக்க உதவுவார். இயலாதவர்களுக்கு குளிக்க உதவுவார். ஏன்? மலசலகூடத்திற்கு கூட அவர்களை அன்புடன் அழைத்துச் செல்லும் தோற்றம் இன்றும் மனக்கண் முன் நிழலாடுகின்றது. முதியோருக்கு உதவும் முதியவராக முத்திரை பதித்து அனைவரின் மனத்திரைகளிலும் தன்னை நிலைநிறுத்திக்கொண்ட அந்த மனிதன் இன்று அசைவற்ற நிலையில் அல்லாடிக்கொண்டுள்ள காட்சி அந்தச் சூழலில் முற்றாக உறைந்து போய்க்கிடந்தது. இப்போது அட்டகாசமாக தலைவிரித்தாடிய அந்த வேப்ப மரம் கூட இன்று இப்போது அடங்கிப் போய்க்கிடந்தது.

வைத்தியரின் இறுதி வருகைக்காக காத்திருப்புக்கள் தொடர்கின்றன. அவரும் கைநாடியைப் பிடித்துப் பார்த்து விட்டு உதடுகளைப் பிதுக்கி கைகளை விரித்து அசைத்து விட்டு நகருகின்றார். உறவுகள் பற்றிய தேடலில் உத்தியோகத்தர்களின் வார்த்தைகள் ஓடித்திரிகின்றன. ஓட்டங்கள் மரதன் ஓட்டங்களாகத் தொடர ஏதுவாக நிகழ்வுகள் நடந்து முடிந்து ஒப்பேறி விடுகின்றன.

வைத்தியசாலையில் ஒருமாதமாக எட்டிப்பார்க்காத உறவுகள் இன்று மட்டும் வந்துவிடவா போகின்றன? ஒருமாதமாக வைத்தியசாலையில் தன்னை விட்டுவிட்டு தம்மை முகமறியாதவர்களாக அடையாளப்படுத்திக் கொண்டவர்கள் காணாமல் போனவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டதனாலோ என்னவோ இன்றுவரை காணவில்லை. அந்த முதியவரைக் காணவும் வரவில்லை. புற்றுநோயின் அகோரத்தால் அவரது தொண்டைப் பகுதி செயலிழந்து போய்க் கிடந்தது. சொல்ல நினைக்கும் வார்த்தைகள் கூட தொண்டை வரை வந்து தற்கொலை செய்து கொண்டன. ஆசைகள் கனவுகள் எல்லாம் இன்று என்ன என்று தெரியாத அளவிற்கு நோயின் கொடுமை



உருத்திர தாண்டவம் ஆடியது. எண்ணங்கள், சிந்தனைகள் எல்லாம் இன்று வெந்நீராக மாறிக் கண்ணீராக வெளிவந்துகொண்டிருந்தது. முதுமைக்கோலத்தில் மூத்தோராக இருந்தவர்கள் கூட்டம் கூடத் தொடங்குகிறார்கள். அனைவரும் அவரின் நிலைமையைப் பார்த்துக் கண்களை மூடித்திறந்தார்கள்.

இப்போது இவரின் மீது பாசம் கொண்டு பணிவிடை செய்த அந்த உத்தியோகத்தர் வருகிறார். அங்கும் இங்கும் சுழன்று கொண்டிருந்த அந்த முதியவரின் கண்கள் இப்போது அவரைக் கண்டதும் நிலைக்குத்தி நின்று அசைய மறுத்தன. அனைவரும் எத்தனையோ சாவுகளைப் பார்த்தவர்கள். இதுவொன்றும் புதிதல்ல என மௌனமாக கூறுவது என்னுள் ஒலியாகிப் பட்டுத் தெறித்தது. கண்இமைகள் இப்போது விரல்களால் அழுத்தப்பட்டு, பாழ்பட்டுப் போன பூமியின் உறவுகளை காண வேண்டாம் என்றோ என்னவோ மூடப்படுகின்றன.

வழமைபோன்று இறுதிப் பயணத்தின் ஏற்பாடுகள் முனைப்படைகின்றன. மனிதநேயங்களின் ஒன்றிணைப்பால் இந்த மனிதனின் உடல் இப்போது நிம்மதியாக உறக்கத்தில் கிடக்கின்றது. இவரது சமூகத்தில் இன்று எத்தனை வேடிக்கைகளும், கேளிக்கைகளும் நடக்கின்றதோ தெரியவில்லை. ஆனால் அவரது இறுதி ஊர்வலமும் பூமிப்பந்தின் ஒரு மூலையினுள் நடந்துகொண்டு இருக்கின்றது. உறவுகளோடு பறந்து, உறவுகளை உருவாக்கி இன்று உறவுகளை தொலைத்து புதுஉறவுகளை வளர்ந்து விட்டுச்செல்லும் இந்த மனிதனின் பாதையைப் பார்க்கின்றேன்.

புரியாத மனிதர்கள் புதிராக வாழ்வதற்கு இறைவன் ஏற்படுத்திய வழிகள் அகலத் திறந்து விடப்பட்டுள்ளன. பயணங்களின் விதம்தான் மாறுபட்டுக்கிடக்கின்றது. அவரது இடத்தில் தொங்கவிடப்பட்டிருந்த சத்யசாயி பாபாவின் படங்கள் இந்தக் கருத்தைச் சொல்லிக்கொண்டிருந்தன. அவரது பாவனையில் கிடந்த பொருள்களும் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்கின்றன. படுத்த படுக்கையில் தாங்கிக் கொண்ட மரக்கட்டில் இப்போது புரண்டு படுத்துக்கொள்கின்றது. தண்ணீர் ஊற்றப்பட்டுக் கழுவப்பட்ட கட்டிலை இப்போது ஆதவன் சுட்டெரித்துக் கொண்டிருந்தான்.

ஊர்வலத்தின் நீண்ட கோடுகள் இப்போது என்னுள் புள்ளியாகிக் கொண்டன. துன்பத்தின் உணர்வலைகள் அவ்விடத்தை ஆக்கிரமித்துக்கொண்டன. உறவுகளின்றிய ஏக்கம் என்னுள் விஸ்வரூபமாகின்றது.

(முற்றும்)

த.கிருபாகரன் அத்தியட்சகர்
அரச முதியோர் இல்லம் கைதடி.

---

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்கள் மனம் தெளிந்த நீரோடை போல இருக்கும். தகுதி, திறமையை வளர்த்துக்கொள்வீர்கள். தொழில் வியாபார அபிவிருத்திக்கான பணி சிறப்பாக நிறைவேறும். சராசரி பணவரவும் ஆதாய பணவரவும் உண்டு. நிலுவை பணக்கடன் செலுத்துவீர்கள்.

**இடபம்:** உங்களைச் சுற்றி நடக்கும் செயல்கள் உணர்ச்சிவசப்படும் நிலையை ஏற்படுத்தலாம். பின்விளைவு உணர்ந்து பொறுமையைக் காத்திடுங்கள். தொழிலில் நிலுவைப் பணி நிறைவேற்றுவதால் சில அனுகூலம் கிடைக்கும். பண வரவுக்கு ஏற்ப செலவுகளை திட்டமிடுவீர்கள்.

**மிதுனம்:** உங்கள் குடும்பப் பெரியவர்களின் சொல்லுக்குத் தகுந்த மரியாதை தருவீர்கள். உறவினர்கள் மனதில் உங்களைப் பற்றி உயர்ந்த மதிப்பீடுவளரும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற புதிய யுக்திகளுடன் செயற்படுவீர்கள்.

**கடகம்:** எந்தச் செயலிலும் முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. நிலுவைப்பணிகளை நிறைவேற்ற ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். பணவரவை விட கூடுதல் செலவினம் ஏற்படும். பணப்பரிவர்த்தனையில் பாதுகாப்பு நடைமுறை தவறாமல் பின்பற்ற வேண்டும்.

**சிங்கம்:** உங்கள் பேச்சு, செயல் பிறர் பாராட்டுகிற வகையில் இருக்கும். புதியவர்களின் நட்பு, உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். திருப்திகரமான வகையில் பணவரவு இருக்கும். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.

**கன்னி:** உங்கள் செயல்களில் அதிக சுறுசுறுப்புத்தன்மை நிறைந்திருக்கும். தாமத பணிகளை நினைவுபடுத்தி நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார இலக்கு திருப்திகரமாக நிறைவேறும். உறவினர்களுக்கு சீர்முறை செய்கிற நல்ல சூழ்நிலை உருவாகும். பணயாளர் சிறந்த பணிகளுக்காக வெகுமதி, பாராட்டு பெறுவர்.

**நாளை**

புரட்டாதி - 22 திங்கட்கிழமை 08.10.2012
திதி: அட்டமி மு.இ 10.25 வரை
நட்சத்திரம்: திருவாதிரை மு.ப 08.14
சுபநேரம்: 12.02- 01.32 வரை
ராகுகாலம்: 07.32- 09.02 வரை

**துலாம்:** உங்களுக்கு தர்மசங்கடமான சூழ்நிலை ஏற்படலாம். எவர் மனமும் வருந்தாத வகையில் நல்ல முடிவு எடுப்பீர்கள். தொழில் சார்ந்த குறையை பிறரிடம் விவாதிக்க வேண்டாம். சுமாரான அளவில் பணவரவு கிடைக்கும். உடல் நலம் பேணுவதில் கூடுதல் அக்கறை வேண்டும்.

**விருச்சிகம்:** உங்களின் சொந்தத் தேவைகளை நிறைவேற்றுவதில் அக்கறை கொள்வீர்கள். நண்பர், உறவினர்களிடம் அவசியமற்ற பேச்சைத் தவிர்க்கவும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் பணி செய்வீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** உங்கள் மனதில் நீண்ட நாள் திட்டமிட்ட லட்சியக் கனவை நிறைவேற்ற பணி புரிவீர்கள். வெற்றி கிடைத்து சமூகத்தில் நன்மதிப்பு பெறுவீர்கள். நண்பரிடம் கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும்.

**மகரம்:** உங்கள் செயல் ஒவ்வொன்றும் சிறப்பாக அமைந்து சமூகத்தில் புகழ்பெறுவீர்கள். எதிரியின் தொந்தரவு அணுகாத சுமுகமான சூழ்நிலை அமையும். தொழில் வளர்ச்சிப்பணி சிறந்து மனநிறைவை ஏற்படுத்தும். லாபவிகிதம் கூடுதலாக கிடைக்கும். நண்பர், உறவினருக்கு இயன்ற உதவி புரிவீர்கள்.

**கும்பம்:** உங்களின் புதிய திட்டம் நிறைவேறும் முன் முடிவைப்பற்றி பிறரிடம் பேச வேண்டாம். சிலர் உதவுவதுபோல் பாசாங்கு செய்து மறைமுக இடையூறு ஏற்படுத்துவர். கவனம் தேவை. தொழில், வியாபார வளர்ச்சி நிலை சுமாராக இருக்கும். காலமுறை உணவுப்பழக்கம் பின்பற்றுவதால், உடல்நலம் சீராக இருக்கும்.

**மீனம்:** உங்கள் மனம் தியாக எண்ணங்களுடன் செயற்படும். தகுதிக்கு மீறிய அளவில் பிறருக்காக எவ்வித பொறுப்பும் ஏற்க வேண்டாம். தொழில், வியாபாரம் வளர்ச்சிபெற புதிய [illegible] குறைந்தளவில் கிடைக்கும். [illegible] இடங்களில் பிரவேசிக்கக் கூடாது.

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | | 7 | 3 | 2 | 9 | |
| | | 9 | | | 1 | | | |
| 1 | 8 | | | 5 | 4 | | | |
| 4 | 5 | 8 | | 2 | | 3 | | 9 |
| | | | | | | | | |
| 9 | | 7 | | 3 | | 4 | 8 | 2 |
| | | | 5 | 9 | | | 1 | 3 |
| | | | 3 | | | 7 | | |
| | 2 | 3 | 7 | 1 | | | 5 | |

சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 8 | 4 | 7 | 6 | 9 | 2 | 3 |
| 9 | 4 | 3 | 5 | 8 | 2 | 6 | 7 | 1 |
| 6 | 7 | 2 | 3 | 9 | 1 | 4 | 8 | 5 |
| 4 | 2 | 1 | 7 | 5 | 8 | 3 | 9 | 6 |
| 7 | 9 | 5 | 6 | 1 | 3 | 2 | 4 | 8 |
| 8 | 3 | 6 | 2 | 4 | 9 | 1 | 5 | 7 |
| 2 | 1 | 4 | 8 | 6 | 5 | 7 | 3 | 9 |
| 3 | 8 | 9 | 1 | 2 | 7 | 5 | 6 | 4 |
| 5 | 6 | 7 | 9 | 3 | 4 | 8 | 1 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.ஓ.சி. நிறுவனத்தின் 10 வருட நிறைவையொட்டி நாடு முழுவதும் மரநடுகைத் திட்டம் ஆரம்பம்

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் இலங்கையில் தனது வர்த்தக செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதன் 10 ஆண்டு நிறைவினைக் குறிக்கும் வகையில், நாடாளுமன்றத்திற்கு பின்பக்கமாக அமைந்துள்ள உயிரியல் பூங்காவில் பெரிய மரநடுகை பிரசாரத் திட்டமொன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளது.

இந்நிகழ்வில் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் பி.எம்.யு.டி. பஸநாயக்க, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் திலக் கொல்லுரே, லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சுபோத் டக்வால, ஸ்டேட் பாங்க் ஒப் இந்தியா நிறுவனத்தின் பிராந்திய தலைமை அதிகாரியும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரமேஷ் சந்திர, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சுசந்த சில்வா உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.

நாடெங்கும் இவ்வருடம் முழுவதும் மேற்கொள்ளப்படவுள்ள இத்திட்டத்தின் கீழ், லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் பணிப்பாளர்களான பேராசிரியர் லக்ஷ்மன் ஆர். வட்டவல, ஜாலிய மெதகம மற்றும் அமித குணரத்ன உள்ளடங்கலாக பெரும் எண்ணிக்கையிலான நலன்விரும்பிகளும், வருகைதந்திருந்த அதிதிகளும் மரக் கன்றுகளை நட்டு வைத்தனர்.

''சமூகப் பொறுப்புள்ள கூட்டாண்மை நிறுவனமாகத் திகழ்வதையிட்டும் அதன்வாயிலாக சமூக சேவைத் திட்டங்களை முன்னெடுப்பதையிட்டும் நாம் மிகவும் பெருமிதம் அடைகின்றோம்.

உண்மையில், 10ஆவது ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் 10,000 மரங்களை நடுவதே எமது இலக்காகக் காணப்படுகின்றது.

இந்தப் பிரமாண்டமான மரநடுகைத் திட்டத்தின் மூலம், பொதுமக்களும் இதே போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதை ஊக்கப்படுத்துவதற்கும் அதனூடாக இயற்கை மற்றும் சுற்றாடல் ஆகியவற்றுக்கு பிரதியுபகாரம் செய்வதற்கும் தொடர்ந்து நாம் முயற்சி செய்கின்றோம்'' என்று லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சுபோத் டக்வால தெரிவித்தார்.



யாழ்.பிராந்திய மக்கள் வங்கிக்கிளையால் யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் அனைத்துக்கும் உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வாழ்த்து மடல்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

யாழ்.மாவட்டத்தில் அனைத்துப் பாடசாலைகளுக்கும் நேற்றுமுன்தினம் மக்கள் வங்கி ஊழியர்கள் சென்று குறிப்பிட்ட வாழ்த்து மடல்களை அதிபர்களிடம் வழங்கியதுடன் வாழ்த்துக்களையும் கூறினர்.

சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் ப.பார்த்தீபன் ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயத்தின் அதிபர் செல்வி ந.பிரதாவிடம் வாழ்த்துமடல் கையளிக்கிறார். (ம-86)

## முதரபாஹ் சேமிப்புக் கணக்கு அறிமுகம்

LB பினான்ஸ் நிதி நிறுவனத்தின் இஸ்லாமிய நிதிப் பிரிவான அல்-ஸலாமாஹ் 'முதரபாஹ்' சேமிப்புக் கணக்கை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சுமித் ஆதிஹெட்டி இது பற்றிக் கூறியவை வருமாறு:-

எமது இஸ்லாமிய நிதிப் பிரிவான அல்- ஸலாமா ஆரம்பித்துக் குறுகிய காலத்திற்குள் வளர்ச்சியைக் கண்டுள்ளது. அதையிட்டு நாம் பெரும் மகிழ்ச்சியடைகிறோம்.

தற்போது எம்மால் தொடங்கப்பட்டுள்ள 'முதரபாஹ்' சேமிப்புக் கணக்கு எமது வாடிக்கையாளர்களுக்கு மிகவும் பயனுடையதாக அமையும்.



இலங்கை வங்கியின் விசேட கரும பீடமொன்று மருதனார்மடத்தில் அமைந்துள்ள மாகாணக் கல்விப்பணிமனையில் திறந்து வைக்கப்பட்டது. இலங்கை வங்கி வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் கே.டி.சுமணசிறி, வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரம், வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். (த)

## மடு, தலவில திருவிழாக்களுக்கு பனடோலின் முதலுதவிச் சேவை

வலி நிவாரணியான பனடோல் தலவில மற்றும் மடு திருவிழாக்களில் மருத்துவ மற்றும் முதலுதவி சிகிச்சை முகாம்களை ஏற்படுத்தி பக்தர்களுக்கு உதவிகளை வழங்கியது.

இந்த இரு திருவிழாக்களுக்கும் 900,000 இக்கும் அதிகமான பக்தர்கள் வருகை தந்திருந்தனர். இம் முகாம்களில் கட்டில், தெளிப்பான், மருத்துவ உபகரணங்கள், ஆலோசனைப் பிரிவு, பார்வையாளர் பிரிவு போன்ற வசதிகள் காணப்பட்டன.

பக்தர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டதோடு திடீர் மருத்துவ தேவையுள்ளோருக்கு சேவைகளை வழங்கும் பொருட்டு நடமாடும் முதலுதவிக் குழுவினர் மூலம் தொடர்ந்து மூன்று நாள்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டன.

மேலும் அவசர மருத்துவ உதவி தேவையுள்ளவர்களை அருகில் உள்ள வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்வதற்கான வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக இலங்கை மக்களின் நம்பிக்கைக்குரிய வலி நிவாரணியாக பனடோல் காணப்படுகிறது.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இலங்கையின் பிரதான சமய, கலாசார நிகழ்வுகளில் பனடோல் மூலம் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அந் நிகழ்வுகளில் கண்டி எசல பெரஹர, நல்லூர் தேர்த் திருவிழா, அனுராதபுரம் பொசன் போயா, தந்திரிமலை மற்றும் மிகிந்தலை போன்ற நிகழ்வுகள் அடங்கும். (த)



இலங்கை வங்கி கிளிநொச்சி கிளையில் 18+ இளைஞர் சேமிப்பு கணக்கைப் பேணி, திருமணத்தின் போது தங்க நாணயத்தை வென்ற யுவதி ஒருவருக்கு கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் தங்க நாணயத்தை வழங்குகிறார். (ம-86)

## Dettol- energize சவர்க்காரம் அறிமுகம்

ரெக்கிட் பென்கிசர் (லங்கா) லிமிட்டெட் நிறுவனத்தின் பலம்பொருந்திய ஒரு வர்த்தகக் குறியீடாகத் திகழும் டெட்டோல், ஒரேஞ்ச் பழத்தின் புத்தெழிலையும், கிருமிகளிடமிருந்து பாதுகாப்பையும் ஒருங்கே கொண்டு தயாரிக்கப்பட்ட தனது புதிய வெகுமதியான 'Dettol Re-energize' சவர்க்காரத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

நாளாந்த வேலைகளின் போது எமது உடலிலுள்ள சக்தியை கிருமிகள் உறிஞ்சிக் கொள்வதால் எமக்கு சோர்வு ஏற்படுகின்றது. Dettol Re-energize சவர்க்காரத்தில் உள்ளடங்கியுள்ள தனிச் சிறப்புமிக்க உற்பத்திச் சூத்திரமானது, கிருமிகளிடமிருந்து உங்களுக்குப் பாதுகாப்பு, சுகாதாரம், புத்தெழில் மற்றும் மீள்-சக்தியூட்டப்பட்ட உணர்வு போன்றவற்றை வழங்குகின்றது.

தமது வழக்கமான நாளாந்த நடவடிக்கைகளில் தனித்தன்மையுள்ள தோற்றத்தையே நுகர்வோர் எப்போதும் எதிர்பார்த்தவாறு இருக்கின்றனர். சில விசேடமான புத்துணர்வுகள் ஒருவரது நாளாந்த வாழ்க்கையில் ஒரு விஷேடமான சக்தியைக் கொண்டு வருகின்றன.

ரெக்கிட் பென்கிசர் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ராகுல் முர்காய் கூறுகையில், ''ரெக்கிட் பென்கிசர் நிறுவனத்தைப் பொறுத்தமட்டில் புத்தாக்கம் என்பது மிக முக்கியமான விடயமாகக் காணப்படுகின்றது. (த)

## ஸ்திர நிலையில் ஜனசக்தி

நடந்து முடிந்த 2012 ஆம் ஆண்டின் அரையாண்டு காலப்பகுதியில் ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் மிகச் சிறந்த பெறுபேறுகளை வழங்கியுள்ளதுடன் ஒவ்வொரு பங்கிற்கும் ஒரு ரூபா பங்கிலாபத்தை அறிவித்துள்ளது.

அதிக பங்கிலாபங்களை வழங்கும் முதலாவது காப்புறுதி நிறுவனமான ஜனசக்தி, உயர்வான மூலதனக் கட்டமைப்பையும் கொண்டுள்ளது. முன்னைய வருடங்களை விட அதிகமாக 2012 ஆம் ஆண்டில் 9.25வீதப் பங்கிலாபங்களை வழங்கியுள்ளது.

இது 2011 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 6.25வீதம், 2010ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 6.67வீதம் ஆகியவற்றைவிடக் கூடியது. இதன் மூலம் அதிக பங்கிலாபம் வழங்கும் சிறந்த காப்புறுதி நிறுவனம் என்ற ஸ்திர நிலையை ஜனசக்தி அடைந்துள்ளது.

30ஆம் திகதி ஜூன் மாதத்துடன் முடிவடைந்த முதல் அரையாண்டு காலப்பகுதியில் வரிக்குப் பிந்திய லாபமாக 164 மில்லியன் ரூபா பதிவு செய்யப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் மொத்த சொத்தின் பெறுமதி 13 மில்லியன் ரூபாவிலிருந்து 14 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ள அதேவேளையில், 14வீத வளர்ச்சி வீதத்தையும், மொத்த தவணைக் கொடுப்பனவாக (GWP) 3.8 பில்லியன் ரூபாவையும் பதிவு செய்துள்ளது.

பிற காப்புறுதி நிறுவனங்களைக் காட்டிலும், அதிகமான வரிக்குப் பிந்திய இலாபத்தை ஜனசக்தி பதிவு செய்துள்ளது. தனது தொடர்ச்சியான முன்னேற்றத்தின் அடுத்த கட்டமாக இந்த அரையாண்டில் அதிகளவான வரிக்குப் பிந்திய இலாபத்தை எமது நிறுவனம் பதிவு செய்துள்ளது என நிதி மற்றும் திட்டமிடல் பிரிவின் பொது முகாமையாளர் பேர்டல் பின்டோ ஜெயவர்தன தெரிவித்தார்.

ஜனசக்தி தனது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான மூலதன மட்டத்தைவிட எட்டு மடங்கு அதிகமான மூலதன கட்டமைப்பைக் கொண்டுள்ளது. (த)

## யூனியன் வங்கியின் வெற்றியாளர் கௌரவிப்பு

கடந்த ஓகஸ்ட் மாதம் யாழ்ப்பாணம் நல்லூர் கந்தன் உற்சவ காலப்பகுதியில் யூனியன் வங்கியின் யாழ்ப்பாண கிளையில் ''பியவர'' சிறுவர் சேமிப்பு கணக்கினை ஆரம்பித்த சிறார்களின் கணக்கிலக்கங்கள் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு வெற்றியாளராக இல.105, கலைமகள் வீதி, நல்லூரை சேர்ந்த செல்வன் வசீகரன் அபிநயன் தெரிவு செய்யப்பட்டார்.

இவருக்கான பரிசுத் தொகை ரூபா 10 ஆயிரத்துக்கான காசோலையை கடந்த புதன்கிழமை இல.62/17, ஸ்ரான்லி வீதியில்




அமைந்துள்ள யூனியன் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையில் செல்வன் வசீகரன் அபிநயன் மற்றும் பெற்றோரிடம் வங்கி முகாமையாளர் திருமதி மனோகரி ராமச்சந்திரன் கையளிக்கிறார். அருகில் வங்கி உத்தியோகத்தர்கள் உள்ளனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1949.02.24

மறைவு
2011.09.19

## அமரர் நடராஜா சிவானந்தமூர்த்தி

அன்போடு அரவணைத்து
பாசக்கரம் நீட்டி
எல்லோர் மனதிலும் நிறைந்தவரே
நேசமோடு எமை அழைக்கும்
நெஞ்சத்தை எங்கு காண்போம்.

இல.71, வன்னேரிக் குளம்,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்.

(9948)(2-6-7)

## வினைத் திறமை காண் தடைப்பரீட்சை

வடக்கு மாகாண சபையில் கடமை புரியும் சாரதிகள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் ஆகியோருக்கு வினைத்திறமை காண் தடைப் பரீட்சை விரைவில் வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவ்வினைத்திறமை காண் தடைப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் சாரதிகள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவரூடாக எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், 10ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, புத்தூர், யாழ்ப்பாணம் எனும்முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்கப் பட்டுள்ளது. (ம- 288)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டுச் சந்திக்கு அண்மையில் சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் விநாயகர் வீதியில் 2 பரப்புடன் கூடிய வீடு நல்ல தண்ணீர் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு - 077 2671109

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பாலச்சந்திரன் சஜித்
வ/விபுலானந்தாக் கல்லூரி
2010 ஆம் ஆண்டு
143 புள்ளிகள்

இவர்கள் இருவரையும்
மேன்மேலும் பல
பட்டங்களைப் பெற்றுப்
பல்லாண்டு காலம் சீரும்
சிறப்புடனும் வாழ
வாழ்த்துகின்றோம்.

அம்மா, அப்பா,
சகோதரி.

Best Wishes



பாலச்சந்திரன் கிருஷாந்
வ/விபுலானந்தாக் கல்லூரி
2012 ஆம் ஆண்டு
160 புள்ளிகள்

(20908)(2-6-7)

## கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா நகரங்களில் இயங்கிவரும் Electronic பொருள்கள் Sales மற்றும் Service செய்யும் நிறுவனத்தில் பதவி வெற்றிடங்கள்

- ★ விற்பனையாளர் (எலக்ரோனிக்) (அனுபவமுள்ளவர்கள் மட்டும்) - For Colombo/Jaffna
- ★ Technicians' (Satellite Receivers) - For Colombo (Experienced Technicians Only)
- ★ Dish Antenna பொருத்துனர் (அனுபவமுள்ளவர்கள் மட்டும்) - For Colombo.
- ★ பாதுகாப்பு உத்தியோகத்தர் Security - For Jaffna
- ★ உதவியாளர் - For Colombo/ Jaffna

உடன் தொடர்புகொள்ளவும்:

T. குமார் (077 7710 785)
SATS TECH ENGINEERS (PVT) LTD.
No.51/102, Wolfendhal Street, Colombo-13.

(23827) (45.6.7)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1979.08.27
மறைவு
2007.12.15
திதி:
சஷ்டி



தோற்றம்
1981.11.09
மறைவு
2007.09.03
திதி:
சப்தமி

## சுப்பிரமணியம் கௌசிகன் சுப்பிரமணியம் இதயராஜ்

ஐந்து ஆண்டுகள் ஆனதுவோ உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம் அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்! நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல் ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

68.இலந்தைக்குளம் வீதி, அரியாலை.

குடும்பத்தினர்.

(23826)(2.6.7)

# மரண அறிவித்தல்

## குமுதினி சுந்தரலிங்கம்

(முன்னாள் ஆங்கில ஆசிரியை,
யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்)



நெடுந்தீவு கிழக்கு 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், 59, மருதடி வீதி, நல்லூரை வதிவிடமாகவும், தற்போது பிரித்தானியா Bristol ஐ வசிப்பிடமாகவும் கொண்ட குமுதினி சுந்தரலிங்கம் (19-09-2012) புதன்கிழமை முற்பகல் 11.30 (G.M.T) மணிக்கு அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியர்)- சரஸ்வதி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்) தம்பதியரின் அன்பு மகளும், பாமினி (UK), தமிழ்மாறன் (UK), பன்னீர்செல்வன் (ஆசிரியர், யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்), சாந்தினி (UK) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிருஷ்ணமூர்த்தி, மதிவதனி(கௌரி), ஜெயரஞ்சினி(ஜெகா), லக்ஷ்மன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், வேலுப்பிள்ளை இராசலிங்கத்தின் அன்புக்குரிய பெறாமகளும், அபிரா, மயூரா, மதீரா ஆகியோரின் பாசமிகு சிற்றன்னையும், அஷ்வினி, கவின் மற்றும் லினோஷ்றாம், லக்ஷானி (யா/ புனித ஜோண் பொஸ்கோ மாணவர்கள்), ஹரிஷ்றாம் ஆகியோரின் அன்பு அத்தையும், ரிஷ்வி, நஷ்வி ஆகியோரின் ஆசைப் பெரியம்மாவும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பராசக்தி தம்பதியரினதும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் பொன்னம்மா (வவுனியா) தம்பதியரினதும் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (07.10.2012) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 (G.M.T) மணியளவில் St.Marylebone Crematorium, East and Road, Finchley Londan என்னும் முகவரியில் இடம் பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தொடர்புகளுக்கு:
திரு.திருமதி வே.சுந்தரலிங்கம் (UK), 00442084224980
கு.கிருஷ்ணமூர்த்தி (UK) , 00447970200137
சு.தமிழ்மாறன் (UK), 00447984600040
சு.பன்னீர்செல்வன், 021 222 7286, 021 222 5638
ரா.லக்ஷ்மன் (UK), 00447882234935

தகவல்:
குடும்பத்தினர்.

(23729)(2-6-7)

# நோத்சீ லிமிடெட்

பாரம்பரிய கைத்தொழில் மற்றும்
சிறுகைத்தொழில்கள் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

## வேலைவாய்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பின்வரும் வெற்றிடங்களுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. களஞ்சியக் காப்பாளர் (Store Keeper) - இருபாலாரும்
2. கணக்குப் பதிவாளர் (Book Keeper) - இருபாலாரும்

★ கல்வித்தகைமை:
கல்விப் பொதுத்தராதர உயர்தரம் வர்த்தகப்பிரிவில் (A/L) தேர்ச்சி மற்றும் NDBS, AAT அல்லது NCAT சான்றிதழ்கள் பெற்றவராக இருத்தல் வேண்டும். அத்துடன் வேலை முன் அனுபவம் மற்றும் கணினி மயப்படுத்தப்பட்ட கணக்கியல் துறையில் ஈடுபட்ட அனுபவம் விசேட தகுதியாகக் கொள்ளப்படும்.

★ வயது எல்லை:
விண்ணப்ப திகதியன்று 35 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

★ சம்பளம் மற்றும் நியமனம்:
நேரில் பேசித் தீர்த்துக்கொள்ளப்படும்.

3. முகாமைத்துவ உதவியாளர் (Management Assistant) - இருபாலாரும்

★ கல்வித்தகைமை:
கல்விப் பொதுத்தராதர உயர்தர (A/L) தேர்ச்சி மற்றும் ஏதேனும் டிப்ளோமா கல்விச் சான்றிதழ்கள் பெற்றவராக இருத்தல் வேண்டும். அத்துடன் 2 வருட வேலை முன் அனுபவம் மற்றும் ஆங்கிலம், எழுத, பேச கூடியவராகவும் சிங்களம் பேசக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். கணினி துறையில் ஈடுபட்ட அனுபவம் விசேட தகுதியாகக் கொள்ளப்படும்.

★ வயது எல்லை
விண்ணப்ப திகதியன்று 35 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

★ சம்பளம் மற்றும் நியமனம்:
நேரில் பேசித் தீர்த்துக்கொள்ளப்படும்.

4. பயிலுநர் (Trainee) வெற்றிடம் - 15 (ஆண்)

கடற்தொழில் வலை உபகரணங்களை உற்பத்தி செய்யும் இயந்திரம் மற்றும் அதன் தொழில் நுட்பப் பகுதிகளில் வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான ஆண் பயிலுநர்கள் 15 பேர் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

★ கல்வித்தகைமை:
கல்விப் பொதுத்தராதரம் (G.C.E O/L) வரை பயின்றவர்களாகவும் அல்லது தொழில்நுட்பப் பரீட்சை சான்றிதழ்கள் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். மேலும் இத்தொழிற் துறையின் இரசாயன செயல் முறைகளில் அனுபவம்அல்லது அவை சார்பான கல்வி, க.பொ.த சா/தரத்தில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமையும் விசேடபடிகளும் வழங்கப்படும்.

★ வயது எல்லை:
விண்ணப்ப திகதியன்று 18 வயதிற்குக்குறையாதவராகவும் 25 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

★ சம்பளம் மற்றும் நியமனம்:
நேரில் பேசித் தீர்த்துக்கொள்ளப்படும்.

விண்ணப்பித்தல் மற்றும் நேர்முகத்தேர்வு விவரம்:

மேற்படி வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுய விவரக்கோவை மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டைப் பிரதி, கிராம சேவையாளர் நற்சான்றிதழ் பத்திரம், பாடசாலை விடுகைப் பத்திரம் என் பனவற்றுடன் குருநகரில் அமைந்துள்ள நோத்சீ லிமிட்டெட்டின் தலைமை அலுவலகத்தில் 15.10.2012 அன்று முற்பகல் 10 மணி முதல் 12.30 மணிவரை இடம்பெறவுள்ள நேர்முகத் தேர்வில் விண்ணப்பங்களை நேரடியாக வழங்கி கலந்துகொள்ள முடியும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம். நியமனங்கள் தாமதமின்றி வழங்கப்படும்.

தலைவர்,
நோத்சீ லிமிடெட், வலைத் தொழிற்சாலை,
குருநகர், யாழ்ப்பாணம்.

தொ.பேசி: 021 2222 733
தொ.நகல்: 021 2220 713
மின்னஞ்சல்: northsealtd@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கரவெட்டி யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் கல்வி பயிலும்

செல்வி

**சுப்பிரமணியம் அபிநயா**

அவர்கள் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகள் பெற்று சித்தியடைந்ததையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் கல்வியில் மேன்மேலும் உயர்வடைய தச்சை ஐங்கரனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:

பெரியப்பா Dr. கேதீஸ்வரன் குடும்பத்தினர்.
கந்தசாமி மாமா, இரத்தினசிங்கம் மாமா,
சற்குருநாதன் மாமா குடும்பத்தினர், கோகிலன்
அண்ணா குடும்பத்தினர்.

(சி/3863) (2-6-7)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், இடுகாட்டுவீதியில் உள்ள 12ஆம், 14ஆம் இலக்க (பண்ணை, பஸ்தரிப்பு நிலையத்துக்கு முன்பாக) காணித்துண்டுகள் இரண்டு விற்பனைக்குண்டு.

1. 12 ஆம் இலக்க காணி: ஒரு பரப்பு 15.65 குளி
2. 14 ஆம் இலக்க காணி: இரண்டு பரப்பு 5.72 குளி

**தொடர்பு: 021 222 1774**

நேரம்: பி.ப. 4 மணிமுதல் 6 மணிவரை

வண். ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதிகோயில்
655, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

செயலாளர்:
தர்மகர்த்தாசபையினர்.
(23799)(45.6.7)

## கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி அதிபர்கள் சங்கத் தலைவர் அ. கயிலாயபிள்ளை (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி அருணாசலம் இலட்சுமி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்திக்கின்றோம்.

தென்மராட்சி - அதிபர்கள் சங்கம்.

(சி/3938)(45.6.7)

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு

advt@uthayan.com
0215671111

## புதிய வாகனம் விற்பனைக்கு

Unregistered, Mitsuibishi, intercooler L200 / Warrior, Canopy. Full option, Airbags Sat Navi, R/ camcra/ TV/ Bluetooth, R/S Black.
தொடர்பு: 0723067422 (சி/3951)(2-6-7)

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த கேட்டை நட்சத்திரம், 32 வயதுடைய கொழும்பில் உயர் தொழில் புரியும் மணமகனுக்கு ஆசிரியை அல்லது வங்கித் துறையில் தொழில் புரியும் மணமகள் தேவை.

**தொடர்பு: 0729558196**

(சி/3954) (2-6-7)

## Study in Overseas

UK, USA, CANADA, AUSTRALIA, NEWZEALAND, SWITZERLAND, UKRAINE, RUSSIA, FRANCE

**10% Discount for First 20 Students**

- With OR Without IELTS & Bank Balance
- Law Tuition Fee
- Part Time Job.

**Special Offers - Malaysia**
Engineering, Medicine & Nursing
4-5 Lacks / Year (Fee After Visa)

Next Intake : NOVEMBER

(சி/3950)(2)

Forward your CV to : info.reliance.edu@gmail.com

Reliance Overseas Education Consultancy
No:14, 1/1, 37th Lane,
Wellawatta, Colombo - 06.
Tel: 0117 90 99 00

Miss. Zaarah
0778 858 358

## Diploma in English

ஆங்கிலம் இனிமேல் தடையில்லை

- ★ இக் கற்கை நெறியானது மிகக் குறுகிய காலத்திற்குள் சரளமாக ஆங்கிலத்தில் பேச, எழுத, வாசிக்க உங்களை தயார்படுத்துகிறது.
- ★ அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள்.
- ★ குறைந்த கட்டணம் மற்றும் இலகு தவணை கொடுப்பனவு வசதி.
- ★ நவீன வகுப்பறைகள்.
- ★ உலகத் தரம் வாய்ந்த சான்றிதழ்



பதிவுகள் ஆரம்பம்
உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

**PRINCE CITY CAMPUS**
No. 275, Clock Tower Road, Jaffna.
Tel: 021 492 3855, Hotline: 0775 949 272

## LL.B ( UK) கற்கை நெறி

யாழில் சட்டக் கல்வியை வழங்கும் ஓரே கல்வி நிறுவனம்
Prince City Campus இன்
EdHat IHD in Law leading to LL.B (UK)

புதிய பிரிவுகளுக்கான பதிவுகள் நடைபெறுகிறது



- ★ உலக தரம் வாய்ந்த கற்கை நெறி.
- ★ இலங்கை மற்றும் UK பாட விதானங்களை உள்ளடக்கியது.
- ★ யாழ்ப்பாணத்தில் 3 வருடங்களையும் பூர்த்தி செய்யலாம்.
- ★ இலகு தவணை கொடுப்பனவு முறை
- ★ இலவசமான ஆங்கிலம் , மற்றும் தகவல் தொழில் நுட்ப கற்கை திட்டங்கள்.

**Prince City Campus**
இல. 275,மணிக்கூட்டு கோபுர வீதி (Clock Tower Road), யாழ்ப்பாணம்.
தொ . பே .- 021 492 3855 **Hotline: 0775 949 272** (சி/3910)(6)

SWANS OFFER TIMES Meitro PC SYSTEMS

# SWANS Showroom

**Dialog office Opposite, 162, Stanley Road, Jaffna.**

Intel Dual core 2.93GHZProcessor
H61 Intel Chipset M/B
Ram 02 GB DDR 3
320GB SATA HDD
15.6'' LED Monitor
Branded ATX Casing
DVD Writer
Keyboard & Mouse
**8GB Flash Free**
43500/= FREE

Intel Dual core 2.93GHZProcessor
H61 Intel Chipset M/B
Ram 02 GB DDR 3
500GB SATA HDD
15.6'' LED Monitor
USB Optical Mouse
USB Optical Key board
Branded ATX Casing
DVD Writer
**7.2 Dongle Free**
46500/= FREE

SAMSUNG
Rs.33999/=
SERIES 5000
TYPE LED T.V
SCREEN SIZE 55CM MEASURED DIAGONALLY
NATIVE RESOLUTION 1920 X 1080
RESOLUTION 1080P
DYNAMIC CONTRAST RATIO 3,200,
AUDIO
SOUND EFFECT SYSTEM SRS THEATERSOUND®
SOUND OUTPUT (RMS) 3W X 2
- SPEAKER TYPE DOWN FIRING +
POWER
ENERGY STAR COMPLIANT YES, EXCEEDS STANDARDS
ENERGY GUIDE LABEL ENERGY GUIDE LABEL
STANDBY POWER CONSUMPTION (W) 0.13

Intel Dual core2.93GHZProce ssor
H61 Intel Chipset M/B
Ram 02 GB DDR 3
500GB SATA HDD
18.5'' LED Monitor
Keyboard & Mouse
Branded ATX Casing
DVD Writer
**7.2 Dongle Free**
47500/= FREE

Intel Dual core 2.93GHZProcessor
H61 Intel Chipset M/B
Ram 02 GB DDR 3
500GB SATA HDD
24'' LED Monitor
Key board & Mouse
Branded ATX Casing
DVD Writer
**F4GB lash Free**
56200/= FREE

Intel Dual core i3 3.06GHZProcessor
Intel H61 Chipset M/B
Ram 02 GB DDR 3
500GB SATA HDD
18.5'' LED Monitor
Key board & Mouse Branded ATX Casing
DVD Writer
**8GB Flash Free**
52500/= FREE

Intel Dual core i3 3.06GHZProcessor
Intel H61 Chipset M/B
Ram 04 GB DDR 3
1000GB SATA HDD
18.5'' LED Monitor
keyboard & mouse
Branded ATX Casing
DVD Writer
**7.2 Dongle & Headphone Free**
59500/= FREE

(சி/3873)(2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணியகாரன் தேவை**

8ஆம் வட்டாரம், மந்துவில், புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள புதுநகர் சிவன் ஆலயத்திற்கு (35-45 ஆண்) தேவை.

தொடர்பு: 077 805 4241, 077 076 3427 (20815)(5-6-7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

**வீடு விற்பனைக்கு**

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி பிரதான வீதிக்கு அருகில் 4பரப்பு சற்சதுர வளவும், 8 பரப்பு வீடு வளவும் விற்பனைக்குண்டு. தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: 0112729855/0777217132

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் (கண்டுக்குளி) 12C, கச்சேரி East Lane, இல் 2 பரப்பு காணியில் 3 அறைகள் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு 0777398242/5650440

**வீடு வாடகைக்கு**

மல்லாகம் (Courts Road) 2 Rooms, Kitchen, attached Bathroom, Hall உடன் கூடிய வீடு வாடகைக்கு. வாடகை 4000 ஒரு வருட முற்பணம்
Contact: 0779604095/2507686

**காணி விற்பனைக்கு**

சுன்னாகம் கே.கே.எஸ். றோட் Union அருகில் 4 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு
தொடர்பு: 072 115 1421

**கணினி திருத்துனர் தேவை**

வண்ணார்பண்ணை (துட்டாதெருச் சந்திக்கு அண்மையில்) பகுதியில் உள்ள பல்பொருள் நிலையத்திற்கு கணினி திருத்துவதில் அனுபவமுள்ளவர் தேவை.
தொடர்பு: 077780 4493

**வேலையாள் தேவை**

டொபாஸ் புடவையகத்துக்கு கணக்காளர் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.
டொபாஸ், இல.70, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 4743 (23830)(5-6-7)

**அமெரிக்க விஸா லொத்தர்**

50,000 வீஸாக்கள் லொத்தர் மூலம் விண்ணப்பிக்க வேண்டுமா? விண்ணப்பிப்பதில் பிரச்சினையா? தமிழ் கைநூல் தேவையா?
Call 077 581 1106
BBS NETTING@yahoo.com

# மரண அறிவித்தல்

## றெபேக்கா நல்லையா



212, பிரதான வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா றெபேக்கா (ஆசைமுத்து) நேற்று முன்தினம் (05.10.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான புறஞ்சி - எலிசம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நல்லையாவின் (முன்னாள் அந்தியகால சேவை உரிமையாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான காணிக்கை, பொன்னுமுத்து, பொன்னுதுரை ஆகியோரின் சகோதரியும், பெரியபிள்ளை, காலஞ்சென்ற கில்டா மற்றும் பட்டு, கமலா, காலஞ்சென்ற கினேற்றன் (முன்னாள் பிறைற்கவுஸ் அந்தியகால சேவை உரிமையாளர்) மற்றும் பற்றிமா, யோனபாக், காலஞ்சென்ற கிப்சன் மற்றும் றட்சன், றினோல்டா, பவா (கனடா), காலஞ்சென்ற அன்ரன் மற்றும் டுசான் (கிளின்ரன் அந்தியகால சேவை உரிமையாளர்) ஆகியோரின் அன்புத் தாயும், பங்கிராஸ், காலஞ்சென்றவர்களான அரியம், சுந்தரலிங்கம் மற்றும் செல்வராஜா, காலஞ்சென்றவர்களான தேவி, பசுபதி மற்றும் றோக்நாதர், லில்லி, சாந்தி, மகேந்திரன், அன்ரன், யூடி ஆகியோரின் அன்பு மாமியும், ரவீந்திரன், சந்திரா, சித்திரா (லண்டன்), ரவிக்குமார், சுபத்திரா, ரதி (லண்டன்), உதயன், சுசி, மதி (இத்தாலி), றஞ்சித், றெஜி, சுகி, காலஞ்சென்ற றொயின்சன் மற்றும் லொஜி, கஜன், காலஞ்சென்ற லின்ரன் மற்றும் மேனன், யுடின், சிம்சன், சௌமியா, பியூக், கருணா, சுமதி, தயா, சியாமா, சாமினி, அம்பி, அனுசா, றஞ்சித் (லண்டன்), எடித், யஸ்மின் (பிரான்ஸ்), காலஞ்சென்ற தீபன் மற்றும் சாந்தி, குட்டித் தம்பி, தர்ஷி (லண்டன்), பௌலின், கிறஸ்வின், தல்சன், கோல்டன், நிக்சன், நியூட்டன், தட்சன், மெரின், வதனா, நெல்சராஜ், பப்பா, இந்துஜா, சம்மி (சென்றோக்-ஆசிரியர்), டோட்டி (லண்டன்), யசோதினி (யாழ். சிறைச்சாலை, உத்தியோகத்தர்), ரமியா (சுருக்கெழுத்தாளர், மேல் நீதிமன்றம், வவுனியா), ஸ்ரிபன் (கனடா), ஸ்ரெபனி (கனடா), தருண், (பிரான்ஸ்), கிளின்ரன், தர்மினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக பிற்பகல் 2.30 மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யாழ்ப்பாணம். (23821) (45.6.7) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி ஞானசரஸ்வதி கனகலிங்கம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், நவக்கிரி மற்றும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஞானசரஸ்வதி கனகலிங்கம் நேற்று முன்தினம் (05.10.2012) வெள்ளிக்கிழமை இறைபதம்அடைந்தார்.

அன்னார் நடராஜா - கனகலிங்கத் தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நடராஜா - அன்னலட்சுமி தம்பதியரின் மருமகளும், ஜனகனின் அன்புத்தாயும், தயாளினியின் அன்பு மாமியும், காலஞ்சென்ற திலகவதி நடராஜா மற்றும் சிவநேசன், காலஞ்சென்ற சிவானந்தம் மற்றும் சச்சிதானந்தம், தேவகி தங்கவேல் (ஓய்வு நிலை சிரேஷ்ட பதவி நிலை உத்தியோகத்தர் - யாழ். பல்கலைக்கழகம்), சத்தியவதி லேக்ராஜ் (UK), திருப்பதி சத்தியலிங்கம் (UK) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு நவரட்ணம், செல்வி பாக்கியலட்சுமி, (ஓய்வு நிலை சிரேஷ்ட விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழகம்), திருமதி இராஜேஸ்வரி ரஞ்சன், திருமதி செல்வராணி சிறீதரன் (BK. யாழ். பல்கலைக்கழகம்), கமலாம்பிகை (UK), சந்திராதேவி (மலேசியா), சுப்புலட்சுமி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும், திருமதி தாரணி ராஜ்குமார், Dr. கஜாணனன், சுவஸ்திகா (NSB), பிறுகஸ்வினி (பேராதனை பல்கலைக்கழகம்), பிறேம்லன், கஸ்தூரி (UK), ஹரிபிரசாத் (UK), துஷ்யந்தன் துளசி (UK), சிந்துஜா, (மலேசியா), வாமணன் (மலேசியா), காயத்திரி (சிங்கப்பூர்), ஸ்ரீராம் ஆகியோரின் அன்பு மாமியும், அருட்சோதி, தக்ஷினி, தவசோதி, ஆகியோரின் சிறியதாயும், நந்தகோபி, மனோஜ் (UK), பாபுலு (UK), பவான் (UK), தாருணி (UK), வியாபி (UK) ஆகியோரின் பெரியதாயும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2012) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கனகலிங்கம் ஜனகன் (மகன்)
(Monara Construction (pvt) Ltd.

No.36 இ.8/7.சின்சபா வீதி,
கொழும்பு - 06,
தொ.பே. 0777271222
(21931) (45.6.7)

# பணி விலகல் அறிவித்தல்



திரு.டி.நிஜன்தன்
இல:62/1, கண்டி வீதி,
திருகோணமலை.
NIC :- 902620125 V



திரு.பத்மநாதன் ஆதவன்
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
NIC : - 871952205V



திரு.ச.தவமணி
இல:28/1,
விபெத்தெகெதர ரோட்,
புவக்கொடாமுல்லா,
பதுளை.
NIC :-810564024X



திரு.பி.பி.பிரஜித்சிறி
அல 108/1,
சென்றல் ரோட்,
மட்டக்களப்பு.
NIC:-803170886V

Kelani Cables PLC தனியார் கம்பனியின் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான விற்பனை மேம்படுத்தல் அலுவலர்களாக கடமையாற்றிய மேற்குறிப்பிடப்பட்டோர் 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 31 ஆம் திகதியிலிருந்துஅவர்களது பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

Kelani Cables PLC தனியார் கம்பனியின் சகல விநியோகஸ்தர்களும் நேரடி விற்பனை முகவர்களும் இவர்களுடன் கம்பனியின் சந்தைப்படுத்தல் நடவடிக்கை சம்பந்தமாக எவ்வித தொடர்பாடல்களும் மேற்கொள்ள வேண்டாமென தாழ்மையுடன் அறியத்தருகிறோம்.

இப் பணி விலக்கல் நடவடிக்கையால் விநியோகஸ்தர்களுக்கும் நேரடி விற்பனை முகவர்களுக்குமான எமது கம்பனியின் சந்தைப்படுத்தல் சேவைகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

KELANI CABLES

பொது முகாமையாளர்
சந்தைப்படுத்தல் பிரிவு
களனி கேபிள்ஸ் பி.எல்.சி,
தபால் பெட்டி இல :- 14, வெவல்துவ, களனியா. 0117434400

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை மட்ட விவாதப் போட்டி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தமிழ்ச் சங்கம் 2012 ஆம் வருட முத்தமிழ் விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட பாடசாலைகளிடையே பட்டிமன்றச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தவுள்ளது.

ஆர்வமுள்ள உயர்தர வகுப்பு பாடசாலை மாணவர்கள் எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மத்திய கல்லூரி தமிழ்ச் சங்கத்தில் பெயர் விவரங்களைப் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (3)

## பன்றிகளின் அட்டகாசம்

சுழிபுரம், ஒக்.7

சுழிபுரம் திருவடிநிலை காட்டுவயல் பகுதியில் தோட்டச் செய்கை செய்பவர்களின் தோட்டங்களில் கீரை, வெங்காயம் செய்பவர்கள் அதிகளவில் நட்டங்களை அனுபவிக்கின்றனர். இரவு வேளையில் கூட்டம் கூட்டமாக வரும் பன்றிகள் கீரை, வெங்காயம் மற்றும் தானியங்களை மேய்ந்து சென்று விடுவதனாலேயே இந்த நட்டம் ஏற்படுகின்றது.

அதிகாலை கீரை வகைகளைச் சந்தைக்கு கொண்டு செல்வதற்கு தோட்டத்துக்குச் செல்லும் தோட்டக்காரர்கள் பெரிய ஏமாற்றத்துடன் வீடு திரும்புவதாகக் கவலை தெரிவிக்கின்றனர். (3-28)

# நாடு தழுவிய ரீதியில் இந்த வருடம் இதுவரை 32,778 டெங்கு நோயாளர்

## யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக்.7

நாடு தழுவிய ரீதியில் 32 ஆயிரத்து 778 டெங்கு நோயாளர்கள் கடந்த செப்ரெம்பர் வரை இனங்காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் யாழ். மாவட்டத்தில் 237 உறுதிப்படுத்தப்பட்ட டெங்கு நோயாளர் உள்ளனர்.

ஜூலையில் மட்டும் ஒரு டெங்கு நோயாளர் இறந்துள்ளனர்.

யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் இந்த தகவலைக் கூறியுள்ளார்.

மாவட்ட மட்ட டெங்கு கட்டுப்பாடு குறித்த மாநாடு நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கருத்துத் தெரிவித்த போதே மேற்கண்ட விடயத்தைக் கூறினார்.

யாழ். மாவட்டத்தில் 2010 ஆம் ஆண்டளவில் 3000 டெங்கு நோயாளர் இனங்காணப்பட்டனர்.

இதில் 25 பேர் டெங்கு நோயினால் இறந்தது உறுதிப்படுத்தப்பட்டது.

அடுத்துவரும் நான்கு மாதங்களில் யாழ். மாவட்டத்தில் டெங்கு பரவும் ஆபத்து உள்ளது.

தற்போது யாழ். போதனா வைத்தியசாலை, நான்கு ஆதார வைத்தியசாலைகளுடாக தினமும் ஆராய்ந்து அறிக்கையிட்டு வருகின்றது.

அத்துடன் நாளை திங்கட்கிழமை தொடக்கம் 14 ஆம் திகதி வரை டெங்கு கட்டுப்பாட்டு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

டெங்கில் இருந்து இந்த மக்களைக் காப்பாற்ற அனைத்து அரச திணைக்களங்களும், உள்ளூராட்சி சபைகள், பிரதேச செயலகங்கள், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் என்பன ஒன்று றிணைந்து செயற்படவேண்டும்.

இவ்வாரத்தில் ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளப்பட்ட நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் சம்பந்தமான விவரங்களை ஒவ்வொரு பொது சுகாதார பரிசோதகரும் சுகாதார வைத்திய அதிகாரிக்கும், ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரியும் பிராந்திய தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரிக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

இந்த தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தில் அனைவரது ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் வழங்கி டெங்கு நோயின் பரம்பலை எமது மாவட்டத்தில் தடுத்து நிறுத்த முன்வரவேண்டும்- என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். அரச அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்:-

மாவட்ட மட்டத்தில் டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு சகலரையும் சார்ந்தது.

இதில் உள்ளூராட்சி சபைகளான மாநகர சபை, நகர சபைகள், பிரதேச சபைகள் என்பன பிரத்தியேகமாக செயற்படவேண்டும்.

இதற்கு தலைவர், செயலாளர் பூரண பங்களிப்பினை வழங்கவேண்டும்.

இதனை விட பிரதேச செயலாளர்கள் விசேட டெங்கு கூட்டம் ஒன்றை உடன் ஒழுங்குபடுத்த வேண்டும்- என்று கூறினார்.

இந்த நிகழ்வில் பொலிஸ் அதிகாரிகள், சபைகளின் தலைவர்கள், செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், மருத்துவர் சி.சிவசங்கர், மருத்துவர் சி. சிவகணேஷ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### வடமராட்சி, தென்மராட்சியிலும் டெங்கு ஒழிப்பு

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு வடமராட்சி மற்றும் தென்மராட்சிப் பகுதிகளிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மும்முரமான இடம்பெறவுள்ளன.

இதற்கு மக்களது ஒத்துழைப்பு அவசியம் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயற்படுவோர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8-9-50)

## மன்னார் ஆசிரியர் தின விழாவில் பட்டிமன்றம்

மன்னார் மாவட்ட இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆசிரியர் தின விழா இன்று முற்பகல் 11மணிக்கு மன்னார் வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் ''மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துவது ஆசிரியர்களா? பெற்றோர்களா?'' எனும் தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது. (ம-14)

## ஆன்மிக வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், ஒக்.7

வடமாகாண சின்மயா மிஷன் நடத்தும் ஆன்மிக வகுப்புகள் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இல.9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளன.

இதன் ஆரம்ப வகுப்புகள் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளன. உபநிடதம், பஜனை, ஸ்தோத்திர பாராயணம், சிறுவர்களுக்கான நிகழ்வுகள், இறை வழிபாடு போன்றவற்றை பிரம்மச்சாரி ஜாக்கிரத சைத்தன்ய நிகழ்த்துவார். (3-14)

## கடனட்டை மோசடி; இலங்கை வந்த இந்தியர் கைது

சென்னையில் இருந்து இலங்கைக்கு வந்த இந்திய நபரிடம் இருந்து 110 ஏ.ரி.எம். கடனட்டைகள் மீட்கப் பட்டுள்ளன.

குறித்த நபரைச் சோதனை செய்த கட்டு நாயக்க விமான நிலைய போதைத் தடுப்புப் பிரிவினர் இந்த கடனட்டைகளை மீட்டுள்ளனர்.

கடனட்டைகளுக்கு தகவல்களை புகுத்தும் 'என்கோடர்' என்ற உபகரணமும் குறித்த நபரிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (வ)

# இலங்கைக் கல்வித்துறை குறித்து இந்திய புத்திஜீவிகள் அறிக்கை

இலங்கைக் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்து இந்திய கல்வி யியலாளர்கள் கவனம் செலுத்தியுள்ளனர்.

இதுகுறித்து இந்திய கல்வியலாளர்கள் 22 பேர் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். அதில் குறிப்பிட்டுள்ளதாவது:-

கல்விக்காக இலங்கை அரசு மொத்தத் தேசிய உற்பத்தியில் 1.86 வீதமே ஒதுக்கியுள்ளது.

> கல்விக்காக இலங்கை அரசு மொத்தத் தேசிய உற்பத்தியில் 1.86 வீதமே ஒதுக்கியுள்ளது.

இது இலங்கைக் கல்வித் துறைக்கு போதுமானதல்ல என்பதால் பெரியளவிலான சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்தப்பிரச்சினை குறித்து அதிக கவனம் செலுத்துகின்றோம். இலங்கை விரிவுரையாளர்களுக்கு எமது ஆதரவை வழங்குகின்றோம்- என்றுள்ளது.

இதேவேளை குறித்த அறிக்கையில் இந்தியப் பொருளாதார நிபுணர்கள் சிலரும் கையெழுத்திட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## மாவீரர் மாதத்தில் இளையராஜாவின் இசை நிகழ்ச்சிக்கு கனடாவில் எதிர்ப்பு

கனடாவில் மாவீரர் மாதமான நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள இளையராஜாவின் இசை நிகழ்ச்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் எதிர்வரும் நவம்பர் 3 ஆம் திகதி இசைஞானி இளையராஜாவின் இசைக்கச்சேரி நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை கனடாவில் உள்ள தமிழர் அமைப்பு மேற்கொண்டுள்ளது.

இந்த நிகழ்ச்சி நிரல் பற்றி அதிகார பூர்வமாக பத்திரிகையாளர்களிடம் அறிவிப்பதற்காக இளையராஜா கனடா சென்றார். ரொறண்டோ நகரில் பத்திரிகையாளர்களை அவர் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

இளையராஜா நேற்று முன்தினம் முற்பகல் 11 மணிக்கு அங்கு சென்றபோது இலங்கை தமிழர்களும் சீமானின் நாம் தமிழர் கட்சியினரும் நூற்றுக் கணக்கில் திரண்டு இளையராஜாவை எதிர்த்துப் போராட்டம் நடத்தினர்.

நவம்பர் மாதம் விடுதலைப்புலிகளின் மாவீரர் தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. அந்த மாதம் முழுவதும் மகிழச்சியான நிகழ்ச்சிகள் எவையும் நடத்தப்படுவது இல்லை.

எனவே இளைய ராஜாவின் இசை நிகழ்ச்சியை நடத்தக் கூடாது என்று கோஷம் போட்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

விழாக் குழுவினர் இளையராஜாவைப் பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர். நீண்டநேரம் தமிழர்கள் அங்கு முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். (வ)

## கைதடியில் இன்று விழிப்புணர்வுப்பேரணி

குருநகர், ஒக்.7

கைதடி அரச முதியோர் இல்லமும், வடக்கு மாகாண சமூகசேவைகள் திணைக்களமும் இணைந்து நடத்தும் முதியோர் வாரத்தின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று பிற்பகல் ஒன்றுக்கும் ஏற்பாடாகியுள்ளது.

முதியோர்கள் வீட்டில் வைத்துப் பராமரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வுப் பேரணி ஒன்று இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கைதடிச் சந்தியில் ஆரம்பித்து ஏ- 9 பாதையூடாக கைதடி முதியோர் இல்லம் வரை நடைபெறவுள்ளது. இதில் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் கைதடி அரச முதியோர் இல்லப் பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளார்கள். சமூகத்துக்கு இந்தக் கருத்தை எடுத்துக் கூறுவதற்கு விருப்பமுள்ள சமுக ஆர்வலர்கள் அனைவரும் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (3-51)

## கைதடி நடைபெறும் கண்காட்சி இன்றுடன் நிறைவுபெறுகிறது

குருநகர், ஒக்.7

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தற்போது நடைபெற்றுவரும் முதியோர் வார நிகழ்வுகளின்போது கண்காட்சி இன்றுடன் நிறைவு பெறுகிறது.

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்களின் இயற்கை மூலிகைகளின் கண்காட்சியில் பல இயற்கை மூலிகைகள் வைக்கப்பட்டுள்ளதுடன் இவை பற்றிய விளக்கங்களும் வழங்கப்படுகின்றன. ஒடியல்பிட்டு, ஒடியல் கூழ், உணவு வகைகளின் முறைகள், ஆரோக்கியமான வாழ்வுக்குத் தேவையான உணவு வகைகள் அவற்றைத் தயாரிக்கும் முறைகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கைதடி நவீல்ட் பாடசாலைச் சமூகத்தினால் பனம் பொருள்களினால் செய்யப்பட்ட பொருள்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளதுடன் அவைகளின் விற்பனையும் நடைபெற்று வருகிறது. வலி.தென்மேற்கு வயோதிபர் சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட நல்லெண்ணெய், வடகம், பெட்டிகள், சுளகுகள் மற்றும் அழகிய பூக்கள், பொம்மைகளும் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்தக் கண்காட்சியை தென்மராட்சி வலயப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பெருந்திரளாக வந்து பார்வையிட்டு வருகிறார்கள். இவர்கள் இங்கு தங்கியுள்ள வயோதிபர்களைச் சந்தித்து அளவளாவியும் வருகிறார்கள். இந்தக் கண்காட்சி இன்றுடன் நிறைவு பெறவுள்ளது.இந்தக் கண்காட்சியை காண வரும் பாடசாலைகளுக்கு முதியோர் இல்லத்தினால் போக்குவரத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன. (3-51)

## முதியோர் தின நிகழ்வு

குருநகர், ஒக்.7

கைதடி அரச முதியோர் இல்லமும், வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து நடத்தும் முதியோர் வாரத்தின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று பி.ப. 2மணிக்கு கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளன.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன் பிரதம விருந்தினராகவும் வடமாகாண தொழில் துறைத் திணைக்களப் பணிப்பாளர் க.சிவகரன் சிறப்பு விருந்தினராகவும் சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் செல்வி. த.தர்சினி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ள உள்ளார்கள். புங்கன்குளம் [illegible] நர்த்தனாலய மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (3-51)

## உதவிப் பண புத்தகத்தை பெற்றுக்கொள்ளலாம்

நவாலி, ஒக்.7

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களில் 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கான பணம் பெறும் புத்தகங்கள் பிரதேச செயலகத்தினால் கிராம சேவையாளர்களிடம் வழங்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது கிராம சேவையாளர்களிடம் சென்று புத்தகங்களைப் பெற்று, தேசிய சேமிப்பு வங்கியிலோ அல்லது தபாலகங்களிலோ பெற்றுக்கொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் நல்லையா புரட்சிதாசன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இம் மாதத்துக்குரிய (ஒக்ரோபர்) மாதாந்த உதவிப் பணம் சேவைப் பிரிவினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுக்காணிகள், தோட்டக்காணிகள் விற்பனைக்கு

ஏழாலை தெற்கில் 5 பரப்பு 5½ குழி அளவு கொண்ட வீட்டுக் காணி, கிணற்றுப் பங்குடன் (வீதிக்கருகில்), 7பரப்பு 5 குழி அளவு கொண்ட வீட்டுக்காணி (வீதிக்கருகில்), 6 பரப்பு தோட்டக்காணி, தோட்டக்காணி கிணற்றுப் பங்குடன் (வீதிக்கருகில்), 20 பரப்பு தோட்டக்காணி கிணற்றுடன், 2 அறை கடைக்கட்டடம் (வீதிக்கருகில்)

**தொடர்பு : விஜே செபஸ்தியான் (Sebastian)**
**(T.P: 0771662169)**
**ஏழாலை தெற்கு, சுன்னாகம்.** (சி/3878) (6-7-10)



- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

SEPT.'2012 TO FEB.'2013

24

*தமிழ் மொழி மூலம்*

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

(சி/3939)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி :10.10.2012


## யாழ். லயன்ஸ் கழகத்தின் கண்ணீர் அஞ்சலி



திருமதி
**கனகலிங்கம் ஞானசரஸ்வதி**

Lion கனகலிங்கம் ஜெனகன் அவர்களின் தாயும் Lion Lady ஜெனகன் தயாழினி அவர்களின் மாமியும் ஆகிய கனகலிங்கம் ஞானசரஸ்வதி 05.10.2012 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு கவலை அடைந்தோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ். லயன்ஸ் கழகம்.**

(சி/3879) (6-7-10)

## மரண அறிவித்தல்

### தம்பியப்பா குகானந்தா

(சைவ வித்தியாவிருத்திச் சங்கம்- பொருளாளர்)



யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பியப்பா குகானந்தா நேற்று (06.10.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பியப்பா நாகரத்தினம் தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தங்கம்மா தம்பதியரின் மருமகனும், அருந்ததியின் (ஆசிரியர், யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்) பாசமிகு கணவரும், பிரணவன் (உயர்தரம் கணிதபிரிவு சென் ஜோன்ஸ் கல்லூரி), சரவணன் (தரம் 8 யா/இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், முருகானந்தா, பாலாம்பாள் ஆகியோரின் அன்பு சகோதரரும், கிருபா, சந்திரிக்கா, ரேணுகா ஆகியோரின் அன்பு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (07.10.2012) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று காலை 9.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**78, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

(23832) (6-7-10) **குடும்பத்தினர்.**

## மரம் வெட்டியவர்களை அச்சுறுத்திய சீருடையினர்

புதுக்குடியிருப்பு,ஒக்.6

தமது காணியில் அனுமதி பெற்று மரங்களை வெட்டிக்கொண்டிருந்தவர்களைச் சீருடையினர் அச்சுறுத்தியதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மந்துவில் மல்லிகைத் தீவில் சிலர் வீட்டுக்குக் கட்டுமானப் பணிகளுக்காக சொந்தக் காணியில் அப்பகுதி கிராம அலுவலரிடம் அனுமதி பெற்று மரங்களை வெட்டியுள்ளனர்.

அந்த வேளை அப்பகுதியால் வந்த சீருடையினர், யார் உங்களுக்கு மரங்களை வெட்டுவதற்கு அனுமதி தந்ததென அச்சுறுத்தும் பாணியில் நடந்துகொண்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பின்னர் தம்மிடம் அனுமதி பெற்றே நீங்கள் மரங்களை வெட்ட முடியுமென அவர்கள் தம்மிடம் தெரிவித்ததாக மக்கள் மேலும் கூறினர்.

(த-16-400)

## வாகனக் கொள்ளையில் ஈடுபட்ட நால்வர் கைது

மன்னார்,ஒக் 7

மன்னார் - தள்ளடி பிரதேசத்தில் 32 லட்சம் ரூபா பெறுமதியான வான் ஒன்றை கொள்ளையிட்ட சந்தேகநபர்கள் நால்வரை மன்னார் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன் தினம் அதிகாலை இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதையடுத்து, மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் வானை மீட்டதுடன் சந்தேகநபர்கள் நான்கு பேரையும் கைது செய்துள்ளனர்.

கிளிநொச்சி மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இக்கொள்ளையில் ஈடுபட்டுள்ளதாகவும் இந்த கொள்ளைக்கென பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

(த)

## பிரெட்ரிக்கா ஜான்சுக்கு ஆஸி. அடைக்கலம் வழங்க மறுப்பு

கொழும்பு,ஒக் 7

ஜனாதிபதியின் சகோதரரும், பாதுகாப்புச் செயலருமான கோத்தபாய ராஜபக்ஷவினால் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட சண்டேலீடர் வார இதழின் முன்னாள் ஆசிரியர் பிரெட்ரிக்கா ஜான்சுக்கு அடைக்கலம் அளிக்க ஆஸ்திரேலியா மறுப்புத் தெரிவித்துள்ளது.

நேரடியாகவும், பலமுறை கடிதம் மூலமாகவும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட பிரெட்ரிகா ஜான்ஸ், ஜனாதிபதிக்கு நெருக்கமான புதிய நிர்வாகத்தினால், கடந்த மாதம் சண்டேலீடர் ஆசிரியர் பதவியில் இருந்து, நீக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் அவர், ஆஸ்திரேலியாவில் குடியேறுவதற்குக் கொழும்பிலுள்ள தூதரகம் மூலம் மனிதாபிமான விஸா கோரியிருந்தார். எனினும், அவரது இந்த விண்ணப்பத்தை ஆஸ்திரேலியா நிராகரித்துள்ளது,

இலங்கையில் துன்புறுத்தல்களை எதிர்கொள்ளவில்லை என்பதாலேயே பிரெட்ரிக்கா ஜான்சின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக, ஆஸ்திரேலிய குடிவரவுத்துறை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

எனினும் பிரெட்ரிக்கா ஜான்சின் விஸா நிராகரிக்கப்பட்டது தொடர்பாக கருத்து வெளியிட்ட ஆஸ்திரேலிய குடிவரவுத் திணைக்களப் பேச்சாளர், தனிப்பட்ட விவகாரங்கள் குறித்துக் கருத்து வெளியிட முடியாது என்று கூறியுள்ளார்.

கடந்த ஆண்டில் ஆஸ்திரேலியா, 42, 000 மனிதாபிமான விஸா விண்ணப்பங்களைப் பெற்றிருந்தது. அதில், 6700 விண்ணப்பங்கள் மட்டுமே ஆஸ்திரேலியாவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.(த)


## தரம் 06 இற்கான அனுமதி 2013

எமது பாடசாலை தரம் 06 இற்குரிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் பாடசாலையினால் கோரப்படுகிறது. விண்ணப்பப்படிவங்களை பாடசாலையில் 20.10.2012 முதல் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்களை 30.10.2012 இற்கு முன்பாக பாடசாலை அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

**METHODIST GIRLS' HIGH SCHOOL POINT PEDRO**

(சி/3875) (6-7-10)



## Study Abroad
வெளிநாட்டில் உயர்கல்வி

**UK & CANADA**
(புதிய விசா திருத்த சட்டத்தின் படி)

- அடிப்படை தகைமை O/L மட்டுமே.
- IELTS அவசியமில்லை.
- பகுதி நேர வேலை செய்யும் வாய்ப்பு.
- பாடநெறிக்கட்டணம், விசாவிற்கு பிரகு செலுத்தலாம்.

உடனடிப் பயணம்.

December 2012 / January 2013
மாதங்களுக்கான பதிவுகள் நடைபெறுகின்றன.



**Canada (Work Permit)**

அரசாங்க பதிவிலக்கம் : PV 67191

கனடிய நாட்டிலே ஒரு மாநிலத்தினை அபிவிருத்தி செய்கின்றனர். இந்த மாநிலத்திற்கு கீழ் குறிப்பிட்டவர்கள் தேவைப்படுகின்றனர்.
Helpers, labourers, Supervisors, Gardeners, farmers, Baby sitters, Care Givers, Nurses, Medical officers, Hotel Staffs, etcc.
அடிப்படை தகைமை : அடிப்படை ஆங்கில பேச்சு ஆற்றல்.
வயது எல்லை - 18 - 44. **4 year Contract**

வங்கி / ஸ்பொன்சர் வசதிகள / சட்ட ஆலோசனைகள் / மீள் விண்ணப்பம் / மீள்முறையீடு / Visit Visa, Business Visa ஆலோசனைகளும் வழங்கப்படும்.

வெளிநாடுகளுக்கு சென்ற மாணவர்களின் புகைப்படங்களை நேரில் வந்து பார்வையிடலாம்.

**GREENWICH COLLEGE**
34, Galle Road, Dehiwala.
Tel : (011) 2713214
E: info@greenwich.lk,
w: www.greenwich.lk

Branch:
**GREENWICH COLLEGE**
01, 2nd Lane,
Power House Road,
(மின்சார நிலைய வீதி),
Jaffna.

(சி/3932)

மேலதி விபரங்களுக்கு 072-8342490 / 0777-751382



## After A/L



**நீங்களும் சட்டத்தரணியாகலாம்**

குறுகிய காலத்தில், குறைந்த செலவில், மிக இலகுவாக

**LLB & LAW ENTRANCE**

திறந்த பல்கலைக்கழக சட்டமாணி சட்டக்கற்கை நெறி அனுமதி பரீட்சை பயிற்சி வகுப்புக்கள் - 2013

அடிப்படைத் தகைமை: G.C.E A/L

புதிய பாடத்திட்டம்: ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி
பழைய பாடத்திட்டம்: ஒரே தடவையில் 3 பாடம் சித்தி அத்துடன் ஏனைய பாடத்தில் இன்னுமொர் தடவையில் சித்தி

**சட்டக்கல்லூரி அனுமதி பரீட்சை பயிற்சி வகுப்புக்கள் - 2013**

அடிப்படைத் தகைமை: G.C.E A/L & O/L

புதிய பாடத்திட்டம்: ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி.
பழைய பாடத்திட்டம்: ஒரே தடவையில் 4 பாடம் சித்தி.

அத்துடன்
G.C.E. O/L பரீட்சையில் தமிழ், ஆங்கிலத்தில் திறமைச்சித்தி (C)

பாடக்குறிப்புகள் வழங்கப்படுவதுடன் தொடர் மாதிரிப்பரீட்சைகள் நடைபெறும். கடந்தகால வினாக்கள் விடைகளுடன் கலந்துரையாடப்படும்.

வகுப்புகள் நடைபெறும் இடங்கள்

கொழும்பு-
Greenwich College, 34, Galle Road, Dehiwala. - 0722419418
யாழ்ப்பாணம் -
Greenwich College,No: 1, 2nd Lane, Powerhouse Rd, Jaffna. - 0777630708
கண்டி -
Hi-Tec Group, 38, Colombo Street, Kandy. - 0773066411
மட்டக்களப்பு -
Tel: (011) 2713214, 2726237 Mob: 0722419418

Apekz design: 0777353427

**GREENWICH COLLEGE**
34, Galle Road, Dehiwala,
Tel: (011) 2713214, 2726237. E: info@greenwich.lk W: www.greenwich.lk

(சி/3931) மேலதி விபரங்களுக்கு: 0723794370


## கண்ணீர் அஞ்சலி



திருமதி
**அருணாசலம் இலட்சுமி**

எமது கல்லூரி அதிபர்
**அ. கயிலாயப்பிள்ளை**
அவர்களின் பாசமிகு தாய்
திருமதி அருணாசலம் இலட்சுமி
அவர்களின் மறைவுச்
செய்திகேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
(தேசிய பாடசாலை)
சாவகச்சேரி.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,

(சி/8391) (6-7-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 விக்கெட்டுக்களால் மட்டக்களப்பை வீழ்த்தியது சென்.பற்றிக்ஸ் அணி

குருநகர்,ஒக்.7

அகில இலங்கை ரீதியான 15 வயதுக்குட்பட்ட பாடசாலை கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான 50 பந்துப் பரிமாற்றங்களைக்கொண்ட விலகல் முறையிலான கிரிக்கெட் போட்டி ஒன்றில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி அணியை 7 இலக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. நா ணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி முதலில்துடுப்பெடுத்தா டியது. சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்களின் அபார பந்து வீச்சில் 22 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 36 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது. இதில் அஜித்குமார் 5 ஓட்டங்களையும்,கவிதரன் 4 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சார்பில் அகீபன் 8 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளையும், கொலின்ஸ் 8 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும்,டானியல் 36 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும்,கிருஸாந்தன் 5 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்கினையும் வீழ்த்தினர்.

37 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 5.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் நிலக்ஷன் 8 ஓட்டங்களையும் டானியல் 5 ஓட்டங்களையும் கிரிஷாந்தன் 1 ஓட்டத்தினையும் , கொலின்ஸ் ஆட்டமிழக்காமல் 8 ஓட்டங்களையும் நிலோஜன் ஆட்டமிழக்காமல் 1 ஓட்டத்தினையும் தமது அணி சார்பாகப் பெற்றுக்கொண்டனர்.

உதிரிகளாக 19 ஓட்டங்கள் கிடைக்கப்பெற்றது.பந்து வீச்சில் மட்டக்களப்பு மெதடிஸ் மத்திய கல்லூரி சார்பில் விஜிதரன் 13 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், தனுசன் 7 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும் கைப்பைற்றினர். (த-51)

# அசத்தியது யாழ்.சென்றல் 5 விக்கெட்டுக்களால் வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக்.7

கலட்டி நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும், நியூஸ்ரார் பிறிமியர் வெற்றிக் கிண்ணத்துக்கான '20/20' கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று சனிக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி, மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 5 இலக்குகளால் வெற்றியீட்டியது.

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகத்துக்கும் ஓல்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஓல்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழகம் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 119 ஓட்டங்களை பெற்றது.

இதில் பிரியலக்ஸன் ஆட்டமிழக்காது 29 ஓட்டங்களையும், ஸ்ரீகுகன் 29 ஓட்டங்களையும்,நிரோசன் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணி சார்பாக றஜீவ்குமார் 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், றொகான் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 34 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், விமலகாந்தன் 4பந்துப் பரிமாற்றங்கள்பந்துவீசி 30 ஓட்டங்களைக் கொடுத்து1 இலக்குகளையும், சலிஸ்ரன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்குகளையும் வீழ்த்தினர்.

120 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணி 18 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் றஜீவ்குமார் 32 ஓட்டங்களையும், றொகான் ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களையும், கபில்தேவ் 24 ஓட்டங்களையும், டோனா 15 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஓல்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் பிரிய லக்ஸன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 16 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்கினையும்., ஜெயசுதன் 2 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 15 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும்., திலீபன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 32 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும்., நிரோசன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 20ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும் கைப்பற்றினார்கள் (த-23)

## மென்பந்து கிரிக்கெட் இறுதியாட்டங்கள் இன்று

தும்பளை மேற்கு விவேகானந்தா விளையாட்டுக்கழகம் நடத்தும் மென் பந்து சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 2 மணியளவில் தும்பளை மேற்கு விவேகாந்தா விளையாட்டுக்கழக தலைவர் எஸ்.பி விவேகானந்தா தலைமையில் இடம்பெறவுள்ளது.

5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென் பந்து சுற்றுப் போட்டி இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து தீபக ஜோதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

15 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்துப் போட்டயில் இறுதியாட்டத்தில் அல்வாய் நியூபவர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நெல்லியடி மகாத்மா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இன்றைய நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக பிரபல சட்டத்தரணியும் பருத்தித்துறை நகர பிதாவுமான சபா.ரவீந்திரன் சிறப்பு விருந்தினர்களாக தும்பளை மேற்கு சனமூக நிலையத் தலைவர் சே. சிதம்பர நாதனும், வேலாயுதம் மகாவித்தியாலய ஆசிரியர் சிவகணேசனும் கெருடாவில் கிழக்கு கிராம அலுவலர் நடாசேசுர் தென்மராட்சி பிரதேச செயலக முகாமைத்துவ உதவியாளர் கு.சுரேந்திரராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23)

## உதைபந்தாட்ட அரையிறுதியாட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.7

பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தின் அனுமதியுடன் பாஷையூர் விண்மீன் அணியினர் நடத்தும் உள்ளூர் அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று மு.ப 10 மணியளவில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

முதலாவது அரையிறுதியாட்டத்தில் கொக்கலோலா அணியை எதிர்த்து பாசிலோனா அணி மோதவுள்ளது.

இரண்டாவதாக இடம்பெறவுள்ள அரையிறுதியாட்டத்தில் வீனஸ் அணியை எதிர்த்து யுப்பிற்றஸ் அணி மோதவுள்ளது.

மேற்படி அரையிறுதியாட்டத்தில் வெற்றி பெறும் அணிகள் பி.ப 4 மணியவில் இடம்பெறவுள்ள இறுதியுாட்டத்தில் மோதவுள்ளன.

மேற்படி சுற்றுப் போட்டியில் 10 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

(த-23)

## வென்றது சுப்பர் ஸ்ரார்

யாழ்ப்பாணம், ஒக்.7

வவுனியா உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக கழகங்ளுக்கிடையில் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இடம் பெற்ற ஆட் டத்தில் சுப்பர்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வெற்றியீட்டியது.

சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் ,பிரண்ட்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 2 : 0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது. (த-23)

## ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டி

அகில இலங்கை ஆசிரியர்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி எதிர் வரும் 20ஆம் திகதி முதல் நான்கு தினங்கள் திருகோணமலை மைக்கேசன் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

பல்வேறு பிரிவுகளாக விளையாட்டுக்கள் நடத்தப்படவுள்ளன. இதில் 100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர்,800மீற்றர்,1500 மீற்றர், 4X100 மீற்றர் ,4X400 மீற்றர் ஓட்டப் போட்டிகள் ,உயரம் பாய்தல்,முப்பாய்ச்சல், ஈட்டி எறிதல், குண்டு போடுதல், தட்டெறிதல் என்பன இடம்பெறவுள்ளன. பெரு விளையாட்டுக்களில் வலைப் பந்தாட்டம்,காற்பந்தாட்டம் என்பன இடம்பெறவுள்ளன. (த-400)

# இன்றைய ஆட்டங்கள்

கலட்டி நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும், நியூஸ்ரார் பிறிமியர் வெற்றிக் கிண்ணத்திற்கான '20/20' கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் கால் இறுதியாட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானங்களில் இடம்பெறுகின்ற ஆட்டத்தில் பங்கு பற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு-

**மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில்**
**காலை 8 மணி**

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் ஓல்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழகம்.

**யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில்**
**காலை 8 மணி**

மானிப்பாய்பரிஷ் விளையாட்டுக்கழகம் எதிர் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம்

**11 மணி**

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழகம் எதிர் பற்றீசியன் விளையாட்டுக்கழகம்

**2 மணி**

கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் சென்றல் விளையாட்டுக்கழகம்.

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

**பி.ப.3 மணி**

நவஜீவன் விளையாட்டுக்கழகம் எதிர் டைமன்ஸ் விளையாட்டுக்கழகம்

**பி.ப 4 மணி**

இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகம் எதிர் தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகம்

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள்-

**பி.ப.3.30**

குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் எதிர் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம். (த-86-23)

# வெற்றிபெற்ற அணிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு-

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் பொர்மஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது. (த-23)

# தேசிய சேமிப்பு வங்கியின் விளையாட்டு விழா இன்று

வடமராட்சி,ஒக்.7

வட வலயத்தில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளின் உத்தியோகத்தர், ஊழியர்கள் அவர்களின் பிள்ளைகளுக்கான விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியின் வட வலய முகாமையாளர் பி.அருளாணந்தம் தலைமையில் நடைபெறும் இந்த விளையாட்டு விழாவிற்கு பிரதம விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் சுனில் சிறிசேன பொது முகாமையாளர் ஜனநாயக்கபண்டாரா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

உத்தியோகத்தர், ஊழியருக்கிடையே கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், மேசைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் இடம்பெறும். உத்தியோகத்தர், ஊழியர்களின் பிள்ளைகளுக்கெனபல விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. (த-8)

# மனோகரா வி.க. வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.7

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில்நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக்கழக அணி வெற்றியீட்டியது. மனோகரா விளையாட்டுக்கழக அணிக்கும் தொண்டைமனாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக்கழக அணி 6:0 என்ற கோல்க் கணக்கில் வெற்றியீட்டியது. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பில் குடிதண்ணீருக்காகக் குழாய்க் கிணற்றடியில் சிறார்களும். (க-18)



கிளிநொச்சி ஸ்கந்தபுரத்திலுள்ள வீதியின் புனரமைப்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெறு கின்றன. (க-18)



அக்கராயன் மத்தியிலுள்ள கழிவாற்றுப் பகுதியில் உலக உணவுத் திட்டத்தின் கீழான வேலைகளில் இப்பகுதி மக்கள் ஈடுபட்டுள்ளனர். (க-18)



அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் அமையவுள்ள காணிக்குள் சிறார்கள் மகிழ்ச்சியுடன் உலா வருகின்றனர். (க-18)




ஆர்.பி.ஆர். நிறுவனத்தினின் 'விருட்சம் வெளியே வா' நூல் வெளியீட்டு நிகழ்வின் போது நூலின் முதற்பிரதியை ஆர்.பி.ஆர் அமைப்பின் தலைவரான சட்டத்தரணி எம்.எம்.சபுருதீன் மன்னார் மேலதிக அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மெல்லிடம் வழங்குகின்றார். (க-12)



வவுனியா கற்குழி கதிர் சிறுவர் கழகத்தால் நடத்தப்பட்ட சிறுவர் தின விழாவில் கலந்து கொண்ட சிறுவர்கள் தமது பெற்றோருடன் காணப்படுகின்றனர். (க-402)



கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல-02 பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகளைப்பெற்றுச் சித்தியடைந்த மாணவன் ச.சாரங்கன் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன் காணப்படுகின்றார். (க-18)



வவுனியா கல்நாட்டியகுளம் சித்தி விநாயகர் ஆலயத்தில் காத்தவராயன் கூத்து நிகழ்வை நெறிப்படுத்திய புதுக்குடியிருப்பு அண்ணாவியார் நாகராசா பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுகின்றார். (க-421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**

**தினமும் வெல்லுங்கள்**

ரூபா. **2000**

கேள்வி 19

இன்றைய மோதல் இவர்களுடையது...



'ரி-20' உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் மோதும் இலங்கை , மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் மகளிர் 'ரி-20' உலகக் கிண்ணத்துக்கு மோதும் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அணித் தலைவர்கள் உலகக் கிண்ணத்துடன்

## முரண்பட்டதால் அபராதம்

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான அரையிறுதி ஆட்டத்தின் போது நடுவரின் உத்தரவையும் மீறிச் செயற்பட்ட சம்பவத்துக்காக உமர் அக்மலுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. உமர் அக்மலின் போட்டி ஊதியப் பணத்தில் 50 சதவீதம் அவருக்கு அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும் போது 17 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் களநடுவர்களின் மறுப்பையும் கருத்திற்கொள்ளாது தனது கையுறைகளை பந்துப் பரிமாற்றத்தின் நடுவே உமர் அக்மல் மாற்றியதை அடுத்தே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக போட்டி மத்தியஸ்தரான ஜெப் குரோ குற்றச்சாட்டை முன்வைத்ததை அடுத்து தனது குற்றத்தை உமர் அக்மல் ஏற்றுக் கொண்டார். அதன் காரணமாக உமர் அக்மலுக்கு 50 சதவீத அபராதம் விதிக்கப்பட்டதோடு, தனது நடவடிக்கைக்காக உமர் அக்மல் மன்னிப்புக் கோரினார். (5)

## இறுதி மோதல்

### 29 ஆண்டுகளுக்கு பின்னர்...

அரையிறுதியில் ஆஸ்திரேலியாவை வீழ்த்திய மேற்கிந்தியத்தீவுகள் அணி, உலகக் கிண்ணத் தொடர்களில் (சகல வகையான ஆட்டங்களும்) 29 ஆண்டுகளுக்குப் பின்னர் இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது. கடைசியாக 1983 இல் நடந்த 50 பந்துப் பரிமாற்ற உலகக் கிண்ணத் தொடரில் இறுதிக்கு முன்னேறிய மேற்கிந்தியத்தீவுகள் அணி இந்திய அணியிடம் தோல்வியைத் தழுவியது. அதன் பின்னர் 1996 , 2009 இல் நடந்த உலகக் கிண்ணத் தொடர்களில் அரையிறுதி வரை சென்றது.

29 வருடங்களுக்குப் பிறகு இன்றைய தினமே மேற்கிந்தியத்தீவுகள் அணி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## இலங்கை ரசிகர்கள் எங்களை மன்னியுங்கள் உலகக் கிண்ணம் எங்களுடையதே – கெய்ல்


இன்று இடம்பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடரின் இறுதி ஆட்டத்தில் இலங்கையைத் தோற்கடித்து மேற்கிந்தியத் தீவுகள் சம்பியன் பட்டம் வெல்வது உறுதி. இதனால் இலங்கை ரசிகர்கள் எங்களை மன்னிக்க வேண்டும் என்று மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அதிரடி ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெய்ல் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய அணிக்கெதிரான அரையிறுதி ஆட்டத்தில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 205 ஓட்டங்களைக் குவித்திருந்தது. அதன் பின்னர் ஆஸ்திரேலிய அணியை 131 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்கச் செய்திருந்தது.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்த கிறிஸ் கெய்ல், 'ரி-20' உலகக் கிண்ணம் தங்களுடையதே எனத் தெரிவித்தார். இலங்கை ரசிகர்கள் தங்களை மன்னிக்க வேண்டும் எனத் தெரிவித்த கிறிஸ் கெய்ல், இந்த உலகக்கிண்ணம் தங்களுடையது எனத் தெரிவித்தார்.

தங்களுக்கு இலங்கை மிகப் பிடித்த நாடு எனத் தெரிவித்த அவர், எனினும் இன்று மேற்கிந்தியத் தீவுகளே வெற்றிபெறும் எனத் தெரிவித்தார். அது நிச்சயம் எனத் தெரிவித்தார். ஆஸி. அணிக்கு எதிரான வெற்றி மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு நிச்சயமாகத் தேவைப்பட்ட ஒன்று எனத் தெரிவித்த கிறிஸ் கெயில், ஆஸ்திரேலிய அணி இந்தத் தொடரில் மிகச்சிறப்பான திறமையை வெளிப்படுத்தி வந்ததாகவும், ஆகவே இவ்வெற்றி மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாகவும் தெரிவித்தார். (5)

ICC WORLD TWENTY20 SRI LANKA 2012



நடுவர் சைமன் ரௌபெல் நேற்றைய ஓய்வு நாளில் தனது குடும்பத்தினருடன் மைதானத்தில் உல்லாசமாக வலம்வருகிறார்.

## சூதாட்டம் எங்களது கலாசாரம் – அக்தர்

கிரிக்கெட் போட்டியில் 'ஸ்பொட் பிக்சிங்' எனப்படும் சூதாட்டத்தில் ஈடுபட்டு அதிகளவில் சிக்கியவர்கள் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள். இவர்கள் இவ்வாறு செய்வதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபைதான் காரணம் என்று முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான சர்ச்சை நாயகன் அக்தர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், 'ஸ்பொட் பிக்சிங்' எங்களது கலாசாரம். ஏனென்றால் எங்களது வீரர்கள் குறைவான ஊதியம் பெறுகிறார்கள். குறிப்பாக சர்ச்சையில் சிக்கிய வீரர்கள் குறைவான போட்டியில் மட்டுமே விளையாடியுள்ளனர்.

நானும் கடந்த 2008 ஆம் ஆண்டு கார் வாங்கக் கூட பணம் இல்லாமல் சிரமப்பட்டு நண்பரிடம் கடன் வாங்கினேன். ஆனால், நான் எனது நிலைமையை சமாளித்துவிட்டேன் என்றும் மற்றவர்கள் தவறான வழிகளில் சிக்கிக் கொள்கின்றனர் எனவும் கூறியுள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற போட்டியில் பாகிஸ்தானின் டெஸ்ட் அணித்தலைவர் சல்மான் பட், மொஹமட் ஆமிர், மொஹமட் ஆசிப் ஆகியோர் 'ஸ்பொட் பிக்சிங்' சர்ச்சையில் சிக்கி கைதாகி சிறையில் அடைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (5)






## ரசிகர்களை ஈர்க்காத நடனமங்கையர்



இலங்கையில் இடம்பெற்றுவரும் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடரில் நடனமாடும் நங்கைகள் தொடர்பாக இலங்கைக் கிரிக்கெட் சபை தனது விமர்சனத்தை வெளிப்படுத்தியுள்ளது. இலங்கைக் கிரிக்கெட் சபை சார்பாக அந்தச் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க நடனமாடும் நங்கைகள் குறித்த தனது விமர்சனத்தை வெளிப்படுத்தினார்.

நடனமாடும் நங்கைகளின் மோசமான வெளிப்பாடுகள் அனைவருக்கும் விருப்பமின்மையைத் தோற்றுவித்துள்ளதோடு, உலகின் கவனமே இலங்கையின் பக்கம் காணப்பட்டுள்ள போது இலங்கை மீது தவறான விம்பமொன்றை இது ஏற்படுத்துவதாக இலங்கைக் கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க தெரிவித்தார்.

குறித்த நடன நங்கைகளின் நடனச் செயற்பாடுகள் தொடர்பாக ஏராளமான விமர்சனங்களைத் தாங்கள் சந்தித்துள்ளதாகத் தெரிவித்த நிஷாந்த ரணதுங்க, நடனமாடும் நங்கைகள் தொடர்பாக சர்வதேசக் கிரிக்கெட் சபையிடம் முறையிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படி நங்கைகளை இலங்கைக் கிரிக்கெட் சபை தெரிவுசெய்திருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மைதானத்தில் நான்கு, ஆறு ஓட்டங்கள் பெறப்படும், இலக்குகள் வீழ்த்தப்பட்டதும் ரசிகர்களை உற்சாகப்படுத்துவதற்காக பணிக்கமர்த்தப்பட்டுள்ள நடன நங்கைகளின் நடன வெளிப்பாடுகள் சிறப்பானதாகக் காணப்படவில்லை எனவும், அவர்கள் ரசிகர்களைக் கவரக்கூடியவர்களாகக் காணப்படவில்லை எனவும் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்கள் பரவலான விமர்சனங்களை வெளிப்படுத்தியிருந்தன.

இதேவேளை குறித்த நடன நங்கைகளின் முகாமையாளர் சுதேவ் அபேசேகர இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போது உலக 'ரி-20' தொடர் போன்ற மிகப்பெரிய தொடருக்கு சிறப்பான தோற்றத்தைக் கொண்ட நடன நங்கைகள் தேவைப்படுவதாகவும், ஆனால் நடன நங்கைகளுக்காக ஏற்பாட்டுக் குழுவால் குறைந்தளவு பணமே ஒதுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதுவரை எத்தனை 'ரி-20', உலகக் கிண்ண தொடர் நடைபெற்றுள்ளது?**

............................................

பெயர்– ....................................

முகவரி–....................................

....................................

....................................

உதயனில் வெளியாகும் கூப்பனை மாத்திரம் கத்தரித்து 08.10.2012 ற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

உதயனின் யாழ். அலுவலகம், நெல்லியடி, சாவகச்சேரி, கரடிப்போக்குச் சந்தி, வவுனியா, மன்னார் ஜோதி புத்தகசாலை. சிவசாந்தி தேநீர்ச்சாலை- தாழ்வுப்பாடு அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் கூப்பனை இடலாம்.

## தங்குமிடம் வேண்டும்

முதியவர், தம்பதிகள் தங்குவதற்கு இடம் வேண்டும். யாழ். நகருக்கு அருகில் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 075 0980914

(23780)(14-8)

## A/L CBF & DBF Group Classes

Management / Marketing / Insurance } Mr. Sabesh

Accounting : Mr. Kajan

**KBK Accounting Centre**

சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

தொடர்புகளிற்கு : 077 6740450, 077 7529113

(23547)(14-8)

## மணமகன் தேவை

1984 இல் பிறந்த, 8 இல் செவ்வாய் 50 பாவமுடைய, லண்டனில் வசிக்கும் மணமகளுக்கு மணமகன் தேவை.

தொடர்பு:-
004747944944
mathusena@yahoo.com

(23606)(3.6.7)

## வீடு வாடகைக்கு

அமைதியான சூழலில் சகல வசதிகளுடன் கூடியதும் பல ஆண்டுகளாக அரசசார்பற்ற நிறுவனத்தின் பாவனையிலிருந்த சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள விசாலமான வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு- 0112580048 (Colombo)
0777122015 (Jaffna)

(23731)(9.14)

## STUDY IN UK

உங்கள் **LONDON** செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

**GCE(O/L)** தகமை போதுமானது

Nov/Jan Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

நடைமுறைகள் மாறினும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்

**நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்**

- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருப்பதால்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள்

HOTLINE : 021 7538395 / 021 2227230
011 7 555511/14

EXPONET Overseas Consultants
379 - ½, Galle Road, Colombo 06.
197,Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk

## Personal Class (கணினி)

* கற்கை நெறிகள் யாவும் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
* Ms Office 2010, Internet and E-mail, DTP, WEB Design, Kids Program (சிறுவர்களிற்கானது) Computer Type Setting, Graphic Design
* சான்றிதழ்கள் வழங்கப்படும்
* குறிப்பு : கணினி இல்லாதவர்களுக்கும் எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்.
* T.P : 077 9672038, * ஆசிரியர் : KRC நல்லூர்

(23599)(14-8)

## கார் விற்பனை

HL - XXXX தொடரிலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள Nissan FB -15 (2000) கார் விற்பனைக்குண்டு. விலை: 1985000/=

தொடர்பு :077 6693177, 077 6510188

(சி/3577)(6-8)

## விற்பனைக்கு

முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணத்தில் 19FT மீன்பிடி படகுகள் (06) 15 HP Suzuki OBM எஞ்சின்கள் (02) வலைகளும் விற்பனைக் குண்டு.

தொடர்புகளுக்கு: 077 9491163

(23828)(6-8)

## Physics Paper Class By : K. Sivalingam Bsc (sp1)

ஆரம்பம் : 09.10.2012 செவ்வாய்க்கிழமை
சகல பாடப்பகுதிகளும் பூரணப் படுத்தப்படும்
செவ்வாய், புதன், வியாழன்
நேரம் : 3.30 - 5.00 P.M
இடம் : 87 மணியகாரன்லேன், கொக்குவில் கிழக்கு
T.P : 077 0711446

(23808)(14-8)

## கார் விற்பனைக்குண்டு

வவுனியாவில் நல்ல நிலையிலுள்ள கார் விற்பனைக்குண்டு. B13 நிசான் சனி, நிறம் - வெள்ளை, முதல் பதிவு 1996 ஆம் ஆண்டு, A/C, Power Steering, Manual Gear

விலை 10,95,000/=

தொடர்பு-
0750375963,0776703246

(20910)(9.14)

## German Language Academy

ஜேர்மன் டொச் மொழிகள் இலகுவழியில் ஜேர்மனியில் கற்று வந்த ஆசிரியரால் மிக சிறந்த முறையில் பலவருடங்களாக யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் பல மாணவர்களை சித்தியடையச் செய்த ஆசிரியர் ஆவார்.

* ஜேர்மன் A1 பரீட்சைக்கு தோற்ற விரும்புவோர் இவ் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்

German Language Academy
No. 7, Palaly Road, Jaffna.
077 9707322,

(23389)(6-8)

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N. குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?

எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பில்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹொட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691

(20772)(15-14)

## சித்தன்கேணியில் சைக்கிள் ஓட்டப் போட்டி

சித்தன்கேணி சிவன் கோயில் அமரர் சிவஸ்ரீ.த.ஞானபண்டிதக் குருக்களின் 30 ஆவது ஆண்டு நினைவு தினத்தினை முன்னிட்டு வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஆண்களுக்கான 20 கிலோ மீற்றர் சைக்கிளோட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை, காலை 6.30 மணிக்கு ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகின்றது.

திருமதி வாசுகி உமாபதி சர்மா தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டியை வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.சி.சத்திரசிங்கள ஆரம்பித்து வைப்பார்.

## ஜேர்மன், சுவிஸ் மொழிகள்

தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகிறது. Embassy யில் கேட்கப்படும் A1 Exam க்கு ஏற்றவாறு.
10, Palaly Road, Jaffna
Miss Kajenthini
T.P : 077 1604823

(23750)(6-8)

## வீடு விற்பனைக்கு

பொன்னாலை வீதி, மானிப்பாயில் 02 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு-
0779073818

(23736)(9.14)

## காணியுடன் வீடு விற்பனைக்குண்டு

யாழ். வண்ணார்பண்ணை தலையாழி வீதியில் 4 1/3 பரப்பு காணியுடன் அமைந்துள்ள வீடு உடன் விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)

தொடர்பு- 0758648204

(23652)(9.14)

## விற்பனைக்கு உண்டு

நல்ல நிலையில் இயங்கிவரும் புடைவை வியாபார நிலையத்திலுள்ள தளபாடங்கள் உட்பட அனைத்து இந்திய நவீன புடைவைகளும் விற்பனைக்கு உண்டு.

இந் நிலையத்தினை கைமாற்றம் செய்து நடத்த விரும்புவோருக்கு சகல ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும். குளிரூட்டப்பட்டதும் நவீன முறையில் அமைக்கப்பட்டதுமாகும்.

தொடர்புகளுக்கு :077 1512730, 071 5799208

கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

(19344)(6-8)

## Shalini

herbal Beauty Care Center



**Diploma in Beauty Culture**

வவுனியாவில் முதன்முறையாக அழகுக் கலை வகுப்புக்கள் ஆரம்பம்

Threading, Facials, Treatment, Waxing, Hair Colour, Rebonding, Perming Hair Dressing, Bridal Dressing, Wedding Cake

அழகுக் கலைத்துறையில் அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் கற்பிக்கப்படும்

36 1/2 Station Road, wellawatta, Colombo

63/ 1/1 1st Cross Street, Vavuniya.
Contact: 077 4984568, 075 2672734

## பிற்போடப்பட்டுள்ளது

07.10.2012 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (இன்று) கலட்டி எச்சாட்டி மகாமாரியம்மன் மணி மண்டபத்தில் நடைபெற இருந்த

### அமரர் திருமதி அன்னம்மா நல்லையா

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் அவரது பேரனான செல்வன் பிறேம்நாத் பிரகலாதன் திடீர் மரணமெய்தியதால் பிற்போடப்பட்டுள்ளது. என்பதை பணிவுடன் அறியத்தருகின்றோம்.

8A கலட்டி அம்மன் வீதி,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 321 1230, 077 977 3343

தகவல்:
குடும்பத்தினர்

(23734)(8.14)

## DIP IN ENGLISH

ஆங்கிலத்தில் புலமை எய்துவதற்கான ஆங்கிலத்தின் நான்கு பிரிவுகளும் Reading, Writing, Speaking & Listening திறம்பட கற்பிக்கப்படும்.

Commencement: Oct. 10th.
Classes :Weekday/Weekend
Duration : 3 months
Time : Mon, Wed, Fri : 9.00 Am - 11.00 Am
Mon, Wed, Fri : 3.00 Pm - 5.00 Pm
Sat, Sun : 3.00 Pm -5.00 Pm

May apply for a uk city and guild B1 ESOL Dual certification.

## DIP IN BANKING ENGLISH

நீங்கள் வங்கியில் வேலை தேடுபவராயின் அல்லது வேலை செய்பவராயின் உங்களுக்கான ஆங்கில அறிவை மேம்படுத்துவதற்கான பயிற்சி திறம்பட வழங்கப்படும்.

Duration: 4 months

Commencement: October 10th.
Classes : Weekday/Weekend
TIME :
Mon, Wed, Fri : 11.00 Am - 1.00 Pm
Tue, Thr : 11.00 Pm - 1.00 Pm
Sat, Sun : 2.00 Pm -5.00 Pm

May apply for a uk city and guild B2 ESOL Dual certification.

## DIP IN SPOKEN ENGLISH

ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள் வழங்கப்படும். சகல மட்டத்தவருக்கும் ஏற்றவாறு வகுப்புக்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.

Duration : 3months

Commencement: October 10th.
Classes : Weekday/Weekend
TIME :
Tue,Thr : 9.00 Am - 11.00 Am
Tue,Thr : 3.00 Pm - 5.00 Pm
Sat,Sun: 12.00 Pm -2.00 Pm

May apply for a uk city and guild B1 SESOL Dual certification.

- Modern A/C lecture rooms.
- Audio Visual Equipment.
- Quality Tutorial books.
- Course fee -payable in installment.
- Qualified lecture panel.

Hot line : 0774765990.

## IELTS

Strategies and technique are taught to gain a higher score.
British council approved IELTS register center.
British council trained lecture panel.

Duration : 3months

Commencement: October 10th.
Classes : Weekday/Weekend

Time : Mon,Tue,Wed : 3.00 Pm - 5.00 Pm Sat,Sun: 11.00 Pm -1.00 Pm

**LONDON METROPOLITAN COLLEGE**
No:197, Arasady Road, Jaffna.
(Between Kantharmadam Junction & Hindu Ladies College)
Tel: 021 222 7230, 021 753 8395

## மரண அறிவித்தல்



### பிரேம்நாத் பிரகலாதன்
(கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவன்)

கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரேம்நாத் பிரகலாதன் 06.10.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பிரேம்நாத் -ஸ்ரீமதி (கமலா ஸ்ரூடியோ உரிமையாளர்) தம்பதியரின் அன்பு மகனும் அபிராமி, பகீரதி, பிரகதீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவஞானம் (கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம்) தவராஜா (வர்த்தகர் சங்கம்- கிளிநொச்சி), கலா (கட்டடத் திணைக்களம் -யாழ்ப்பாணம்), மாலா (பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை -இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்- கிளிநொச்சி) லதா ஆகியோரின் அன்பு மருமகனும் ரகுநாத் (பொறியியலாளர் -லண்டன்), கோபிநாத் (பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் - வவுனியா), தேவராணி, தாசகௌரி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.10.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் (கமலா ஸ்ரூடியோ, கிளிநொச்சி) நடைபெற்று திருநகர் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கமலா ஸ்ரூடியோ,
A9 றோட், கிளிநெச்சி.

தகவல்:
[illegible]


(23740)(9.14)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



05 பச்சை நகரமும் 2000 மீட்டர்களும்



21 இந்த விளையாட்டு வேண்டாம்....



நரகத்து முள் 03



கொலைகார டிப்பர்கள் 08



22 சிரியாவில் இரத்தம்......


# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

01

உதயன் 07 ஒக்ரோபர் 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்தெட்டு


# போரின் பின் போதை

இந்திரா


போர் முடிந்த பின்னர், நல்லிணக்கம், சகோதரத்துவம் எல்லாம் மேம்பட்டிருக்கின்றனவோ இல்லையோ போதைப் பொருள் வர்த்தகம் மட்டும் மின்னல் வேகத்தில் பெருத்திருக்கிறது என்கிறார்கள் அதிகாரிகள்.

2009 மே மாதம் போர் முடிந்ததாக அறிவிக்கப்பட்டது. அதற்குப் பின்னர் மிகப் பெரும் எண்ணிக்கையில் போதைப் பொருள்களும் அதனைக் கடத்துபவர்களும் பொலிஸாரிடமும் சுங்க அதிகாரிகளிடமும் மாட்டியுள்ளனர்.

சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்துவதில் உள்ள ஓட்டைகளும் அரசியல் பாதுகாப்புமே போதைப் பொருள் வர்த்தகத்தின் இந்தத் திடீர் அதிகரிப்புக்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

நாடு முழுவதும் அதிகரிக்கும் இந்தப் போதைப் பொருள் பிரச்சினையினால் யாழ்ப்பாணமும், கடந்த 30 வருடங்களில் இல்லாத அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் மாணவர்களையும் இளைஞர்களையும்



யாழ்ப்பாணத்தில் பிடிபட்ட 'ஹெரோயின்'

இலக்கு வைத்தே இந்த வியாபாரம் மிக வேகமாக நடக்கிறது. யாழ். நகரில் மட்டும் என்றிலாது சுன்னாகம், பருத்தித்துறை, சாவகச்சேரி போன்ற நகரப் பகுதிகளுக்கும் இப்போது இது பரவியுள்ளது.

"போதைப் பொருளை விற்பனையில் பெண்கள் பலரை ஈடுபடுத்துவதுதான் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அண்மைய விருத்தி" என்று தெரிவித்தார் இது தொடர்பில்தொடர்ந்துகவனம்செலுத்திவரும் அரச சார்பற்ற பிரதிநிதி ஒருவர். தனது விவரங்கள் வெளியிடப்படக் கூடாதுஎன்றுஅவர்வலியுறுத்தினார்.

**ஹெரோயின், கஞ்சா ஆதிக்கம்**

யாழ். நகரில் உள்ள ஐந்து சந்திப் பகுதியை போதைப் பொருள் மையமாகப் பொலிஸார் அடையாளப்படுத்துகின்றனர். இங்கிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட 5 பேர் கும்பல் ஒன்று 2011 நவம்பர் மாதம் கைது செய்யப்பட்டது.

பின்னர் சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்களிடம் இருந்து போதைப் பொருள் பெற்றுப் பயன்படுத்தினர் என்று கருதப்பட்ட மாணவர்கள் சிலரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் எச்சரிக்கை செய்யப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அது தவிர, வடபகுதியில் உள்ள நீதிமன்றங்கள் பலவற்றிலும் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட பலர் தண்டிக்கப்பட்டனர். வன்னிப் பகுதியில் இத்தகைய வழக்குகள் பல உள்ளன. கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இராணுவத்தினர் மீதான வழக்குகள் சிலவும் நீதிமன்றங்களில் உள்ளன.

"ஹெரோயின் மற்றும் கஞ்சா என்பனதான் பொதுவாக நாடு முழுவதுமே கைப்பற்றப்படும் போதைப் பொருள்களாக உள்ளன" என்று, அபாயகரமான மருந்துப் பொருள்களுக்கான தேசிய சபை தெரிவிக்கிறது.

இந்த ஆண்டு ஜூன் மாதம் வரையிலும் மட்டும் போதைப் பொருள் தொடர்புபட்ட குற்றங்களில் 19,000 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 2011 ஆம் ஆண்டில் இவ்வாறான 40,000 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்கிறார் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகன.

பொலிஸாரின் பதிவுகளின்படி 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தக் குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்படும் சந்தேகநபர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே செல்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது.

போதைப் பொருள்களை விற்கும் ஆகக் கீழ்மட்டத்தைச் சேர்ந்தவர்களை மட்டுமே பொலிஸாராலும் போதைத் தடுப்புப் பிரிவினராலும் கைது செய்ய முடிகிறது. அதற்கு மேல் அவர்களுக்கு போதைப் பொருள்களை விநியோகிப்பவர்களையோ அதனை நாட்டுக்குள் கடத்தும் பின்னணியில் இருக்கும் பெரிய புள்ளிகளையோ நெருங்க முடியவில்லை.

இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்துதான் இலங்கைக்கு போதைப் பொருள்கள் அதிகம் கடத்தப்படுகின்றன என்கிறார்கள் அபாயகரமான மருந்துப் பொருள்களுக்கான தேசிய சபை அதிகாரிகள். ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்கும் போதைப் பொருள்களைக் கடத்துவதற்கான கைமாற்றல் புள்ளியாக (ட்ரான்ஸிட் பொயின்ட்) இலங்கை மாறி வருகின்றது என்றும் அவர்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

இந்த ஆண்டின் முதல் 6 மாத காலத்துக்குள் மட்டும் கிட்டத்தட்ட 100 கோடி ரூபா பெறுமதியான போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்கிறார்கள் அதிகாரிகள்.

### சமூகத்தில் பாதிப்பு

இந்த வருடத்தின் ஆரம்பத்தில், அளவுக்கதிகமான ஹெரோயினை எடுத்துக்கொண்டதால் மாலினியின் மகன் இறந்துபோனார். கொழும்பிலிருந்து 220 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள காலியைச் சேர்ந்தவர் மாலினி.

"2010ஆம் ஆண்டு ஆரம்பத்தில் அவன் ஹெரோயினுக்கு அடிமையாகிவிட்டான்.... அவன் சாகும்போது வயது 16 மட்டும்தான். அவனுடைய இழப்பு எனது குடும்பத்தையே புரட்டிப் போட்டுவிட்டது. மகன் இறந்து போனதால் எனது கணவன் இப்போது மனநல சிகிச்சைபெறும் நோயாளியாகி விட்டார்" என்கிறார் அவர்.

தனது மகன் போன்றே பலர் இவ்வாறு போதைப் பொருளுக்கு அடிமையாகிவிட்டாலும் அது பற்றி அவர்களது பெற்றோர்கள் வெளிப்படையாகப் பேசப் பயப்படுகிறார்கள் என்கிறார் மாலினி. போதை அடிமை என்று தமது பிள்ளைகள் முத்திரை குத்தப்படுவதைப் பெற்றோர்கள் விரும்பவில்லை என்று அவர் சுட்டிக்காட்டுகிறார்.

ரஜினியின் கதை சற்று வித்தியாசமானது. அவருடைய கணவன் போதைக்கு அடிமையானவர். போதைத் தேவைக்கான பணத்தைப் பெற பாலியல் தொழிலில் ஈடுபடத் தன்னைத் தனது கணவன் நிர்ப்பந்தித்தார் என்கிறார். "அவரது போதைப் பழக்கம் நேரடியாகவே என்னைப் பாதிக்கிறது. எனது மொத்த வாழ்க்கையுமே அதனால் பாழாகிப் போய்விட்டது" என்கிறார் ரஜினி.

சட்டம் ஒழுங்கு சரிவர நடைமுறைப்படுத்தப்படாதமைதான் போதைப் பொருள் பயன்பாட்டின் அதிகரிப்புக்குக் காரணம் என்று சமூக ஆர்வலர்கள் குற்றஞ் சாட்டுகிறார்கள். கொழும்பில் இது தொடர்பில் செயற்படும் சமூக ஆர்வலரான அரவிந்த பண்டார சொல்கிறார், இலங்கையில் போதைப் பொருள் தடுப்புச் சட்டங்கள் இருந்தாலும் அரசியல் தலையீடுகள் காரணமாக அவை சரிவர நடைமுறைப் படுத்தப்படுவதில்லை என்று.



வழக்கம் போலவே பொலிஸார் அவரது குற்றச்சாட்டை மறுக்கிறார்கள். "சட்டம் சரிவர நடைமுறைப்படுத்தப் படாமையால் சில சம்பவங்கள் கைகழுவி விடப்பட்டிருக்கலாம். ஆனால் போதைப் பொருள் வர்த்தகத்தை முறியடிக்க பொலிஸாரும் ஏனைய அதிகாரிகளும் செயல்திறனுடன் பணியாற்றிக் கொண்டேதான் இருக்கிறார்கள். அண்மைக் காலங்களில் கைது செய்யப்படும் சந்தேகநபர்களின் அதிகரித்த எண்ணிக்கை அதைத்தான் காட்டுகிறது" என்று, தனது பெயரைக் குறிப்பிட விரும்பாத பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

ஹெரோயின் அல்லது மோர்பின் அல்லது ஒபியம் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் ஒருவருக்கு தூக்குத் தண்டனை வரையும் விதிப்பதற்கு இலங்கைச் சட்டத்தில் இடமிருக்கிறது. 1980களின் நடுப்பகுதியில் உருவாக்கப்பட்டது இந்தச் சட்டம்.

பொலிஸார் என்னதான் சொன்னாலும் போதைப் பொருள் வர்த்தகம் மிகத் தாராளமாகத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது என்று சமூக ஆர்வலர்களும் தொண்டு நிறுவனங்களின் பணியாளர்களும் கூறுகிறார்கள்.

### போதையிலிருந்து மீளும் சிகிச்சை

போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்பதற்கான சிகிச்சைகள் அரசாலும் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் வழங்கப்பட்டுவருகின்றன என்று அபாயகரமான மருந்துப் பொருள்களுக்கான தேசிய சபை கூறுகின்றது. 2007 முதல் பலருக்கு கட்டாய சிகிச்சையும் வழங்கப்பட்டு வருகின்றது.

அபாயகரமான மருந்துப் பொருள்களுக்கான தேசிய சபை தனது சார்பில் வதிவிட சிகிச்சை நிலையங்களையும் வெளிக்கள நிகழ்வுகளையும் போதைத் தடுப்பு தொடர்பில் நடத்தி வருகின்றது. கொழும்பு, கண்டி, காலி, ஊரபொல ஆகிய இடங்களிலேயே இப்போது அந்த சிகிச்சை நிலையங்கள் உள்ளன.

உளவளத்துணை உட்பட சிகிச்சைகள் இங்கு வழங்கப்படுகின்றன.

அரசிடம் இருக்கும் ஆகப் பிந்திய தரவுகளின்படி 2009ஆம் ஆண்டு இலங்கை முழுவதும் 3,000 பேருக்கு போதையிலிருந்து மீள்வதற்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் பெரும்பாலானவர்கள் அரசு நடத்தும் நிலையங்களின் ஊடாக வந்தவர்கள் (2,387). மேலும் சிலர் சிறைகளில் இருந்து வந்தவர்கள் (522). 65 பேர் அரச சார்பற்ற அமைப்புக்கள் மூலமாக வந்தவர்கள். ஆனால், போதிய ஆளணி இல்லாமை, வளங்கள் போதாமை என்பன காரணமாக இந்தச் சிகிச்சைகளால் வினைத்திறனான பயன் கிடைப்பதில்லை என்று சூரிய பண்டார குற்றஞ்சாட்டுகிறார்.

### தடுப்பு இல்லை

ஐக்கிய நாடுகள் சபை இந்த ஆண்டு வெளியிட்ட உலக போதைப் பொருள் அறிக்கையின்படி, கிழக்கு மற்றும் தெற்கு ஆசியாவில் போதைப் பொருகளைக் கைப்பற்றுவதில் சிறியதொரு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இந்தோனேஷியா, லாவோஸ், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளில் குறிப்பாக இது அவதானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கெல்லாம் ஹெரோயினுக்கான சந்தை அதிகரிப்பதையே இது வெளிப்படுத்துகிறது எனவும் அறிக்கை கூறுகிறது.

அதிகாரிகள் என்னதான் நடவடிக்கை எடுத்தாலும் அது போதியதாக இல்லை என்பதையே இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. அதற்கான காரணம், போதைப் பொருளை நாட்டுக்குள் எடுத்து வந்து வர்த்தகத்தில் ஈடுபடுத்தும் முக்கிய புள்ளிகள் கைது செய்யப்படாததும் அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுக்கப்படாததும்தான்.

இலங்கைக்குள் போதைப் பொருள் கடத்தப்படுவதில் கடல் மார்க்கங்களாக மேற்கில் மன்னாரும் வடக்கில் மாதகல் கரையோரமும் பயன்படுத்தப்படுகின்றன என்கிறார்கள் அதிகாரிகள். இதனால் கடற்படையினரின் ரோந்து இப்பகுதிகளில் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஆனால், இந்தக் கடல் மார்க்கங்கள் ஊடாகக் கைது செய்யப்பட்டவர்களைவிட விமானம் நிலையம் ஊடாக வரும்போதும் செல்லும்போதும் போதைப் பொருள்களுடன் கைது செய்யப்பட்டவர்களே அதிகம் என்கின்றன புள்ளிவிவரங்கள்.

# வெட்டப்படுகின்றன; விதைக்கப்படவில்லை

■ கறுப்பி



பூமியின் மூன்றில் ஒரு பங்கு காடுகளாக இருக்க வேண்டும் என்பது இயற்கையின் விதி. மனிதனின் சுவாசத்துக்கு இயற்கையின் பசுமைத் தன்மைக்கும் மண் அரிப்பைத் தடுப்பதற்கும் மழைவீழ்ச்சி காலநிலைகளைச் சீர்செய்வதற்கும் காடுகளில் உள்ள மரங்களுக்கே சக்தி உண்டு. இவற்றை நிர்ணயிப்பதும் காடுகள்.

இன்று அதிக வெப்பம், வறட்சி, காலநிலைகளின் மாற்றங்களுக்கு காடுகள் அழிக்கப்படுவதோடு வீடுகளில் உள்ள மரங்களும் அதிகமாக வெட்டப்படுவதே காரணமாகிறது.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த வரையில் காடுகள் என்று அடையாளப்படுத்துவதற்கு எதுவும் இல்லை. பராமரிப்பு அற்ற காணிகளில் உள்ள மரங்கள் வீடுகளில் உள்ள மரங்கள், தெருவோரங்களில் உள்ள மரங்கள் மற்றும் கரையோரங்களில் காணப்படும் கண்டல் மரங்கள் மட்டும்தான்.

இந்த கண்டல் மரங்களைக் காடுகள் என்று எண்ணுகின்றனர். இவற்றைக் காடுகள் என்று முக்கியப் படுத்துகின்றனர். இவை அலை ஆத்திக்காடு என்று அழைக்கப்படுகின்றன.

தென்பகுதிகள், மலைப் பிரதேசங்கள் ஆகியவற்றில் உள்ளதை ஈர வலயக்காடுகள் என்றும் வட பகுதியில் உள்ளதை உலர் வலயக்காடுகள் என்றும் கூறப்படுகிறது.

இந்த உலர் வலயப் பகுதியில் யாழ்.மாவட்டமும் உள்ளடங்குகிறது. இங்கு மா, பலா, வேம்பு போன்ற பயன்தரு மரங்களும், நிழல் தரு மரங்களும் அதிகமாகக் காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் வீடுகளிலேயே காணப்படுகின்றன.

தெருவோரங்களில் வைக்கப்பட்ட பெரும்பாலான மரங்கள் இன்று இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. இவை அபிவிருத்தியின் தேவைகளுக்காக அகற்றப்பட்டுவிட்டன.

வீடுகளில் உள்ள மரங்களை தங்களது தேவைகருதி வெட்டிப் பயன்படுத்துகின்றனர். இந்த மரங்களுக்கான மாற்றீடாக மரங்கள் நடப்படுகின்றனவா என்றால் இல்லை.

தற்போது வீதி அகலிப்பு அபிவிருத்திக்காக பெரும் தொகையான மரங்கள் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டன. இவை பல நூற்றாண்டுகால பழைமை வாய்ந்த மரங்களாகவும் ஊர் கிராமங்களின் அடையாளச் சின்னமாகவும் சித்திரித்து இருந்தன. இந்த அடையாளங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. கைதடி தொடக்கம் மானிப்பாய் வரையான வீதிகளில் 128 மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. இது சீ.பி.5 திட்டத்தின் கீழ் உள்ளடங்குகின்றன. அதேபோன்று சீ.பி.4 திட்டத்தின்கீழ் நாவற்குழி தொடக்கம் சங்குப்பிட்டி வரையான வீதியில் 53 மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. இவற்றில் பூவரசு, நாவல், பனை ஆகியனவும் அழிந்து போயுள்ளன.

வெட்டப்பட்ட மரங்களுக்கு மாற்றீடாக சிலமரங்கள் நடப்படவுள்ளன. அவை மண்ணின் தன்மைகளுக்கு ஏற்ப அமையும் என யாழ். மாவட்ட வட்டவன அதிகாரி ஆர்.ரவிராஜ் தெரிவித்தார். கைதடி மானிப்பாய் வீதிகளில் அழிக்கப்பட்ட 128 மரங்களுக்குப் பதிலாக அங்கு சவுக்கு மரங்கள் நடுவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த மண்வளத்துக்கு [illegible] சவுக்கு மரங்கள் நடுவதே உசந்ததாகும்.

வடமராட்சி பகுதிகளில் வீதிகளின் இரு பக்கங்களிலும் பனை நடுவதைத் திட்டம் உள்ளது. இதற்காக பனை அபிவிருத்தி சபையிடம் நாற்றுக்களைக் கொள்வனவு செய்வதற்குக் கோரியுள்ளோம். பனை நாற்று நடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம் எனவும் கூறப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்துபட்ட பிரதேசங்களில் நெருக்கமான பல மரங்கள் உள்ளன. இவை போரால் அழிக்கப்பட்டதைத் தவிர இராணுவத்தினர் தனது அரண்களை அமைப்பதற்காக பனை உட்பட பல மரங்களை தேவைக்கு அதிகமாகவே வெட்டிச் சாய்த்திருக்கின்றனர்.

பரந்தன் தொடக்கம் ஆனையிறவு வீதிவரையான பகுதிகளை வீதி அபிவிருத்தி சபையினரே அபிவிருத்தி செய்து பரந்தன் தொடக்கம் ஆனையிறவு வரையான வெட்டப்பட்ட மரங்களுக்கு பதிலாக தேக்கு, சமண்டலை, திருக்கொண்டல், புளி ஆகிய மரங்களை நடவுள்ளோம் என கிளிநொச்சி மாவட்ட வட்டவன அதிகாரி எஸ்.பிரபாகரன் தெரிவித்தார்.

சட்டவிரோதமான மரங்கள் வெட்டுதல், மரங்கள் கடத்துதல் ஆகியன கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகமாக அரங்கேறி வருகின்றன.

தற்போது விழிப்புணர்வோடு இருப்பதால் ஓரளவு குறைந்துள்ளது. என்றாலும் மறைமுகமாக அரங்கேறிய வண்ணமே உள்ளது.

அரச அதிபர் பரிந்துரை செய்தால் மட்டுமே வெளி மாவட்டங்களுக்கு மரங்களைக் கொண்டுசெல்ல அனுமதிப்போம். அவற்றைவிட மீள் குடியமர்ந்துள்ள மக்களுக்கு இந்தியன் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வீடுகளுக்கு அதிகளவான மரங்கள் எடுக்கப்படுகின்றன. இவற்றை தடைசெய்ய முடியாத நிலையில் உள்ளோம்.

ஒதுக்கப்பட்ட காணிகளில், ஏனைய அரச காணிகளில் சட்டவிரோதமாக மரங்கள் வெட்டப்படுமாயின் தண்டனை, அபராதம் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

யாழ். மாவட்டம், கிளிநொச்சி மாவட்டங்களில் வைக்கப்படும் புதிய மரங்கள், நாற்றுகள் அவற்றுக்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளில் வளர்க்கப்பட்டு வருகின்றன என மாவட்ட வட்டவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெட்டப்படும் மரங்கள் யாவும் பெறுமதி வாய்ந்தவை. இதற்குப் பதிலாக மரங்கள் வைக்கப்பட்டால் நிழல் தருவதாகவும் வருமானம் ஈட்டக்கூடியதாகவும் அமையும்.

அத்தோடு மரங்களுக்கு பெயர் சூட்டும்போது தவறான பெயர்களை இடுகின்றனர். இது எதிர்கால சந்ததியினருக்குப் பாதிப்பாக அமைந்துவிடும். இதனால் பெயர்களை இனங்கண்டு சூட்டுதல் வேண்டும் எனவும் தெரிவித்தார். வருடா வருடம் பலர் மரம் நடுவதாக அறிவித்து விளம்பரப்படுத்தி பெரியளவில் செய்வார்கள். இது தமக்கான விளம்பரமே தவிர சூழலின்மீது கொண்டுள்ள அக்கறை அல்ல.அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்கள் ஏட்டளவில் மட்டுமே சூழலைப் பாதுகாப்போம் என்று கூறுகின்றன. நன்கு திட்டமிட்டு மரங்களை நட வேண்டும். அரசியல் வாதிகள் போன்று ஒருநாள் மட்டுமே நட்டு மறுநாள் அது ஆட்டுக்கோ, மாட்டுக்கோ இரையாகாமல் ஒரு நல்ல பருவம் வரும்வரை பாதுகாக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நரகத்து முள்



ஔண்யன்

இனம், சமயம், தேசிய இனம் என்பன போன்ற குறிப்பட்ட சமூகக் குழுவொன்றில் உறுப்பாண்மை, அரசியல் கருத்து என்பவை காரணமாகக் குற்றம் சாட்டப்பட்டவர்களும், தங்களுடைய நாட்டுக்கு அல்லது சொந்த இடத்துக்கு வெளியே இருப்பவர்களும்,தம்முடைய தாய்நாட்டினுடைய பாதுகாப்பைப் பெற முடியாத அல்லது பயம் காரணமாக அவ்வாறான பாதுகாப்பை நாட விரும்பாதவர்களையும் அகதிகள் அல்லது ஏதிலிகள் என்ற ஒற்றைச் சொல்லுக்குள் அடக்குகிறது 1951 ஆம் ஆண்டின் அகதிகளின் நிலை தொடர்பான ஐக்கிய நாடுகள் உடன்பாடு.

அகதி என்ற கருத்துரு, மேற்படி உடன்பாட்டின் இணைப்புக்கள் மூலமும், ஆபரிக்காவிலும், லத்தீன் அமெரிக்காவிலும் நடைபெற்ற பிரதேச மாநாடுகளிலும் விரிவாக்கம் பெற்றது. இதனால், சொந்த நாட்டில் இடப்பெறும் போர் அல்லது வேறு வன்முறைகள் காரணமாக நாட்டை விட்டு வெளியேறுபவர்களும் அகதிகள் என்ற விடயம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது உலகப் போரைத் தொடர்ந்து, கிழக்கு ஐரோப்பாவில் இருந்து ஏராளமானவர்கள் வெளியேறியதைத் தொடர்ந்தே அகதிகள் ஒரு சட்டபூர்வமான குழுவாக வரையறுக்கப்பட்டனர். அகதிகள் பாதுகாப்புத் தொடர்பான ஒருங்கிணைப்பு வேலைகளைச் செய்வது, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையம் (யு.என்.எச்.சீ.ஆர்) ஆகும். இந்த நிறுவனம் உலகிலுள்ள மொத்த அகதிகள் தொகையை 8.4 மில்லியன் எனக் கணக்கிடுள்ளது. ஐக்கிய அமெரிக்க அகதிகள் மற்றும் குடிவருவோருக்கான குழு உலகின் மொத்த அகதிகள் தொகை 12,019,700 என்கிறது. அத்துடன் உள்நாட்டிலேயே அகதியானோர் உட்பட போரினால் இடம்பெயர்ந்த மொத்த அகதிகள் 34,000,000 எனவும் இக்குழு மதிப்பட்டுள்ளது.

★ ★ ★

அகதிகள் உற்பத்தியில் இலங்கை மற்றைய நாடுகளுக்கு எந்தவிதத்திலும் சளைத்ததல்ல. மூன்று தசாப்தங்களாக அகதிகள் உற்பத்தியில் உலகில் இலங்கையும் முன்னணி பெற்றிருந்தது. பேருருக் கொண்டு போர் உருண்டு வரும்போதெல்லாம் தம்மை அதிலிருந்து காத்துக்கொள்வதற்காக மக்கள் முப்பது வருடங்களாக ஓடிக்கொண்டே இருந்தார்கள். இடையிடையே தற்காலிகமாக, போர் இளைப்பாறும் தருணங்களில் தம்முடைய வாழ்வை மீளக்கட்டியெழுப்ப நினைப்பர் இந்த மக்கள். ஆனாலும் அதற்குள் போர் சோம்பல் முறித்துக்கொண்டு மீண்டும் மூர்க்கத்தோடு தன் முகத்தை காட்டத் தொடங்கிவிடும். மணல்வீடுகள் போல எல்லாக் கனவுகளும் சரிந்து வீழ, எஞ்சியிருக்கும் கனவுகளைச் சுமந்தவாறு தம்மிடம் விட்டு இன்னொரு இடம்தேடி அலையத்தொடங்குவர். போர் தின்ற வாழ்வின் எச்சங்களாக அடையாளப்படுத்தப்படும் அகதிகள் சொந்த இடம் மீளும் வரை, அது பற்றிய ஏக்கங்களுடனேயே ஊரின் திசை பார்த்து, விடிவின் நாள் பார்த்துக் காத்திருப்பர். "இடம்பெயர்ந்து அமிர்தத்தைக் குடிச்சாலும் ஊரில பச்சத் தண்ணியைக் குடிக்கிற மாதிரி வராது'' அகதிகளின் வாய்கள் இந்த வாசகத்தை உச்சரிப்பதற்கு மறப்பதில்லை.

முன்னெரெல்லாம் இடம்பெயர்ந்த ஈழஅகதிகள், அதிகாலைகளை அதிகம் நேசிப்பர். ஏனெனில் அநேகமாக அந்தநேரத்திலேயே போர் விழுங்கிய பூமியை மீட்கும் புதல்வர்கள் தம்கைவரிசையைக் காட்டுவதுண்டு. எந்தவேட்டுச் சத்தங்கள் மக்களை அகதிகள் ஆக்கினவோ, அதே வேட்டொலிகளே அந்த அகதி வாழ்வுக்கு முற்றுப் புள்ளியும் வைத்தன. மண் விழுங்க வந்தவர்கள் மண்ணால் விழுங்கப்பட்டுக் கொண்டிருக்க, உயிர் கொண்டோடும் மக்களை துரத்தித் துரத்தி குருதி குடிக்க வந்த இரும்புவல்லூறுகளில் ஓரிரண்டு குடல் சிதறி வீழ்ந்திருக்கும். அத்தனை நாள் அவலங்களுக்கும் இந்த வெற்றிகளே ஒத்தடம் கொடுத்தன. மீளெழும் வல்லமையை அளித்தன.

இனி எங்களுக்கான வேட்டொலிகள் கேட்கப் போவதில்லை. எல்லா வேட்டொலிகளும் அதிகாரத்தினுடைய தாகவே இருக்கின்றன. இப்போதெல்லாம் அதிகாலைகள் பற்றி அகதிகள் யாரும் அக்கறை கொள்வதில்லை. நரகத்து முள்ளாக எல்லாப்பக்கங்களிலும் அகதி என்ற பதம் அவர்களை வலிகொள்ளசெய்து கொண்டே இருக்கப் போகின்றன.

★ ★ ★

"போர் முடிவுக்கு வந்தபோது எங்களுடைய வெற்றியை ஜீரணித்துக் கொள்ளமுடியாதவர்கள், அகதிகள் பிரச்சினையைப் பெரிதாக தூக்கிப்பிடித்தனர். இலட்சணக் கணக்கான அகதிகளை நிரந்தரமாக நலன்புரி நிலையங்களுக்குள்ளேயே இலங்கை அரசு அடைத்து வைத்திருக்கிறது, அந்த நிலையே தொடர்ந்து நீடிக்கும். என்றெல்லாம் தவறான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் இன்று அந்தக் கருத்துக்களை தவிடுபொடியாக்கி, அகதிகள் அனைவரையும் அரசு மீளக் குடியமர்த்திவிட்டது. இப்போது இலங்கையில் அகதி என்று எவருமே இல்லை'' கிளிநொச்சி ஜெயந்திநகரில் சிறுவர் இல்லமொன்றை திறந்துவைத்தபோது, நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ , உலகுக்குச் சொன்ன செய்தியே இது.

இலங்கை நல்லிணக்கம் தொடர்பாக அர்ப்பணிப்புடன் செயற்படவில்லை என்று அமெரிக்கா அண்மைக் காலமாக தொடர்ச்சியாகக் கூறிவரும் நிலையிலேயே கோத்தபாயவின் இந்தப் பிரகடனம் வெளியாகியிருக்கிறது.

இலங்கையில் பிறந்த எல்லோரும் ஒரு விடயத்தை அடிக்கடி அவதானிக்க முடியும். அரசு ஏதாவது கனவு கண்டுவிட்டு தான் நினைத்தபாட்டுக்கு எரிபொருள் விலையை அடிக்கடி விண்ணுக்கு பறக்கவிட்டு புளகாங்கிதம் அடையும். இவ்வாறு எரிபொருள் விலை உயரப்போவதை மோப்பம் பிடித்துவிட்டால், மறுநொடியே அநேக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இங்கு பெற்றோல் இல்லை என்ற அறிவிப்பு அவசரத்தனத்தோடு பல்லிளிக்கும். அந்த நிலையங்களின் எரிபொருள் தாங்கிகளில் பெற்றோலும், டீசலும், மண்ணெண்ணெயும் நிரம்பி வழிந்தாலும்கூட, ஒரு துளி கூட இல்லை. நாளைக்கு த்தான் பவுஸர் வரும் என்று அதன் உரிமையாளர்கள் சாவதானமாக சொல்வார்கள். பின்னர் விலை உயர்ந்த அறிவிப்பு உத்தியோகபூர்வமாக வந்த பின்னே அந்த இல்லை என்ற அறிவிப்பு காணாமல் போகும். உரிமையாளரின் பதுக்கல், அவருக்கு பெரும் இலாபத்தை ஈட்டிக்கொடுக்கும்.

அதையே பாதுகாப்புச் செயலரின் பிரகடனமும் ஞாபகமூட்டுகிறது.

ஒக்ரோபரில் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் அகதிகள் விடயத்தையும், மீள்குடியேற்றத்தில் அரசு காட்டிய மெத்தனத்தையும் முன்னிறுத்தியே கொண்டு வரப்போவதை அறிந்து கொண்டதாலேயே இப்படி ஒரு திடீர் அகதி ஒழிப்பில் அரசு இறங்கியது. தன் கரங்களில் இப்போது எந்தக்கறைகளும் இல்லை என்று காட்டுவதற்கே இவ்வாறு இங்கு அகதிகள் இல்லை என்ற பிரகடனத்தையும் அது வெளியிட்டிருந்தது.

ஆனால் அந்தப் பிரகடனத்தை செய்வதற்காக நலன்புரி நிலையங்களில் ஓரளவுக்காவது, மூச்சுவிடக்கூடிய நிலையில் இருந்த மக்களை வலுக்கட்டாயமாக அங்கிருந்து வெளியேற்றி, அடர்காட்டுக்குள் இறக்கி விட்டுள்ளது அரசு. முகாம்களுக்கு மூடுவிழாச் செய்வதற்காக மக்களின் சந்தோசத்துக்கும் மூடுவிழா செய்யப்பட்டுள்ளது. கொஞ்சமாவது மிஞ்சியிருந்த மலர்வை பிடுங்கியெறிந்து விட்டு, கேப்பாபிலவு மக்களை இதுதான் உங்களுக்கு இனி சொந்த இடம் என்று சொல்வது போல அவர்களின் வாழ்வியலை அவலத்துக்குள்ளாக்கும் இடங்களில் பதியமிட்டுள்ளது அதிகாரம். கேப்பாபிலவு மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர விடாமல் எங்கோ ஒரு காட்டுக்குள் தற்காலிகமாக இருத்திவிட்டு, அகதிகள் அனைவரையும் மீள்குடியேற்றிவிட்டோம் என்று சொல்வது மிகக்கீழ்த்தரமான ஓர் அரசியல்.


25 வருடங்களுக்கும் மேலாக சொந்த இடங்களை உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் பறிகொடுத்து விட்டு, எங்கள் நிலம் மீளுமா? அந்தச் செம் பாட்டு மண்ணில் [illegible] செய்யமுடி[illegible] வீடுகளிலும் முகாம்களிலும் நிரந்தர அகதி களாக இருக்கும் வலி.வடக்கு மக்களையும் அரசு மறந்துவிட்டது. அதனால்தான் ஆயிரக்கணக்கான அகதிகள் இருப்பதை மறந்து விட்டு வாய்கூசாமல் அகதிகள் இல்லை என்று பொய் கூறியிருக்கிறது. தமிழ் மக்களைப் போல , யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறிய முஸ்லிம் மக்களில் பலரும் இன்னமும் அகதிகளாவே புத்தளம் போன்ற பகுதிகளில் இருக்கிறார்கள்.


தமிழ் மக்களைப் போல அவர்களின் மீள்குடியமர்வும் அவசியமானதே. இதைவிட உயிர் அச்சுறுத்தல் காரணமாக இலங்கையில் இருந்து இன்னமும் லட்சக்கணக்கானோர் வெளிநாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். இப்போதும் தஞ்சமடைந்து வருகின்றனர். இலங்கையர் எவரும் இப்போது அகதி இல்லை என்று சொல்வதன் மூலம் புலம்பெயர்ந்தோரைத் தன் குடிமக்கள் இல்லை என்று இலங்கை கைகழுவிட்டதா? இது போல நிறையக்கேள்விகள் எழுகின்றன.

ஆனாலும் அகதிகள் எல்லோரும் மீளகடகுடியமர்த்தப்பட்டு விட்டனர் என்ற இந்தப் பிரகடனத்தின் மூலம் ஒரு நன்மையும் கிடைக்கவே செய்திருக்கிறது. இவர்கள் முன்பு இங்கிருந்து அகதிகளாக வெளியேறியோர் தான் என்று எந்தவொரு சிங்க ளக்குடும்பங்களையும் இனி மேல் தமிழர் பகுதிகளுக்குள் அரசு குடியமர்த்த முடியாது. ஏனெனில் எல்லோரும் சொந்த இடங்களுக்கு திரும்ப விட்டதாக அறிவித்த பின்னர், இவ்வாறு செய்வது அப்பட்டமான ஆக்கிரமிப்பு என்பதை உலகம் வெகு இலகுவாகவே கண்டுபிடித்து விடும்.

எப்போதும் அரசின் அரியணையில் ஆட்சியாளர்கள் நிம்மதியாக இருக்கமுடியாமல் உறுத்திக் கொண்டிருந்த நரகத்து முள்ளான அகதிகள் பிரச்சி னையை இல்லாது செய்துவிட் டதாக அரசு கூறிகொண்ட போதி லும், இன்னமும் கூர்மையோடு அந்த முள் குத்துவதற்கே காத்திருக்கிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இடுப்புத் துணியையும் கழற்றிக் கொடுக்கும் சரணடைவு அரசியல்

■ சந்திரசேகர ஆஷாத்

ஞாயிறு காரம்

ஏற்கனவே தன் மேலாடைகள் அனைத்தையும் பறிகொடுத்துவிட்டு இடுப்பில் ஒரு சிறுதுணியை மட்டும் கட்டிக் கொண்டு நிற்கையில், அருகில் நிற்கும் ஒருவனிடம் அதையும் கழற்றிக் கொடுத்து விட்டு அப்படிக் கொடுப்பதால் நட்டம் எதுவும் வந்து விடப் போவதில்லை எனக் கூறினால் எப்படி இருக்கும். அடுத்த கட்டமாக மானத்தை மறைக்கும் கடைசி உள்ளாடையையும் கழற்றிக் கொடுத்து விட்டு நிர்வாணம் பற்றிக் கவலைப்படாமல் அதற்காகப் பெருமைப்படும் நிலையும்கூட ஏற்படலாம்.

தற்சமயம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலை இப்படித்தான் தோன்றுகின்றது. ஆனால் இங்கு ஒரு படிமேலே போய் தனது இடுப்புத் துணியை மட்டுமன்றித் தனது சகோதரனின் இடுப்புத் துணியையும் கழற்றிக் கொடுக்கும் கைங்கரியத்தை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிறைவேற்றியுள்ளது. ஏற்கனவே வடக்கு, கிழக்கு மாகாணங்கள் 13 ஆவது அரசமைப்புச் சட்டத்தின் மூலம் ஒரே மாகாண சபையாக அமைக்கப்பட்டது. ஆனால் அது ஓர் உயர் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் வடக்கு, கிழக்கு என இரு மாகாண சபைகளாகப் பிரிக்கப்பட்டது. அது மாகாண சபைக்கு விழுந்த முதலாவது அடி.

அடுத்த 18ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாண சபைக்கான நிர்வாக சேவை அதிகாரம், பொலிஸ் அதிகாரம் என்பன பறிக்கப்பட்டன.

அடுத்து மாகாண சபைகளுக்கு உள்ளூராட்சி சபைகளின் மீதான அதிகாரத்தைப் பறித்தெடுக்க நாடாளுமன்றத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் மாகாண சபைக்குரிய அதிகாரங்கள் மத்திய அரசுக்கு மாற்றப்படும் போது அரசமைப்பின் 154 ஏ 3 பிரிவின் படி சகல மாகாண சபைகளினதும் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். தென்னிலங்கையிலுள்ள ஒரு மாகாண சபை அதிகாரத்தை மறுத்ததால் அந்தச் சட்டம் நிறைவேற்றப்படவில்லை. கிழக்கு மாகாண சபை முதலில் அதை எதிர்த்த போதும் தமிழ் முதலமைச்சர் சந்திரகாந்தனைத் தலைமையாகக் கொண்டிருந்தும் அதை அது கடைசியில் ஏற்றுக் கொண்டது. தனக்குள்ள அதிகாரத்தைப் பறிகொடுக்கத்தானே அங்கீகாரம் வழங்கித் தன் அடிவருடித்தனத்தை வெளிப்படுத்தினார் பிள்ளையான்.

இப்போது மாகாண சபைகளின் கீழ் இயங்கி வரும் சமுர்த்தி நிறுவனங்களை திவிநெகும திட்டத்தின் கீழ் மத்திய அரசு பறித்தெடுக்க நாடாளுமன்றத்தில் சட்டமூலம் கொண்டு வரப்பட்டது. ஆனால் அரசமைப்பின்படி குறைந்தது ஆறு மாகாண சபைகளால் அங்கீகரிக்கப்பட வேண்டும். வடக்கு மாகாணம் தவிர்ந்த அவற்றில் எட்டு மாகாண சபைகளும் அதற்கு அங்கீகாரம் வழங்கிவிட்டன. அவற்றில் ஏழு மாகாணங்களும் சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டவை. எப்போதும் சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளே மத்தியில் ஆட்சியில் இருக்குமாதலால் அவர்களைப் பொறுத்தவரை அதிகாரம் மத்தியிலோ அல்லது மாகாணங்களிலோ இருப்பதில் பெரிய வித்தியாசம் எதுவும் இருக்கப் போவதில்லை.

ஆனால் கிழக்கு மாகாணம் அப்படியல்ல. தமிழ் பேசும் மக்களாகிய தமிழர்களும் முஸ்லிம்களும் பெரும்பான்மையாக வாழும் பாரம்பரிய பூமி. மாகாண சபைகள் இலங்கை இனப்பிரச்சினைக்கு நியாயமான ஒரு தீர்வைக் கொண்டிராத போதிலும்கூட இருக்கும் சில குறைந்த பட்ச அதிகாரங்களையும் படிப்படியாகப் பறிகொடுப்பது ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ் பேசும் மக்கள் தங்கள் பாரம்பரிய பூமியில் அடிமைகளாக வாழும் ஒரு நிலைமையே ஏற்படும். கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளுக்கு முடிவெடுக்கும் அதிகாரம் தென்னிலங்கைச் சிங்கள ஆட்சிப்பீடத்தின் கைகளிலேயே முழுமையாகப் போய்விடும்.

15அங்கத்தவர்களை மட்டுமே கிழக்கு மாகாண சபையில் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியால் நிச்சயமாக 'திவிநெகும' திட்டத்தை அங்கிகரித்து இருக்க முடியாது. எனவே அது அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் 7 உறுப்பினர்களின் ஆதரவுடன் அதை நிறைவேற்றிவிட்டது.

அதாவது கிழக்கு மாகாண சபையின் அதிகாரங்களில் ஒரு பகுதியைப் பறிப்பதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது முழுமையான ஆதவை வழங்கியுள்ளது. இனி கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் சமுர்த்தி வேலைத் திட்டங்களை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முழுமையாகக் கொழும்பு அதிகாரபீடத்திடம் ஒப்படைத்ததன் மூலம் மாகாண சபையை மேலும் பலவீனப்படுத்திவிட்டது.

அதில் நாம் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்ட வுடன் மத்திய அரசை எதிர்த்தவர்களே மதியத்தின் பின்பு ஆதரிக்கத் தொடங்கிவிட்டனர். அங்குதான் இவர்கள் மிரட்டப்பட்டார்களா என்ற கேள்வி எழுகிறது. சில மிரட்டல்களுக்கு அஞ்சி ஓர் அமைப்புதான் தலைமை தாங்கும் மக்களின் உரிமைகளைப் பறிகொடுக்கிறார்கள் என்றால் இவர்களால் தொடர்ந்து அந்தச் சமூகத்துக்குத் தலைமை கொடுக்க முடியுமா? பெரும்பான்மை இனக் கட்சிகளின் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த முஸ்லிம்களை மறைந்த தலைவர் அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கி தனித்துவமான சக்தியாக வெளிப்படுத்தினார். அவர் ஆட்சியில் பங்கு வகித்தபோதும் அமைச்சர் பதவி வகித்த போதும், முஸ்லிம் மக்களினதும் தமிழ் மக்களினதும் நலன்களின் அடிப்படையிலேயே அவரின் ஒவ்வொரு செயல்களும் அமைந்திருந்தன. அவர் அதிகாரப்பீடங்களுக்கு அடி பணிந்து போனதில்லை; முஸ்லிம் மக்களின் தனித்துவத்தைப் பேணத் தவறியதில்லை.

முஸ்லிம் மக்களின் தனித்துவமான தலைமை சக்தியாக விளங்கிய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சுயநலவாதிகளாலும் பதவிவெறியர்களாலும் பல துண்டுகளாக உடைக்கப்பட்டது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தன் பலத்தை இழந்துவிட்ட போதிலும் முஸ்லிம் மக்கள் தங்கள் தலைமை சக்தியாக அதையே நம்பி வந்தனர். ஆனால் முஸ்லிம் காங்கிரஸின் அண்மைக்கால நடவடிக்கைகள் அந்த நம்பிக்கையைச் சிதறடிக்கும் வகையில் அமைந்திருப்பது கவலைக்குரியதாகும்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சில தேவைகள், நெருக்கடிகள் காரணமாக அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றிருக்கலாம். ஆட்சியில் பங்கும் அமைச்சர் பதவியும் ஆட்சியாளர்களின் நோக்கத்தை முஸ்லிம் மக்கள் மேல் திணிக்கவா அல்லது முஸ்லிம் மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காகவா என்ற கேள்வி எழும் நிலை உருவாகியுள்ளது.

ஏனெனில் கிழக்கு மாகாண ஆட்சியதிகாரத்தைத் தமிழ் முஸ்லிம் மக்களின் கைகளிலிருந்து பறித்தெடுத்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கைகளில் கொடுத்தற்கும் பொறுப்பு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலமைச்சர் பதவியையும் வேறு இரு அமைச்சுப் பதவிகளையும் முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்க முன் வந்தபோதும் அதை நிராகரித்து, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைக் கிழக்கின் ஆட்சிப் பீடத்தில் ஏற்றி வெறும் இரு மாகாண அமைச்சுப் பதவிகளையே அது பெற்றுக்கொண்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கை முஸ்லிம் காங்கிரஸால் ஏற்கப்பட்டிருந்தால் இன்று கிழக்கு மாகாண சபையில் தமிழ், முஸ்லிம் மக்களின் ஆட்சியதிகாரம் நிலவியிருக்கும். ஆனால் இன்று கிழக்கு மாகாண சபை மத்திய அரசின் ஒரு கிளையமைப்பாக மாறிவிட்டது. இந்த வரலாற்றுத் தவறு மூலம் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் மக்களுக்கு மட்டுமன்றி தமிழ் மக்களுக்கும் பெரும் பின்னடைவை ஏற்படுத்திவிட்டது என்றால் மிகையாகாது.

கடந்த மாகாண சபைத் தேர்தலில் அரசுக்கு ஆதரவான முஸ்லிம் மக்கள், வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்ட அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு வாக்களித்தனர். ஆனால் அரசுக்கு எதிரான முஸ்லிம் மக்கள் முஸ்லிம் காங்கிரஸுக்கே வாக்களித்தனர். முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் பிரசாரம் அரசுக்கு எதிராகவே அமைந்திருந்தது. அதேபோல் அரசுடன் இணைந்த கட்சிகளும் முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிரான பிரசாரங்களையே மேற்கொண்டன.

முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடாமல் இருந்திருந்தால் அல்லது வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டிருந்தால் அரசுக்கு எதிரான முஸ்லிம்களின் ஒரு பகுதியினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்திருப்பார்கள் மறு பகுதியினர் எவருக்குமே வாக்களித்திருக்கமாட்டார்கள்.

ஆனால் முஸ்லிம் காங்கிரஸின் சாதனை அரசுக்கெதிரான முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற்றுக் கிடைத்த வெற்றியைக் கிழக்கு மாகாண சபையில் அரசதரப்பு ஆட்சியமைக்கக் கையளித்துவிட்டது. இது ஒரு மிகப்பெரும் ஏமாற்று என்றே சொல்ல வேண்டும். அதைவிட கிழக்கு முஸ்லிம்களின் பாரம்பரிய தாயகபூமி என்பதை விட்டுக் கொடுத்தமை ஒரு பெரும் சரணடைவுமாகும்.

கிழக்கு மாகாண சபை ஆட்சியை தென்னிலங்கைப் பெரும்பான்மை சமூகத்திடம் கையளித்த முஸ்லிம் காங்கிரஸ் தற்சமயம் திவிநெகும சட்டத்தை ஆதரித்ததன் மூலம் கிழக்கு மாகாண சபையின் அதிகாரங்களின் ஒரு பகுதிகளையும் கொழும்பு அதிகாரப் பீடத்திடம் கையளித்துவிட்டது.

இப்போது முஸ்லிம் காங்கிரஸ் இடும்புத் துண்டை கழற்றிக் கொடுத்துவிட்டது. இனி இருக்கும் கடைசி உள்ளாடையையும் பறிகொடுப்பதற்கு முன்பு அது விழிப்படைந்து சரியான பாதையைத் தேர்ந்தெடுப்பது முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல தமிழர்களுக்கும் நல்லது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சை நகரமும் 2000 மீட்பர்களும்

■ ஜெரா

கிளிநொச்சி புலிகளின் தலை நகரம். 2008 ஆம் ஆண்டு வரையிலும் அதற்கிருந்த அடையாளம் தனியானது. கிளிநொச்சியுடன் கதைப்பதென்பது புலிகளுடன் கதைப்பதாகவே அர்த்தம் கொள்ளப்பட்டது. அனைத்துக் கட்டடங்களும், அதற்கான பெயர்களும், நிர்வாக இயக்கங்களும் விடுதலைப்புலிகளோடு இரண்டறக் கலந்தவையாக இருந்தன. அத்தோடு 2002 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரையில் வன்னி உள்ளிட்ட பகுதிகளையும், புலிகளின் ஏனைய வெளித் தொடர்புகளையும் இணைத்த ஒரே நகரமாக கிளிநொச்சியே இருந்தது. இவை அனைத்தையும் 24 மணி நேரத்துக்கும் மேலாக இயங்கிய போராளிகள் துணிந்து வழிநடத்தினர். இதற்குமுன் எங்கிருந்தும் பெற்றுக் கொள்ளாத அனுபவங்களைவிடுத்து, நகர உருவாக்கத்தில் புதிய மாதிரியை அவர்கள் உருவாக்கினர். ஆகவே தான் அது புலிகளின் நகரம் அல்லது போாரளிகளின் நகரம் என அர்த்தப்படுத்தப்படுகின்றது.

**தலைகீழான நகரம்**

இந்த நகரம் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் முற்றுமுழுதாக அப்படியே மாறியது. பழைய தடம் எதுவும் அங்கிருக்கவில்லை. கிளிநொச்சியைக் கைப்பற்றியவுடனேயே புலிகள் அந்த நகரத்துக்குப் போர்த்தியிருந்த முழு அடையாளங்களையும் அழிப்பதிலேயே ராணுவம் ஈடுபட்டது. இரவு பகலாக புலிகளின் சாயலில் தெரிந்த அனைத்தையும் அடித்துநொருக்குவதிலும், அதற்கு மேலாக ராணுவ வண்ணம் பூசுவதிலும் தீவிரமாகச் செயலாற்றியது. அந்தப் பூச்சுக்களிடமிருந்து தப்பியதெல்லாம் போர் சுற்றுலாவைக் காட்சிப்படுத்தும் கட்டடங்கள் மட்டும் தான். இயன்றவரை பௌத்தப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் கட்டடங்களால் ராணுவமும், அரசும் கிளிநொச்சியை மூடும் பணியில் இறங்கியது. அதில் குறிப்பிடத்தக்க வெற்றியும் கிடைத்திருக்கின்றது என்றே சொல்லவேண்டும். இப்போது தமிழ்ப் பண்பாட்டை கிளிநொச்சியில் காண்பதரிது. மூன்றாண்டுகளில் நினைத்துப் பார்க்க முடியாத கட்டடக் காடாக கிளிநொச்சி வளர்க்கப்பட்டுள்ளது. கிளிநொச்சியின் இயல்பே அப்படித்தான். எப்போதும் அதன் ஆயுட்காலம் மிகச்சிறிது என்பதை கடந்த காலத்தை கற்றுணர்ந்தவர்கள் அறிவர்.

**இப்போது 'புதுப் பொழில்'**

இப்போது கிளிநொச்சி இன்னொரு மாற்றத்தையும் கண்டுள்ளது. அந்த நகரத்தை முதன் முதலில் பிரபலப்படுத்தியவர்கள் அரச படைகளோடு இணைக்கப்படுகின்றனர். முதற்கட்டமாக 5000 முன்னாள் போராளிகளிலிருந்து 2000 பேர் சிவில் ராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். அதுவும் அவர்கள் வடிவமைத்த நகரத்திலேயே தம்மை ராணுவமாக்கிக் கொண்டுள்ளனர். இது பெருங்கால முரண்தான். ஆயினும் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். போராளிகள் ராணுவமாவதை இதற்கு முதல் மக்கள் துரோகி மற்றும் காட்டிக் கொடுப்பவன் என்று தான் அழைத்தார்கள். ஆனால் இந்த முறை அப்படி யாருமே அடையாளப்படுத்த முடியாது. எந்த ஆயுதங்களும் அற்று இருக்கும் மக்கள் மத்தியில் இராணுவச் சீருடைகளோடு அலையப் போகும் 2000 பேரை எப்படி துரோகிகள் என அழைக்க முடியும்? அவர்கள் மறுபடியும் அந்த நகரத்தை அழகுபடுத்தத் தான் போகின்றனர். அதனைக் கோடிக் கண்கள் பார்க்கத் தான் போகின்றன.

**அதிர்ச்சி தான்.என்ன செய்ய?**

இந்தச் செய்தியைப் படித்தவுடன் பலர் அதிர்ச்சியடைந்ததாக வலைத்தளங்களில் பதிவிட்டனர். ஆனால் இதில் அதிர்ச்சியடைய என்ன இருக்கின்றது. அப்போதும் ஆயுதம்தான் அவர்களின் வாழ்க்கையாக இருந்தது. இப்போதும் அதே தான். ஆனால் இதில் சிறு வித்தியாசம். விடுதலைப் போராட்டத்தில் ஆயுதம் தூக்கியவனுக்கு எந்தக் கொடுப்பனவும் வழங்கப்படுவதில்லை. மக்களுக்காக மரணித்தமைக்கான மரியாதை மட்டுமே வழங்கப்படும். இப்போது படைப் பணியாற்றுவதற்காக 18ஆயிரத்தில் இருந்து 20 ஆயிரம் வரை சம்பளம் கிடைக்கும். இங்கு மக்களின் மரியாதை கிடைக்குமா என்பது கேள்விக்குறியே. இந்த விடயங்கள் சிவில் ராணுவத்தில் இணைந்த முன்னாள் போராளிகளுக்குத் தெரியாமல் இல்லை. அவர்கள் தெரிந்தும் செய்யும் தவறென இதனைக் கொள்வதில் முரண் உண்டு.



## உண்மை வாக்குமூலம்

■ ரி.த.இயன்

சில நாள்களுக்கு முன் முல்லைத்தீவு, கிளிநொச்சி பகுதிகளில் தடுப்பிலிருந்து வந்த போராளிகளுக்கு வேலை வாய்ப்பு என்று கூறி ஒவ்வொரு பிரதேச நிர்வாக இராணுவத்தினரும் கலந்துரையாடலுக்காக அழைத்தனர். நானும் அக் கலந்துரையாடலில் கலந்து கொண்டேன். "நாங்கள் இங்கு பண்ணைகள் ஆரம்பிக்க உள்ளோம். அதற்கு பணியாள்கள் தேவை. உங்கள் தகைமைகள் அடிப்படையில் உங்களுக்கு விருப்பமான வேறு வேலைகளும் வழங்குவோம்" என்று அதன் போது கூறப்பட்டது. வேலை என்றால் யார் விடுவார்கள்? எல்லோரும் அவர்கள் தந்த விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து கொடுத்தோம். சில நாள்களின் பின்னர் எல்லோர் வீடுகளுக்கும் அழைப்பிதழ் ஒன்று அனுப்பப்பட்டது. 2012.10.01 அன்று புன்னை நீராவி விசுவமடுவுக்கு வந்து நியமனங்களை பெற்று செல்லுமாறு அதில் குறிப்பிட்டிருந்தது. இதன்படி ஒவ்வொரு பிரதேசத்திலிருந்தும் அந்த பகுதிக்கு பொறுப்பான இராணுவத்தினரால் முன்னாள் போராளிகள் என இராணுவ வாகனங்ககளில் அழைத்துச் செல்லப்பட்டனர். வந்திருந்தவர்களில் அதிக எண்ணிக் கையானோர் யுவதிகள். இராணுவத்தினர் அவர்களிடம் சகஜமாக பழகுவதில் இருந்து அவர்களுக்கும் இராணுவத்தினருக்கும் நல்ல தொடர்புகள் இருப்பது புரியக்கூடியதாக இருந்தது. யுவதிகளும் இராணுவத்தினருடன் நன்றாக கதைப்பதையும் தொலைபேசி இலக்கங்களைக் கொடுத்து வாங்குவதையும் காணக் கூடியதாக இருந்தது.

விசுவமடுவுக்கு நாங்கள் வந்தவுடன் எங்களுக்கான நியமனக் கடிதங்கள் மேடையில் வைத்து அழைத்துத் தந்தனர். அதில் எம்மை சிவில் பாதுகாப்பு படையில் அங்கத்தவர்களாக இணைத்துள்ளனர் என்ற விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது. பலகை ஒன்றில் எமக்கான சம்பள விவரமும் இன்னுமொரு பலகையில் எமக்காக உடமைகளும் எழுதப்பட்டிருந்தன. அந்த உடைமைகளில் துப்பாக்கியை தவிர இராணுவ உபயோகத்துக்குரிய மற்ற எல்லாப் பொருள்களும் இருந்தன.

இதைவிட புதிதாக அமைக்கப்பட்ட ஒன்பது பண்ணைகளின் வரைபடங்கள் இருந்தன. நியமனக்கடித்ததை பெற்றவர்கள் தமது வீட்டுக்கு அருகில் உள்ள பண்ணையை தெரிவு செய்யுமாறு கூறப்பட்டது. ஆனால் அந்தப் பண்ணைகள் எல்லாமே எமது வீடுகளில் இருந்து மிகமிகத் தொலைவில் உள்ளவை. ஆயினும் வற்புறுத்தலின் பெயரில் ஒரு பண்ணையை தெரிந்து பதிந்தோம். "நாளையிலிருந்து நீங்கள் அங்கு வேலைக்கு வரவேண்டும்" என்று கூறப்பட்டது.

இராணுவத்தினருக்கு கீழே இராணுவம் சம்பந்தப்பட்ட வேலை என்று தெரிந்தும், வந்திருந்த அத்தனை யுவதிகளும், ஆண்களும் சீருடை எல்லாம் வரிசையில் காத்திருந்து வாங்கியே சென்றனர். அன்று மட்டும் இரண்டாயிரத்துக்கு மேல் வந்திருந்தனர். பதிவுகளும் விண்ணப்பங்களும் இன்னும் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் கூறப்பட்டது. முன்னாள் போராளிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவே இந்த சிவில் படையணியா? என்று கேட்கத் தோன்றியது. இனி இளந்தலைமுறை அவர்களது கட்டுப்பாட்டில்தான். எமக்குத் தந்த நியமனத்தில் சிவில் படை உறுப்பினருக்கு காப்புறுதி செய்யப்படும் என்றும் நோய்வாய்ப்படும்போது உதவு தொகை வழங்கப்படும் என்று [illegible] வலிந்து திணிக்கப்பட்ட விலங்குகளோ[illegible]டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> **இப்போது தமிழ்ப் பண்பாட்டை கிளிநொச்சியில் காண்பதரிது. மூன்றாண்டுகளில் நினைத்துப் பார்க்க முடியாத கட்டடக் காடாக கிளிநொச்சி வளர்க்கப்பட்டுள்ளது.**

**இது ஒரு வகைத் தகைமை**

இறுதிப் போரில் கிட்டத்தட்ட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகள் சரணடைந்ததாகவும், அவர்களில் பெரும் பகுதியினர் புனர்வாழ்வு பெற்று இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டதாகவும் இலங்கை அரசு தெரிவிக்கின்றது. ஆனால் அவர்களின் இயல்பு வாழ்க்கை எப்படியிருக்கின்றது? பெரும்பாலான போராளிகளுக்கு அது நரகம் தான். திரும்பும் பக்கமெல்லாம் வறுமை முகத்திலறைகின்றது. அவர்களுக்குத் தொழில் தர நினைக்கும் நிறுவனங்கள் முதலில் சந்தேகத் தராசைத் தான் அளக்கப்பயன்படுத்துகின்றன. விடுதலைப் போரில் கல்வி முக்கியமான தகுதியாகக் கருதப்படவில்லை. ஆயுதக் கையாளுகையும், விசுவாசமும், துணிவும், விவேகமும் தான் முக்கிய தகைமைகள். ஆகவே இப்போது முன்னாள் போராளிகளாக இருப்பவர்களிடம் இருப்பது இந்தத் தகைமைகள் மட்டும் தான். ஆகக்குறைந்தது அவர்களிடம் இருப்பது க.பொ.த. சாதரண தர கல்வித் தகைமை மட்டுமே. இப்போது இந்தத் தகைமைக்கு யார் வேலை தருவார்? கூலி வேலைக்குப் போகவும் வன்னியில் விவசாய நிலம் இடம் தரவில்லை. தொடர் வறட்சி விவசாய நிலங்களை இந்த முறை சுருக்கிக் கொண்டது.

**அரசுக்கு உச்ச லாபம்**

இப்படியான நிலையில் தான் அவர்கள் அரச பணியான சிவில் படையில் இணைந்திருக்கின்றனர். ஆனால் இதுவே இலங்கை அரசுக்குப் பெரும் வெளியுலகப் பிரச்சாரமாக மாறப்போகின்றது. அரசுக்கெதிராகப் போராடியவர்களையே மன்னித்து, அரச சிவில் படையில் இணைத்துக்கொள்ளும் நாடு இலங்கை எனப் பெயர் எடுக்க இருக்கின்றது. அவர்கள் படையில் இணைக்கப்பட்ட பின்னர் எப்படி கவனிக்கப்படுவார்கள் என்ற நிலையைத் தவிர்த்து, இப்போதைக்கு இது போராளிகள் தரப்பிலும், அரச தரப்பிலும் நல்ல சகுணமாகவே தெரிகின்றது. ஆனால் போராளிகளின் கடந்த காலத்தையும், அவர்கள் தரித்த உடைகளையும் மறந்து, நிகழ்காலத்தில் காக்கி உடைகளோடு பார்க்கையில் தான் ஏதோ ஒரு குற்றவுணர்வு பார்ப்பவரைத் தொற்றிக் கொள்ளப் போகின்றது.

**தீர்வு உண்டு**

அந்தக் குற்றவுணர்வைத் தடுக்க 2 வழியிருக்கின்றது. அரசோடு வணிக உறவுகளைப் பேணத் தயாராக இருக்கும் புலம்பெயர் சமூகம், முன்னாள் போராளிகளின் வாழ்வுக்காக வெளிப்படையாகவே உதவ முடியும். புலம் பெயர் தமிழ் வணிகர்களின் பணக் குவிப்புக்கு முன்னாள் போராளிகளின் உழைப்பும் ஒரு காரணமாயிருந்தது. நன்றி மறவாமை இருப்பின் எல்லாம் நடக்கும். தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்று வரும் எம்.பிமார் நினைத்தால் கூட அரச பணிகளையோ அல்லது தொழில் கடன்களையோ இவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க முடியும். ஆனால் இப்போதைக்கு இதற்கு யார் தயார்? அதற்கு யாருமே தயாராகாவிட்டால், அந்த நகரமும், அதன் பழைய மீட்பர்களும் பச்சையாவதைத் பிரமனாலும் தடுக்க முடியாது.

# ஆசிரியத்துவ சவால்கள்

**"சிறந்த அர்ப்பணிப்பு உணர்வுடன், எந்த இலாபநோக்கமுமின்றி, பாடப்புத்தக அறிவு மட்டுமன்றி, பல்துறை பரந்த அறிவை மாணவர்களுக்கு வழங்கிவரும் ஆசிரியர்கள் பலருள்ளனர். கற்றல்—கற்பித்தல் என்பதே அவர்களின் தாரகமந்திரம். இத்தகைய ஆசிரியர்கள், சமூக உருவாக்கத்தின் மூல ஆதாரங்களாக திகழ்கிறார்கள்.**

**ஆனந்தமயில் நித்திலவர்ணன்**
(விரிவுரையாளர்,
கல்வியியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்)



ஒக்ரோபர்-05 ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இந்தக் கட்டுரையும் கவிதைகளும் பிரசுரமாகியுள்ளன

**"ஆசிரியர்கள் தங்களுடைய ஆசிரியப் பணியை மிகவும் தியாக உணர்வுடனும், பொறுப்புணர்வுடனும், கடமை உணர்வுடனும் செய்ய வேண்டும். மாறாக இன்றைய ஆசிரியர்களில் சிலர், சம்பளத்திற்கு வேலைபார்க்கும் தொழிலாகத்தான் கருதுகின்றனர்.**

1994 ஆம் ஆண்டு முதல் உலகளாவியரீதியில் ஒவ்வோராண்டும் ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதி உலக ஆசிரியர்தினமாக ஆசிரியர்சங்கங்களால் பிரகடனப் படுத்தப்பட்டு கொண்டாடப் பட்டு வருகின்றது. இதன் நோக்கம் ஆசிரியர்களின் சேவைக்கு மதிப்பளித்தல் மற்றும் எதிர்கால தலைமுறையினரின் தேவைப் பாடுகளை பூர்த்திசெய்ய ஆசிரியர்களின்பணி தொடர்ச்சியாக வழங்கப்படும் என்ற உறுதி மொழியை உலகுக்கு வழங்குவது மாகும்.

உலகளாவிய ரீதியில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் ஆசிரியர் தினம் வருடத்தின் வேறுபட்ட திகதிகளில் கொண்டாடப்படுகின்றது. இந்தியாவில் செப்ரெம்பர் 5ஆம் திகதியும், சீனாவில் செப்ரெம்பர் பத்தாம் திகதியும் ஆசிரியர் தினம் கொண்டாடப் படுகின்றது. அமெரிக்காவில் மே மாதம் முதல்வாரம் முழுவதும் தேசிய ஆசிரியர் வாரமாக கொண்டாடப்படுகின்றது. இலங்கையில் ஒக்ரோபர் 6 ஆம் திகதி, ஆசிரியப் பெருந்தகைகளின் அருமையை உலகத்துக்குப் புலப்படுத்தும் நோக்கில் ஆசிரியர்தினம் மிகுந்த எழுச்சியோடும் மகிழ்ச்சியோடும் கொண்டாடப்படுகிறது.

நாட்டில் அறியாமையையும், வறுமையையும் ஒழிக்கக்கூடிய கருவி உண்டு என்றால் அதுதான் கல்வி. அந்தக் கல்விச் செல்வத்தை மாணவர்களுக்கு வழங்கும் பெருமை பெற்றவர்கள் ஆசிரியர்கள். பெற்றோருக்கு அடுத்த படியாக, தம்மிடம் பயிலும் மாணவர்களிடம் அன்புகாட்டி, அரவணைத்து வழிகாட்டுவதன் மூலமே சிறந்த கல்வியைப்பெற்று, சமுதாய வளர்ச்சிக்கு உதவமுடியும் என்பதை ஆசிரியர்கள் அறிய வேண்டும்.

ஏனைய தொழில்களைப் போன்று ஆசிரியப்பணி என்பது ஒருவரின் வாழ்வாதாரத்துக்கான பணி அல்ல. தனது வாழ்வையே ஆதாரமாக்கும்பணி. அந்தப்பணியில் வேண்டுமானால், வாழ்வை நகர்த்துவதற்கான ஊதியம் கிடைக்கலாம். ஆனால் அந்த ஊதியத்துக்காக அந்தப்பணி அல்ல என்பதுதான் ஒரு சிறந்த ஆசிரியரின் தத்துவம். ஆசிரியர்பணி என்பது உயிரோட்டமான பணி. ஆய்வு ரீதியான பணி, உளவியல் ரீதியான பணி, சேவைரீதியான பணி, அர்ப்பணிப்புள்ள பணி. கால நேரமற்ற பணி. ஒரு சிறந்த ஆசிரியர் வகுப்பறைக்குள் மட்டுமே ஆசிரியராக இருப்பதில்லை. இருக்கவும் முடியாது. அவர்தன் வாழ்வின் பெரும்பகுதி நேரங்கள் ஆசிரியராகவே இருக்கிறார். அவரின் சேவைக்கு எல்லை கிடையாது. மனித வாழ்வில் திருப்புமுனையை ஏற்படுத்தி, அதற்கு அர்த்தத்தை கொடுக்கும் ஒரு கடமை ஆசிரியருக்கு உள்ளது. உலகில் உள்ள தொழில்களிலேயே, ஆசிரியர் பணியே அதிக திறமைகள் தேவைப் படும் பணி என்று சொல்லுமளவுக்கு அதன் பொறுப்புக்கள் அதிகம். ஆனால் இன்றைய சூழலில், ஆசிரியப்பணிக்கு பொருத்தமற்ற பலர்அத்துறையில் வேலை வாய்ப்பைப் பெற்று வருவது துரதிஷ்டவசமானது.

சிறந்த அர்ப்பணிப்பு உணர்வுடன், எந்த இலாபநோக்கமுமின்றி, பாடப்புத்தக அறிவு மட்டுமன்றி, பல்துறை பரந்த அறிவை மாணவர்களுக்கு வழங்கி வரும் ஆசிரியர்கள் பலருள்ளனர். கற்றல்-கற்பித்தல் என்பதே அவர்களின் தாரகமந்திரம். இத்தகைய ஆசிரியர்கள், சமூக உருவாக்கத்தின் மூல ஆதாரங்களாக திகழ்கிறார்கள்.

ஆசிரியர்கள் தங்களுடைய ஆசிரியப்பணியை மிகவும் தியாக உணர்வுடனும், பொறுப்புணர்வுடனும், கடமை உணர்வுடனும் செய்ய வேண்டும். மாறாக இன்றைய ஆசிரியர்களில் சிலர், சம்பளத்துக்கு வேலைபார்க்கும் தொழிலாகத்தான் கருதுகின்றனர்.

பாடத்திட்டத்தில் சில ஆசிரியர்களுக்கு ஆர்வமற்ற, ஆளுமையற்ற சூழல், கற்பித்தல் முறையில் தெளிவின்மை, சில ஆசிரியர்கள் குறிப்பிட்ட மாணவர்களுக்கு சொல்லிக்கொடுத்து, மந்தமான மாணவர்களை மட்டம் தட்டுவது, தன்னிடம் ரியூசன் படிக்கும் மாணவர்களுக்கு மட்டும் நன்றாக சொல்லிக்கொடுப்பது, சீரற்ற பழக்கவழக்கங்களை மாணவர்கள் முன்பு செய்தல் போன்ற பொறுப்பற்ற நடவடிக்கைகளால் மாணவ சமுதாயம் ஒழுக்க நடவடிக்கைகளை மீறுபவர்களாக உள்ளனர்.

சமீப காலமாக ஊடகங்கள் வாயிலாகப் பார்க்கும்போது, ஒரு சில ஆசிரியர்களின் பாலுணர்வைத் தூண்டும் நடவடிக்கைகள் மாணவ சமுதாயத்திலும், பெற்றோர்கள் மத்தியிலும் ஒருவித அச்ச உணர்வுகளை ஏற்படுத்துவதாகவும், ஆசிரியர்கள் மீதுள்ள நன்மதிப்பை குறைக்கும் விதமாகவும் உள்ளது. தற்கால சமூகம் தாழ்ந்து போனதற்கு ஆசிரியர் சமூகத்தில் ஏற்பட்ட தாழ்வும் ஒரு காரணம் என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

இவ்வாறான ஒரு சிலரிடம் குறைகள் இருந்தாலும், சிறப்பாகப் பணிபுரியும் ஆசிரிய சமூகத்திற்கு அனைவரும் மரியாதை செலுத்த வேண்டும். இன்றைக்கும் நேர்மையாக கல்விப்பணியைத் தொடரவிரும்பும் ஆசிரியர்களுக்கு அதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கவேண்டும். இன்னமும் பல இடங்களில் பெயர், முகம் வெளிப்படாமல், தமது பணியை முடிந்தவரை சிறப்பாக செய்து வரும் ஆசிரியர்களுக்கு நாம் ஆசிரியர் தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வோம்.

தற்காலத்தில் ஆசிரியர்கள் பல்வேறு சவால்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியிருக்கின்றது.

ஆசிரியர்களின் பணிக்குரிய அங்கீகாரம் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தால் வழங்கப்படுவதில்லை. மாணவர்கள் ஆசிரியர்களை மதிக்கும்திறன் குறைவடைந்து செல்கிறது.

அரசியலும், சமூகமும் ஆசிரியர்தொழிலில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தி, நேர்மையும் அர்ப்பணிப்பும் கொண்ட ஆசிரியர்களை சுதந்திரமாக செயற்படாமல் முடக்கி வருகின்றன.

ஆசிரியப்பணிக்குரிய வேதனம் போதியதாக இல்லாமை,

நிர்வாகரீதியான நெருக்கீடுகள்,

உடல் உளப்பாதிப்புக்கள்,

அதீத வேலைச்சுமை ஆகியனவற்றுடன் தற்காலத்தில் பல்வேறான சவால்கள், நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சிறப்பாகப்பணியாற்றும் ஆசிரியர்களைப் போற்றுவோம். வாழ்த்துவோம்.

## வாத்தியார் வருமானம்

மாதாந்த கணக்கு வரும்
மண்டை கனத்துவிடும்...!
மின்சாரக் கட்டணம்
'மில்க் பில்' ஒரு பக்கம்..!
மூத்ததுக்கு விழாவாம்
காத்தவராயன் கூத்தாம்...!
ஒப்பனைக்கு தப்பாது
'தௌசன்' வேணுமாம்...

இளையனுக்கு கண்காட்சி
இன்னொரு இழிசெலவு...
கடைசிக்கு காய்ச்சல்
குடை, செருப்பு, சீருடை
இவைகளுக்கு
சுட்டி ரீ வியும் பார்க்க வேணும்...
பெத்த ஜீவன்களை
எப்படிப் பேண...
மொத்த சம்பளமும்
முழுதாய் முடங்கி விடும்...

வருட சம்பள 'இங்கிரிமண்டுக்கும்
சங்கரிமாரை வருடவேணும்
அது, இது செய்ய வேணும்...
வேறென்ன...?
வாத்தியார் வருமானம் போதாதே...!
வாழ்க்கையில் மீதி என்ன அச்சுதே...!

**- மானியூர் ரட்னேஸ்.**

## ஏணி

*தித்திக்கும் கல்வியின்
திரைகடல் ஓடியே
திரவியம் தேடுபவர்
எத்திக்கும் முகிழ்ந்துமே
எழிலாய் நிறைந்துமே
ஏற்றம் காணுபவர்
வித்தகம் பெற என்றும்
வித்தூன்றி முறை வந்து
விளைதிறன் விளைவு பெறவே
முத்தெங்கள் ஆசிரியம்
முளைத்தெழும் செயலை நாம்
முழுதாக மனதில் வைப்போம்*

*சிந்தனை, சொல், செயல்
சீர் தூக்கி வழிகாட்டும்
சிறப்புறு வள வாளர்கள்
தந்தமை தாராளம்
தனி நிகர் செய்கையாலே
தளைத்தெழும் ஆல மரங்கள் ...*

*ஐந்திலே வளைந்திடும்
ஆற்றலின் பேறுகளாய்
அகத்திலே ஒளியானவர்
உந்தனின் பணி தன்னால்
உண்மைகள் வென்று நிதம்
உயரும் எம் மானுடமே!*

*மொழிக் கூற்றின் வழியாலே
உமைப் பாட முடியாத
முழுமையின் வித்துக்களே
விழியாம் எம் உள்ளத்து
விற்பன்னர்களாய் உதித்து
விளைந்திட்ட சொத்துக்களே
விடியலின் ஒளியான
விந்தையின் வடிவான
வியத்தகு நல் படிமமே...
குடிமையில் முத்தோராய்
குல மதில் வித்தகராய்
கும்பிடும் உயர் வடிவமே!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தக்காலில் நிற்க....

■ சோபனா.

போரின் பின்னரான காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் குறிப்பாக யாழ். நகருக்குள் புதிய புதிய தொழில் நிலையங்களும் தொழிற் பயிற்சி நிலையங்களும் முளையிடத் தொடங்கியுள்ளன.

இந்தத் தொழில் பயிற்சி நிலையங்களில் தம்மை இணைத்துக் கொண்டுள்ள பலர் தமது தொழில் முயற்சியை மேம்படுத்தி சிறந்த தொழில் முயற்சியாளர்களாகத் தம்மை வெளிப்படுத்தி வருகிறார்கள். இவ்வாறானதொரு தொழிற் பயிற்சி நிலையத்துக்கு நான் சென்றிருந்தேன்.



தென்னிலங்கையைச் சேர்ந்த விஜித அம்புக் கொம்புர எனும் தொழில் வல்லுநரின் வழிகாட்டலில் யாழ். நகர் வீரசிங்கம் மண்டபத்தில் ஐந்தாம் மாடிக் கட்டடத்தில் கடந்த 10 மாத காலமாக அந்தத் தொழில் நிலையம் செயற்பட்டு வருகின்றது.

விதவிதமான பொம்மைகள், கைப்பைகள் பயணப்பைகள் போன்ற பொருள்கள் இந்தத் தொழிற்பயிற்சி நிலையத்தில் தயார்ப்படுத்தப்பட்டிருந்தன.

தென்னிலங்கைப் பகுதிகளிலேயே அதிகமாக இதுபோன்ற உற்பத்திப் பொருள்களைத் தயார் செய்யும் நிறுவனங்கள் உருவாகின்றன. எனினும் யாழ்.நகரில் இதுபோன்ற ஒரு தொழில் நிலையம் அமைந்திருப்பதை பலர் அறிந்திருக்க மாட்டார்கள்.

பஞ்சுத் துணியில் வடிவங்களுக்கு ஏற்ப பொம்மைகளின் பாகங்கள் வெட்டப்பட்டவுடன் அவற்றைப் படிப்படியாகப் பொருத்தி அதற்குள் பஞ்சைப் புகுத்தி குறைந்த நேரத்தில் அவற்றைப் பொம்மைகளாக உருவாக்கும் பணிகளை வேகமாகச் செயற்படுத்திக் கொண்டிருந்தார்கள் அங்குள்ள தொழில் முயற்சியாளர்கள்.

''தென்னிலங்கையில் இருந்து பல தொழில் நிறுவனங்கள் அதிக இலாபத்தைப் பெறுவதற்காகவே இங்கு வந்திருக்கின்றன. ஆனால் நான் இந்தத் தொழிற் பயிற்சி நிலையத்தை ஆரம்பித்ததன் நோக்கம் பெண்கள் மற்றும் மாற்று வலுவுடையவர்களுக்குத் தொழில் வாய்ப்பு வழங்கி அவர்களைச் சிறந்த சுய தொழில் முயற்சியாளர்களாக உருவாக்க வேண்டும் என்பதாகத் தான்'' என்றார் விஜித அம்புக் கொம்புர.

இந்தத் தொழிற் பயிற்சி நிலையத்தில் தற்போது 15 பெண்கள் பணி புரிகிறார்கள். இவர்களில் மாற்றுவலுவுடையவர்களும் அடங்குவர்.

பொம்மை, கைப்பை, பயணப்பை போன்றவற்றை சிறந்த வடிவமைப்பில் உருவாக்கக் கூடிய திறன்களை இந்த 15 பெண்களும் பெற்றுள்ளார்கள்.

''நான் மாற்றுவலுவுடைய ஒருவர் என்பதால் எனக்கு இப்படியானதொரு தொழில்வாய்ப்புக் கிடைக்கும் என நான் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. எமது தொழில் நிலையம் அமைந்திருப்பது மாடிக் கட்டடம் என்பதால் படி ஏறி இறங்குவது மிகக் கடினம்தான். இருந்தாலும் எனது முயற்சிக்கு இது களமாக அமைந்திருப்பதால் தொடர்ந்து இங்கு பணியாற்றி வருகிறேன்'' என்றார் மாற்றுத் திறனாளியான பணியாளர் ஒருவர்.

வடமராட்சி, சுன்னாகம், நீர்வேலி, ஊர்காவற்றுறை, இளவாலை, யாழ்.நகர் போன்ற இடங்களில் இருந்து இந்த 15 தொழில் முயற்சியாளர்களும் பணிக்கு வருகை தருகிறார்கள்.

கைத்தொழில் அமைச்சின் அனுமதியுடன் செயற்பட்டுவரும் இந்தத் தொழில் நிலையத்தில் சிறந்த மூலதனப் பொருள்கள் நுகர்வோருக்கு ஏற்ற முறையில் தயாரிக்கப்பட்டாலும் அவற்றைச் சந்தைப்படுத்த முடியாது உள்ளதாக நிலையத்தின் தலைவர் தெரிவித்தார்.

அநேகமான தொழில் நிலையங்கள் தற்போது எதிர்கொள்கின்ற நெருக்கீடுகளில் உரிய சந்தை வாய்ப்பின்மையும் ஒன்று. இத்தகைய நெருக்குவாரத்தால் சிறந்த தொழில் முயற்சியாளர்களும் முடக்கப்பட வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

உற்பத்தி செய்யப்படுகின்ற தொழில் முயற்சிகளுக்கு சந்தை வாய்ப்பு கிடைக்காவிட்டாலும் தொழில் முயற்சியாளர்களின் திறன்களுக்கு இந்தப் பயிற்சி நிலையத்தில் தொடர்ந்து முன்னுரிமை கொடுக்கப்பட்டே வருகின்றது.

இடநெருக்கீடு மற்றும் அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் இயங்கிவரும் இந்தப் பயிற்சி நிலையத்தில் இன்னும் அதிகமாகப் பெண்கள் மற்றும் மாற்றுவலுவுடையவர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கு இன்னும் சில வசதிகள் அவசியமாகவே உள்ளன.

இங்குள்ள தொழில் முயற்சியாளர்களின் திறன்களின் அடிப்படையில் 10 இற்கும் மேற்பட்ட கண்காட்சிக் கூடங்களில் உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக நிலையத்தில் பணிபுரியும் பெண்கள் பெருமிதம் கொள்கின்றார்கள். இதனைவிட இலங்கை உட்பட இத்தாலி, ஜப்பான், லண்டன் போன்ற 20 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இங்கு தயாரிக்கப்படும் உற்பத்திப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.



எனினு உள்ளூரில் தயாரிக்கப்படும் உற்பத்திப் பொருள்கள் உள்ளூர் மக்கள் மத்தியில் பயன்பட வேண்டும் என்பதே ஒவ்வொரு தொழில் முயற்சியாளரதும் கனவாக இருக்கும்.

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்

■ பா.உண்மை

20

லிங்கனும் காதலித்தாராம் என்று சொல்வதற்கு ஏற்ற வகையில் அவருக்கெனவும் சில கதைகள் இருக்கத்தான் செய்கின்றன. என்ன செய்வது? மனிதனாகப் பிறந்தவனால் அதையெல்லாம் கடக்க முடிவதில்லைத்தானே!

ஆன் ரட்லெட்ஜ், நியூ சேலத்தில் இருக்கும் ஓர் உணவு விடுதி உரிமையாளரின் மகள். லிங்கன் அப்போது தபால் அதிகாரியாக வேலை பார்த்துக் கொண்டிருந்தார். ஆன் மீது லிங்கன் காதல் வயப்பட்டபோது, மேக் நீல் என்ற இளைஞனுக்கும் ஆனுக்கும் திருமணம் நிச்சயமாகியிருந்தது.

மேக் நீல், நியூயோர்க்கிலிருந்து நியூ சேலத்துக்கு வந்து குடியேறியவன். இருவருக்கும் திருமணம் நிச்சயம் ஆன பிறகு, ஏதோ குடும்ப விவகாரம் காரணமாக நியூயோர்க்குக்குக் கிளம்பிப்போனான். திரும்பி வரவில்லை. இந்தச் சூழலில் லிங்கன் தன் காதலைத் தெரிவிக்க, ஆனும் ஏற்றுக் கொண்டார்.

ஒரு வழக்கறிஞராக ஆனதும், ஆன் ரட்லெட்ஜைத் திருமணம் செய்து கொள்வது என்று முடிவெடுத்திருந்தார் லிங்கன். அதற்குள் விஷக்காய்ச்சல் தாக்கி, படுத்த படுக்கையாகக் கிடந்த ஆன் ரட்லெட்ஜ், ஒரு நாள் இறந்து போனார். ஆனை இழந்த லிங்கன், பரிதவித்துப் போனார். கிட்டத்தட்ட பித்துப் பிடித்தவரானார். லிங்கன் இருந்த இடத்திலிருந்து ஆனின் கல்லறை இருந்த இடம் கிட்டத்தட்ட ஐந்து மைல்கள் தூரத்தில் இருந்தது. தினமும் அந்தக் கல்லறை இருந்த இடத்துக்கு நடந்தே போய் அழுதுவிட்டு வருவார் லிங்கன்.

மழை பெய்தால் ''அவளுடைய கல்லறை நனையுமே!'' என்று அழுவார். பனி பெய்தால் ''ஆனுக்கும் குளிருமே!'' என்று பதறுவார். ஆன் ரட்லெட்ஜை நினைத்தபடி சங்கமன் ஆற்றோரமாகாவே நடந்து திரிவார். இப்படி அவர் பைத்தியகாரத்தனமாகத் திரிந்த காலங்களில் அவருக்கு உறுதுணையாக இருந்தவர் பௌலிங் கிரீன் என்ற நண்பர்தான்.



பௌலிங் கிரீன், ஆபிரஹாம் லிங்கனைத் தன் கூடவே வைத்துக் கொண்டார். விறகு வெட்டுதல், மாடுகளைப் பராமரித்தல் - முதலிய வேலைகளைச் செய்யச் சொல்லி, லிங்கனின் கவனத்தைத் திசை திருப்பினார். முக்கியமாக ஆன் சமாதி வைக்கப்பட்ட இடத்துக்கு லிங்கன் திரும்பி விடாமல் கவனமாகப் பார்த்துக்கொண்டார். ஆனாலும் ஆனை இழந்த கவலை லிங்கனை அதிக நாள்களுக்கு அழுத்திக் கொண்டே இருந்தது.

லிங்கன் - ஆன் காதல் அமெரிக்காவுக்கே தெரிந்திருந்தாலும், புகழ்பெற்று ஜனாதிபதியாக வந்த பின்னரெல்லாம் லிங்கன் ஒரு முறைகூட ஆனின் பெயரை உச்சரித்ததில்லை. இதனாலேயே இந்தக் காதலை வெறும் கிசுகிசு என்று சொல்பவர்களும் உண்டு .

அதேபோல, நீயூ சேலத்தில் இருந்து மேரி ஓவன்ஸ் என்கிற பெண்ணையும் லிங்கன் காதலித்ததாகச் சொல்லப்படுவதுண்டு. ஆனால் என்ன காரணத்தாலோ மேரி ஓவன்ஸ் லிங்கனின் காதலை ஏற்கவில்லை.

லிங்கனின் இந்த இரு காதல் விவகாரங்களையும் அவர் பொது வாழ்வுக்கு வந்த பின்னர் ஊடகங்கள் வரிந்து கட்டிக்கொண்டு எழுதித் தீர்த்தன. அதுவும் அவர் அமெரிக்க ஜனாதிபதியான பிறகு இந்தக் கனலை ஊதி ஊதிப் பெரிதாக்கின. லிங்கன் ஒரு சாதாரண மனிதராகவே இறுதிவரை வாழ்ந்திருந்தால் இந்தக் காதல்கள் அம்பலத்துக்கு வந்திருக்கவே வந்திருக்காது. ஆனால், இறுதிவரை லிங்கன் தம் காதலைப் பற்றி யார் கேட்டாலும் வாயே திறக்கவில்லை.

நெடுந் தொடர்

இல்லினாய்ஸி சட்டமன்ற உறுப்பினர்கள் இரண்டாண்டு காலத்துக்குதான் பதவியில் இருக்க முடியும். எனவே, 1834 ஆம் ஆண்டு மறுபடியும் தேர்தல் வந்துவிட்டது. இந்த முறையும் தேர்தல் காய்ச்சலுக்கு ஆளானார் லிங்கன்.

அப்போது அமெரிக்காவில் பலம் வாய்ந்த கட்சிகளாக இருந்தவை இரண்டு. ஒன்று ஜனநாயகக் கட்சி. மற்றையது விக் (whig) கட்சி. லிங்கன் விக் கட்சியின் உறுப்பினர். அந்தக் கட்சி சார்பாகத்தான் போட்டியிட்டார். ஆனால், ஜனநாயகக் கட்சியிலிருந்த சிலரும் லிங்கனை ஆதரித்தார்கள். எனவே, மற்ற வேட்பாளர்களைவிட மிக அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

ஆனாலும் தேர்தல் முடிவு வரும் வரைக்கும் லிங்கன் வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கை பலருக்கு இருக்கவில்லை. அதற்குக் காரணம் லிங்கனின் உருவம். சட்டமன்ற உறுப்பினர் பதவிக்குப் போட்டியிடுகிறாரே லிங்கன்... யார் அவர்? என்று தன் நண்பர் ஹெர்ன்டனிடம் கேட்டார் மருத்துவர் பேரட்.

''நாளைக்கு பெரிலினுக்குப் போங்கள். அங்குதான் அவர் பேசப் போகிறார். அவர் பேசுவதைக் கேளுங்கள். அதன் பின்னர் அவர் யார் என்று நீங்கள் தெரிந்துகொள்வீர்கள்'' என்றார் ஹெர்ன்டன்.

அடுத்த நாள் இருவரும் லிங்கன் பேசப் போகிற இடத்துக்குப் போனார்கள். லிங்கனைப் பார்த்ததும் மருத்துவர் பேரட்டால் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் கட்டுப்படுத்த முடியவில்லை. அவர் பார்வைக்கு லிங்கன் உயரமான, அழகற்ற, சதாரண மனிதர். அவ்வளவுதான்.

''நமது விக்கட்சிக்கு இவரைவிட நல்ல வேட்பாளர் யாரும் கிடைக்கவில்லையா? ஒருவேளை இந்த ஆள் வென்று சட்டமன்றத்துக்குப் போனாலும் இவரது தோற்றமே இவருக்கு எதிரியாக மாறிவிடுமே!'' என்று உண்மையாகவே ஆதங்கப்பட்டார் மருத்துவர் பேரட்.

(மீட்பர் வருவார்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு எங்கே செல்கிறது?



■ ரம்யன்

ஒரு நாடு ஜனநாயக பண்புகளில் இருந்து விலகி சர்வாதிகாரத்தை நோக்கி நடைபோடுகிறதென்றால் அதற்கு முன்னோடியாக மூன்று தீய அம்சங்கள் வெளிப்படும். அந்தந்த தீய அம்சங்களாவன வன்முறைகள் அல்லது குற்றச்செயல்கள், ஊழல்கள் அபரிமிதமாதல் மற்றும் பொய்யான பிரசாரங்கள்.

பிரித்தானிய தத்துவ ஞானியும் வரலாற்று ஆசிரியருமான பேட்ரம் ரஸல் இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார்.

பேராசிரியரின் இந்தக் கருத்தானது இலங்கையை சாடுவதாக எடுத்துக் கொள்ளலாம். அதே சமயம் எழுகின்ற கேள்வி என்னவென்றால் நாம் என்ன ஆசியாவுக்கு முன்மாதிரியாக வளர்ந்து கொண்டிருக்கிறோமா? அல்லது சர்வதிகாரியின் அரசியல் பயங்கரத்துக்குள் வீழ்ந்து கொண்டிருக்கிறோமா என்பதே.

சில தினங்களுக்கு முன் கொழும்பு ஆங்கில தினசரி ஒன்று தனது தலையங்கத்தில் இவ்வாறு எழுதியிருந்தது.

வன் செயல்களும் குற்றச் செயல்களும் அவைகளின் மிக மோசமான உச்சத்தை எட்டியுள்ளன. 2009 ஆம் ஆண்டு மே யில் முடிவடைந்த போரானது ஆயிரக் கணக்கானவர்களின் இறப்பைக் கண்டது. ஆயிரக்கணக்கானவர்கள் முடவர்களானார்கள். மோசமாக காயமடைந்தார்கள், இடம்பெயர்ந்தார்கள், அநாதைகளானார்கள். இன்னும் பல வழிகளிலும் துன்பத்தில் உழன்று கொண்டிருக்கிறார்கள். இறுதிப் போரில் பத்தாயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள், படையணியினர் மற்றும் புலிப் போராளிகள் கொல்லப்பட்டார்கள். எனவேதான் மனித உரிமை இயக்கங்களும் சமய அமைப்புக்களும் மே 19 ஆம் திகதியை வெற்றித் தினமாகக் கொண்டாடுவதில் என்ன நியாயம் இருக்கிறது என்ற கேள்வியை எழுப்புகிறார்கள்.

ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டதை ஒரு துக்க தினமாக அனுஷ்டிக்கக்கூடாதா? என்று அவர்கள் கேட்கிறார்கள் என்று எழுதப்பட்டுள்ள அந்தத் தலையங்கத்தில் கிழக்கு மாகாண தேர்தல் பற்றி குறிப்பிடுகையில், கிழக்கு மாகாண சபையை உருவாக்குவதில் ஒரு வித்தியாசமான அரசியல் குற்றச் செயலைக் காணமுடிந்தது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு எதிராக வாக்களித்த ஆயிரக்கணக்கான முஸ்லிம் இளைஞர்களுக்கும் ஏனையவர்களுக்கும் இழைக்கப்பட்ட துரோகமாகும் அது. ஆனால் அமைச்சர் பதவிகளும் அதிகாரமும் அதிக முக்கியத்துவமானவையாக இருக்கின்றன ரவூப் ஹக்கீமுக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த தலையங்கத்தை வாசித்த அந்தப் பத்திரிகையின் வாசகர் ஒருவர் அதற்கு எழுதியுள்ள கடிதம் சுவாரஷ்யமாக இருந்தது. கேலியும் கிண்டலுமாக இருந்த அந்தக் கடிதம் சிந்திக்க வைப்பதாகவும் இருந்தது. அது வருமாறு:-

பேட்ரம் ரஸலின் எச்சரிக்கை தொடர்பான உங்கள் தலையங்கத்தை கடந்த வாரம் வாசித்ததின் பேரில் அன்றிரவு அவரை எனது கனவில் கண்டேன். இலங்கை பல்கலைக்கழகமொன்றில் சொற்பொழிவாற்ற அவர் அழைக்கப்பட்டிருந்தார். வன்முறை, ஊழல் மற்றும் பொய்ப் பிரசாரம் என்ற தலைப்பில் அவர் உரை நிகழ்த்த விருந்தார்.

விமான நிலையத்திலிருந்து பல்கலைக்கழகம்வரை அவருடன் நானும் சென்றேன். ஆனால் பல்கலைக்கழகம் எல்லாம் கால வரையறை இன்றி மூடிக்கிடந்தன.

## அசை போட ஒரு விடயம் 47

பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களும் தமது கல்வி களியாட்டத்தை நிகழ்த்திக்கொண்டு வீதிகளில் பவனி சென்றார்கள் நகைச்சுவை அம்சங்களும் காணப்பட்டன. கோமாளிகள் தேசப்பற்றாளர்கள் போலவும் நீதிமன்றங்களுக்கு அருகில் தேசத் துரோகிகள் போலவும் நடித்துக் காட்டினார்கள்.

ஏழைகளின் சார்பில் தலைமைப்பதவிகளை அனுபவிப்பதற்காக ஊழல் பேர்வழிகளான அரசியல்வாதிகள் தமக்குள் அடித்துக்கொள்கிறார்கள்.

மீண்டும் அவரை ஒரு பஸ்ஸில் விமான நிலையத்துக்கு அழைத்துச் சென்றபோது சிவில் உடையில் வந்த சில பொலிஸ்காரர்கள் அவரைக் கைது செய்தார்கள். அரசைக் கவிழ்ப்பதற்கான சதியில் அவர் சம்பந்தப்பட்டிருப்பதாகக் குற்றச்சாட்டு. அடுத்தநாள் எல்லா ஊடகங்களும் பின்வருமாறு அதனைச் சித்தரித்தன.

வெளிநாட்டைச் சேர்ந்த தலை நரைத்த கிழவர்ஒருவர்தம்மிடம் அரசைக் கவிழ்ப்பதற்கான ஆவணங்கள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். இது ஒரு மேற்கு நாடுகளின் சதித்திட்டமாக இருக்க வேண்டும். இருபத்து நான்கு மணித்தியாலயங்களில் அவரை நாடு கடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று.

# கொலை டிப்பர்கள்

■ வீணா



குடாநாட்டை தற்போது உலுக்கிவருவது டிப்பர்கள்தான். வீதி அகலிப்புப் பணிக்கு என்று வந்து சேர்ந்த டிப்பர்கள் விதிகளை மாற்றி எழுதுவனவாக அமைகின்றன

குடாநாட்டில் ஏதோ ஒரு வகையில் அழிவுகள் மாறி மாறித் தலை தூக்கிக் கொண்டுதான் இருக்கின்றன.

இயற்கை ஒருபுறமிருக்க மறுபுறத்தில் அவதானிப்பற்ற - மனிதாபிமானம் அற்ற செயற்பாடுகள் மக்களை இன்றும் வேதனைக்குள் தள்ளிவிட்டிருக்கிறது.

அபிவிருத்தி என்ற போர்வையில் வீதிகளுக்குக் காப்பெற் போடப்பட்டு விஸ்தரிப்புச் செய்யப் படுகின்றன. இதை குதூகலமாக எண்ணுவோரும் உள்ளனர். துன்பமாக எண்ணுவோரும் உள்ளனர். சீரான போக்குவரத்துக்கு ஏற்படுத்தப் படும் வழிகளைத் தவறான முறையில் பயன் படுத்தி உயிரைப் போக்கிக் கொள்வதால் எவருக்கு இலாபம் என்று எள்ளளவும் எவரும் சிந்தித்துச் செயற்படுவது இல்லை.

குடாநாட்டை தற்போது உலுக்கிவருவது டிப்பர்கள்தான். வீதி அகலிப்புப் பணிக்கு என்று வந்து சேர்ந்த டிப்பர்கள் விதிகளை மாற்றி எழுதுவனவாக அமைந்து விட்டமை தான் வேதனை தருகின்றது.

எங்கு பார்த்தாலும் மூலை முடுக்குகள் எங்கும் ஓடித் திரிகின்றன இந்த டிப்பர்கள். இரண்டு சைக்கிள்கள் ஒன்றை ஒன்று விலத்த முடியாத பாதைகளில் கூட டிப்பர்கள் வலம் வருகின்றன என்றால் பாருங்களேன். அதுவும் பாரவூர்தி என்ற நிலையில் வேக நிலையில் கட்டுப்பாட்டைக் குறைக்க எண்ணுவதாகத் தெரியவில்லை. உச்சக்கட்ட வேகம்தான் டிப்பர் சாரதிகளின் தாரக மந்திரம்.

இந்த விடயத்தில் உரிய கட்டுப்பாடுகள் விதிக்கப்படவேண்டியது காலத்தின் அவசியம். பெரியளவில் வீதிகள் திருத்த பயன் படுத்தப்படும் ஹன்ரர்கள் இன்று வீட்டுக்கு ஒன்று என்ற நிலையில் காணப்படுவதும் வேதனை தரும் விடயம்தான்.

இன்றைய பயணம் முடிந்தால் சரி நாளை உயிர் வாழ வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலைப்பாட்டில் இவர்களது பயணம் தொடர்கிறதா? என்ற கேள்விதான் இன்று மக்களிடையே உள்ளது. யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு உயிரும் வாகனச் சாரதிகளின் கைகளில் தான் தங்கியுள்ளது என்பதில் இருவேறுபட்ட கருத்துகளுக்கு இடமில்லை.

இறைவனால் படைக்கப்பட்ட உயிரை எடுக்க யாருக்கும் அருகதை இல்லை. ஒரு மிருகத்தைக் கூடக் கொல்வதானால் ஒன்றுக்கு இரண்டு தடவை சிந்திக்க வேண்டிய நிலையில் வீதியில் வாகனம் ஓடும் போது பலதடவைகள் சிந்தித்து அவதானமாகச் செயற்பட வேண்டும்.

விபத்துகள்நாம்நினைத்துநடப்பதில்லை. அவை எதிர் பாராது நடப்பவைதான். என்றாலும் இதைத் தவிர்த்துக் கொள்ள ஒவ்வொருவரும் மனம் வைத்துச் செயற்பட வேண்டும். ஒரு விபத்தில் உயிரிழப்பு ஒன்று இடம்பெறும் போது அதனால் ஏற்படும் வேதனை சொல்லித் தெரிய வேண்டியது இல்லை. இது மட்டுமன்றி குறித்த நபரின் குடும்பம், பிள்ளைகள் அவர்களின் எதிரல்காலம் என்று எண்ணிப்பார்க்கும் போது அவற்றை யார் பார்ப்பார்கள்.

சாதாரண ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் ஒருவர் உயிரிழக்கும் போது குறித்த குடும்பம் நடுத் தெருவுக்கு வந்துவிடும் நிலைமைதான் ஏற்படும். என்னதான் ஒரு சாரதி சரியாக வாகனத்தை செலுத்தினாலும் எதிரே வரும் வாகனம் என்ன நிலையில் வருகிறது என்பதையும் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் வாகனம் செலுத்தவும் கற்றுக்கொள்ளுமிடத்து அனைவரும் பாதுகாக்கப்படுவார்கள்.

சாரத்தியத்தில் அனுபவம் வாய்ந்தவர்கள் என்று மனக்கோட்டை கட்டிக் கொண்டு வாகனம் ஓடினால் அவலம் தன்னால் தேடி ஓடிவரும். இதை ஒரு போதும் நிறுத்த முடியாது. கண் இமைக்கும் நேரத்தில் திசைமாற்றும் விபத்துகள் குறித்துச் சற்று அவதானத்துடன் இருப்போமேயானால் நடப்பது எல்லாம் நன்றாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'உனக்கென்ன விசரே தியாகு படிச்சு என்னத்தைக் கிழிக்கப் போகினம். அவனைப் படிப்பை நிற்பாட்டி முழுசா தொழிலைப் பழக்கு உன்ர தொழிலைப் பரம்பரையாய் செய்ய ஆள் வேணாமே' சொன்ன விதானையார் மீது தியாகுவுக்குக் கடும் கோபம் ஏற்பட்டது.

# அது ஒரு காலம்......



கடலூர் ச.அ.இராசநாயகம்.

அன்று சனிக்கிழமை தியாகுவின் "சலூன்" பரபரப்பாய்க் காணப்பட்டது. சலூன் கடைக்கு முன்னால் பழைய, புதிய, நடுத்தர ரக சைக்கிள்கள் வரிசையில் நிரையாய் நிறுத்தப்பட்டிருந்தன. கடையின் உள்ளே சிறுபிள்ளைகள், இளைஞர்கள், முதியவர்கள் என வாங்கில் 'இருந்தும் நின்றும்' கொண்டிருந்தனர். வெண்மையும் கறுப்பும் கலந்து நார் நாராய் வளர்ந்து நீண்டிருந்த தாடி, மேலுடம்பும் வெறுமை, வேட்டி மடித்து கட்டியது. இதுதான் தியாகுவின் தோற்றம். பம்பரமாய் சுழன்று சுழன்று வேலை செய்து கொண்டிருந்த தியாகு கையினால் தனது தாடியை நீட்டியபடியே ஒருகணம் கடைக்குள் வரிசையாய் இருப்போரை நோட்டமிட்டார். யாருக்கு முன்னுரிமை வழங்குவது என்பதுதான் இப்போது அவருக்குள்ள பிரச்சினை. அங்கே வேளாளர் குலத்தவர்களான விதானையார் பரமர், கொர்ணல் குருசாமி, காத்திகேசு மாஸ்டர், பொன்னர் ஆகியோரும் இருந்தனர். 'தியாகு எனக்கு கன அலுவல் கிடக்குது என்னை மினக்கடுத்தாதை' என்றவாறு விதானையார் பரமர் அவசரப்பட்டார். 'ஓமோம் அம்பாள் கோயில் தலைவரும் அவர் தானே அம்பாளின்ர கொடியேற்றமும் நாளைக்கல்லே அவரை சுணக்கிப் போடாத, கொர்ணல் குருசாமிதான் விதானையாருக்கு ஆதரவாய் பேசினார். "எங்கட கிராமத்தில் ஒரு விசயம் பாருங்கோ ஒரே நாளில் அம்மன் கொடியேற்றமும், மாதா கோயில் கொடியேற்றமும் வருகுது" என்றார் கார்த்திகேசு மாஸ்டர். "ஓமோம் மாஸ்டர் ஒருபக்கம் வருகுது, அதோட மூத்தவளின்ர கல்யாணமும் நெருங்குது, ஒரே யோசனையாய் கிடக்குது" என்றவாறு முடிவெட்டி முடிந்த சிறுவன் ஒருவனை துவாயினால் துடைக்குமாறு தன்னோடு நின்று வேலை பழகும் மகனிடம் கூறினார்.

இப்போ அடுத்த முறையாக விதானையாரை கதிரையில் ஏற்றி தலைமுடி வெட்டத் துவங்கவும் 'தியாகு இது யாரு உன்ர பொடியே' விதானையார் கேட்கவும் 'ஓம் ஐயா! பள்ளிக்கூடம் இல்லாத நாளில மட்டும் வந்து நின்று வேலை பழகுகிறான், தியாகு சொன்னதுதான் தாமதம் 'உனக்கென்ன விசரே தியாகு படிச்சு என்னத்தைக் கிழிக்கப் போகினம். அவனைப் படிப்பை நிற்பாட்டி முழுசா தொழிலைப் பழக்கு உன்ர தொழிலைப் பரம்பரையாய் செய்ய ஆள் வேணாமே' சொன்ன விதானையார் மீது தியாகுவுக்குக் கடும் கோபம் ஏற்பட்டது. எனினும் அதைக்காட்டிக் கொள்ளாமல் பேச்சை வேறுபக்கத்துக்கு இழுக்க எண்ணி "அது சரி விதானையார் இந்த முறை திருவிழாக்கள் என்ன மாதிரி ஐயாவின்ர திருவிழா எப்ப" தியாகுதான் கேட்டான். தனது பிள்ளைகள் வெளிநாட்டில் படிப்பைத் தொடர தியாகுவின் பிள்ளையை படிப்பை நிறுத்தச் சொன்னது தியாகுவுக்கு எரிச்சலைக் கிளப்பியதை உணர்ந்து கொண்ட விதானையார் நாசூக்காய் "ஓ ஓ! பிறகென்ன வருசம் போல ஊரி யற்ற திருவிழா என்டா சின்னமேளக் கோஷ்டி தானே, தம்பற்ற திருவிழாவில 'சின்னமணி' வில்லுப்பாட்டு இருக்கும், கனகர் சின்னராசா மேளக் கோஷ்டி கொண்டு வாறார். அன்றாட பூசைக்கு வர மாட்டாங்கள் சாமி தூக்கக்கூட ஆள் கிடையாது. ஆனா திருவிழாவெண்டா போட்டிக்கு வெளுத்துக் கட்டுவாங்க". எனக் கூறவும் "ஓமோம் தங்கட தங்கட விலாசத்தைக் காட்ட வேணாமே! என தனது வியர்த்த பெருத்த ரோமம் படர்ந்த உடம்பை துவாயினால் துடைத்தபடி அறுவான்கள் எலக்ஷன் வாற பொழுது சொல்லுவாங்கள் இந்த கறண்டு தாறமெண்டு பிறகு ஆட்களையே காணமுடியாது. செல்லியபடி ஒருக்கால் வெளியில் சென்று திரும்பினார். 'இரவு சாணைக் கல்லில் போட்டு தீட்டி வைத்த கத்தியை கடையில் தொங்கவிடப்பட்டிருந்த 'பொலிஸ்பட்டி' பெல்டில் அடித்து கூர்மையை சரிபார்த்துக் கொண்டிருந்த தியாகு வேலையில் மூழ்கினான்.

பல சமூகத்தவர்களையும் கொண்டது அந்தக் கிராமம். அங்குதான் தியாகுவின் வீடும் அவனது சொந்தக்காரர்கள் சிலரது வீடுகளும் இருந்தன. அன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை என்றபடியாலும், மூத்த மகளின் திருமணம் இன்னும் சில தினங்களில் நடைபெற இருப்பதாலும் தியாகுவின் வீடு களைகட்டி இருந்தது. இளைஞர்கள் மரங்களை காவி வரவும் , முதியவர்கள் பந்தல் கால் நடுவதிலும் மும்முரமாய் இருந்தனர். அப்பால் பெண்கள் கூட்டம் ஏக காலத்தில் பலகாரச் சூட்டிலும், கதை அளப்பதிலும், காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தார்கள். சிறுவர், சிறுமிகள் ஓடிப்பிடித்து விளையாடுவதில் லயித்துக் கொண்டிருக்க தியாகுவும் அன்று லீவு நாளானதால் கோப்பரேசன் பக்கம் போய் கணகணப்பாய் வந்து நின்றார். மனுசன் மற்றைய நாள்களில் 'தண்ணி' அடிக்கமாட்டார் தொழிலுக்கு பிழை என சொல்லி 'ஞாயிறு' தினங்களில் சேர்த்து வைச்சு ஒவராய் தண்ணி அடிப்பார். அன்றைய தினம் தான் ஒரு கிழமையாய் தான் கவனித்த பெஞ்சாதி பிள்ளைகள் விட்ட பிழையலை சொல்லி 'வெருட்டி' ஒருகை பார்த்து விடுவார். இப்போ மகளின் கலியாணமும் நெருங்குவதால் தியாகு பாடு ஒரே குஷிதான்.

தியாகுவின் இன்னொரு மகன் ஜி.சீ.ஈ. வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். மூத்த மகன் டோமினிக் கொழும்பில் கடையில் சம்பளத்துக்கு வேலை செய்கின்றான். கடைசி மகன் ரவீந்திரன் ஐந்தாம் வகுப்பில் படிக்கிறான். 'தியாகு... அன்றைய நாளில் கூத்தடிக்காமல் அலுவல்களைப் பார். நாங்கள் இண்டைக்கே பந்தலை மேய்ஞ்சு போடுவம் கட்டாடி சீனிக்குட்டியிட்ட போய்ச் சொல்லு நாளைக்கு வெள்ளை கட்ட வேணுமெண்டு' பந்தல் வேலைகளுக்கு தலைமை வகித்த வேலன் தான் மேலிருந்தவாறு கடுப்பாய் பேசினான். 'வேலா இந்த தியாகு முசுப்பாத்தி எண்டாலும் காரியத்திலை கண்ணாய் இருப்பான்.' என்றவாறு தனது சைக்கிளை எடுத்து நகர "தியாகு நாலைஞ்சு பொடியல் கீழ் நிற்க வேணும் கிடுகு எடுத்துத் தர" வேலனோடு துணைக்கு நின்ற சின்னப்பு சொல்லவும் "ஓமோம் இஞ்சேர் முத்தம்மா இங்க எல்லோருக்கும் தேத்தண்ணி குடுமப்பா நான் ஒருக்கா கட்டாடியை கண்டிற்று அப்படியே ஸ்பீக்கர் காரனிட்டையும் போய்ற்று, கிடாய் வெட்டுறதுக்கு அகுஸ்தீனிட்டையும் சொல்லிப் போட்டு வாறன்" என சைக்கிளில் பாய்ந்து ஏறி ஊண்டி மிதிக்கத் தொடங்கினார். அதுவும் பறக்கத்தான் செய்தது. மாதா கோயில் வளவும், தியாகுவின் வீடும் அருகருகேதான் இருந்தது. கோயில் வளவுக்குள் நுழைந்தது தியாகுவின் சைக்கிள். தோளில் கிடந்த சால்வையை எடுத்துவிட்டு அதே கையினால் 'பிதா சுதன்' குறி இட்டுக் கொண்டார் முசுப்பாத்தி எண்டாலும் 'தியாகு இதைச் செய்ய தவற மாட்டார். சைக்கிள் வேகம் எடுக்கவும் 'கந்தையா கொட்டிலைக் கெட்டியாய்ப போடு' கச்சான் கடை போடுவதற்கு குடில் அமைத்துக் கொண்டிருந்த கந்தையாவைக் கடந்து இந்தத் தியாகுவின் பழைய சைக்கிள் வளைந்து வளைந்து எதிரே பனந்தோப்பை நோக்கி விரைந்தது. "வா! வா! தியாகு நேற்று உனக்கெண்டு வைச்ச கள்ளு புளிச்சுப் போச்சு அதை வெளியில ஊத்தியிற்றன்!" கொட்டிலில் இருந்த அகுஸ்தீன் சொல்லி முடிய "ஓம் அண்ணை நேற்று வர ஏலாம போச்சு இன்னைக்கும் கன அலுவல் கிடக்குது பிலாவுக்குள்ள ஒண்டை விடு" என பிலாவை நீட்டினான். கள்ளை ஒரு உறிஞ்சல் எடுத்துவிட்டு "அதோட ஊருக்குள்ள செத்த வீடும் ஒண்டு" என மிகுதியை உறிஞ்சவும் இஞ்ச வேற யாரு நீதானே ஒரே குடிமகன். வாயில் இருந்த சுருட்டை எடுத்து விட்டு எச்சிலை துப்பிய படியே சொக்கன் கூறவும் "சரி நான் வேற ஆரிட்டையும் சொல்லேல கிடாய் வெட்ட விடிய நேரகாலத்துக்கு வந்திடு நான் ஸ்பீக்கர் காரனிட்டையும் போறன்." என சைக்கிளில் ஏறவும் "தியாகு ஸ்பீக்கர் காரனிட்ட வடிவாய்ச் சொல்லு , உன்ர வீட்டு முன் பனையில ஸ்பீக்கரைக் கட்ட வேண்டும் என்று அப்பதான் பாட்டு இங்கு எல்லாப் பக்கமும் கேட்கும்" என சொக்கன் தான் சொன்னான்.

திருமணம் நல்லபடியாக நடந்து நாள்கள் நகர்ந்து வருடமாகிவிட்டது. இதுவரை 'வசந்தம்' வீசிய தியாகுவின் குடும்பத்தில் புயலுடன் மரண ஓலம் கவிழ்ந்தது இரண்டாவது மகள் தேவி படித்துக் கொண்டிருக்கும் போதே ஒரு நாள் கிருமிநாசினி அருந்திய நிலையில் சடலமாக வீட்டின் பின்புறமாக உள்ள புளியம் மரத்தின் கீழ் கிடந்தாள். காரணம் என்னவென்றே தெரியாது அதிர்ச்சியில் உறைந்து போய்க் கிடந்த தியாகுவின் குடும்பத்துக்கும், அயலவர்க்கும் தேவி எழுதி வைத்த கடிதமே அந்த சோகத்தை சொல்லியது. ஏற்கனவே தான் பாடசாலையிலும் வகுப்பறையிலும் ஆசிரியர் ஒருவராலும் சகமாணவர் சிலராலும் சாதியின் பெயர் சொல்லி ஒதுக்கப்பட்டு, அவமானப் படுத்தப்பட்டிருந்ததாகவும், இந்த நிலையிலேயே நேற்று ஊருக்குள் நடந்த தனது சக மாணவியின் தாத்தாவின் மரணச்சடங்கில் கலந்துகொள்ள ஏனைய மாணவ, மாணவிகளுடன் தானும் சென்றதாகவும் அப்பொழுது அந்த மரணவீட்டில் 'குடிமகனாக குடிமைத் தொழில் பங்கெடுத்துக் கொண்டிருந்த அப்பாவை அங்கு நின்ற ஒரு பெரியவர் "எங்கேயடா அம்பட்டன் இது சிரைக்கிற வேலை மாதிரியே" என மாணவர்கள், சனங்கள் எல்லோர் முன்னிலையிலும் திட்டியது ஏலவே மனம் நொந்து போயிருந்த என்னால் தாங்க முடியவில்லை. அம்மா, அப்பா, அக்கா, அண்ணாமார் மன்னிக்கவும். அப்பா இத்துடனாவது குடிமைத் தொழிலை விடட்டும் என கடிதம் பேசியது. தங்கையின் மரணச் செய்தி தாங்கிய "தந்தி" பிந்திக் கிடைத்ததால் அண்ணன் டோமினிக் பிரேத அடக்கம் எல்லாம் முடிந்த பின்பு தான் கொழும்பிலிருந்து வந்திருந்தான் பைத்தியம் பிடித்தவனாக.

35 வருடங்கள் மூச்சாய் கலைந்து விட்டன. மகளின் திடீர் பிரிவினால் ஆடிப் போய் விட்ட தியாகு தொழிலையே வெறுத்தவராய் அந்த "குடிமைத்தொழிலுக்கு" முழுக்குப்போட்டு வீட்டோடு முடங்கிப் போயிருந்தார். வயது 70க்கு மேலாகியும் கைப் பொல்லு உதவியின்றி நடந்து திரிந்த மனுசன் இப்போ சில மாதமாக படுக்கையில் கிடந்தார். முன்னமே தனது அண்ணரின் மகனின் உதவியோடு மூத்தவன் டோமினிக்கை கனடாவுக்கு அனுப்பியிருந்தார். டோமினிக் உழைத்து தம்பி டேவிற்றையும் கனடாவுக்கு எடுத்து விட்டான். நாள்களும், மாதங்களாகி, வருடமும் ஆகிவிட்டது.

"முத்தம்மா அழுது குழறும் சத்தம் கேட்டு அந்தக் கிராம சனங்களால் தியாகு வீடு நிரம்பிவழிந்தது. ரவீந்திரனும் தனது மனைவி, பிள்ளைகளை இழுத்துக் கொண்டு ஓடி வந்து கொண்டிருந்தான். ஆமாம் அந்தக் கிராமத்துக்கும், அயல்கிராமங்களுக்கும் ஒரேயொரு 'குடிமகனாக' விளங்கி வந்த தியாகு கண்ணை மூடிவிட்டார். தனது தள்ளாத வயதிலும் ஆட்டோ ஒன்றில் வந்து இறங்கினார் கொர்னால் குருசாமி அவருடன் கார்த்திகேசு மாஸ்டரும் வந்திருந்தார். தியாகுவின் முக்கியமான வாடிக்கையாளர்களான இவர்களில் விதானையார் பரமர் பிள்ளைகளுடன் வெளிநாட்டில் 'செட்டில்' ஆகிவிட்டார். 'மாஸ்டர் பிள்ளையள் வந்திருக்கினமோ' குருசாமி தான் கேட்டார். தகவல்கள் சேகரிப்பதில் சமர்த்தரான கார்த்திகேசு மாஸ்டர்'ரெண்டு பெடியளும் பெஞ்சாதி பிள்ளையளோட நேற்று இரவே பிளேன் எடுத்து வந்திட்டாங்கள் 'என சொல்லவும்' அது சரி மாஸ்டர் சில விடயங்கள் அறிஞ்சனான் உண்மையே 'பொடிபோட்டு பேசிய குருசாமி கதிரையை மாஸ்ட்டருக்கு அருகே நகர்த்தி காதோடு பேசினார். தியாகுவின்ர கடைசி மகன் முடிச்சது எங்கட விதனையார் பரமற்ற பேர்த்தியாம். என்னமோ 'இன்ரநெற்' காதலாம் என்று சொல்லுகினம். அந்தத் தொடர்பில் அறிமுகமாகி காதலிச்சு முடிச்சவையாம். போதாக்குறைக்கு தியாகுவின்ரை இன்னொண்டு முடிச்சது யாரைச் சொல்லுங்கோ, பொன்னற்றை பெறாமகளையாம்." மாஸ்டர் சொல்லிமுடித்தார். இப்போ தியாகுவின் பூதவுடல் சனங்களால் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. அவரை மட்டுமல்ல பழைய சாதி சமாசாரங்களையும் புதைப்பதற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையுலகும் புத்துவாட்டி சோமுவும்

எஸ்.எம்.கோபாலரத்தினம்

கே.வி.தம்பு பின்னர் சங்கீத வித்துவானாகவும் விளங்கினார். புத்துவாட்டி சோமுவிடம் சங்கீதம் கற்றார்.

தேநீர் சாப்பாட்டுக்கடையிலும் பல சரக்குக் கடையிலும் இவர் பகலில் சிறிது நேரம் இருப்பார். இவரில்லாத நேரங்களில் இவரது நம்பிக்கைக்குரிய இளைஞர்களிருவர் இரு கடைகளையும் கவனித்துக் கொள்வார்கள்.

யாழ். நகரில் இப்பொழுது மனோகரா தியேட்டர் இருக்கும் இடம் முன்பு பெரிய வளவாகவும் காங்கேசன்துறை வீதிப் பக்கம் இந்த வளவில் இரண்டு மூன்று கடைகளும் இருந்தன. உள் வளவில் ஒரு கிணறும் இருந்தது. இந்த வளவின் நாவலர் வீதியில் வாசலுள்ள ஒரு வீடு அடி வளவில் இருந்ததாக நினைவு. முன்வளவில் விசாலமான ஓலையால் வேயப்பட்ட மண்டபம் போன்ற ஒரு விடுதி என்று சொல்லலாம். இதில் பெருமளவு தலையும் மீசையும் நரைத்த நடுவயதைப் பெரிதும் கடந்த ஒருவர் அமைதியாக அமர்ந்திருப்பார். இளம் வயதும் நடுத்தர வயதும் உடையவர்கள் வயலின் தம்புராக்களுடன் அமர்ந்திருப்பர். சில சமயங்களில் சங்கீதம் கற்கும் ஒருவர் அல்லது இருவர் மட்டுமே இருப்பார்கள். நான் முதலில் சொன்ன அந்தப் பெரியவர்தான் இசையுலகில் பெயர் பெற்றவரும் இன்றும் பெருமையுடன் சங்கீத வித்துவான்கள் மத்தியில் பேசப்படும் புத்துவாட்டி சோமு என்பவராவார். புத்துவாட்டி பரம்பரையைப் பற்றி இன்றும் இசை உலகில் புகழ்ந்து பேசுபவர்கள் இல்லாமலில்லை. புத்துவாட்டி சோமுவின் மண்டபம் மனோகரா தியேட்டர் வந்தபின் கொஞ்சம் சுருங்க வேண்டியேற்பட்டது. ஆனாலும் கே.வி.தம்பு வாத்தியப்பெட்டியுடன் சைக்கிளில் சென்று சங்கீதம் பயின்று வருவது குறையவில்லை. புத்துவாட்டி சோமுவின் சகோதரியின் மகன்தான் பிரபல வயலின் வித்துவான் சண்முகலிங்கம். இவர் இலங்கை வானொலியில் நீண்டகாலம் வயலின் வித்துவானாகப் பணியாற்றினார். வயலின் கச்சேரி நடத்தியிருக்கிறார். வாய்க்குள் எந்நேரமும் வெற்றிலை இருக்கும். இதனால் யாருடனும் அதிகம் பேசமாட்டார். சிரிப்பது கூட அபூர்வம். ஆனால் நல்ல மனிதர். வெற்றிலையைத் தவிர வேறெந்தப் பாவனையுமில்லாதவர்.

கே.வி.தம்பு சங்கீதம் நன்றாகக் கற்று குரு புத்துவாட்டியாரின் பாராட்டையும் பெற்றபோதும் இலங்கை வானொலி வித்துவான்களின் அங்கீகாரம் கிடைப்பது சுலபமாக இருக்கவில்லை. இதே சமயம் 'யாழ்ப்பாணத்தில் சங்கீத சபா ஒன்று' அமைக்கவேண்டும். ஆண்டு தோறும் இந்தச் சபா இசை விழாக்களை நடத்த வேண்டும் என்ற தம்புவின் முயற்சிக்கு பிரபல சங்கீத வித்துவான் என்.சண்முகரெத்தினம், பரம் தில்லைராஜா, ராம் குமாரசாமி, திருமதி சரஸ்வதி பாக்கியராஜா போன்றவர்களின் ஆதரவு கிடைத்தது.

யாழ்ப்பாண நகர சமூகத்தில் வாழ்ந்த பெரியவர்களின் அனுசரணையும் கிடைத்தது. இந்தச் சமயத்தில்தான் து.சீனிவாச மாஸ்ரரைத் தலைவராகக் கொண்டு யாழ்ப்பாணம் ரசிக ரஞ்சனசபா உருவானது. இதன் செயலாளராக யாழ். கல்விக் கந்தோரில் பணியாற்றிய எஸ்.காசிலிங்கமும் பொருளாளராக தம்புவும் தெரிவு செய்யப்பட்டனர். இசை விழாவில் தம்புவின் கச்சேரி பலரையும் பிரமிப்பில் ஆழ்த்தியது.




ரசிக ரஞ்சன சபாவின் முதல் இசை விழா ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் முன்பாக நீளமான பெரிய பந்தலில் அமைக்கப்பட்ட மேடையில் 1950 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடந்ததாக நினைவு. உள்ளூர் கலைஞர்கள் முதல்நாள் நிகழ்ச்சியில் இசை விருந்தளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதேசமயம் சென்னையிலிருந்து ஒரு பாடகி தனிப்பட்ட முறையில் யாழ்ப்பாணம் வந்திருப்பதாகத் தகவல் கிடைத்தது. அந்தப் பாடகியையும் சந்தித்து முதல் நாள் நிகழ்ச்சியிலேயே பாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

குமாரி எம்.கே.கமலகுமாரி என்ற அந்தப் பாடகி முதல் நாள் நிகழ்ச்சியிலேயே பாடி இசை விழாவை ஒரு கலக்கு கலக்கி ரசிக ரஞ்சன சபாவுக்குப் பெயரும் புகழும் ஏற்படுத்திவிட்டார்.

தனது பாட்டின் வேகத்துக்கு பக்க வாத்தியம் கொஞ்சம் பின்னின்றால் இரண்டு கைகளாலும் தனது இரண்டு தொடைகளிலும் தாளம் போட்டு உச்ச ஸ்தாயியில்பாடி வித்துவான்களையே அசத்திவிட்டார்.

இந்த இசை விழா பற்றியே யாழ்ப்பாணம் முழுக்கப் பேசுமளவுக்கு கமலகுமாரியின் இசை விருந்து அமைந்தது. பின்னாளில் கமலகுமாரியின் அரைமணிநேர முக்கால் மணிநேரக் கச்சேரி திருச்சி வானொலி நிலையத்திலிருந்தும் ஒலித்தது.

கமலகுமாரியின் இனிமையான குரலும் இளமையின் அழகுத் தோற்றமும் அவரது இசைக்கு மேலும் மெருகூட்டின என்று சொல்லலாம். தமிழருக்கு உடன் பிறந்த வியாதியான போட்டி, பொறாமை எரிச்சல் ஆகிய குணங்களின் விளைவாக இரசிக ரஞ்சனசபா பிளவுபட்டது.

(தொடரும்)

# பெயர்கள் தரும் பாதைகள்... 6

இ.சத்தியன், கொக்குவில்

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஈரான் }
ஈராக் }

உலகில் அதிக பட்சம் தூக்குத் தண்டனை நிறைவேற்றும் நாடுகள் - துன்பம் கஷ்டம்

| | | |
|---|---|---|
| குபேரன் | - கு | அதிக செல்வம் |
| குசேலர் | - கு | 27குழந்தைகள் - பிள்ளைகள் |
| கட்டார் | - க | உலகின் செல்வந்த நாடு |
| கேம்பிரிட்ஜ் | - கே | உலகின் பொருளாதாரம் நிறைந்த கொலிஜ். |

சொற்களின் வெளிப்புறமாக அமைந்த எழுத்துக்கள் ஆங்கி மொழியின்
கே = K எழுத்துக்குச் சமன். இவ்வெழுத்து தரமானதாக கணிக்க முடியும்.
மேற்குறிப்பிட்டவை 100% இற்கு - 50% இற்கு மேற்பட்டவை அனுபவ ரீதியாகக் காணப்பட்டவை.

தமிழ் மொழியில் அமைக்கின்ற பெயர்களை இனம் காண முடியும். அவைகளை தொகுதி தொகுதியாக பிரித்து அமைக்கப்பட்டுள்ளது. அவற்றில் சாதக பாதகங்கள் அடங்கியுள்ளன. விசேட பெயர் வழி தொகுதிகளுக்கு
(ஸ்ரார் ★ என அடையாளம் அமைக்கப்பட்டுள்ளது. அவைகளை இனம் கண்டு பலன் பெறமுடியும்.

இவைகளை உதாரண பெயர் சொல் தொகுதிகளாக இனம் கண்டு பலன் பெற முடியும்

| 1.★ | 2.★ | 3.★ |
|---|---|---|
| கந்தன் | வசிட்டர் - சி | வள்ளுவர் - ளு |
| கர்த்தர் | அதியமான் - தி | அர்ச்சுனன்- சு |
| அனர்த்தன் | பைபிள் - பி | அநுமார் - நு |
| அன்பழகன் | அமிர்தன் - மி | சண்முகம்- மு |
| கணவன் | மனைவி - வி | கஜமுகன் - மு |
| மாணவன் | ஆசிரியர் - சி | அசுரன் - சு |

| 4.★ | 5.★ |
|---|---|
| காரைக்கால் - ரை | கண்ணகி -கி |
| அடைக்கலநாதன் - டை | வள்ளி - ளி |
| ஔவை - வை | பார்வதி - தி |
| துர்க்கை - கை | லக்ஸ்மி - மி |
| அம்பிகை - கை | சரஸ்வதி- தி |

| 6. | 7. |
|---|---|
| சோனியா - யா | குந்திதேவி - கு |
| சந்திரிகா - கா | சூர்ப்பனகை - சூ |
| சிறிமா - மா | அசமுகி - மு |
| விஜயகலா - லா | அருள்நங்கை - ரு |
| விக்கினராஜா - சா | சுபத்திரை - சு |

| 8. ★ | 9. ★ |
|---|---|
| யெயலலிதா - யெலி | நிறோசி |
| நமெனி - மெனி | விமலேஸ்வரி |
| மெஸ்ஸி - மெஸி | சத்தியமூர்த்தி |
| பெகி - பெகி | தெட்சணமூர்த்தி |
| செவ்வந்தி - செதி | பஞ்சமூர்த்தி |
| அமெரிக்கா - மெரி | கானமூர்த்தி |
| கெவின் - கெவி | |
| ஜெனிவா - ஜெனி | |
| கென்னடி - கெடி | |
| லெனின் - லெனி | |

| 10. ★ | =11. ★ | ★ |
|---|---|---|
| கர்ப்பம் | விபுலானந்தர் | வளர்பிறை |
| குழந்தை | கிருபானந்தவாரியார் | அருமைத்துரை |
| பிள்ளை | விசுவாமித்திரர் | திருநாவுக்கரசு |
| மாணவன் | மிகுந்தன் | பொன்னுத்துரை |
| வாலிபன் | சின்னத்துரை | |
| [illegible] | பெரியசாமி | |
| | [illegible] | |
| | செல்லத்துரை | |

(A) ?
காந்தி
கடாபி
சர்தாரி
.....

(B) ★
கண்ணகி
பார்வதி
லக்ஸ்மி
வள்ளி

எண் சோதிடத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் மற்றும் பெயர் அமைப்பாளர்கள் தமிழ் பெயர்களைத் தெரிவு செய்யும்போது இங்கு உதாரணமாக எடுத்துக்காட்டப்பட்ட (ஸ்ரார்) ★ அடையாளம் அமைந்த பெயர் தொகுதிகளின் பெயர்களைத் தெரிவு செய்வோமாக இருந்தால் மிகவும் முன்னேற்ற பாதையாக அமையும் என்பதை நாம் உறுதிபடக் கூற முடியும். நான் கண்ட அறுபவங்களை இங்கு உங்களுடன் பகிர்ந்துகொள்ள முடியும். இவைகள் 100 இற்கு- 50 வீதம் மேல் உண்மையானவை.

| 12. | ★ |
|---|---|
| மூர்த்தி - | சத்தியமூர்த்தி |
| தேவன் - | யெயதேவன் |
| சீலன் - | சத்தியசீலன் |
| ரூபன் - | சிவரூபன் |
| தேவி - | பாக்கியதேவி |

| 13. | ★ |
|---|---|
| விவேனாந்தர் | |
| திலீபன் - | பிளனோரியா |
| கிரீடம் | |
| அபிகேள் - | கங்காதேவி |
| வெற்றோரி - | அபிகேசன் |
| யெயதேவன்/வி | |
| செரினா | |

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோன்மணி-புருஷோத்தமன்

## கனவுக்காதல்

சேரனான புருஷோத்தமன் மனோன்மணியைக் கனவில் கண்டு அவள் யார் என்று அறிவதில் விடுதல் அறியா விரும்பினன் ஆக இருக்கிறான். போர் என ஒன்றுவந்தால், அந்த ஆரவாரத்தில் இந்தக் காதல் சுரம் நீங்குமே எனக் காலங்கழித்து வருகிறான்.

பண்டைய தமிழ் நாட்டில் சேர, சோழ, பாண்டியர் ஆட்சி புரிந்த காலம். பாண்டிய மன்னனான புகழ்பெற்ற ஜீவகவழுதி என்பவன் மதுரையில் இருந்து அரசாண்டு வருகிறான். அவன் பளிங்கு போலும் வெள்ளை உள்ளம் படைத்தவன். அவனுக்கு குடிலன் என்னும் சூழ்ச்சித்திறன் மிக்க மந்திரி ஒருவன் இருந்தான். அந்தக் குடிலன், அரசனுக்கு விசுவாசமுள்ளவன் போல நடித்து தனது எண்ணத்தை நிறைவேற்றும் நயவஞ்சகனாக இருக்கிறான்.

அவன், தனது எண்ணத்தை பூர்த்தி செய்வதற்கு மதுரை நகரம் உகந்ததாய் இல்லை என்பதாக எண்ணி, ஜீவகனை ஏமாற்றி, திருநெல்வேலிக்கு அரண்மனையை மாற்றச் செய்கிறான்.

அங்கே கொலுமண்டப அலங்கார வேலை நடைபெற்றுக் கொண்டு இருக்கும் சமயம், ஜீவகனின் குலகுருவான சுந்தரமுனிவர் அவ்விடம் வருகிறார். அவரை அழைத்துக்கொண்டு குடிலனோடு நகரவாசிகள் சிலரும் வருகிறார்கள்.

ஜீவகவழுதி: "வருக! வருக! குரு கிருபாநிதே!
திருவடி தீண்டப் பெற்ற இந்தச் சிறுகுடில்
அருமறைச் சிகரமோ? ஆலநன் னிழலோ?
குருகுல விஜயன் கொடித்தேர்ப் பீடமோ?
யாதென ஓதுவன்? தீதற வானத்து
இருந்தருள் இறைவ! என்பவ நாசம்
இரிந்திட நின்பதம் இறைஞ்சுவல் அடியேன்"

என வாயார வாழ்த்தி முனிவருக்கு பாத பூசை புரிந்து வரவேற்கிறான். சுந்தரமுனிவர்: வாழ்க! வாழ்க! மன்னவ! வருதுயர்

சூழ்பிணி யாவும் தொலைந்து வாழ்க!
சுகமே போலும், மனோன்மணி?

என அரசனை வாழ்த்திய முனிவர், மனோன்மணி எனும் ஜீவகன் மகளுடைய சுகத்தையும் விசாரிப்பதைப் பார்க்கிறோம். மனோன்மணிக்கு அப்போது வயது பதினாறு. அதற்குள் தாயை இழந்துவிட்டாள். அதனால் தந்தையும் தாயுமான ஜீவகனின் மனதில் கவலை அதிகம். இதுவும் சுந்தரமுனிவருக்குத் தெரிந்ததே. அதனால், ஜீவகனின் ஒரே வாரிசாக விளங்கும் மனோன்மணிக்கு குடிலனால் ஏதும் இடையூறு வரக்கூடும் என்ற அச்சத்தில் முக்காலமும் உணர்ந்த முனிவர் எச்சரிக்கையுடன் இருக்கிறார். முனிவருக்கு புதிய மண்டபங்களைக் காட்டுமாறு ஜீவகன், தனது மந்திரியான குடிலனைக் கேட்கிறான்.

குடிலன்: வந்தருள் கிருபா சுந்தர மூர்த்தி!
நீயறி யாத தொன் றில்லை; ஆயினும்
உன்னடி பரவி உரைப்பது கேண்மோ;
தென்பாண்டி நாடே சிவலோக மாம் என
முன்வாத வூரர் மொழிந்தனர்; அன்றியும்
..........................................................
எல்லா மாகிய கண்ணுதல் இறைவனும்
பல்லாயிரத்து தேவரும் பிறரும்

வெள்ளியங் கிரியில் கூடிநின்ற பொழுது, தெற்கே அகத்திய முனிவர் வந்து பூபாரத்தைச் சமநிலைப் படுத்தியதாகவும் குடிலன் கூறுகின்றான்.

தில்லையுட் கூத்தனே! தென் பாண்டி நாட்டானே! என்றும் தென்னாடுடைய சிவனே போற்றி; எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்றும் வாதவூரர் பாடியதைப் புலவர் இங்கே எடுத்தாண்டிருப்பது காண்கிறோம்.

முனிவர் அப்பொழுது, 'நின் புதல்வியை ஒரு தரம் கண்டுபேச இதுதக்க தருணமோ' எனக் கேட்டு, ஜீவகனுடன் சென்று மனோன்மணியோடு உரையாடிவிட்டு, அரசனிடம் விடைபெற்றுச் செல்கிறார். குடிலனுந் தன் இருப்பிடம் திரும்புகிறான். இவற்றையெல்லாம் பார்த்து நின்ற சேவகர் (தமக்குள்)

"குடிலன் செய்யும் படிறுகள் [வஞ்சக்குணம்]முனிவர்
அறியா தவரோ? சிறிதாயினும் அவன்
உரைத்தது கருத்திடை கொண்டிலர் உவர்த்தே"

எனப் பேசிக் கொள்கின்றனர்.

சுந்தரமுனிவர் ஜீவகனின் திருநெல்வேலி அரண்மனை வளாகத்தில் தமக்கென ஒரு ஆச்சிரமத்தை அமைக்கச் செய்து, குடிலனின் சூதுகளைக் கவனித்து வருகிறார்; ஒரு இரகசிய சுரங்கப் பாதையையும் செய்வித்தார்.

மனோன்மணிக்கு வாணி என்னும் தோழி இருக்கிறாள். அவள் மிகவும் விசுவாசமுள்ளவள். அந்த வாணிக்கும் அங்குள்ள நடராஜன் என்பவனுக்கும் காதல் தொடர்பு இருந்து வருகிறது. அந்த விஷயம் குடிலனுக்குத் தெரியும். குடிலனோ தன் மகன் பலதேவனுக்கு வாணியை மணம் செய்துவைக்க முயற்சித்தான்; அதனை வாணி ஏற்கவில்லை.

இஃதிவ்வாறாக மனோன்மணி தனது பூர்வஜென்ம பலனால் சேர நாட்டு இளவரசனான புருஷோத்தமன் என்பவனைக் கனவில் கண்டு, "அவன் யாராய் இருக்கலாம்?" என்ற சிந்தனையில் மூழ்கி இருக்கிறாள்.

ஒரு நாள், மனோன்மணி தன் தோழி வாணியுடன் 'கழல்' விளையாட்டில் ஈடுபடுகிறாள்.

மனோன்மணி: துணையறு மகளிர் மேல் சுடுகணை தூர்ப்பவன்
அணைகிலன் அரன்முன் என்று ஆடாய் கழல்
அணைந்து நீ றானான் என்று ஆடாய் கழல் என்று பாட,
வாணி: நீறாயினால் என்னை? நேர்மலர் பட்டபுண்
ஆறா வடுவே என்று ஆடாய் கழல்
அழலாடுந் தேவர்க் கென்று ஆடாய் கழல் எனவும்,
மனோன்மணி: தெருவில் பலிகொண்டு
திரிதரும் அம்பலத்து
ஒருவர்க் குடைந்தான் என்று ஆடாய் கழல்
உருவங் கரந்தான் என்று ஆடாய் கழல் என்று பாட
வாணி: உருவங் கரந்தால் என்? ஓர் மலர் அம்பினால்
அரையுரு வானார் என்று ஆடாய் கழல்

(அந்நட ராஜரென்று) ஆடாய் கழல் என வாணி நடராஜன் பெயரை சிலேடையாக்கி (மனதுள்)ச் சொன்னது கேட்டு மனோன்மணி சிரித்ததும், வாணி நாணம் மேலிட்டு முகஞ்சிவந்து நிற்பதாகப் புலவர் காட்டுகின்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் வாணி, தான் மனதால் விரும்பாத பலதேவனை அவன் தந்தை, தனக்கு மணம் முடித்து வைக்க எண்ணுகிறான் எனக்கூறி ஆயினும், தான் தன் காதலன் நடராஜனுக்கு ஊறு விளைவிக்கமாட்டாள் எனவும், மனோன்மணியிடம் கூறுகின்றாள். அப்பொழுது மனோன்மணி அவளைத் தேற்றி ஆறுதல் கூறி, "கடவுள் உன்னைக் கைவிடமாட்டார்" என்கிறாள்.

அந்தச் சமயம் வேறு தோழியரோடு செவிலித்தாய் வருகிறாள். மனோன்மணியைப் பார்த்து,

தாயே! வந்து பார்; நீயே வளர்த்த
முல்லையும் நறுமுகை முகிழ்த்தது;
வல்லை நீ
காதலில் கவிழ்வை போலும்!
என்று சொன்னபொழுது, மனோன்மணி,
போடி, நீ யாது புகன்றனை? தவத்தை
நாடி நான் இருக்க நணுகுமோ என்மனம்
துச்சமாம் இச்சையாற் சோர்வு?

என இடை மறித்துச் சொல்லவும், இன்னொரு தோழி,




வந்து நீ நோக்கு; சந்தமார் முல்லை
நிரம்ப அரும்பி நிற்கும் தன்மை
இன்றிரா அலரும் எல்லாம்-எனச் சொல்கிறாள். அப்பொழுது வேறு ஒருத்தி, "ஆமாம்; நான் உண்டு பண்ணி வளர்க்கும் முல்லை பூக்கும் பொழுது எனக்கு மங்கல நாள் வரும் என்று என்தாய் சொன்னாள்" எனக் கூறி, இப்படியொரு வழக்கம் பழைய தமிழ் மக்களிடையே இருந்து வந்துள்ளது என்பதை உறுதி செய்கிறாள். இங்ஙனம் கேலிக்குள்ளான மனோன்மணியுந் தோழி வாணியும் விளையாடலை விட்டு இல்லந் திரும்புகின்றனர்.

சேர நாட்டுக்கு நடராஜனைத் தூது செல்ல விடுவோம் எனச் சுந்தரமுனிவர் சொன்னபொழுதிலும், நடராஜனை அனுப்பினால் தனது எண்ணம் பலிக்காது என எண்ணிய குடிலன், தன் மகனை அனுப்பலாம் எனக் கூறியதும் ஜீவகன் அதற்கு உடன்பட்டுவிடுகிறான்.

அங்கே, சேரனான புருஷோத்தமன் மனோன்மணியைக் கனவில் கண்டு காமுற்று, அவள் யார் என்று அறிவதில் விடுதல் அறியா விரும்பினன் ஆக இருக்கிறான். போர் என ஒன்றுவந்தால், அந்த ஆரவாரத்தில் இந்தக் காதல் சுரம் நீங்குமே எனக் காலங்கழித்து வருகிறான்.

இங்கே, சுந்தரமுனிவரைப் பற்றித் தரக்குறைவான வார்த்தைகளால் குடிலன், ஜீவகமன்னனுக்கு எடுத்துரைத்து, அவற்றை நம்பும்படி செய்துகொண்டிருக்கிறான்.

துறந்தார் முற்றுந் துறந்தவ ரல்லர்;
நிலைபெற நிரம்பாது அவர்க்குள ஆசை;
முசிப்பிலா மன்னர் திரவிய முற்றும்
கௌசிகன் இரக்க, ஓர் மௌலி வேந்தன்
பட்டபாடு உலகில் யாவரே பட்டுளர்?
இச்சை யற்றவர் இச் சகத்து யாவர்?

என எடுத்துக் காட்டி, அரிச்சந்திரன் கௌசிகமுனிவரால் பட்டபாட்டை குடிலன் கூறி, அதனை ஜீவகன் உணர வைக்கிறான். அங்கு நின்ற நாராயணன் இதனைச் செவிமடுத்து,

ஐயோ! பாவி! அருந்தவ முனிவரைப்
பொய்யன் ஆக்குவன்; புரவலனோ எனில்
எடுப்பார் கைப்பிள்ளை; தடுப்பார் யாரே?

என மனதில் கொண்டு, சில வார்த்தைகளைச் சொன்னான். ஆயின் அதனை ஜீவகன் மனங்கொள்ளவில்லை. அப்பொழுது அவ்விடம் வந்த வாணியின் தந்தையான சகடர், குடிலன் வசப்பட்டவராக, தன் மகளைக் குடிலன் மகன் பலதேவனுக்கு மணம் முடிக்கத் தான் எண்ணுவதாகவும், இல்லையேல் தான் இறப்பதே மேல் எனவும் ஜீவகனிடம் சொல்கிறான். இந்தச் சமயத்திலும் நாராயணன், அரசே! அரிச்சந்திரன் சோற்றுக்காகத் தன் மகனை விற்றான். அதுபோல, கிழவனான சகடர் தன் மகளை விற்கப் பார்க்கிறார் எனக் கூறிய போதும், அதனை ஏற்றுக்கொள்ளாத ஜீவகன், சினங்கொண்டு நாராயணனை அடக்கி விடுகிறான். இந்த நாராயணன், நடராஜனின் நண்பன்; நேர்மையானவன். அத்துடன் சிறந்த போர் வீரனும் ஆவான்.

மனோன்மணியின் காதல் சுரம் அதிகரிக்கின்றமையால் அவளது இயல்புநிலை மாறிவிட்டது. அதனை அறியாத ஜீவகன், ஏதோ சுகவீனம் என எண்ணி, குடிலனிடம் யோசனை கேட்கிறான். மனோன்மணியின் செவிலித்தாயும் தோழியரும் வந்து அவளுக்கு பலவித பணிவிடைகளைச் செய்துகொள்கின்றனர். படுக்கையை மாற்றியும், தெய்வத்துக்கு நேர்த்தி செய்தும் பார்க்கின்றனர். சில தோழியர் சாமரை வீசிக்கொண்டே நிற்கின்றனர்.

அவையெல்லாம் எரிமேலிட்ட மெழுகாய்ப் போயின. அவ்விடம் வந்த குடிலன், "மனோன்மணிக்கு தவஞ் செய்யும் ஆசை இருப்பதாக முன்பு சொல்லியிருக்கிறாள்; அதற்கு ஏற்ப, முனிவர் ஏதாவது மந்திரம் செய்திருப்பார் என நான் சந்தேகப்படுகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போகிறான். போகும் போது அவன், "ஜீவகனுக்குச் சொந்தப் புத்தி இல்லை; தன் மகள் காமவயப்பட்டாள் என்பதைக் கூட அவன் உணரவில்லை; எல்லாம் நன்மைக்கே" என தனக்குள் எண்ணிக் கொள்கிறான்.

(தொடரும்)



மட்டுவில் நா.நல்லதம்பி

# நெற்றிக் கண் என்பது நிஜமா?

மருத்துவர் நி.தர்ஷனோதயன்,
வைத்திய அதிகாரி, மாவட்ட
ஆயுர்வேத வைத்தியசாலை மன்னார்.

"நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே" என்று சிவபெருமானிடம் நக்கீரர் கேட்டதாகப் படித்திருக்கிறோம். உண்மையில் மனிதனுக்கு நெற்றிக்கண் இருக்கிறது என தற்போது ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஐம்புலன்களில் தலையாயது கண்தான். கண்களின் முதிர்ச்சியையும், பார்வைப் புலனின் வளர்ச்சியையும் பொறுத்து உயிரினங்களுக்கு கண்களின் தேவையும் எண்ணிக்கையில் குறைகிறது. நூறு கண்களை உடைய உயிரினங்களிலிருந்து கண்ணே இல்லாத உயிரினம் வரை உலகில் காணப்படுகின்றன. மெக்ஸிகோவில்வாழும் ஒருவகை மீன் இனங்களுக்கு கண்கள் இல்லை.

நில நீர் வாழ்வன, மீன்கள், ஊர்வன, பறப்பன, பாலூட்டிகள் போன்ற உயிரினங்களுக்கு மூன்று கண்கள் உள்ளன என்பது ஆச்சரியமாக இருக்கலாம். மூன்றாவது கண் எமக்கு புலப்படாததற்குக் காரணம் அந்தக் கண் மூளையின் உள்ளே அமைந்திருப்பதாகும். பட்டாணிக் கடலை அளவில் ஒரு கூம்பு போன்ற நரை கலந்த சிவப்பான உறுப்பு (reddish-gray) நடுமூளையின் பின் புறத்தில் (dorsal surface) அமைந்துள்ளது. அதன் எடை 0.1 கிராமிலிருந்து 0.2 கிராம் வரை இருக்கும். அதன் பெயர் பீனியல் உடல் (pineal body) என்பதாகும். இதைத்தான் 'கண்' என்கின்றனர்.

இது கண்ணைப் போன்ற அமைப்பைக் கொண்டுள்ளது என்றும் ஒரு காலத்தில் இது புற உலகோடு தொடர்பு கொள்ளும் வகையில்மண்டை ஓட்டில்துவாரம் ஒரு இருந்திருக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர். புதையுண்டு இருந்த சில விலங்கினங்களை ஆராய்ந்ததில் கண்குழி போன்ற அமைப்பு தலைப் பகுதியில் இருந்ததை இதற்கு ஆதாரமாகக் கூறுகின்றனர்.

பீனியல் உறுப்பிற்கு விழி ஆடி போன்ற பாகமும், உள்ளே கண்ணில் இருப்பது போன்ற ஜெலியும் விழித்திரையும், ஒளி நரம்புகளும் உள்ளன.

இது தவளைக்கு தலை மகுடத்திலும் பல்லிகளுக்கு பக்கவாட்டில் தோலால் மறைக்கப்பட்ட இடத்திலும் அமைந்துள்ளது. இதன் மூலமாகத்தான் இவை பார்க்கின்றன. இந்த உறுப்பு வெளிச்சத்துக்கு எதிர்வினை புரிகிறது. நிறங்களை வேறுபடுத்தி அறிந்துகொள்ள உதவுகிறது. குளிர் காலத்தில் இந்தப் பிராணிகளின் உடலில் வெப்பநிலையை சீராக்குவதில் உதவுகிறது. இதனால்தான் இவ்வுயிர்கள் அதிக வெப்பத்திலிருந்தும், அதிக குளிரிலிருந்தும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடிகிறது. மேலும் தோலின் நிறத்தை மாற்றுவதிலும் உதவுகிறது. பகலா, இரவா என்பதை முதலில் அறிய உதவும் உறுப்பு இந்த மூன்றாம் கண்தான்.

மூளைப் பகுதியில் காணப்படும் Astrocytes எனப்படும் நரம்பு அணுக்கள், பீனியல் உறுப்பில் மட்டுமே காணப்படுகின்றன. மற்றைய சுரப்பிகளில் இவை இல்லை. மூளை-ஹைபோதலமஸ்-பிட்யூரறி சுரப்பி (Brain-Hypothalamus-Pituitary gland) ஆகியவற்றோடு இணைந்து மனிதனின் பல்வேறு உளச் செயல்களை இது கட்டுப்படுத்துகிறது என்கிறார்கள்.

பரிணாம வளர்ச்சியில் மனிதனின் இரு கண்களும் முழுமையான வளர்ச்சியைப் பெற்றுவிட்டதால், மூன்றாம் கண்ணின் தேவை குறைந்து உள்ளுக்குத் தள்ளப்பட்டு விட்டது என வாதாடுகின்றனர். ஆண்களின் உடல் உறவு சக்திக்கும் பீனியல் உறுப்புக்கும் தொடர்புள்ளதாக அறியப்பட்டுள்ளது. வயோதிபத் தன்மையை இதுதான் நிர்ணயம் செய்கிறதோ என்கிற ஐயம் சில ஆய்வாளர்களிடம் எழுந்துள்ளது. நெற்றிக்கண் பற்றி ஆய்வுகள் உலகின் பல இடங்களில் தொடர்ந்தும் நடந்த வண்ணம் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றே செய்வதில் தானே ஆனந்தம்...



ஆர்.கே.மேனன், ஆசிரியர், யா/சென்சாள்ஸ்.ம.வி

**கனவுகள் நனவாக வில்லையெனில் காண்பதெல்லாம் கருமையாகின்றது. துன்பத்தின் விளிம்பில் விகாரப்பட்ட மனநிலைகள் தோன்று கின்றது. இதுவே சமூக முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் முள்ளந்தண்டு ஆகின்றது.**

எமது சமூகத்தில் இன்று பிளவுகளும் முரண்பாடுகளும் அதிகரித்து வருகின்றன. குடும்பங்களிற்கிடையில் விவாகரத்துக்கள் மலிந்து வருகின்றன. பெற்றோர்கள் பிள்ளைகளிடத்தில் பிரிவுகள் ஏற்பட்டு வருகின்றன. வன்முறை வார்த்தைகளும், வாள்வெட்டுக்களும் மேலோங்கிக் காணப்படுகின்றன. புரிந்துணர்வு இன்மைகளால் புதுப் புது கலவரங்கள் உருப்பெறுகின்றன. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் பலவாக இருந்தாலும், நினைத்தது கிடைக்கவில்லை என்கின்ற மன நெருக்கீடும் ஒரு காரணமாகும்.

நாம் பல துன்பங்கள் துயரங்கள் பட்டு இல்வாழ்வியலை வளமாக்குகின்றோம். நாமெல்லாம் சாதாரண மனிதர்கள் அல்லவா? எமக்குள்ளும் ஆசைகள், உணர்வுகள், எதிர்பார்ப்புக்கள் என்பனவெல்லாம் உண்டு. இதனை அடிப்படையாகக் கொண்டு எமது எதிர்காலம் எப்படியெல்லாம் இருக்க வேண்டுமென கனவுகளை சுமந்து வாழ்கின்றோம். இந்தக் கனவுகள் நனவாகவில்லையெனில் காண்பதெல்லாம் கருமையாகின்றது. துன்பத்தின் விளிம்பில் விகாரப்பட்ட மனநிலைகள் தோன்றுகின்றது. இதுவே சமூக முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் முள்ளந்தண்டு ஆகின்றது.

மேலோட்டமாக எமது சமூகப் பிரச்சினைக்கான காரணங்களைத் தேடுகின்றோமே தவிர ஆளமான பின்னணிகளை நாம் சீர்தூக்கிப் பார்ப்பதில்லை. புரிந்துணர்வுடன் கூடிய உண்மை அன்பின் உச்சத்தில் அணைக்கின்ற அன்புத்துணை வேண்டுமென்று ஆசைப்படுகின்றோம். கிடைக்கவில்லையாயின் துடிக்கிறோம். 'சரியோ பிழையோ எனக்காகவே அத்துணை வாழ வேண்டும். என்னை மற்றவர்கள் மத்தியில் விற்கக் கூடாது. எடை போடக் கூடாது' என்று ஆசைப்படுகின்றோம். கிடைக்கவில்லையானால் விம்முகின்றோம்.

நாம் இந்தச் சமூகத்தில் நல்ல நிலைக்கு வர வேண்டும்.

பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும். எனது பிள்ளைகள் வசதி வாய்ப்போடு வாழ வேண்டும். கல்வியால் கௌரவம் சேர வேண்டும் என்றெல்லாம் ஆசைப்படுகின்றோம். இதற்காக இரவு பகல் பாராமல் வியர்வை சிந்தியும் கூட பயனேதும் இல்லையென்றால் இவர்கள் மனங்களில் இரவு பகலாகத் தோன்றும் பகல் இரவாகத் தோன்றும் நிதானங்கள் நிழலாடும். நாமெல்லாம் மனிதர்கள் என்பதால் இதற்காக தடம் புரள்கின்றோம். முரண்படுகின்றோம். சற்று அனுபவம் முதிர்ந்த நிலையில் ஆழமாகச் சிந்தித் தோமானால் இதற்கெல்லாம் தீர்வு கிடைக்கும். எதை நாம் கொண்டு வந்தோம் இங்கு நாம் அதை இழப்பதற்கு? எதற்காக அழுகின்றோம் எது கிடைக்குமென்று? சற்று சிந்தித்துப் பாருங்கள், அர்த்தமான ஆழமான கண்ணதாசனின் வரிகள் ஞாபகத்திற்கு வரும்.

"கடமையை இன்றே செய்வதில் தானே ஆனந்தம்"

மனிதர்கள் என்று பெயரெடுத்து ஆறாவது பகுத்தறிவில் ஆழம் கண்டு வாழும் நாம் மீண்டும் மீண்டும் ஏன் துன்பங்களை சுமக்கத் தயாராகின்றோம். முரண்பாடுகளை எதற்காக வளர்க்கின்றோம்?.. இந்த சமூகத்தில் யார் கெட்டவன்? யார் நல்லவன்?.. எது துன்பம்? எது சந்தோசம்? சற்றுசிந்தித்துப் பாருங்கள் "எனது குடும்பத்தின் வாழ்வியலை நானே தீர்மானிக்க முடியவில்லையானால் இந்த பூமியில் நான் கொட்ட மடிப்பதற்கு என்ன அர்த்தம்"

ஒரு வரியில் ஒரே மொழியில் இந்த வாழ்வியலுக்குப் பதில் உண்டு. அது தான் "கடமையை இன்றே செய்வதில் தானே ஆனந்தம்"எதிர்பார்ப்புக்கள், ஆசைகள் எம் மனங்களில் இருக்கும் போதுதான் துன்பங்கள் எம்மைத் தொடர்ந்து வரும். யாருக்காக வாழ்கின்றோம், எதற்காக வாழ்கின்றோம் என்ற அடிப்படையில் எமக்காக ஒதுக்கப்பட்ட கடமைகளை அன்றே செய்யவேண்டும். துன்பங்கள் தொலையும். உலக மேடையில் சிறிது காலம் நிலைத்திருக்கும் உறவுகளின் சந்தோசத்துக்காக கடமையை இன்றே செய்வதில் தானே ஆனந்தம்.

# சிரமதான சிங்கம்..

சிரமத்தைத் தானமாகச் செய்துவரும் சிங்கம் கடந்த வாரம் தனது பரிவாரங்களுடன் கிளிநொச்சி வந்து படை ஒன்றைத் திரட்டிச் சிரமதானம் செய்தது.

இந்தச் சிரமதானத்தில் கிளிநொச்சி கல்விச் சமூகம் கலந்துகொள்ள வேண்டும் என்ற கட்டளைகளுக்கமைவாக சிங்கத்தின் சீற்றத்துக்குள்ளானால் பாதிக்கபட வேண்டியிருக்குமோ என்ற பயத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பெருமெடுப்பில் போட்டிபோட்டுக் கலந்து கொண்டனர்.

சிங்கம் வாகனத்தில் இருந்து இறங்கி சிங்க நடை போட்டு வந்து புதிய முதலைமார்க் மண்வெட்டியைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு ஒரு கையால் வேட்டியைத் தொடை தெரியத் தூக்கிப் பிடித்தபடி "டிங்கு... டிங்கு.." என்று ஓடிச் சென்று மூசி மூசி வெட்டியது. இதைப் பார்த்த சிங்கக் குட்டியும் ஓடிச் சென்று புதிய மண்வெட்டியை எடுத்துக் கொண்டு சென்று சிங்கத்தின் பின்னே நின்று வெட்டியது.

சிங்கத்தின் முன்னால் வீடியோக் கமராக்கள், புகைப்படக் கருவிகள் எல்லாம் 'பளீச் பளீச்' என்று மின்னி மின்னி மறைந்தன. சிங்கத்துக்கு ஒரே மகிழ்ச்சி, குஷி.

சிங்கம் சிலுப்பிக் கொண்டு சீறிச் சீறி வெட்டியதைப் பார்த்தவர்கள் கூறினார்கள். "இந்த ஆள் புல்லின் பரம்பரையையே அழிக்கிறான் பார்" புல்லின் வேர் போற இடம் வரை வெட்டிப் புல்லுக் கொட்டையையே வெட்டித் தாக்குறான் பாருங்கோ" என்று.

இதைக் கேட்ட இன்னொருவர் கூறினார் "புல்லை மட்டுமோ இவர் அழிக்கிறவர்? இவரைப் பற்றி உங்களுக்கு இன்னும் தெரியேல்ல போல".

சிரமதானச் சிங்கம் 5 நிமிடங்கள் புல் அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவிட்டு வாகனத்தில் ஏறி சுற்றி வந்து பார்த்துவிட்டு மீண்டும் வந்து கர்ச்சித்து மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வேறு எங்கு சிரமத்தை தானம் செய்யலாம் என்ற சிந்தனையுடன் வாகனத்தில் ஏறிச் சீறிப் பாய்ந்தது 'தியேட்டர்' குகை நோக்கி...!

**கிளிநொச்சியான்.**

# நம்பிக்கைதான் வாழ்க்கையா?

- சாயினி

ஒரு ஊரில் செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவர் தம் வண்டிக்காரனை அழைத்து, "நாளை காலை நாம் பக்கத்து ஊருக்கு ஒரு திருமணத்துக்குச் செல்லவேண்டும். திருமணம் காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. அதனால் இரவு 3 மணிக்குக் ஆயத்தம் செய்தால்தான் போகமுடியும். நீ மறந்துபோய் தூங்கிவிடாமல் எழுந்து வண்டியில் மாட்டைக் கட்டிவிட்டு என்னை எழுப்பிவிடு" என்று சொன்னார். வண்டிக்காரனும் சரி என்றான்.

பின் அந்த செல்வந்தர் அந்த வண்டிக்காரனிடம்... 'ஆமாம்... எந்த மாடுகளை வண்டியில் பூட்ட இருக்கிறாய்?" என்றார்.

"நேற்று அந்த செக்குக்காரரிடம் வாங்கினோமே இருமாடுகள். அவற்றைத்தான் ஐயா" என்றான் அந்த வேலைக்காரன்.

இவரும், "மறந்துடாதே.. தூங்கிவிடாதே" என்று எச்சரித்துவிட்டுத் தூங்கச் சென்றுவிட்டார்.

இவனும் சரியான நேரத்துக்கு எழுந்து மாடுகளைப் பூட்டிவிட்டு மெத்தைகளெல்லாம் போட்டுவிட்டு செல்வந்தரை சரியாக 2.45 மணிக்கு எழுப்பினான்.

நல்ல தூக்கத்திலிருந்த அவரும் பாதிக் கண்களைத் திறந்து கொண்டு வந்து மீதித் தூக்கத்தை மாட்டுவண்டியிலேயே தொடர்ந்தார்.

வண்டிக்காரனுக்கும் தூக்கம் கண்களைத் தழுவியது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டே வந்தான். மாட்டு வண்டி இவர்கள் செல்லவுள்ள முதன்மைச் சாலைக்கு வந்ததும் இவனும் இந்தச்சாலை நேராக அந்த ஊருக்குத்தானே செல்கிறது. நாம் ஏன் விழித்துக் கொண்டே வரவேண்டும். மாடுகள் ஓடும் மணியோசை காதுகளில் கேட்டுக்கொண்டேதானே வருகிறது. மாடுகளின் மணியோசை நின்றால் மட்டும் நாம் விழித்துப்பார்த்தால் போதாதா? என்று எண்ணினான். இதனால் மாட்டுக்காரனும் வண்டியில் அமர்ந்த நிலையிலேயே நன்றாகத் தூங்கிவிட்டான்.

சிறிதுதூரம் சரியான வழியில் சென்ற மாடுகள், முன்பு தாம் இருந்த செக்குக்காரர் வீட்டுக்குச் செல்லும் வழிகளைக் கண்டதும் வளைந்து அங்கே சென்றுவிட்டன. சென்ற மாடுகள் இத்தனை ஆண்டு காலமாகத் தாம் சுற்றிக் கொண்டிருந்த செக்குகளைப் பார்த்ததும். பழைய் நினைவு வந்து அந்த செக்கையே விடிய விடிய சுற்றிக்கொண்டிருந்தன.

மாடுகளுக்கு நினைவு நாம் செக்கைத்தான் சுற்றிக்கொண்டிருக்கிறோம் என்று.

வண்டிக்காரனுக்கு நினைவு நம் மாடுகள் விரைவாகவும், சரியான பாதையிலும்தான் சென்றுகொண்டிருக்கின்றன என்று. செல்வந்தருக்கு நினைவு நாம் திருமணத்துக்கு உரிய நேரத்தில் சென்றுவிடுவோம் என்று.

பொழுதும் விடிந்தது...

வண்டிக்காரனும், செல்வந்தரும் இன்னும் தூங்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.. வண்டிமாடுகளும் செக்கைச் சுற்றிக்கொண்டேதான் இருக்கின்றன.

மணியோசையும் கேட்டுக்கொண்டே தான் இருக்கிறது.

அந்தச் செக்குக்காரர் வந்து இந்தக் காட்சியைப் பார்த்து சிரியோ சிரியென்று சிரித்தார். பின் அருகே சென்று அந்த வண்டி மாடுகளை நிறுத்திவிட்டு அந்த செல்வந்தரை எழுப்பி நேற்று ஏதோ திருமணத்துக்குப் பக்கத்து ஊருக்குப் போறேன் என்று சொன்னீர்களே. ஆனால் இங்கு வந்து சுற்றிக்கொண்டிருக்கிறீர்களே?" என்று கேட்டார்.

நொந்துபோன செல்வந்தர் அந்த வண்டிக்காரனை வேலையைவிட்டே நீக்கிவிட்டார். இப்படி ஒரு கிராமியக் கதை உண்டு. இந்தக் கதையை அப்படியே இன்றைய கல்வி நிலையோடு ஒப்பிட்டுப் பாருங்களேன்.

செல்வந்தர் - பெற்றோர்

வண்டிக்காரன்- கல்விநிறுவனங்கள், ஆசிரியர்கள்

மாடு - மாணவர்கள்

இன்றைய பெற்றோர்கள், தம் பிள்ளைகளை நல்ல கல்வி நிறுவனங்களில் சேர்ப்பதோடு தம்கடமை முடிந்துவிட்டது என நினைக்கிறார்கள்.

கல்வி நிறுவனங்கள் இந்த மாணவர்களுக்கு அதிக மதிப்பெண்களோடு பட்டச் சான்றிதழ் கொடுத்தால் போதும் என நினைக்கிறார்கள். மாணவர்கள், எல்லோரையும் போல நாமும் தேர்ச்சியடைந்து வேலை கிடைத்தால் போதும் என நினைக்கிறார்கள்.


அந்த செல்வந்தரோ, வண்டிக்காரனோ, மாடுகளோ தாம் செல்லும் வழி சரிதானா என இடையில் ஒருமுறையாவது சிந்தித்திருந்தால் சரியான நேரத்துக்குத் சரியான இடத்துக்குச் சென்றிருப்பார்கள். அதுபோல் இன்றைய மாணவர்கள், கல்விச்சாலை செல்கிறார்கள், படிக்கிறார்கள், பட்டம் பெறுகிறார்கள், வேலைக்குச் செல்கிறார்கள் இவையெல்லாம் இவர்கள் விரும்பித்தான் செய்கிறார்களா? என எத்தனை பெற்றோர்கள் தம் பிள்ளைகளிடம் கேட்கிறார்கள்?

மதிப்பெண்ணுக்கு மேல் ஒரு மாணவனை எப்படி மதிப்புக்குரிய மனிதனாக உருவாக்கவேண்டும் என எத்தனை கல்வி நிறுவனங்கள் சிந்திக்கின்றன?

பெற்றோர் படிக்க வைக்கிறார்கள், கல்வி நிறுவனங்கள் சொல்லித் தருகிறார்கள். நம் கடமை படிப்பது என்று மட்டுமே சிந்திக்கும் மாணவர்களில் எத்தனை பேரின் உழைப்பு அவர்களின் குடும்பத்தைக் கடந்து சமூகத்துக்குப் பயன்படுகிறது? என இந்தக் கதையோடு இன்றைய கல்வியின் பல்வேறு முகங்களையும் ஒப்பிட்டு நோக்கமுடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ விழித்தால் மட்டும்தான் உன்னால் வாழமுடியும்



விமலதர்சினி மத்தியாஸ்,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

**ஆ**திகாலம் தொடங்கி இன்றைய **கம்பியூட்டர்** காலம் வரை பெண்களுக்கு **எதிரான** வன்முறைகள் தொடர்ந்து **கொண்டே** இருக்கின்றன என்பது **அனைவரும்** அறிந்த ஒன்றே. முதலில் **பெண்களுக்கு** வீட்டிலிருந்து தான் **பிரச்சினைகளும்** அடக்குமுறைகளும் **ஆரம்பிக்கின்**றன. பின்பு அது சமுதாய **அளவுக்கு** வளர்ந்து விருட்சமாகின்**றது. எவ்வாறெனில்** ஒரு குடும்பத்தில் **குலவிளக்கு** பெண் என்று தான் சொல்கிறார்கள். இது ஏற்கத்தக்க ஒரு விடயம் தான். ஆனால், அதைக் காரணம் காட்டியே பெண்ணின் சுதந்திரத்தை, ஆசைகளை, இலட்சியங்களை, கனவுகளை அடுப்படியில் கருக விடுகிறார்கள். இன்றைய காலத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் முன்னேறி விட்டார்கள் என்றாலும் பெண்ணியம் எங்கேயும் மதிக்கப்படுவதில்லை. ஒரு பெண் தனது பிறப்பிலே தாய், சகோதரி, மனைவி என்று பல அவதாரங்களை எடுத்திருக்கிறாள். எனினும் அவர்களது இதயங்கள் மென்மையானது என்று சொல்லிவிட்டு கசக்கி எறியும் சமுதாயத்தில் எப்படி பெண்களே உங்களால் சுதந்திரமாக நடமாட முடியும்.

சில வேளைகளில் ஒரு பெண்ணே இன்னொரு பெண்ணுக்கு எதிராகவும் மாறுகின்ற பல சந்தர்ப்பங்களும் உண்டு. தனியே சமுதாயம் ஒரு காரணம் என்றாலும் வீடுகளில் அலுவலகங்களில் கூட பெண்மைபோற்றப்படுவதில்லை. படிப்பு, வேலை என்று முன்னேறிய உங்களால் ஏன் உங்களின் அடிமைத் தனத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது? பாரதி கண்ட புதுமைப் பெண்ணே விழித்திடு! நாம் ஓர் புது உலகம் படைப்போம்.

# பிள்ளைகளின் எதிர்காலம் உங்கள் கைகளில்தான்



என் இனிய சகோதரிகளே! உங்கள் அன்பான குழந்தைகளை கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அவர்களின் எதிர்காலம் உங்கள் கைகளில். நம்ப நட நம்பி நடவாதே, என்றொரு பழமொழி இருக்கின்றது அல்லவா? காலம் கலியுகம்! நாகரிகங்களும் போதை வஸ்துகளும் கலாசார சீரழிவுகளும் தலைவிரித்தாடும் காலமிது. உங்கள் சுட்டிக் குழந்தைகள் யாரோடு பழகுகிறார்கள், என்ன செய்கிறார்கள் என்பதை கவனிக்கத் தவறாதீர்கள். அவர்களின் நடவடிக்கைகளிலும் கவனமாய் இருங்கள். "உங்களுடைய நண்பர்கள் யார்? அவர்களை அம்மாவுக்கும் அறிமுகம் செய்யுங்கள்" என குழந்தைகளிடம் கேளுங்கள். அவர்களின் நண்பர்களையும் சந்தியுங்கள். உங்கள் குழந்தைகள் தவறுவிடும் பட்சத்தில் அடித்து துன்புறுத்தாதீர்கள். அன்போடு புத்திமதி கூறுங்கள். அளவுக்கு அதிகமாக பணத்தையோ, கமரா மற்றும் செல்போன்களையோ அவர்களிடம் கொடுக்காதீர்கள்.

உறவினர்கள் யாராவது தாத்தா, மாமா ஏன் தந்தை என்றாலும்கூட உங்கள் குழந்தைகளின் பால் உறுப்புக்களைத் தொட்டு விளையாட அனுமதிக்காதீர்கள். இன்றும் கிராமங்களில் குழந்தைகளின் பால் உறுப்புக்களில் முத்தமிடுவது, தொட்டு சிரிப்புக் காட்டுவது போன்ற சம்பவங்கள் நடைபெறு கின்றன. எக்காரணம் கொண்டும் குழந்தைகளைத் தனியே வீடுகளில் விட்டுச் செல்லாதீர்கள். இன்று அதிகமாக உறவினர்களாலும், அயல வர்களினாலும் தான் சிறுவர்கள் சீரழிகின்றார்கள், சிதைக்கப்படுகின்றார்கள். பாடசாலை ஆகட்டும், ரியூசன் சென்ரர் ஆகட்டும் குழந்தைகளைத் தனியே அனுப்பாதீர்கள். கூட்டிச்சென்று வகுப்புகள் முடிந்தவுடன் கூட்டி வாருங்கள். உங்கள் குழந்தைகளிடம் அவர்களின் உடம்பில் யாரேனும் தொட்டுப் பேச அனுமதிக்க வேண்டாம் எனவும் தவறான எண்ணத்துடன் நடக்க முற்பட்டால் ஓடி விட வேண்டும் அல்லது கூக்குரலிட்டு யாரையாவது உதவிக்கு கூப்பிட வேண்டும் எனவும் கூறிவிடுங்கள். தப்புச் செய்தால் உரியவரைக் காட்டிக்கொடுக்க பயப்பட வேண்டாம் எனவும் சொல்லுங்கள்.

அன்புச் சகோதரிகளே குழந்தைகள் மீது விழிப்போடு இருங்கள். தளிர்போன்ற உங்கள் பிள்ளைகள் மீது காமுகப்பேய்களின் கரங்கள் படாமல் கவனத்தோடு இருங்கள்.

திருமதி அகிலதீபன்
சரசாலை தெற்கு

# பெண் இனம் அது தாய்க்குலம்




பத்துத் திங்கள் கருவறையிலே
பக்குவமாய் காத்து
கண்விழித்து நாள்தோறும்
கஷ்டங்கள் பல தாங்கி
வேதனையுற பெற்றெடுத்து
"தாய்" என்னும் பதவியுயர்வு பெற்று
இப்பாரினில் பெருமை கொள்வாள்

பெற்றெடுத்த மழலையின் இன்
முகந்தனைப் பார்த்து
பட்ட துன்பங்கள் தனை
மறந்து பசியும் மறப்பாள்
இரத்தத்தைப் பாலாக்கி
தந்திடுவாள்
நாம் வாழ தன் வாழ்வை
தந்திடும் தாய் போல்
இவ் உலகில் ஓர்
உறவுண்டோ...
கண்ணை இமை காப்பது போல்
நாள்தோறும் காத்திடும்
தாய்க்குலம் அதுவே பெண் இனம்.

சுமித்திரா, பூலனூர்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் **"திலகம்"**, உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .



# மங்கையருக்கு சில குறிப்புகள்....

சுபோ, புலோலி.



- ★ சுமங்கலிகள் நெற்றியில் குங்குமம் இல்லாது இருக்கக் கூடாது.
- ★ இரவில் வீட்டைப் பெருக்கிக் குப்பையை வெளியேபோடக் கூடாது.
- ★ பெண்கள் பூசணிக்காயை வெட்டக் கூடாது. கர்ப்பிணிப் பெண்கள் தேங்காயை உடைக்கக் கூடாது.
- ★ வாசல் படிகளில் தலைவிரி கோலமாக உட்காரக் கூடாது.
- ★ தலைவிரி கோலமாக வீட்டில் இருப்பதும் வெளியில் செல்வதும் தவிர்க்கப்பட வேண்டும்.
- ★ வீட்டுக்கு வரும் சுமங்கலிப் பெண்களுக்கு இல்லத்தரசிகள் குங்குமம் கொடுத்து வழியனுப்ப வேண்டும்.
- ★ ஓட்டுப் பொட்டுக்களைத் தவிர்க்க வேண்டும்.
- ★ அதிகாலையெழுந்து வீடு வாசல் பெருக்கி நீர் தெளித்து வாசலில் கோலமிட வேண்டும்.
- ★ மாலை விளக்கு வைக்கும் நேரத்தில் வெளி இடங்களுக்குச் செல்லாது விளக்கு வைத்துத் தூபமிட்டு வழிபாடு செய்வது நலம்.
- ★ கோலம் போடும்போது சுப காரியங்களுக்கு இரண்டு கோடும் அமங்கல காரியங்களுக்கு ஒரு கோடும் போடவேண்டும்.
- ★ உரல், அம்மி, முறம், வாசற்படி, உலக்கை இவற்றின் மீது உட்காரக் கூடாது.
- ★ கணவனுடைய அனுமதி பெற்றே சுமங்கலி விரதமிருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் இறைத்த திருடர்கள்....

ஒரு சமயம் விஜயநகர சாம்ராஜ்யத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. பருவ மழை தவறி விட்டதால் குளம், குட்டை, ஏரி என்பனவெல்லாம் வற்றிவிட்டன. தெனாலிராமன் வீட்டுக் கிணற்றிலும் நீர் குறைந்து அதிக ஆழத்திற்குப் போய்விட்டது. இதனால் தினமும் தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்ச மிகவும் சிரமப்பட்டான் தெனாலிராமன்.

இந்த சமயத்தில் ஒரு நாள் இரவு நான்கு திருடர்கள் தன் தோட்டத்தில் பதுங்கி இருப்பதைக் கண்டான். உடனே வீட்டிற்கு வந்து தன் மனைவியிடம், "அடியே, நம் நாட்டில் பருவமழை தவறிவிட்டதால், பஞ்சம் ஏற்பட்டு விட்டது. எனவே நிறைய திருட்டு நடக்க ஆரம்பித்து விட்டது. பஞ்ச காலம் முடியும் வரை நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். எனவே நாம் ஒரு காரியம் செய்வோம்" என்று வெளியே பதுங்கியிருந்த திருடர்களுக்கு கேட்கும் வண்ணம் உரத்த குரலில் பேசினான். "அதற்கு



என்ன செய்யலாம்?" என்று தெனாலிராமனின் மனைவி கேட்டாள். "வீட்டிலுள்ள நகை, மற்றும் விலையுயர்ந்த பொருள்களை எல்லாம் இந்தப் பெட்டியில் போட்டு பூட்டு. நாம் இந்தப் பெட்டியை யாருக்கும் தெரியாமல் கிணற்றில் போட்டு விடலாம். பஞ்சம் தீர்ந்து திருட்டுப் பயம் ஒழிந்ததும் மீண்டும் கிணற்றிலிருந்து எடுத்துக் கொள்ளலாம்" என்று முன்போலவே உரக்கக் கூறினான் தெனாலிராமன். திருடர்களும் இதைக் கேட்டனர்.

அதே சமயம் ரகசியமாக தெனாலிராமன் தன் மனைவியிடம் திருடர்கள் ஒளிந்திருப்பதைக் கூறி ஒரு பழைய பெட்டியில் கல், மண், பழைய பொருள்களை எல்லாம் போட்டு மூடினான். அந்தப் பெட்டியைத் தூக்கமுடியாமல் தூக்கி வந்து கிணற்றுக்குள் 'தொப்'பென்று போட்டு விட்டு வீட்டுக்கு திரும்பிவிட்டான் தெனாலிராமன்.

திருடர்களும், "தெனாலிராமன், நம் வேலையை சுலபமாக்கிவிட்டான். நாம் எளிதாக கிணற்றிலிருந்து பெட்டியை எடுத்துக் கொள்ளலாம்" என்று தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.

பெட்டியை எடுக்க கிணற்றுக்கு அருகே வந்தனர் திருடர்கள். கிணறு ஆழமாக இருந்ததால் உள்ளே இறங்கப் பயந்த திருடன் ஒருவன், "அண்ணை! தண்ணீர் குறைவாகத்தான் உள்ளது. நாம் நால்வரும் ஏற்றம் மூலம் மாறி மாறி நீரை இறைத்து விட்டால் சுலபமாகப் பெட்டியை எடுத்துக் கொண்டு போகலாம்" என்று கூறினான். அதைக்கேட்ட மற்றவர்களும் அவன் திட்டத்துக்கு ஒப்புக்கொண்டனர். அதன்படி ஒருவர் மாறி ஒருவர் ஏற்றம் மூலம் நீர் இறைக்கத் தொடங்கினர்.

சற்று நேரம் கழித்து வேறு வழியாக தோட்டத்திற்கு சென்றான் தெனாலிராமன். திருடர்கள் இறைத்து ஊற்றிய நீரை தன் தோட்டத்தில் உள்ள செடிகளுக்கும், கொடிகளுக்கும், பயிர்களுக்கும் பாயுமாறு கால்வாயைத் திருப்பி விட்டான்.

இப்படியே பொழுது விடிந்து விட்டது. ஆனால் கிணற்றில் தண்ணீர் குறையவில்லை. இதனால் திருடர்களும், "நாளை இரவு மீண்டும் வந்து நீரை இறைத்து விட்டு பெட்டியை எடுத்துக் கொள்ளலாம்" என்று பேசிக் கொண்டு சென்றனர்.

அப்போது தோட்டத்திலிருந்து வந்த தெனாலிராமன் அவர்களைப் பார்த்து, "நாளைக்கு வரவேண்டாம். நீங்கள் இறைத்த தண்ணீர் இன்னும் மூன்று தினங்களுக்குப் போதும். எனவே மூன்று தினங்கள் கழித்து வந்தால் போதும். உங்கள் உதவிக்கு நன்றி நண்பர்களே!" என்று கூறினான். திருடர்களுக்கு இதைக் கேட்டதும் மிகவும் அவமானமாகப் போய் விட்டது. தங்களை ஏமாற்றி நீர் இறைக்கச் செய்த தெனாலிராமனின் அறிவை மனத்திற்குள் எண்ணி வியந்தனர். மேலும் அங்கே இருந்தால் எங்கே மாட்டிக் கொள்வோமோ என்ற அச்சத்தில் திரும்பிப் பார்க்காமல் திருடர்கள் ஓட்டம் பிடித்தனர்.

# மழை நாள்

மழை நாளன்று மனக் கண்ணில்
மான்கள் துள்ளியோடக் கண்டோம்
மழையில் நனைந்து அதை ரசித்தபடி
மாலை வரையும் துள்ளியோடித் திரிந்தோம்

உடலில் துளிகள் பட்டு சிலிர்க்க வைத்தன
ஊரவர் மனங்களும் மகிழ்வில் குளிர்ந்தன
உள்ளம் மழையை வா வா என
ஊக்கப்படுத்திக் கொண்டிருந்தது

தென்றல் காற்றும் கூடவே
தேன் மழை சொரிந்தது
தெரியுமா உமக்கிந்த இனிமை
தேடினாலும் கிடைக்குமா? இந்த வரம்

மறக்க முடியுமா இந்த அற்புதமான
மழை நாளை - வாழ்வில்
மறக்க நான் நினைத்தாலும்-என்
மனம் என்றும் மறக்காதே..



செல்வி.ஆர்த்திகா சுவேந்திரன்.
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

# பணம்





முன்பெல்லாம் மக்கள் தமக்குத் தேவையான பொருள் களைத் தாமே தயாரித்துக் கொண்டனர். பின்னர் தாம் தயாரித்த பொருள்களைப் பாவித்து மேலதிகமாக உள்ள பொருள்களை மற்றவரிடம் கொடுத்துவிட்டு அவர்களிடமிருந்து வேறு பொருள்களை வாங்கினர். இதனை பண்டமாற்று முறை என அழைத்தனர். காலப்போக்கில் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தது. இதனால் பணம் கொடுத்து பொருள்களை வாங்கும் முறை உருவானது.

★சீனாவில் முதன் முதலில் மீன் வடிவில் செய்யப்பட்ட உலோகம், கத்தி இவையே பணமாக பயன்படுத்தினர்.

★காசுகள் எளிதில் உடையாதவை, சுலபமாக எடுத்துச் செல்லலாம் எனக் கருதினர்.

★ஐரோப்பிய காசுகளில் மனிதமுகம் வரையப்பட்டது. ஆசிய நாடுகளில் மிருகங்களின் முகம் வரையப்பட்டது.

★சில நாடுகளில் பொருள்கள் காசுகளாக பயன்படுத்தப்பட்டன. மத்திய ஆபிரிக்காவில் உப்பும், தென்னாபிரிக்காவில் கால்நடையும், சைபீரியாவில் மிருகங்களின் தோல் என்பன பணத்துக்கான பிரதியீட்டுப் பொருள்களாக ஒரு காலத்தில் பயன்பட்டன.




இப்போது மனிதனின் அன்றாட வாழ்வில் பணம் மிகவும் அத்தியாவசிய பொருளாக மாறிவிட்டது.

சா.ஜிந்துஜா
கோண்டாவில்







ஆர்.பனுஜா, தரம்-6பி,
இந்து மகளிர் கல்லூரி



த.திவ்வியன், தரம்-4பி,
உருத்திரபுரம் ம.வி.



ரி.நிதுர்ஷிகா, தரம்-5,
மந்துவில் றோ.க.த.க.பா.



த.டினா, தரம்-2பி,
உருத்திரபுரம் ம.வி.



அ.அனுஜா, தரம்-4டி,
யாழ்ப்பாணக் கல்லூரி

## விடை தெரியுமா? 180

### உங்களுக்கும் பரிசில்கள்

1. 'பக்தி மொழி' என்று அழைக்கப்படும் மொழி எது?
2. மனித உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அழிக்கும் தன்மை கொண்ட நோய் எது?
3. சர்வதேச அஞ்சல் தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?
4. இஸ்ரேலின் தலைநகரம் எது?
5. பறக்கும் முலையூட்டி எது?

### விடைகள் 178

1. பென்சிலியம்
2. பிரான்ஸ்
3. [illegible]
4. [illegible]
5. திபெத்



### வெற்றி பெற்றோர் விவரம் (176)

- உ.ஜெனா, தரம்- 10, கிளி/ வேரவில் இ.ம.வி.
- ர.ஜோகினி, தரம்-9பி, வே.ம.உ.பா.
- தி.சுஜீவன், தரம் -7பி, ஹாட்லிக் கல்லூரி.
- செ.விஜித்தா, தரம்- 8, கிளி/ கிராஞ்சி அ.த.க.பாடசாலை
- வி.மதனிகா, தரம்- 9டி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
- ஜெ.தபீதாஜறீன், தரம் -6டி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 13.10.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே தவறு உள்ளது?

■ மருத்துவர் இ.சிவசங்கர்

மனிதப் பிறப்பு எடுப்பது எம்மை நாம் திருத்திச் சுத்தப்படுத்தி கொள்வதற்காகவே. ஆனால் மிகப் பெரும்பாலானவர்கள் இதற்கு எதிர்மாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். தம்மைத் தாம் திருத்துவதை விடுத்து மற்றவர்களை திருத்த முற்படுகின்றனர். இதன் விளைவாகத் தத்தமது அழுக்குகளைக் குறைப்பதற்குப் பதிலாக மேலும் அழுக்குகளைச் சேர்த்துக் கொள்கின்றனர். இது குளிக்கப் போய் சேறு பூசியதற்கு ஒப்பானதாக அமைந்துவிடுகின்றது.

பொதுவாக சமயங்கள் என்பது அந்தந்தச் சமயங்களை கடைப்பிடிக்கும் தனிநபர்களை முறையான வாழ்க்கை என கருதப்படுவதை வாழ வழிகாட்ட உதவுபவையாக இருத்தலைக் காணக் கூடியதாக இருக்கும். இது "வாழ்வாங்கு வாழ்தல்" என்பதற்கு வழிகாட்டுவதாகக் கொள்ளப்படலாம். ஆனால் தற்போதைய கால கட்டத்தில் சமயம் என்பதற்கூடாக ஆதிக்க அரசியலை நடைமுறைப்படுத்தவே பலர் முனைகின்றனர். ஏற்கனவே தத்தமது மதத்திலுள்ளோரை நெறிப்படுத்துவதை விடுத்து ஏனைய மதத்திலுள்ளோரைத் தமது மதத்துக்குக் கொண்டு வர முனைகின்றனர். உண்மையில் இதை உற்று நோக்கினால் இந்தச் செயல்முறையில் தத்தமது சமய உயர் கருத்துக்களை ஏனைய சமயத்தவர்களுக்கு அறியத் தருவதை விடுத்து வேறு சமயத்தவர்களைத் தமது சமயத்துக்கு மாற்றி விடுவதை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளப்படுகின்றது. இதன் பின்னர் தத்தமது அரசியல் கருத்துக்களை நிலைப்பாடுகளை உட்செலுத்த முனைகின்றனர். இறுதியாகத் தத்தமது அரசியல் ஆதிக்க அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக மக்களின் வாழ்வியலை குழப்பிவிடுகின்றனர். இது கவலையளிக்கும் குற்றமாகும். இத்தகைய செயற்பாடுகள் சமூகத்தை குழப்பி, கெடுக்கும் செயற்பாடாக அமைவதைக் காணலாம்.

ஆதிக்க நிலையின்போது சமயம் பரப்புதலையும் பின்னர் சமயத்துக்கு ஊடாகத் தத்தமது ஆதிக்க அரசியல் நடைமுறைப்படுத்தப்பட்டதையும் கண்டுகொள்ளலாம். காலணித்துவ ஆட்சிக் காலத்தில் ஐரோப்பிய இராணுவத்தினரின் பக்கப் பலத்துடன் அன்றைய பௌத்த, சைவ மக்கள் மத மாற்றப்பட்டது வரலாறு. கிறிஸ்தவத்துக்கு மதமாற்றப்பட்ட இலங்கை பௌத்தர்களும் சைவர்களும் காலணித்துவ ஆட்சிக்குத் துணைபோயினர். காலணித்துவ ஆட்சிக்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தில் இந்த பௌத்த கிறிஸ்தவர்களோ, சைவ கிறிஸ்தவர்களோ பங்கெடுத்துக் கொள்ள முடியவில்லை. இந்த நிலையே இந்தியாவிலும் காணப்பட்டது. இன, நாட்டு சுதந்திரப் போராட்ட வீரர்கள் நூறு வீதம் சுதேச சமயத்தைச் சேர்ந்தவர்களே. கிறிஸ்தவ சமயத்தால் ஐரோப்பியர்களுடன் ஒன்றிணைந்து கிறிஸ்தவ சிங்களவர், தமிழர்கள் விடுதலைப் போராட்டத்தில் விலகிக் கொண்டதுடன் மட்டுமல்லாது போராட்டத்துக்கு எதிராகச் செயற்பட்டதையும் காணலாம்.

### சைவத் தமிழர்களிடையே மதமாற்றம்

இலங்கை வாழ் சைவத் தமிழர்களிடையே பௌத்த, கிறிஸ்தவ மதமாற்ற செயற்பாடுகளின் அரசியல் ஆதிக்க நலன்களை விளங்கிக் கொள்ளல் தமிழின பாதுகாப்புக்கு நன்மை பயக்கும். பௌத்த, கிறிஸ்தவ மதமாற்றங்கள் இரண்டுமே வெவ்வேறு ஆதிக்க சக்திகள் தமிழ் இனத்தின் மீது செல்வாக்கு செலுத்துவதையே நோக்கமாக கொண்டவை.

காலணித்துவ ஆட்சிக் காலத்தில் ஐரோப்பிய ஆதிக்கத்துக்குத் துணைபோன கிறிஸ்தவ சைவர்கள், தற்போது அமெரிக்க ஆதிக்க அரசியலுக்குத் துணை போதலை நோக்கமாகக் கொண்டு செயல்கள் நகர்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆயர்களிலிருந்து பூற்றீசல் போல் வெளிக்கிளம்பும் கிறிஸ்தவ சபைகள்வரைக்கும் அமெரிக்க பின்புலத்தை தளமாகக் கொண்டியங்குவது காணக்கூடியதாக இருக்கின்றது. கிறிஸ்தவ சபைகளுக்கான அதீத பண செலுத்துகையின் ஊற்றுக்களை கண்டு கொள்வது தெளிவைத் தரும். கிறிஸ்துவின் வாழ்வியல் முறைமை அறிமுகப்படுத்தப்படுவதை விடுத்து வெறுமனே மதமாற்றமே நடைபெறுகின்றது. இதன்போது மக்களின் வறுமை பயன்படுத்தப்படுவதுடன் இந்து சமயத்தை இழிவுபடுத்துதலையும் இந்து கடவுள்களை பேய், பிசாசுகள் என வர்ணிப்பதையும் காண்கின்றோம். இவை கிறிஸ்துவின் அன்பு நிலைப்பாட்டுக்கு முரணானதே.

கடந்த வாரங்களில் அமெரிக்க கிறிஸ்தவர்களின் திடீர் பிரசன்னம் பாடசாலைகளில் காணப்பட்டுள்ளது. எந்தவித விளக்கங்களுமின்றி அமெரிக்க கிறிஸ்தவர்களால் இந்துப் பாடசாலை மாணவர்களிடம் வழங்கப்பட்ட விவிலிய வேதம் மாணவர்களால் தெருவோரங்களில் வீசி கைவிடப்பட்ட செயல் கொழும்பில் நடைபெற்றது. கிளிநொச்சி பாடசாலைகளுக்குள் பிரவேசித்த அமெரிக்க கிறிஸ்தவர்கள், சைவ மாணவர்களிடையே கிறிஸ்தவ ஜெபங்களை ஓத வைத்து மதமாறவிரும்புவோர் கைதூக்கவும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டது. இவை சிறுவர் துஷ்பிரயோகத்துக்குள் அடங்குபவை. பதினெட்டு வயதுக்குக் கீழ் எத்தகைய சுயமான முடிவெடுத்தல் தகைமையும் அற்ற காலமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கால கட்டத்தில் சிறுவர்களைத் தூண்டும் பெரியோர்கள் "துஷ்பிரயோகிகள்" என்பதற்குள் அடங்குவர். பாடசாலைகளில் சுகாதார தடுப்பூசி போடுவதிலிருந்து இரத்ததானம் செய்தல், கல்விச் சுற்றுலாவுக்குப் போதல் போன்றவை கூட மாணவர்களின் சுயமுடிவுக்கமைய செயற்படுத்துவது குற்றமாகக் காணப்படுகின்றது.

மாணவர்களின் விருப்பத்தின் பேரிலான திருமணம் கூட பெற்றோரின் சம்மதம் இருந்தாலும் சிறுவர் பாதுகாப்பால் தடை செய்யப்பட்ட குற்றச் செயலாகும். இதில் சம்பந்தப்படும் வளர்ந்தோர் சட்டத்தின் முன் குற்றவாளிகளாவர். இந்த நிலையில் மாணவர்களை மதம் மாற்ற முடிவெடுக்கத் தூண்டும் வளர்ந்தோர் சிறுவர் துஷ்பிரயோகத்துக்குள் அடக்கப்படும் குற்றவாளிகளே.

இதன் காரணமாகத்தான் பலவந்த மதமாற்றம் தடைச் சட்டத்தை எதிர்த்ததில் கிறிஸ்தவ அமைப்புக்களுடன் அமெரிக்காவும் முன்னின்றது என்று கருதப்படலாம். சிறுவர் மட்டத்திலானநூல்வகையான மதமாற்றமும் சிறுவர் துஷ்பிரயோக 'சட்டத்துக்குள் அடக்கமே. இதை சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும். இந்தச் சம்பவங்களில் பாடசாலை நிர்வாகிகளும் சிறுவர் துஷ்பிரயோகிகள் என்பதற்குள் அடங்குவர்.

> சிறுவர் மட்டத்திலான நூல்வகையான மதமாற்றமும் சிறுவர் துஷ்பிரயோக சட்டத்துக்குள் அடக்கமே. இதை சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும். இந்தச் சம்பவங்களில் பாடசாலை நிர்வாகிகளும் சிறுவர் துஷ்பிரயோகிகள் என்பதற்குள் அடங்குவர்.



இத்தகைய தமிழர் பிரதேச பின்புல சூழலில் பௌத்த மத செயற்பாட்டு நிகழ்வில் இராணுவத் தளபதி பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டுள்ளார். இராணுவக் கடமை செயற்பாடுகளில் இது எங்கு பொருத்தப்படலாம். இலங்கை இராணுவம் பௌத்த மத பரப்புதலில் ஈடுபடவில்லை என்று பௌத்தமத அறிமுக நிகழ்வில் கூறப்பட்டதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறின. பௌத்த மத நிகழ்வில் இராணுவ சீருடையில் பிரசன்னமாகி இராணுவம் பௌத்த மத பரப்புதலில் ஈடுபடவில்லை என்று கூறியவரின் சுயஉணர்வு நிலை பரிசீலிக்கப்பட வேண்டியது.

இராணுவம் பௌத்த இராணுவமாக செயற்படுவது நிகழ்வாகியுள்ளது. அன்று ஐரோப்பிய கிறிஸ்தவ மதபோதகர்களுடன் ஐரோப்பிய இராணுவத்தினர் சேர்ந்தியங்கினர். இன்று பௌத்த பிக்குகளுடன் இலங்கை இராணுவத்தினர் சேர்ந்து இயங்குகின்றனர். இராணுவக் கட்டுப்பாட்டு வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் இந்து கோயில்கள் சிதைக்கப்படுவதும் புத்தர் சிலைகளும் பௌத்த விகாரைகளும் முளை கொள்வதில் முன்னணி பலமே பயன்படுத்தப்படுகின்றது. இராணுவக் கட்டுப்பாட்டுடன் நிர்மாணிக்கப்பட்ட புத்தர் சிலைகளில் சில சைவத் தமிழர்களால் அகற்றப்பட்டு இந்து சமய விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்படும் நிகழ்வுகள் இதை உறுதிப்படுத்துகின்றன. வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் தற்போதைய போரின் சிதைவுகளுக்கான மீள்கட்டுமானப் பணிகளில் இராணுவம் ஈடுபடுதல் என்பதில் இராணுவ பௌத்த கட்டுமானப் பணிகளே அடக்கம் என்பது நாம் கண்டுகொள்வதே. அப்பன் குதிருக்குள் இல்லை என்பதே இராணுவம் பௌத்த மதபரப்புதலில் ஈடுபடவில்லை என்பது.

பௌத்த மதத்தினராகிய எமக்கு மற்றோர் எதுவும் சொல்லித் தரத்தேவையில்லை என்ற ஜனாதிபதியின் கூற்று இந்து சமயத்தவர்களால் ஆணித்தரமாக கூறக் கூடியது. உலக சமயங்களின் தோற்றுவாயாக கருதப்படுவதே இந்து சமயம். இந்து சமயத்தின் பின்னணியில் வெளிவந்த பௌத்தமும், திபெத்திய பௌத்த பின்னணியில் உருவாகிய கிறிஸ்தவமும் தாய்ச் சமயமாகிய இந்து சமயத்துக்கு அறிமுகப்படுத்த எதுவுமில்லை என்பதே "உணர்ந்தோரின்" நிலை. இதை உணர்ந்து கொள்ளல் ஏனையோருக்கு நன்மை பயக்கும். தத்தமது வாழ்வை செப்பனிட இந்த நிலை உதவும்.

கௌதம புத்தரின் பிரபல்யமான அடிப்படை வாழ்க்கை நெறியே "நடு பாதை" முறையாகும். இது "ஜொலி" வாழ்க்கையைத் தமது வாழ்வு கலாசாரமாக வைத்தியங்கும் பௌத்த சிங்களவர் அறிந்து கொள்ள வேண்டியதே அன்றி சிக்கன கட்டுபாட்டு வாழ்க்கையைத் தம் வாழ்வியலாக கொண்ட சைவதமிழருக்கு அறிமுகப்படுத்துவதல்ல. பௌத்தத்தின் உன்னத மனித நிலையை அடைதல், என்பதும் கிறிஸ்தவத்தின் இறை இராச்சியத்தை அடைதல், நித்திய ஜீவிதத்தை அடைதல் என்பவற்றின் அனுபவ குருவாக இருப்பது இந்து சமயமே. மேற்கூறிய உயர் ஆன்மிக நிலைகளை தற்போதைய இந்துக்கள் இயல்பாக தொடர்ச்சியாக அடைந்து வருகின்றனர். இதற்குரிய ஒளியும், வழியும் இந்துக்களிடமே தெளிவாக உண்டு. தியானத்தையும், பிரார்த்தனை ஜெபங்களையும் இந்துக்களுக்கு கற்று கொடுக்க முன்வருவோர் பத்து பிள்ளைகள் பெற்றவளுக்கு மலடி முக்குவதற்கு கற்று கொடுப்பதற்கு ஒப்பாகும்.

அன்பார்ந்த கிணற்று தவளைகளே கடலுக்கு வாருங்கள்.

சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்ட இந்து மதம் என்ற கடலை காணாதவர்கள் கிணற்று தவளைகளின் நிலைக்கு ஒப்பானவர். மலடிகளாக இல்லாது உயர் நிலைகளை பெற்று கொள்ள இந்து சமய தத்துவார்த்த அணுகுமுறைகளைக் கௌதம புத்தரின் நடுப்பாதையும், அகிம்சையும், கிறிஸ்துவின் இறை இராச்சியத்தை முதலில் அடையுங்கள் ஏனையவை பின்னர் அதிகமாக வழங்கப்படும் என்பது இந்து சமயத்தவர்களால் அனுபவிக்கப்படுகின்றது என்பதை அறியுங்கள். உயர் ஆன்மீக நிலையை ஒவ்வொருத்தரும் அடையக்கூடிய நடைமுறை வழிகள் பல இந்து சமயத்தில் உள்ளன. இதை அடைவதற்கு வழிகாட்டும் ஒளியும் இந்து சமயத்திலேயே உள்ளது. ஆகாவேதான் இந்து சமயத்தவர்களிடையே ஞானிகளும், சித்தர்களும் உருவாகின்றனர்.


எங்கோ தவறு உள்ளது என்பதை விளங்கிக் கொள்ளுங்கள் கௌதம புத்தர் கூறிய "மனித உன்னத நிலை'யை அடைந்த பௌத்தர்கள் இலங்கை வரலாற்றில் இல்லையே கிறிஸ்து கூறிய தன்னை போல் ஏனையவர்களும் ஆகலாம். இறை இராச்சியத்தை, நித்திய ஜீவிதத்தை அடைதல் என்பது கிறிஸ்தவர்களிடம் நடைபெறவில்லையே. ஒளியும் வழியுமற்ற நிலையையே இவை உறுதிப்படுத்துகின்றன.

இறுதியாக சைவத் தமிழர்களுக்கு; ஏனைய சமய கருத்துக்கள் தேவையற்றன. மத மாற்றங்கள் என்பவை அரசியல் நிலைப்பாட்டில், செயற்பாட்டில் குழப்ப நிலையை தோற்றுவிக்கும் அமெரிக்க ஆங்கில கிறிஸ்தவர்களோ, இலங்கை இராணுவ பௌத்தர்களோ, தமிழர்களின் வாழ்வியலை பெற்றுக்கொள்ளும் பயணத் திசையை குழப்ப வேண்டாம். உங்களின் செயற்பாடுகள் கௌதம புத்தரின், கிறிஸ்துவின் நிலைப்பாடுகளுக்கு முரணானவை. காலணித்துவ ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவ மதமாற்றத்துக்கு உட்பட்டவர்களின் சந்ததியினரும் தற்போது கிறிஸ்தவ மதமாற்றத்துக்கு உட்பட்டோரும் தெளிவடையுங்கள். இந்து சமயத்துக்கு மிஞ்சிய நிலை கிறிஸ்தவத்தில் இல்லை என்பது கிறிஸ்தவ மத நிலை என்பது பிற நாட்டு அரசியல் ஆதிக்கத்துக்குத் துணைபோதலே என்பதையும் உணர்ந்துகொள்ளுங்கள். நமக்கு நாமே சக்தி. நமக்கு நாமே துணை. ஒளி பெற்று நடையயில்வோம். ஏனையோருக்கு ஒளியும் வழியுமாவோம்.

எழுமின் விழிமின் செயல்படுமின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 255



அனுப்புபவர் பெயர்:.............................................

விலாசம்:.............................................

.............................................

கையொப்பம்:.............................................

### இடமிருந்து வலம்

1. ஒரு பாடலின் இறுதி அடியை அடுத்த பாடலின் முதல் அடியாகக் கொண்டு அமையும் பாடல் வகை.
4.வெளுத்த நிறம்
6.ஒரு திசை
7.ஆழ்வார்கள் பாடியது
9. திங்கள்
11.ரகம்
12. இசைப்பாட்டு
13. அரற்றுதல்
14. பதவியால் வருவது
16. மீன்பிடிக்கக் கட்டும் கூடு
17. சமுத்திரம்
18. பூட்டான் தலைநகர்
19. வலிமை

### மேலிருந்து கீழ்

1. சூது வாது தெரியாதவன்
2. இது வளர காற்றும், சூரிய ஒளியும் நீரும் மிக அவசியம்.
3. உறுதி
4. உபசாரமாகக் கொடுப்பது
5. மத்திய பகுதி
8. பல நாடுகளில் போராட்டம் இதை வேண்டித்தான்.
10. தன்னைப் பற்றி பீற்றிக் கொள்வது
12. நேரத்துடன் தொடர்புடையது
13. வலமிருந்து இடம்நோக்கி எழுதும் மொழி
14. ஏதிலி
15. வளையல்
17. சேர்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 233 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) சாகசம் (4) அதிக (7) தவம் (8) முகராசி (9) கலைமகள் (11) விரு (12) தரு (13) கடல் (14) சிம்மாசனம் (16) முன் (17) திடல் (19) கனவு (20) சளி (21) தாம் (22) ஆகுபெயர்.

**மேலிருந்து கீழ்**

(1) சாதகம் (2) கவலை (3) சம்மதம் (4) அக (5) திராவிடம் (6) கசிதல் (8) முள் (13) கனல் (14) சின்னம் (15) சடங்கு (16) முகதா (18) குளிர் (20) சபா

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 255**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (17.10.2012 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.235இல் வெற்றி பெறுவோர்களது விபரம்21.10.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 233 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

**ச.பிரசாந்,**
இல.33, பொலிஸ் நிலைய வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

**2 ஆம் பரிசு**

**செ.பிரார்த்தனா,**
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளிநொச்சி.

**3 ஆம் பரிசு**

**பா.செந்திரு,**
கூடல், கொடிகாமம்.

**4 ஆம் பரிசு**

**திருமதி சிவதேவி தியாகராஜா,**
இல.19, கே.கே.எஸ்.வீதி, தெல்லிப்பழை.

**5 ஆம் பரிசு**

**போ.ஜெனோஷன்,**
சில்லாலை, பண்டத்தரிப்பு.

**பாராட்டுப் பெறுவோர்**

**ச.முருகநேசன்,**
இல.47, பிரம்படி ஒழுங்கை, கொக்குவில்.

**கா.வேலுப்பிள்ளை,**
காயத்திரி ஜூவலறி, இல.38, மில் வீதி, வவுனியா.

**க.பிரதீபன்,**
ஆசிரியர், யா/அராலி இந்துக் கல்லூரி, அராலி.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்கு தபாலில் அனுப்பிவைக்கப்படும்.*


## பரந்து விரிந்த காதல்

நெடுநாள்களாய்
கடல்பார்க்க
ஆசை கொண்டு
கடல் மீது தீராக் காதல்
கொண்டவளாய் நான்!
முதன் முதலாய் கடல்
பார்க்க காலம் வந்தது
காதலனே
உன் அருகாமை நின்று!
கடலைப் பாராது
உன்னையே
பார்த்துக்கொண்டிருக்கிறேன்
கண்ணிமைக்காமல்!
அலை வந்து
நனைத்த மணலில்
நம் காதல்
எழுதி வைத்தேன்.
எக்காலம் ஆனாலும்
இக்காதல் அழியாது
என்று!
அடுத்தநொடி வந்திட்ட
அலை வந்து
அழிக்கிறது
எழுதிவைத்த நம் காதலை!
அலை கொண்ட பொறாமை
என்றப்போ எண்ணிட்டேன்.
அப்புறமாய் அறிந்திட்டேன்
நம் காதல் இடைவெளியில்
எங்கேயோ நீயும்
வெகுதொலைவில் நானும்!
நாம் மிதித்த கடலலையை
நான் மட்டும் மிதிக்க
மாட்டேன்
நீயும் நானும் சேர்ந்தெப்போ
மிதிப்போமென்று
பசலை நோய் வந்தவளாய்
பார்த்திப்போ
காத்திருக்கிறேன்!
பரந்து விரிந்த
கடற்பரப்பை
பார்க்க நான் கொண்ட ஆசை
பரந்து நிறைந்த நம்
காதலாலே
பாராமலே போகிறதடா!



யாரோ

## ஊனம் இங்கு ஏனோ?



பாதங்கள் இல்லாதோர்
பாதை தவறிப் போனதில்லை
கண்பார்வை இல்லாதோர்
கண்ணியம் தவறிப் போனதில்லை
வாய்பேச முடியாதோர்
வாய்மை தவறிப் போனதில்லை
கரங்கள் இல்லாதோர்
கறைபடிந்துபோனதில்லை
செவிப்புலன் அற்றோர்
செயலிழந்து போனதில்லை
உளவளம் குன்றியோர்
உண்மையை மறைத்ததில்லை
ஊனமாய் பிறந்த யாரும்
ஊதாரி ஆனதில்லை
எல்லாம் இருந்தும் இங்கே
மனிதனாய் வாழ்ந்தவர் யார்?

அ.அஜந்தன்,
கந்தர்மடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழவிடுங்கள் எங்களை

விகேளம்



நீண்ட நாள் அமைதிக்குப் பின்னர் ஒரு புயல் பலமாக அடிக்கத் தொடங்கியுள்ளது. தொடங்கிய இடம் தெரிந்தாலும் முடியும் இடம் எது என்று தெரியாத இந்தப் புயல் ஒரு பகுதி மக்களின் வாழ் நிலையை சீரழித்து விட்டது. அவர்கள் நின்மதியாக உறங்கவில்லை. மன நிறைவோடு உணவருந்தவில்லை. தினம் தினம் திசைகளைப் பார்த்தபடி காற்றின் வேகத்தைக் கவனித்தபடி இருக்கிறார்கள்.

அவர்களது எதிர்பார்ப்பு காற்று எந்தப் பக்கம் வீசினாலும் எல்லாவற்றையும் அடித்துச் சென்றாலும் சொந்த மண்ணை மட்டும் ஒன்றும் செய்யாது எங்களிடம் தந்துவிட வேண்டும் என்பதே.

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி அகிய பிரதேசங்களில் 6 கிராம சேவகர் பிரிவுகள் இயங்குகின்றன.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்தப் பிரிவுகளில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டு விட்டனர்.

மரபார்ந்த சமூகக் கட்டமைப்பைக் கொண்ட இந்த மக்கள் சேனைப் பயிர்ச் செய்கை, பருவ காலப் பயிர்ச் செய்கை என்பவற்றோடு மற்றுமொரு பிரிவினர் கடற்றொழில் சமூகமாகவும் வாழ்ந்து வந்தனர்.

1983 இனக் கலவரத்தின் விளைவோடு இடம்பெயர்ந்த மக்கள் 27 வருடங்களின் பின்னர் 2010 இல் மீண்டும் தமது சொந்த மண்ணைப் பார்க்க சந்தர்ப்பம் கிடைத்தது. அதுவும் இருக்கும் இடத்திற்கு மட்டுமே வேறு இடங்களுக்கு அல்ல.

இவர்கள் வாழ்விடத்தில் மட்டுமன்றி தமது மூத்தோர்களால் பராமரிக்கப்பட்ட குளங்களின் கீழும் நெற் செய்கை மற்றும் பல்லின பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்தனர்.

குறிப்பாக வெள்ளக்கல்லடி, சவலாத்துவெளி, இருந்தகாடு, நாயடித்தமுறிப்பு, முந்திரிக்குளம், முருக்கடி, ஆமையன்குளம் உள்ளிட்ட 20 இற்கு மேற்பட்ட சிறு குளங்கள் ஏழாயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலங்கள் இவர்களுக்கு சொந்தமானவை.

6 கிராம அலுவலர் பிரிவிலும் ஆயிரத்துக்கு அதிகமான குடும்பங்கள் தற்போது வசித்து வருகின்றனர். இந்த நிலையில் இவர்களுக்கான பூர்வீக நிலத்தை பயிர்ச் செய்கைக்கு கையளிப்பதிலும் அதற்கான உறுதிப் பத்திரங்களை சமர்ப்பிப்பதிலும் பெரும்பான்மை சமூகத்தினர் பின்னடித்து வருகின்றனர். குறிப்பாக இந்தக் கிராமங்களில் 70 வீதமான மக்கள் விவசாயத்தை வாழ்வாதாரமாகவும் 30 வீதமான மக்கள் கடற்றொழிலை வாழ்வாதாரமாகவும் கொண்டுள்ளனர். ஆனால் இவர்களுக்கு ஒரு வீதம் கூட அவற்றுக்காக அனுமதி வழங்கப்படவில்லை.

மாரியாமுனை, நெருஞ்சிமுனை ஆகிய கடல் பகுதிகளில் இந்த மக்களுக்கு இதுவரை மீன் பிடிப்பதற்கான அனுமதி வழங்கவில்லை.

"2 வருடங்களாக தாம் பூர்வீகத் தொழிலில் ஈடுபடும் உரிமை மறுக்கப்பட்ட நிலையிலேயே இங்கு வாழ்ந்து வருகிறோம். அதிகாரிகள் எமது பூர்வீக நிலங்களையும் கடற்பரப்பையும் மீட்டுத் தருவதாக உறுதி கூறினர். அதற்காக சிறிது காலம் காத்திருங்கள் என்றும் பக்குவப் படுத்தினர். பொறுமை காத்த எமக்கு இனியும் அதை செய்ய முடியாமல் இருக்கிறது. காரணம் வயிற்றுப் பிழைப்புக்கு நாங்கள் அங்கே போயே ஆக வேண்டும். தொழிலில் ஈடுபட்டே ஆக வேண்டும். இதனைப் [illegible] கொள்வதற்கு எமது தரப்பில் எந்த அதிகாரிகளும் இல்லை.

பதிலுக்கு அந்த நிலத்தைப் பறித்து பெரும்பான்மை சமூகத்திடம் கொடுத்து விடுவதற்கே சிலர் முயற்சிக்கின்றனர். அதில் எம்மவர்க்கும் பங்கிருக்கிறது என்பதே வேதனையான விடயம்'' என்கிறார் அந்த ஊர் முதியவர் ஒருவர்.

பழமை வாய்ந்த அரசியல் பேசும் இவர் பூர்வீக விவசாயி. தமது மூத்தோர்கள் அந்தக் கிராமங்களில் எவ்வாறு வாழ்க்கையை நடத்தினர். நாங்கள் எவ்வளவு சந்தோசமாக வாழ்ந்தோம் என மீள மீள நினைவுபடுத்தும் அவர் 'இவங்களை நாங்கள் ஏதும் தர வேண்டும் என்று நம்பியிருக்கவில்லை – கேட்கவில்லை. எங்கட சொந்த நிலங்களை எங்களிட்டை தந்தாலே போதும். ஆனால் எவனோ ஒருவனுக்கு தாரை வார்ப்பதற்கு எங்களுக்கு கதை சொல்லுகிறானுகள் இவங்கள்'' என்று தனது ஆதங்கங்களை பேசிக்கொண்டிருந்தார் அந்த முதியவர்.

மேலே குறிப்பிடப்பட்ட கிராமங்கள் 80 களின் பின்னர் முற்று முழுதாக பெரும்பான்மை சமூகத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. கொக்கிளாய் ஆற்றுக்கு மேற்கு மற்றும் வடக்கு பக்கங்களில் இந்த விவசாய நிலங்கள் இருக்கின்றன. அவற்றில் பெரும்பான்மை மக்கள் இன்றுவரை விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இடம்பெயர்வு காரணமாக மக்கள் அங்கில்லாத சூழலில் அவர்கள் செய்கை பண்ணிய நிலங்களை உரிய மக்களிடம் மீள வழங்குவதற்கு அதிகாரிகள் ஒப்புக்கொண்டிருந்தனர். வரும் கால போகத்திலாவது (இப்போது மழை தொடங்கியுள்ளது. பெரும்போக நெற் செய்கைக்காக சிங்களவர்களே அந்த நிலங்களை [illegible] [illegible] நிலங்களை மீட்டு விவசாய நடவடிக்கைக்கு தருவதாக உறுதியளிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது இன்றுவரை நடக்கவில்லை.

83 இன் பின்னர் அகதிகளாக அலைந்து திரிந்த மக்களுக்கு உருப்படியாக ஒரு வீடு இல்லை. சேர்த்து வைத்த சொத்து இல்லை. இனியாவது கஷ்ரப்பட்டு முன்னேறுவதற்கு அவர்களின் சொந்த இடம் அவர்களிடம் இல்லை.

"எங்களை திட்டமிட்டு வெளியேற்றவே சிலர் முயற்சிக்கின்றனர். நாங்கள் இப்போது தொழில் வாய்ப்பை பெறுவதாயின் 38 கிலோ மீற்றருக்கு வெளியே செல்ல வேண்டும். இந்த வலிந்த தொழில் மூலம் எங்களை அந்த இடங்களுக்கே நகர்த்துவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். இதன் மூலம் எமது பூர்வீக நிலங்களை சிங்கள மயமாக்குவதில் அவர்கள் குறியாக உள்ளனர். இதற்காக நிர்வாக பிரிப்புக்களும் இடம்பெற்றுள்ளன. வெலிஓயா (மணலாறு) பிரதேச செயலகம் இப்போது இயங்கத் தொடங்கிவிட்டது. இவையெல்லாம் திட்டமிட்ட நில அபகரிப்பே'' என்கின்றனர் அந்த மக்கள்.

சொந்த நிலத்தில் தொழில் செய்ய முடியாத அவலத்தில் வாழும் இந்த மக்கள் கேட்பது தமது பூர்வீக தொழில் இடத்தை மாத்திரமே.

நிவாரணம் தருகிறோம். வாழ்வாதார உதவி செய்கிறோம். வீடு தருகிறோம். காசு தருகிறோம். தொழில் உபகரணம் தருகிறோம் என்றெல்லாம் பேசிக் கொள்பவர்கள் ஏன் எங்கள் சொந்தக் காணிகளை எங்களிடம் தர மறுக்கின்றனர். அதற்காக குரல் கொடுத்தால் நசுக்க முற்படுகின்றனர் என்பதே அந்த மக்களின் ஏக்கமாக உள்ளது.

"நாங்கள் இங்கு மீளக்குடி

**விழுங்கப்படும் பெரு நிலங்களில் ஒன்றாக மாறிக்கொண்டிருக்கிறது கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், நாயாறு கிராமங்கள். அந்த மக்களின் பூர்வீக மண் ஆட்சியுரிமையற்று மாற்றான் கையில் வளம் பெருக்க காத்திருக்கிறது. காப்பாற்ற யாரும் அற்று அழுகிறது அந்த தேசம்.**

யேற்றப்பட்டுவிட்டதாக சொல்கிறார்கள். உண்மைதான். ஆனால் எங்களை இவர்கள் வாழ்விக்கவில்லை. பதிலாக இன்னும் ஏழைகளாக எவரிடமோ கையேந்துபவர்களாக மாற்றியிருக்கின்றனர்.

இரண்டு வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் ஏக்கமும் பெருமூச்சுமே வாழ்க்கையாகிவிட்டது.'' இதுவே அந்தக் கிராம மக்களின் கதையாக மாறிவிட்டது.

பசுமையான அந்த நிலங்களில் எந்த உரிமையும் அற்ற எவரோ விளைச்சலை அள்ளிச் செல்ல தினமும் கொட்டாவி விட்டபடி ஏங்குகின்றனர் அந்த மக்கள். யாரும் தமக்காக குரல் கொடுக்க இல்லை என்பதையும் அவர்கள் தெளிவாகக் கூறுவதோடு எதிர்கால வாழ்க்கைக்கான எல்லாத் தேடல்களையும் கைவிட்டு எதுவுமே வேண்டாம் செத்துத் தொலைந்துவிடுவோம் என்ற எண்ணமே அந்த மக்களிடம் புரையோடியிருப்பதைக் காணமுடிகிறது.

கிராமம் கிராமமாக விழுங்கப்படும் நிலங்களின் வரிசையில் இந்த மக்களின் வாழ்க்கையும் விழுங்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவர் எனப் பெயர் பெற்ற நடிகர் அரங்கியல் மேதை பெ.இம்மானுவேல்

■வயாவிளான் தவமைந்தன்

நாடகம் என்பது கூட்டுக் கலையாகும். பல துறை சார்ந்த மேதைகளின் ஒன்றிணைந்த முயற்சியிலேயே ஒரு நாடக ஆற்றுகையானது வெற்றி பெறுகின்றது. இந்த வகையில் மேடையமைப்பு, ஒப்பனை என்பன மிக முக்கியமான பகுதியாக விளங்குவதை எவராலும் மறுக்க முடியாது. ஈழத்தமிழ் நாடக வரலாற்றில் என்றும் அழியாத உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கப்படுபவர் ஒப்பனைச் சக்கரவர்த்தி அமரர் சா.பெஞ்சமின்.

இவரோடு இணைந்து பல நூற்றுக் கணக்கான நாடகங்களுக்கான ஒப்பனையாளராகப் பணியாற்றிய இவரது மகன் கலைமாமணி பெ.இம்மானுவேல், கூத்து, நவீன நாடகம் போன்ற துறைகளிலும் சிறந்து விளங்கி 1981ஆம் ஆண்டிலிருந்து பிரான்ஸ் நாட்டில் பல நாடகங்களையும் கூத்துக்களையும் மேடையேற்றி வருவதுடன் யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் பாரிஸ் கிளையின் தலைவராகவும் கடந்த பல ஆண்டுகளாகச் சிறப்புடன் பணியாற்றி வருகின்றார்.


அமரர் பெஞ்சமின் திருமதி மேரி திரேசா பெஞ்சமின் தம்பதிகளின் மகனாக 25.12.1943 இல் சுண்டிக்குழியில் இவர் பிறந்தார். புனித சாள்ஸ் மகாவித்தியாலயம், புனித பத்திரிசியார் கல்லூரி போன்ற பாடசாலைகளில் கல்வி கற்று எஸ்.எஸ்.சியில் சித்தியடைந்த இவர் திருமலை கப்பல் திணைக்கள அலுவலராகவும் கண்ணாடித் தொழிற்சாலையின் மேற்பார்வையாளராகவும் பல ஆண்டுகளாகப் பணியாற்றியவர்.

சங்கீதபூஷணம் அல்வின் தேவசகாயத்திடம் வரன்முறையாக குரலிசையைக் கற்று வந்த இவர் இயல்பாகவே கலையார்வம் கொண்டவராக விளங்கியதுடன் தனது குழந்தைப் பருவத்திலேயே தந்தையாரது உதவியாளராகச் செயற்படத் தொடங்கினார். இதனால் எண்ணற்ற கூத்துக்களைப் பார்த்தும் கேட்டும் தனது கேள்வி ஞானத்தின் ஊடாகக் கூத்துக்களின் பாடல்கள், மெட்டுக்கள் அனைத்தையும் மனப்பாடம் செய்து கொண்டார். 1960 இல் பள்ளி மாணவராக இருந்த போது திருப்பாடுகளின் காட்சியில் பிச்சைக்காரனாக முதல் முதலாக நடித்து நாடக உலகில் கால் பதித்துக் கொண்டார்.

தொடர்ந்தும் தந்தையின் உதவியாளராகவும் நடிகராகவும் விளங்கி வந்த இவர் 1969 இல் அ.தாசீசியஸ், ஜோண்பிள்ளை போன்றோரால் நெறிப்படுத்தப்பட்ட திருப்பாடுகளின் காட்சியில் இயேசுவாக நடித்து நடிப்புத்துறையில் முத்திரை பதித்துப் பெரும் புகழைத் தனதாக்கிக் கொண்டார். இதன் பின் கலைத்தூது நீ.மரியசேவியர் அடிகளாரது பலிக்களம் என்னும் நாடக ஆற்றுகையானது நாடு முழுவதும் தொடர்ச்சியாக மேடையேறியபோது அதிலும் இயேசுவாக நடித்து அனைவராலும் பாராட்டப்பட்டதுடன் ஆண்டவர் இம்மானுவேல் என்னும் அடைமொழிப் பெயரால் அழைக்கப்பட்டும் வந்தார்.

கூத்துக் கலையில் திறன் கொண்டவராக விளங்கிய இவர் நாட்டுக் கூத்துக் கலாநிதி பூந்தான் யோசேப்புவால் நெறிப்படுத்தப்பட்ட ஸ்நாபக அருளப்பர் என்னும் தென்மோடிக் கூத்தில் கதாபாத்திரமேற்று நடித்ததுடன் அவரால் நெறிப்படுத்தப்பட்ட ஜெனோவா, சங்கிலியன், கருங்குயில் குன்றத்துக் கொலை போன்ற வரலாற்றுப் படைப்புக்களிலும் நடித்ததுடன் கலையரசு சொர்ணலிங்கத்தால் உருவாக்கப்பட்டு, இரகுநாதனால் நெறிப்படுத்தப்பட்ட தேரோட்டி மகன் என்னும் சரித்திர நாடகத்திலும் சகுனியாக நடித்துப் பெரும் புகழைப் பெற்றார்.

1981இல் பிரான்ஸிற்குச் சென்ற இவர் புலம் பெயர் தமிழர்களிடையே தனது கலைப்பணியை விரிவுபடுத்தி நீ ஒரு பாறை, அனைத்தும் அவரே, ஊதாரிப் பிள்ளையின் உவமை போன்ற கூத்துக்களையும் ஞான சவுந்தரி என்னும் இசை நாடகத்தையும் மேடையேற்றி வருவதுடன் மாபெரும் படைப்பான திருப்பாடுகளின் காட்சியையும் ஆற்றுகைப்படுத்தி வருகிறார். பாரிஸ் திருமறைக் கலாமன்றத்தின் தலைவராக விளங்குகின்ற இவர் கடந்த பத்து ஆண்டுகளாகக் கலை வண்ணம் என்னும் பல்சுவைக் கலைவிழாவை ஆண்டுதோறும் நிகழ்த்தி வருகின்றார்.



## 63

## சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம்

அத்துடன் புலம் பெயர் நாடுகளில் வாழ்ந்து வருகின்ற ஈழத்தின் முதுகலைஞர்களை மதிப்பளிக்கும் விழாக்களையும் ஏற்பாடு செய்து வருவதுடன் அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் தனது கலைப் பணியை அயராது மேற்கொண்டு வருகின்றார். மேடை நடிகராகவும் நெறியாளராகவும் பாடகராகவும் ஒப்பனையாளராகவும் ஒளியமைப்பாளராகவும் விளங்குகின்ற இக்கலைஞர் பிரான்ஸ் நாட்டவரால் உருவாக்கப்பட்ட டெலீவ்ட் (காதல் சின்னம்) என்னும் பிரெஞ்சு மொழித் திரைப்படத்தில் நடித்துப் பாராட்டுப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எடுப்பான தோற்றமும் கனதியான குரல் வளமும் நடிப்பாற்றலும் கொண்டமைந்த இவர் எமது பண்பாடு, மொழி, கலை போன்ற துறைகளில் ஆழமான பற்றுறுதி கொண்டவராகவும் அவற்றை வளர்த்தெடுப்பதிலும் பாதுகாப்பதிலும் ஈடுபட்டு வருகின்ற ஒருவராகவும் ஓய்வின்றிச் செயற்பட்டு வருகின்றார்.

''கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக வெளிநாட்டில் வசித்து வரும் நான் எனது மண்ணையோ மண்ணின் மணம் வீசும் கலைகளையோ என்னை வளர்த்தெடுத்த கலைஞர்களையோ மறந்து விடவில்லை. இயந்திரமயப்பட்ட அந்த வாழ்க்கையிலும் என்போன்ற பலர் எமது கலைகளை வளர்த்தெடுப்பதில் அக்கறையுள்ளவர்களாகவே இருந்து வருகின்றனர்.

மேலை நாட்டுக் கலைத்துறையினர் எமது கலைகளைப் பெரிதும் இரசித்து வருகின்றனர். ஈழத்தமிழரின் மரபு வழியான கலைவடிவங்கள் எவை என்று அக்கலைஞர்கள் எம்மிடம் கேட்டால் கர்நாடக சங்கீதம் என்றோ பரத நாட்டியம் என்றோ எம்மால் கூற முடிவதில்லை. ஏனெனில் அவை தென்னிந்தியக் கலைகள் என்பதால் எமக்குரியதான கலைவடிவங்களையே நாம் ஆற்றுப்படுத்தி எமது சுயத்தை நிலைநிறுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஈழத்தில் தற்காலத்தில் வழக்கில் இருக்கின்ற கூத்து முறைமைகள் அனைத்தும் எங்களுக்குச் சொந்தமான கலைகளே. அவற்றை நாம் பாதுகாக்கத் தவறிவிடக் கூடாது. முக்கியமாகப் பரத நாட்டியத்தைக் கற்கும் மாணவர்கள் எமது கூத்து முறைமைகளையும் கற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அயல் நாட்டுக் கலைகளில் காட்டும் ஆர்வத்தை எமது கலைகளிலும் காண்பிக்க வேண்டும். பல்லாயிரம் ஆண்டு நீட்சியான வரலாறு கொண்ட ஈழத்தமிழினம் தனது பண்பாட்டையேனும் பாதுகாக்க முயற்சிக்க வேண்டும்'' என்று தனது ஆழமான கருத்துக்களை இவர் கவலையுடன் கூறுகின்றார்.

# உடற்சூடு தணிக்கும் பருத்தியின் இளந்தளிர்கள்

## நலம் தரும் தெய்வீக மூலிகைகள்

**பருத்தி**
**வேறுபெயர்-** பன்னல், கார்ப்பாசம்
**தாவரவியற்பெயர்-** Gossypium herbaceum (கொசிப்பியம் ஹெபேசியம்)
**குடும்பம்** -Malvaceae (மல்வாசியே)
**சிங்களப்பெயர்-** கபு
**சமஸ்கிருதப்பெயர்-** கார்ப்பாச
**ஆங்கிலப்பெயர்-** Cotton

இது செடி வகுப்புக்குரியது. ஒரு காலத்தில் வட இலங்கையின் முக்கிய வர்த்தகப் பயிராக விளங்கிய பருத்தி தற்காலத்தில் அங்குமிங்குமாகத் தரிசு நிலங்களில் தானாகவே முளைத்துக் காணப்படுகிறது. இது நன்கு கிளைத்து வளரக்கூடியது. தனியிலைகள். பெரியதாகவும் அங்கையுருவினதாகவும் காணப்படும். பூக்கள் பெரிதாகவும் மஞ்சள் நிறமாகவும் இருக்கும். விதைகள் வெண்பஞ்சினால் சூழப்பட்டுக் காணப்படும்.

பருத்தியில் செம்பருத்தி, காட்டுப் பருத்தி, வெண்பருத்தி, பேய்ப்பருத்தி என்று பல வகையுண்டு. பருத்தியின் ஒரு வகையே இம்மரமாகும்.



**உடற்சூட்டுக்கு**

பருத்தியின் இளந்தளிர் இலைகளை அரைத்துப் பசுப்பாலில் கலக்கிக் குடித்து வர உடற்சூடு, பித்தம் என்பன தணிவடையும்.

**சீதபேதிக்கு**

பருத்தியின் [illegible] பிஞ்சு என்பவற்றை [illegible] வர சீதபேதி, மூலநோய் என்பன தணிவடையும்.

**சலக்கடுப்பு**

பருத்திவேரைக் குடிநீர் செய்து கொடுத்து வர சலக்கட்டு நீங்கும். சல எரிவும் மாறும்.

**மூட்டுவாதத்துக்கு**

[illegible] யை வாட்டி [illegible] இல் கட்டிவர மூட்டுவீக்கம், மூட்டுவலி என்பன தணிவடையும்.

**தாய்ப்பால் சுரக்க**

பருத்தியிலையை வாட்டி மார்பகத்துக்கு ஒத்தடம் கொடுத்துவர தாய்ப்பால் அதிகம் சுரக்கும்.

குழந்தை பெற்ற தாயை பருத்தியிலை, மாவிலங்கம்பட்டை, ஆமணக்கமிலை, வேப்பம் பட்டை, பாவட்டையிலை என்பவற்றைக் கொண்டு அவித்த நீரால் குளிக்க வார்த்து வருவதுடன் மேற்படி இலைகளால் உடம்பைத் தேய்த்து ஒத்தடம் கொடுப்பதன் மூலம் மார்பகத்துக்கான இரத்தச் சுற்றோட்டம் அதிகரிப்பதுடன் தாய்ப்பால் அதிகம் சுரக்கவும் ஏதுவாகிறது.

Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெறலாம் வாங்க!

ராகவன் அல்பி

உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....

18

உங்கள் வாழ்க்கையில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் நீங்கள் புறப்பட்டுவிட்டால் ஒருபோதும் அதைக் கைவிடாதீர்கள். ஆரம்ப உற்சாகத்தை, இலக்கை அடையும் வரை எப்படித் தக்க வைப்பது என்பதைப் பற்றியே யோசியுங்கள்.

தொடக்கத்தில் படு உற்சாகத்துடன் ஒரு விடயத்தைச் செய்யத் தொடங்குவோம். நாளாக நாளாக, ஆரம்ப உற்சாகம் மறைந்து தளர்ந்து விட்டுவிடுவோம். நீங்கள் கூடுதலாக வேலை செய்ய வேண்டியிருப்பதன் இயல்பான எதிர்வினைதான் இது.

பெரும் மாற்றங்கள் ஏற்பட அதிக நாள் ஆகும். அந்தச் சமயத்தில் பேசாமல் செய்யும் வேலையை விட்டுவிடலாம் என்பதுதான் நமக்கு உடனே தோன்றும் எளிதான வழியாக இருக்கும். முயற்சியைப் பாதியில் கைவிட்டு விடும் அபாயத்தை தடுக்க நீங்கள் மைல்கல்களை அமைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு மைல்கல்லை அடைந்ததும் அதைக் குறித்து வைத்துக்கொண்டால் தான் நாம் இங்கு இருக்கிறோம் என்று தெரியும். வெற்றியைக் கணக்கிடுவதற்கான முறைகள் எளிதானவை. அதை எவ்வாறு தொடர்ந்து செய்வது என்கிற விஷயங்களை இனிப் பார்க்கலாம்.

**தொடர்ந்து முன்னேறும் வகையில் இலக்குகளை அமைத்தல்:** நடந்து முடிவதற்கு முன்னால் ஓட நினைக்காதீர்கள். வாழ்க்கையை மேம்படுத்த திட்டமிடும் ஒவ்வொரு திட்டத்துக்கும் ஏற்ப இலக்குகளை அமையுங்கள். இவ்வாறு செய்தால் மனத்துணிவை இழக்க மாட்டீர்கள். ஒவ்வொரு மைல்கல்லையும் கடக்கும் போது அதைக் கொண்டாடுங்கள்.

**போட்டி போடுதல்:** தடகள வீரர்கள் போட்டிகளில் சிறப்பாகச் செயற்பட்டுத் தங்களுடைய முந்தைய சாதனையை முறியடித்து புதிய சாதனையைப் படைக்க விரும்புவார்கள். போட்டியானது உங்களைச் சிறப்பாகச் செயற்பட வைக்கிறது.

**நண்பர்களிடம் கேளுங்கள்:** உங்களிடம் ஏற்பட்ட மாற்றங்களை மற்றவர்கள் மிக மெதுவாகத்தான் தெரிந்துகொள்வார்கள். முன்பு நீங்கள் எப்படி இருந்தீர்கள் என்பதை மறந்துவிட்டு அப்படியே உங்களை ஏற்றுக்கொள்வார்கள். அவர்களிடம் போய் உங்களிடம் ஏதாவது மாற்றம் தெரிகிறதா என்று கேளுங்கள்

**பழைய பேன்ட்டை வைத்திருங்கள்:** எடை குறைப்பதென்பது உங்கள் இலக்குகளில் ஒன்றாக இருந்தால், உங்களின் பழைய பேன்ட்களை வைத்திருங்கள். அவ்வப்போது அதைப் போட்டுப் பாருங்கள்.



**வங்கி இருப்பைப் பாருங்கள்:** உங்கள் வெற்றியைப் பொருளாதார ரீதியாகப் பார்க்கிறீர்கள் என்றால், அதற்குச் சிறந்த வழி வங்கியில் உங்களுக்கு எவ்வளவு பணம் இருக்கிறது என்பதைப் பார்ப்பது. பணம் வைத்திருப்பது மட்டும் மதிப்பானது அல்ல. அதை எந்த வழியில் செலவழிக்கிறீர்கள் என்பது தான் அதன் மதிப்பைத் தீர்மானிக்கிறது.

**பதிவுகளை வைத்திருங்கள்:** நாள்கள் கடந்து செல்லும் போது நீங்கள் முந்தைய மைல்கல்களை மறந்துவிடுவீர்கள். அதனால் அதைக் குறிப்பதற்கென டையரியை வைத்துக்கொள்ளுங்கள்.

**கார் வாங்குங்கள்:** உங்களுடைய வெற்றியை மற்றவர்களுக்குத் தெரியும் வகையில் செய்வது முக்கியமானது. வெற்றி என்பது பொருள் சார்ந்தது மட்டுமல்ல. சமயத்தில் அது உங்களுக்கு நீங்களே கொடுத்துக்கொள்ளும் 'ட்ரீட்' ஆகவும் இருக்கும்.

**அதிக நேசத்துடன் இருங்கள்:** உங்கள் மீது அதிக நேசத்துடன் இருப்பதை உணரும் போது உங்களைச் சுற்றியுள்ளவர்களின் உணர்வுகளையும் நன்கு புரிந்துகொள்வீர்கள். அதிக அன்புடன் இருப்பது அதிக நெருக்கத்தையும் உணரச்செய்யும். இது பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று பாருங்கள்.

**வீட்டுக்கு விரைவாகத் திரும்புங்கள்:** வாரத்தில் ஒரு நாளாவது வீட்டுக்குச் சீக்கிரமாகத் திரும்புங்கள். அதே சமயம் அலுவலக வேலையைச் சுருக்கிக் கொள்ளாதீர்கள். குழந்தைகளுடன் உங்கள் செல்லப் பிராணிகளுடனும் விளையாடுங்கள்.

**புதிய பொழுதுபோக்கு:** புதிய பொழுது போக்குகளை உருவாக்கிக்கொள்வது உங்கள் வாழ்க்கையில் புதிய விஷயங்களுக்கு அதிக இடமளிப்பதை ஏதுவாக்கும்.

இப்பொழுது உங்கள் முன்னுரிமைகளை அமைத்துக்கொள்வதற்கான சில நுட்பங்களைக் கண்டறிந்திருப்பீர்கள். மேலும் வாழ்க்கையில் நீங்கள் மாற்றம் செய்யும் விஷயங்களுக்காக ஒதுக்கவேண்டிய நேரத்தையும் கண்டறிந்திருப்பீர்கள். இறுதியாக நீங்கள் மேற்கொள்ள இருக்கும் திட்டத்தின் படிநிலைகளைக் குறித்து வைத்திருப்பீர்கள். இதனால் ஒவ்வொரு படியையும் கடக்கும் போது அதைக் கொண்டாடி கொண்டே போகலாம்.

மற்றவர்களும் உங்களிடமும் வாழ்க்கையிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கண்டு கொள்ளத் தொடங்குவார்கள். உங்கள் வளர்ச்சியைக் குறித்து வைப்பதன் மூலம் நீங்களும் அதைக் கண்டு கொள்ளலாம்.

# பெட்டைப் புலம்பல் வேண்டாம்..

லோ.துஷிகரன்



பாதிக்கப்பட்ட பெண்கள் பாஞ்சாலி போன்று "சபதம்" கொள்ள வேண்டும். அறிவும்- உணர்வும் கொண்ட மனிதர்களாக எப்பொழுது மாறுகின்றோமோ, அப்போது சமூக அநீதிகள் அழியும், நீதி பிறக்கும்.

மகாபாரதக் கதையிலே தருமனுக்கும் துரியோதனனுக்கும் இடையே சூதாட்டம் நடைபெறுகின்றது. துரியோதனனின் மாமன் சகுனியினதுவஞ்சகத்தாலும் தந்திரப் பேச்சாலும் சூதாட்டத்துக்குள் தருமன் இழுக்கப்பட்டான். பந்தயப் பொருள்களாகப் பொன், பொருள், குதிரை, தேர், நாடு, நகரம், மக்கள் எல்லாம் வைத்தான். ஆடினான் - தோற்றான், இழந்தான். அடுத்து தனது தம்பிமாரை வைத்தான். தோற்றுப் போனான். தன்னையும் வைத்து ஆடினான், தன்னையும் இழந்தான். இதுதான் சூது.

சூது போதை போன்றது. அவர்கள் அறியாமலேயே அவர்களை அது எங்கோ இழுத்துச் சென்று அவர்களிடம் உள்ளதை எல்லாவற்றையும் இழக்கச் செய்துவிடும். இறுதியில் அவர்களையும் இழக்கச் செய்துவிடும். அறிவும் திறமையும் மிக்க தருமனையே 'சூது' இழுத்து வீழ்த்திவிட்டது. இதுதான் மகாபாரதம் எமக்குச் சொல்லும் செய்திகளில் ஒன்று. எனவே சமூகத்தில் சகுனி, துரியோதனன் போன்ற வஞ்சகம் கொண்டவர்களது அறிமுகங்கள் கிடைக்கலாம். சூது போன்ற போதையும் கிடைக்கலாம். தருமன் போன்ற ஆற்றல்மிக்கவர்களையே அந்த வஞ்சகர்கள் வீழ்த்திவிடுவார்கள். போதை நல்லவர்களையும் நாசமாக்கக்கூடியது. கவனம் என்கிறது மகாபாரதம்.

அதுமட்டுமல்ல தருமனை சூது அத்துடன் விடவில்லை. தருமன் மனைவி பாஞ்சாலியையும் இறுதியில் பந்தயமாக வைத்து ஆடுகிறான். தோற்றுப்போகிறான். தருமன் பாஞ்சாலியையும் இழந்துவிட்டான். துரியோதனனது எண்ணம் பலித்தது. துரியோதனன் பாஞ்சாலியை சபைக்கு அழைத்து வரும்படி கட்டளை இடுகின்றான். தேரோட்டி சென்று பாஞ்சாலியை அழைத்தான். "உம்மைத் தோற்றபின் என்னைத் தோற்றீரா, அல்லது என்னைத் தோற்றபின் உம்மைத் தோற்றீரா?" என சூதாடியவர்களைக் கேட்டுவரும்படி பாஞ்சாலி விடைகூறுகிறாள். தேரோட்டி சபைக்குத் திரும்பிச் சென்றுகூற, துரியோதனன் கொதித்து எழுகின்றான். அவளைச் சபைக்கு வந்து அந்தக் கேள்வியைக் கேட்கச் சொல்லு என தேரோட்டியைத் திருப்பி அனுப்புகிறான்.

தேரோட்டி மீண்டும் சென்று பாஞ்சாலியிடம் துரியோதனன் கூறியதைக் கூற பாஞ்சாலி மீண்டும் அவனைத் திரும்பிச் சென்று சபையோரிடம் இந்தக் கேள்வியைக் கேட்டு விடையை அறிந்துவா எனத் தேரோட்டியைத் திருப்பி அனுப்புகிறாள். தேரோட்டி திரும்பிச் சென்று துரியோதனனிடம் கூற, மிக்க கோபம் கொண்ட துரியோதனன் தம்பி துச்சாதனனை "நீ போய் பாஞ்சாலியை இழுத்து வா" என ஆணையிடுகிறான்.

வெறிபிடித்து ஓடிய துச்சாதனன் பாஞ்சாலியைப் பிடித்து இழுத்து வருகிறான். என்ன கொடுமை அவள் 'மாதவிலக்கில்' இருக் கிறேன் என்று கூறியும் கற்றைக் குழல் பிடித்துக் கண்ணில்லான் பெற்ற மகன் இழுத்து வருகின்றான்.

"ஐயகோ' வென்றே யலறி யுணர்வற்றுப்
பாண்டவர் தந் தேவியவள் பாதியுயிர் கொண்டுவர
நீண்ட கருங்குழலை நீசன் கரம்பற்றி
முன்னிழுத்துச் சென்றான் வழி நெடுக மொய்த்தவராய்
என்ன கொடுமையிது வென்று பார்த்திருந்தார்

என இந்தக் காட்சியைக் கண்ட பாரதி தனது பாஞ்சாலி சபதத்தில் சீறுகிறார். யாரைப் பார்த்துச் சீறுகின்றார் என்றால் துச்சாதனனைப் பார்த்து அல்ல. அந்தக் கெட்டவன் பாஞ்சாலியை இழுத்துச் செல்லும் போது அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஊர் மக்களை ஏசுகின்றான். அந்தக் காட்சியைப் பார்கக் கூடியவர்களை சுட்ட 'மொய்த்து' என்ற வார்த்தையைப் பாவித்தான். அதாவது மக்களை விலங்கின அஃறிணைப் பொருளாகக் காட்டுகிறான். வேடிக்கை பார்த்த மக்களின் மேல் அவ்வளவு கோபம் பாரதிக்கு.

"நெட்டை மரங்களென நின்று புலம்பினார், பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?" என கூடியிருந்த மக்கள் மேல் மேலும் பாய்ந்து விழுகிறான் பாரதி. சும்மா கத்துகிறார்கள். இவர்கள் பெண்களைப்போல் செயலற்றவர்களாக நின்று வெறும் கூக்குரல் போடுகிறார்களே எனக் கத்துகிறான். ஈக்களைப் போல் மொய்த்தார்கள் என மக்களை வர்ணித்த பாரதி மேலும் கோபம் கொண்டதால் ஈக்கள் போன்ற விலங்கு இனங்களுக்கும் இவர்களை ஒப்பிட முடியாது. அதனிலும் கீழானவர்கள் என நினைக்கின்றார். அதனால் பெட்டைப்

(24ஆம் பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

07.10.2012 முதல் 13.10.2012 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**- கடந்தகாலத்தில் சிலரிடம் பெற்ற உதவிக்கு, நன்றி செய்வீர்கள். பேச்சில் தெய்வ நம்பிக்கை நிறைந்திருக்கும். சமூகத்தில் உங்களை புறக்கணித்த சிலர் அன்பு பாராட்டுவர். தாயின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். புதிய நண்பர் அறிமுகமாவார். விருந்து உபசரிப்பில் ஆர்வமுடன் கலந்து கொள்வீர்கள். எதிரி செய்யும் கெடு செயலை தகுந்த உபாயத்தால் முறியடிப்பீர்கள். உடல் நல ஆரோக்கியம் திருப்திகரமாகும். வாகனபயணத்தில் மிதவேகத்தைப் பின்பற்றவும். தொழில் வியாபாரத்தில் நடைமுறை சிரமங்களை புதிய உத்திகளால் சரி செய்வீர்கள்.

**இடபம்**- உங்களின் அன்பு நிறைந்த செயல், உறவினர்களிடம் பாசத்தை அதிகரிக்கும். ஆரம்பிக்கும் காரியங்களில் வளர்ச்சி பெற வழிப்பிறக்கும். இளைய சகோதரரின் கவனக் குறைவான செயல்களை ஆலோசனை கொடுத்து மாற்றுவீர்கள். உடலில் நோய் அணுகாதிருக்க, நல்ல பழக்க வழக்கம், சுற்றுப்புறத்தூய்மை பாதுகாப்பது அவசியம். புத்திரர் புதிய திறமை வளர்த்து படிப்பில் முன்னேற்றம், பாராட்டு பெறுவர். எதிரியின் தொந்தரவு இல்லாத சுமுக வாழ்வு அமையும். தொழில் வியாபாரத்தில்

**மிதுனம்**- மனதில் இருந்த குழப்பம் விலகி, செயல் நிறைவேற்றுவதில் ஆர்வம் கொள்வீர்கள். அயலில் உள்ளவர்கள் நல்அன்பு பாராட்டுவர். புத்திரர் வெளிவட்டார பழக்கங்களில் நேரத்தைச் செலவழிப்பர். பக்குவமாக வழி நடத்துவதால் புத்திரரின் படிப்பு சீராகும். விலை மதிப்புள்ள பொருள் சொத்து ஆவணம் பிறர் பொறுப்பில் விடவேண்டாம். நோய்த் தொந்தரவு குறைந்து உடல் நலம் ஆரோக்கியம் பெறும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு, கவனம் அவசியமாகும். பணிபுரியும் பெண்கள், கவனக்குறைவான செயலால் நிர்வாகத்தின் கண்டிப்பை எதிர்கொள்ள நேரிடலாம். மாணவர்கள், சகமாணவர்களிடம் படிப்பு தவிர ஏனைய விடயங்களில் தேவையற்ற பேச்சு கூடாது.

**கடகம்**- பேச்சில் வசீகரம் அதிகரிக்கும். சமூகத்தில் நன்மதிப்புப் பெறுவீர்கள். உழைப்பில் ஆர்வம் வளர்ந்து பணிகளில் ஈடுபடுவீர்கள். உடன் பிறந்தவர் வாழ்வில் முன்னேறி, உங்களுக்கு பெருமை தேடித்தருவர். வீட்டுக்கு தேவையான பொருள்களை வாங்குவீர்கள். உறவினர்களின் வருகை, குடும்பத்தில் மகிழ்ச்சியை அதிகரிக்கும். புத்திரர் கவனக்குறைவால், உடல் நல பாதிப்பை அடைவர். கண்காணிப்பு, மருத்துவ சிகிச்சை நலம் பெற வைக்கும். இல்லறத்துணை, உங்கள் வாழ்வியல்

**சிங்கம்** உங்கள் நடை, உடை செயலில் புதிய மாற்றத்தைப் பின்பற்றுவீர்கள். கூடுதலாக உழைத்து, பணத்தேவையை சரி செய்வீர்கள். பூர்வீக சொத்தில் அளவான பணவரவு கிடைக்கும். எதிரி, தன் சொந்த சிரமங்களால் விலகிப்போவர். சத்தான உணவு வகை உண்ணக்கிடைத்து, உடல் நல ஆரோக்கியத்தைப் பலப்படுத்தும். இல்லறத்துணை, உங்களின் செயல்களுக்கு நிழல்போல துணை நின்று உதவுவர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் கௌரவம் பெற தாராள பணச்செலவில்

**கன்னி**-உங்கள் முயற்சிகளில் இருந்த தடை விலகும். சுற்றுப்புற சூழ்நிலையின் தாக்கம் உணர்ந்து செயற்படுவீர்கள். பணவரவு அதிகம் பெறுவதற்கான வழிவகையைக் கண்டறிவீர்கள். நல்ல உழைப்பின் பயனாய் உபரி பணவரவு கிடைக்கும். வீடு, வாகனத்தில் அபிவிருத்தி பணி செய்வீர்கள். புத்திரனின், மந்த கதியிலான செயல்களை சரி செய்ய ஊக்கம் கொடுப்பீர்கள். உடல்நல ஆரோக்கியத்திற்கு ஊட்டம் நிறைந்த உணவு உண்பதும், சிறுஅளவிலான மருத்துவ சிகிச்சையும் உதவும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பு நல்ல வளர்ச்சி தரும். உத்தியோகத்தர் அதிக பொறுப்புணர்வுடன் செயலாற்றுவர்.

**துலாம்**- தன்னம்பிக்கையுடன் செயற்படுவதால், தாமதம் தந்த காரியத்திலும் அதிர்ஷ்டகரமான வெற்றி கிடைக்கும். உறவினர்களிடம் பேசுவதில் கடினத்தன்மையைப் பிரயோகிக்க வேண்டாம். பிறரை வாழ்த்துகிற சூழ்நிலையை விட கண்டிக்கிற நிலைமை அதிகரிக்கும். கவனம் தேவை. வாகன பயணங்களில் மித வேகத்தைப் பின்பற்ற வேண்டும். புத்திரர், நண்பர்களுடன் அதிருப்தி அடைவர். உங்களின் அறிவுரை நல்வழிப்படுத்தும். உடல்நலத்திற்கு தியானம், சீரான

**விருச்சிகம்**- கடந்த காலத்தில் உங்கள் முன்னோர், நீங்கள் செய்த புண்ணிய செயல்களின் நற்பலன், இப்போது உங்களை வந்தடையும். உடன் பிறந்தவர்களுக்கு பண உதவி செய்து, வாழ்வில் உயர வழிவகுப்பீர்கள். புத்திரர் ஒவ்வொரு செயல்களுக்கும் உங்களைச் சார்ந்திருப்பர். எதிர்மனப்பாங்கு உள்ளவர் உறவு கொண்டாடி இடையூறு செய்ய முயற்சிப்பர். கவனம் தேவை. இல்லறத் துணையிடம் நல்ல பெயர் பெற, உண்மை, அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வீர்கள். நண்பர் சொல்லும் ஆலோசனையில் நல்லதை மட்டும் பின்பற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளம் பெற அரசு

**தனுசு** - கடந்த காலத்தில் நியாயமாக பெறவேண்டிய பணவரவு எளிய முயற்சியால் கிடைக்கும். குடும்பத் தேவைகளை பெருமளவில் பூர்த்தி செய்வீர்கள். புதியவாகனம் வாங்க அனுகூலம் உண்டு. புத்திரர் பிடிவாத குணத்துடன் செயற்படுவர். வழிநடத்துவதில் நிதான அணுகுமுறை நல்லது. எதிரிடையாக செயல்பட்டவர்களும் சில விடயங்களில் உங்களின் உதவியை நாடி வருவர். குடும்பத்தில் மங்கல நிகழ்வு, உறவினர் வருகை மனதிற்கு சந்தோஷம் தரும். இல்லறத்துணை, உங்களின் அருமை, பெருமைகளை உறவினர்களிடம் சொல்லி மகிழ்வர். தொழில்,

**மகரம்**-செயல்களில் உத்வேகம் அதிகரிக்கும். சிறந்த உழைப்பால் பணிகளில் சிறப்பு கூடும். உறவினர் நண்பர் பாராட்டுவர். வீடு, வாகனத்தில் பெரிய அளவிலான மாற்றம் செய்ய வேண்டாம். புத்திரர் நற்குணம், நற்செயல் பின்பற்றுவர். எதிரி தமது சொந்த சிரமங்களைச் சரி செய்வதில் கவனம் கொள்வர். இல்லறத் துணை சொல்கிற ஆலோசனை, குடும்பத்தின் எதிர்கால, நலன் சிறக்க உதவும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி பெற அனுகூல காரணி பலம் பெறும். கூடுதல்

**கும்பம்**-உண்மை, நேர்மை நிறைந்த குணம் பின்பற்றுவீர்கள். அத்தியாவசிய செலவுகளை மட்டும் ஏற்பதால், பணக் கடன் பெறுகிற நிலையை தவிர்க்கலாம். வீடு, வாகனத்தில் தேவையான பாதுகாப்பு நடைமுறை வேண்டும். புத்திரர் கவனக் குறைவான செயலால் உடல் நல பாதிப்பு அடைவர். மருத்துவ சிகிச்சை சரி செய்யும். எதிரி, உங்கள் இரக்க மனம் கண்டு கெடுதல் செய்ய அஞ்சுவர். இல்லறத்துணை குடும்பத் தேவைகளை நிறைவேற்ற நிர்ப்பந்தப் போக்கில் செயற்படுவர். உங்களின்

**மீனம்**-மனதில் இருக்கிற விரக்தியை, பேச்சு, செயலில் வெளிப்படுத்தக் கூடாது. குடும்ப பணத் தேவையை ஈடுகட்ட கூடுதல் முயற்சி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் மங்கல நிகழ்ச்சி உருவாக உங்களின் செயல் துணை நிற்கும். புத்திரர் அறிவாற்றலை வளர்த்துக் கொள்ள அனுகூல சூழ்நிலை உருவாகி நிறை[illegible] விலகிப்போவதால் சிரமங்களைத் தவிர்க்கலாம். உறவினர்[illegible] நம்பிக்கையை உருவாக்கும். குடும்ப உறுப்பினர்களிடம் ஒற்றுமை சிறக்கும். தொழில், வியாபாரத்தில் பணிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களியாட்ட இடமாக ஆலயங்கள்

வில்லவன்

இந்து ஆலயங்கள் களியாட்ட இடங்களாக மாறி வருகின்றனவே அன்றி தெய்வ வழி பாட்டுக்கும் அமைதிக்குமான இடமாக காணப்படாமை குறித்து இந்து மக்களிடையே மனக் குழப்பமும் கவலையும் ஏற்பட்டுள்ளன.

இந்த வகையில் கடந்த மாதங்களில் ஆலயத் திருவிழாக்களின்போது இடம்பெற்ற சம்பவங்கள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

ஆலயத்துக்கு மக்கள் செல்வது அமைதி வேண்டியும் மனக் குழப்பத்துக்கு தீர்வு வேண்டியும் தான். இது கூட ஆலயத் தொண்டர்கள் என்ற போர்வையில் காணப்படும் கும்பல்களால் குழப்பப்படுவதும் வேதனைதரும் விடயமாகும்.

இதற்குக்கூட ஆலய பரிபாலன சபையினர், தர்மகர்த்தா சபையினர் என்று கூறிக் கொள்பவர்களும் ஒத்துழைப்பதும் நடவடிக்கை எடுக்க மறுத்து நிற்பதும் கண்டும் காணாமல் விடுவதும் இத்தகைய அடாவடித் தனங்களை ஊக்குவிக்கும் செயற் பாடாகவே அமைகின்றது என்பதே உண்மையாகும்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் கட்டி வளர்க்கப்பட்ட ஆலயம் ஒன்றில் தீர்த்தத் திருவிழா வில் குடும்பமாக இரண்டு சிறிய பிள்ளைகளுடன் வந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் தொண்டன் என்று கூறிக் கொள்பவரினால் காலாலும் கையாலும் தாக்கப்பட்டதுடன் முகத்திலும் குத்தப்பட்டு காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டார். இதனைக் குறித்த ஆலயத்தின் பரிபாலன சபைத் தலைவர் முதல் ஏனைய உறுப்பினர்களும் தொண்டர் சபை உறுப் பினர்களும் கூட பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

தந்தைக்கு அடிவிழுந்து முகத்தில் இருந்து வடிந்த இரத்தத்தை பச்சிளம் குழந்தை தனது கையால் துடைத்து தந்தையை ஆறுதல் படுத்தியமை பார்த்தவர்கள் கண்களில் இருந்து இரத்தம் வடியச் செய்தது என்றே கூறவேண்டும்.

ஆலயத்தில் இத்தகைய அட்டகாசம் செய்த தொண்டருக்கு இரவு ஆலய பரிபாலன சபை தலைமையால் நன்றியும் கூட ஒலி பெருக்கியில் தெரிவிக்கப்பட்டமையைக் கேட்டு பொது மக்கள் அதிர்ச்சிக்கு ஆளாகினர்.

அவர்களும் கூட அட்டகாசத்துக்குப் பயந்து கண்ணை மூடிக் கொண்டார்கள். சென்று விசாரித்த போது கிடைத்த பதில் பலர் இது பற்றிக் கதைக்கவே பயப்படும் நிலையில் காணப்படுகின்றார்கள்.

அந்தளவுக்கு அட்டகாசத்தின் அளவு உச்ச நிலையில் காணப்படுகின்றது. இதனை கண்டும் காணாது கண் மூடி இருப்பவர்கள் தான் மக்கள் மத்தியில் அன்பு, தர்மம், ஆன்மீகம் பற்றி பிரச்சாரம் செய்கின்றார்கள்.

மறு பக்கத்தே அன்னதான மடத்தில் அன்ன தானத்துக்குச் சென்ற ஒருவர் தொண்டர் ஒருவரால் தாக்கப்பட்டுத் தலையில் காயமடைந்துள்ளார்.

இதுவும் பிரபல்யமான முருகன் ஆலயத்தில் நடந்து முடிந்துள்ளது.

இவ்வாறு இந்து ஆலயங்களில் அட்டகாசம் செய்பவர்கள் சம்பந்தமாக உரிய நிர்வாகத்தினர் எந்தக் காரணத்துக்காக நடவடிக்கை எடுக்க மறுத்து நிற்கின்றார்கள் என்பது கேள்விக்குரியதும் வியப்பிற்கு உரியதுமாகும்.

தொண்டன் எதனையும் தாங்குபவனாகவும் மனிதப் பண்பு நிறைந்தவனாகவும் காணப்பட வேண்டும். ஆனால் இன்று ஆலயத் தொண்டர் என்பவர் அடியாளாகவும் ரவுடியாகவும் இருக்க வேண்டும் என்ற புதிய பண்பை உருவாக்க இந்து ஆலய பரிபாலன சபைகளும் தர்மகர்த்தா சபைகளும் ஊக்கமளிக்கின்றார்களா என்ற கேள்வி இன்று இந்து மக்களிடையே தொக்கி நிற்கின்றது.

மறு புறத்தே ஆலயத்தில் அமைதி, அன்பு, பக்தி வேண்டிவரும் அடியவர்கள் ஆலயத்துக்கு வருவதை விடுத்து ''சிவனே'' என்று வீட்டில் ஒதுங்கிக் கொள்ளும் நிலைமையே ஏற்படும்.

முன்னோர்கள் கூறும் பிரசங்கியார் போன்று ''உனக்கெல்லடி உபதேசம் ஊருக்குத்தான்'' என்ற நிலையை விடுத்து உரிய நடவடிக்கைகள் இவ்வாறா விடயங்களில் மேற்கொள்ளப்படவேண்டியது காலத்தின் தேவையாகும். தொண்டர்கள் தொண்டர் களாக இருக்க வேண்டுமேயன்றி அடியாள்களாக முடியாது என்றவகையில் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். இதனைவிடுத்து நடவடிக்கை எடுக்காது கண்மூடியிருந்தால் அநியாயந்தான் விளையும். ஆலயங்களும் போர்க்களங்களாக முடியும்.

# வேண்டாம் இந்த விளையாட்டு

■ அதிரன்

போரினால் இடம்பெயர்ந்த மக்கள் இன்று சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளபோதும் அங்கு அவர்கள் சொல்லொணா துன்பங்களுக்குள் விழுந்து துடித்துக் கொண்டிருக்கின்றனர். குறிப்பாகக் கடந்த வாரம் மீளக்குடியமர்த்துவதாகக் கூறி, மனிக்பாம் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்த முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்கள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படாமல் நந்திக் கடல் அருகே சூரியபுரம் காட்டுக்குள் அநாதைகளாக விடப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவுவதற்கு யாருமில்லாத இந்தவேளையில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே ஒரு தனித்துவமான அமைப்பாக உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் தமக்கிடையே சண்டையிடும் ஓர் அபாயகரமான நிலைக்குச் சென்றுகொண்டிருப்பது அனைத்துத் தமிழர் மனங்களிலும் பெரும் வேதனையையும் விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது. தமிழ் மக்கள் தமது உரிமைகளை அடைவதற்குக் கடைசியாக நம்பி இருந்த இந்த ஒரே ஒரு அமைப்பும் இப்போது ஆட்டம் கண்டுள்ளமை தமிழ்மக்களுக்கு மட்டும் அல்ல பல அரசியல் தலைவர்களுக்கும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

எவரும் ஏற்றுக்கொண்டாலும் மறுத்தாலும் தற்போதைய சூழ்நிலையில் தமிழ்மக்களுக்கு ஒரு விடிவெள்ளியாகவும் நம்பிக்கை நட்சத்திரமாகவும் விளங்குவது தமிழ்த் தேசியக்கூட்டமைப்புதான் என்பதை மறுக்க முடியாது. அதேவேளை, அதன் போக்குகளைத் தட்டிக்கேட்கவும் அதனைச் சீர் செய்யவும் கட்சி சிதைந்து சின்னாபின்னமாகாமலிருப்பதை உறுதி செய்யவும் வேண்டிய பொறுப்பு தமிழ் மக்கள் மத்தியிலும், புத்திஜீவிகளிடையேயும் உள்ளது.

அந்தவகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்யும் விவகாரம் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களிடையே சிறிய முரண்பாட்டை ஏற்படுத்தி இருப்பதுடன் கடுமையான விமர்சனத்துக்கும் உள்ளாகியுள்ளது. அண்மையில், வவுனியாவில் தமிழரசுக்கட்சியின் மத்தியக்குழுக் கூட்டம் கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற போது, கூட்டமைப்பைச் சிதைக்கும் ஆணையைத் தமிழர்கள் எவருக்கும் வழங்கவில்லை என்று அவர் தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்து தமிழ்த்தேசியக் கூட்மைப்பில் அங்கத்துவம் வகிக்கும் இதர கட்சிகளிடையே சிறு சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது. இது தொடர்பில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மற்றொரு கட்சி விடுத்திருக்கும் அறிக்கை மிக மோசமானதாகும். அந்த அறிக்கையில் வரிக்கு வரி சம்பந்தனைக் கடுமையாகச் சாடியிருப்பதுடன் பல்வேறு குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.



“ தமிழ் மக்கள் தமது உரிமைகளை அடைவதற்குக் கடைசியாக நம்பி இருந்த இந்த ஒரே ஒரு அமைப்பும் இப்போது ஆட்டம் கண்டுள்ளமை தமிழ்மக்களுக்கு மட்டும் அல்ல பல அரசியல் தலைவர்களுக்கும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

சம்பந்தன் ஐயாவைக் குற்றவாளி கூண்டில் ஏற்றுவது போன்று அந்த அறிக்கை அமைந்துள்ளது. இது பல மட்டங்களிலும் கடும் விசனத்தைத் தோற்றுவித்துள்ளது. என்னதான் கருத்து மோதல் இருந்தாலும் அதனை அவர்கள் தமக்குள்ளே பேசித் தீர்க்க வேண்டுமே தவிர அவற்றைச் சந்தி சிரிக்கும் அளவுக்குக் கொண்டு வருவது தமிழர்களின் எதிர்கால அரசியல் நகர்வுக்கு உகந்தது அல்ல. மாறாக அவை தமிழரை ஒடுக்க நினைக்கும் பெரும்பான்மை இன அரசியல் தலைவர்களுக்கு வெறு வாய்க்கு அவல் கிடைத்தமை போன்று அமைந்துவிடும்.

தமிழ்த் தேசியக்கூட்மைப்பு சிதைவதை அனுமதிப்பதோ அன்றில் உள் முரண்பாடுகள் விஸ்வரூபம் எடுப்பதோ தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் ஏற்றுக்கொள்ளக்கூடியதோ, நியாயப்படுத்தக் கூடியதோ அல்ல. கட்சிக்குள் இருக்கும் முரண்பாடுகள் பகிரங்கப்படுத்தப்பட்டு அறிக்கையாகப் பகிரங்கமான நிலையில் அது தொடர்பில் தமிழ் மக்கள் மிகவும் நொந்துப் போயுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தமட்டில் தமிழ் மக்கள் ஒருபோதும் அதனை பிரித்தோ தனித்துவமாகவோ நோக்குவது கிடையாது என்ற யதார்த்தத்தைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். அவ்வாறு அவர்கள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிலிருந்து பிரிந்து செல்ல முற்படுவார்களேயானால் அது அவர்களின் அரசியல் எதிர்காலத்துக்கு முடிவாக மாறும் என்பதை இந்தக் குழப்பக்காரர்கள் மறந்து போகக்கூடாது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு என்ற கூட்டுக்குள் இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் ஆகிய ஐந்து கட்சிகள் இடம்பெற்றுள்ளன. அந்தவகையில் கூட்டுக்குள் எழும் முரண்பாடுகள் சந்தி சிரிக்கும் நிலைமையை தோற்றுவிக்குமானால் அது எதிர்த் தரப்பினருக்குப் பெரும் அனுகூலமாக அமைவது மாத்திரமன்றி தமிழ் இனத்திற்கே துயரமாகவும் மாறி விடும். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு என்ற மாபெரும் சக்திக்குள் எந்தவொரு முரண்பாட்டையும் தமிழ் மக்கள் காண விரும்பவில்லை. அந்தப் பொறுப்பைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு அனைத்துப் பிரதிநிதிகளையும் சார்ந்ததாகும்.

வெறுமனே ஒரு தரப்பை மறு தரப்பு சேறுபூசும் வகையில் அறிக்கை போர் தொடுத்தால் அது பிளவுகள் ஆழமாவதற்கு மாத்திரம் அல்ல தமிழர்கள் மேலும் அநாதைகள் ஆக்கப்பட்டு அந்தரிக்கும் நிலைமையையே தோற்றுவிக்கும். ஒரு வேளை அதுவே தமிழ் இனத்தின் பரிதாப முடிவாகக் கூட அமையலாம். கட்சி எனும் பொழுது அதற்குக் கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும். தலைமைத்துவத்தைத் தட்டிக்கேட்பதற்கு அப்பால் அதனைப் பகிரங்கப்படுத்திச் சந்தி சிரிக்கும் அளவுக்கு நிலைமையைக் கொண்டு செல்வது எந்த வகையிலும் நியாயமான நடவடிக்கையாக அமையாது.


தமிழரசுக்கட்சி தனது செல்வாக்கை நிலைநிறுத்த முயல்வதாக எண்ணிக் கூட்டுக்குள் உள்ள இதர கட்சிகள் போர்க்கொடி தூக்குமாயின் அதற்கும் எதிர்க்கட்சிகளுக்கும் எந்தவித வித்தியாசமும் இல்லை என்ற நிலைமையே மிஞ்சுவதாக இருக்கும்.

இன்று தமிழ் மக்கள் தமது வாழ்வியல் போராட்டங்களுக்கு முகங் கொடுத்து அடுத்த வேளை என்ன செய்வது என்று திண்டாடிக் கொண்டிருக்கும் நிலையில்கூட தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி என்ற நம்பிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்துத் தமது தனித்துவத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். அதற்காக எந்தத் தியாகத்தைச் செய்யவும் அவர்கள் தயாராக உள்ளனர்.









ஆனால் கூட்டமைப்போ தமிழ் மக்களின் வாக்குகளைச் சுவீகரிப்பதற்கு மாத்திரம் ஒன்றுபடுவோம் என்ற போக்கில் நடந்து கொள்வதானது தமிழ் மக்களுக்குச் செய்யும் பெரும் துரோகமாகவும் துயரமாகவும் அமையும் என்பதை அவர்கள் ஒருகணம் சிந்திக்கவேண்டும். தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்குள் தற்போது எழுந்துள்ள துன்பியல் முரண்பாடுகள் உடன் தீர்வுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு கூட்டமைப்பின் நிலைப்பாடு வேறாக இருந்தது. கட்சியின் தலைமைத்துவத்தையோ அன்றேல் அதன் இதர போக்குகளையோ தீர்மானிக்க முடியாத நிலைமைகளே இருந்தன. ஆனால், தற்பொழுது நிலைமை மாறிச் சுயமாக முடிவுகளை எடுக்கும் சக்தி தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்துள்ள நிலையில் அதுவே தவறானது என்பது போன்று அதிகாரப் போட்டி, பதவி மோகம் என்ற பல்வேறு போட்டா போட்டிகள் உருவாகியுள்ளமை இன்றைய நெருக்கடியான நிலைமைக்குக் காரணமாகும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஏன் தமிழ் மக்கள் ஆதரிக்கிறார்கள் என்று பார்த்தால் அதற்கான ஒரே காரணம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற கொள்கையில் காணப்படும் பற்றுறுதியைத் தவிர வேறொன்றாகவும் இருக்க முடியாது. அந்த வகையில் அனைவராலும் எதிர்பார்க்கப்படும் இலக்கை நோக்கி கூட்டமைப்பு பயணிக்கும் வரைதான் அதற்கான ஆதரவும் மக்களிடத்தில் தொடரும்.

இதன் அடிப்படையில் ஒரு குடையின் கீழ் ஒன்றுபட்டிருக்கும் கூட்டமைப்பை எந்த வகையிலும் சிதைவுறாது பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தனித்தும், ஒருமித்தும் அதன் கூட்டுக் கட்சிகளைத் சார்ந்ததாகும். இதனைக் கருத்தில் கொள்ளாது எவரேனும் கூட்டமைப்பின் பலத்தை வலுவிழக்க முனைவார்களேயானால் அது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமாகவே பார்க்கப்படும்.

அந்த வகையில் அதன் எதிர்காலம் குறித்த தீர்க்கதரிசனமான முடிவுகளை எடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அதில் அங்கத்துவம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளையும் சார்ந்ததாகும். மாறாக எந்தச் சக்தி கூட்டமைப்பை உடைக்க, அன்றேல் கூறு போட முனைகின்றதோ அதனைத் தமிழ் மக்கள் ஓரங்கட்ட ஒருபோதும் தயங்கமாட்டார்கள் என்பதே உண்மை.

**சேர்த்து வாசியுங்கள் வாசகர்களே..**

**சூரியகாந்தி 20 ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ள இந்த வார சோதிடத்தில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சில இராசிகளினது கடைசி வரிகள் விடுபட்டுப் போயுள்ளன.**

மேடம்- உத்தியோகத்தர் நிர்வாகத்தின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் வகையில் செயற்பட வேண்டும்.

இடபம்- தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத வளர்ச்சியும் உபரிபண வருமானமும் உண்டு. பணியாளர்கள் நல்ல பணித்திறமையால் சலுகை பெறுவர்.

கடகம்- இல்லறத்துணை, உங்கள் வாழ்வியல் நடைமுறை சிறக்கும் வகையில் தேவையான உதவி வழங்குவர்.

சிங்கம்- தொழில் வியாபாரத்தில் கூடுதல் கௌரவம் பெற தாராள பணச்செலவில் அபிவிருத்திப் பணி செய்வீர்கள்.

துலாம்- உடல் நலத்துக்கு தியானம், சீரான ஓய்வு உதவும். தொழில் வியாபாரத்தில் மூலதனம் தேவைப் படும்.

விருச்சிகம்- தொழில் வியாபாரத்தில் வளம் பெற அரசு சார்ந்த உதவி எளிதில் பெறலாம். உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்வு வெகுமதி கிடைக்கும்.

தனுசு - தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு எளிதாக நிறைவேறும்.

மகரம்- கூடுதல் பணவரவை புதிய முதலீடாக மாற்றுவீர்கள். பணியாளர்களுக்கு கூடுதல் சன்மானம் கிடைக்கும்.

கும்பம்- உங்களின் சூழ்நிலையை இதமாக உணர்த்துவது நல்லது.

மீனம்- தொழில் வியாபாரத்தில் பணிச் சுமையும் சில குழறுபடியும் ஏற்படும். தொடர் முயற்சியால் சரி செய்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ரெங்கன்



உலக நடப்புகள் ஒரு பார்வை

# சிரியாவில் இரத்தம் சிந்தப்படுவதை நிறுத்தும் வழி என்ன....?

சிரியாவில்ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் போர் நிலைமைகள் உலக நாடுகளின் கவலையை அதிகரித்துள்ளன. பொதுவாக அந்த நாட்டின் தலைவர் தமக்கு எதிராக போர் புரியும் புரட்சிவாதிகளின் மீது ஈவிரக்கமற்ற முறையில் தனது எதிர் நடவடிக்கைகளை முடுக்கி விட்டிருக்கிறார்.

இந்த நடவடிக்கையால் எதிராளிகள் தாக்கப்படுவதைவிட எந்தவித போர் நடவடிக்கையிலும் ஈடுபடாத பொதுமக்களே கொல்லப்படுவதாகக் கிடைக்கின்ற தகவல்களில் இருந்து தெரிந்துகொள்ள முடிகின்றது.

தமது நாட்டின் தமது சொந்தப் பிரஜைகளுக்கு எதிராகவே பஷார் அல் அசாத் போர் தொடுத்திருப்பதாக மேற்கு நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. அசாத் பதவியிலிருந்து இறங்க வேண்டும் என்று மேற்கு நாடுகள் மட்டுமன்றி அரபு நாடுகள் பலவும் வற்புறுத்தி வருகின்றன.

சிரிய விவகாரத்தில் பாதுகாப்புச் சபையின் ஆதரவில் இராணுவ ரீதியில் தலையிடுவதற்கு மேற்கு நாடுகளும் சில அரபு நாடுகளும் முயற்சி மேற்கொண்டபோதிலும் பாதுகாப்புச் சபையில் தீர்மானம் ஒன்றைச் சிரியாவுக்கு எதிராக நிறைவேற்றுவதற்கு அவையால் முடியவில்லை. இரண்டு தடவைகள் அவ்வாறான தீர்மானங்கள் ரஷ்யாவாலும் சீனாவாலும் ரத்து அதிகாரங்கள் மூலம் நிறைவேறாமல் செய்யப்பட்டுவிட்டன.

சிரிய அரசுக்கு எதிராகப் போராடிவரும் புரட்சிவாதிகள் மீது அசாத்தின் படைகள் பீரங்கி மற்றும் ரொக்கட்டுகள் மட்டுமன்றி விமானத் தாக்குதல்களையும் நடத்தி வருவதாகக் குற்றம் சாட்டப்படுகின்றது.

இம்மாதிரியான ஆயுதங்களை ரஷ்யாவும் சீனாவும் சிரியப் படைகளுக்கு வழங்கி வருவதாகக் கூறப்படுகின்றது. அதேசமயம் சிரிய எதிர்ப்புப் படைகளுக்கு மேற்கு நாடுகளும் சவூதி அரேபியா போன்ற அரபு நாடுகளும் உதவிகளை வழங்கி வருவதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

சிரியாவில் பாதிக்கப்பட்டு வரும் பொதுமக்களுக்கு உணவு மற்றும் நுகர்வுப் பொருள்களை அமெரிக்கா வெளிப்படையாகவே வழங்குவதாக அறிவித்துள்ளது. ஆனால், நாசகார ஆயுதங்கள் எதனையும் வழங்கப் போவதில்லை என்று அந்த நாடு அறிவித்துள்ளது.

சிரியாவில் இரு தரப்பிலும் போராடும் ஆயுதம் தரித்தவர்களின் மோதல்களுக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும். ஏற்கனவே இந்தப் போராட்டத்தால் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதால் தொடர்ந்தும் இந்தப் போர் நடைபெறுவதை அனுமதிக்கக் கூடாது என்ற கருத்து உலகத் தலைவர்கள் மத்தியில் வலுப்பெற்று வருகின்றது.

இந்தப் போரை நிறுத்தி பொதுமக்களின் உயிர் இழப்பைத் தவிர்த்துவிட ஐ.நாவாலும் அதன் பாதுகாப்புச் சபையாலும் முடியாமல் இருப்பது அவர்களை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

ஏற்கனவே பாதுகாப்புச் சபையும் அரபு லீக்கும் இணைந்து எடுத்த முயற்சிகள் ஒத்துழைப்பின்மையால் தோல்வி கண்டுவிட்டன.

இப்போது புதுவிதமான ஒரு செயற்பாட்டைப் பற்றி மேற்கு நாடுகளும் அரபு நாடுகளும் ஆலோசிக்கத் தலைப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

ஏற்கனவே ஐ.நா. பொதுச் சபையின் வருடாந்த மாநாட்டில் கட்டார் நாட்டின் எமிர் பேசும் போது அரபு நடுகள் இராணுவ ரீதியில் தலையிட்டால் மட்டுமே சிரியாவில் இரத்தம் சிந்தப்படுவதை ஒரு முடிவுக்குக் கொண்டு வரலாம் என்ற கருத்தை முன்வைத்திருக்கிறார்.

சிரியாவில் மேற்கு நாடுகள் இராணுவ ரீதியில் தலையிடுவதை ரஷ்யாவும் சீனாவும் ஆட்சேபித்துவரும் அதேசமயம் ஈரான் போன்ற நாடுகள் மேற்கு நாடுகளின் தலையீட்டை எதிர்க்கும் அதேசமயம் அல்அசாத்தின் இராணுவ நடவடிக்கைகளுக்கு உதவி வருவதாகவும் கூறப்படுகின்றது. இந்த நிலைமையில் கட்டார் எமிரின் கருத்து அரபு நாடுகள் மத்தியில் தீவிரமாக ஆலோசனைக்கு எடுக்கப்படலாம் என்ற ஊகம் இப்போது பலம்பெறத் தொடங்கியுள்ளது.

## அலெப்போ நகரில் மோதல் முடியவில்லை

சிரியாவில் இடம்பெற்று வரும் தற்போதைய மோதலில் கடந்த வாரம் அலெப்போ நகரில் டஸின் கணக்கில் பொதுமக்களும் சிறுவர்களும் கொல்லப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. அலெப்போவின் பல பகுதிகளை அரச படைகள் கைப்பற்றிவிட்டதாக அறிவித்துள்ள போதிலும் புரட்சிவாதிகள் விட்டுக்கொடுக்காமல் போராடி வருகின்றனர்.

சிரியாவில் போர் ஓயாமல் இருப்பதற்கு இரு தரப்பினருக்கும் வெளியார் உதவிகள் கிடைத்து வருவதே காரணம் என்று பொதுப் பார்வையாளர்கள் கருத்து வெளியிடுகின்றனர்.

கடந்த வாரம் சிரிய வெளியுறவு அமைச்சர் வாலித் மவுலெம் நியூயோர்க்கில் ஐ.நா. சபையில் பேசிய போது மேற்கு நாடுகளும் வளை குடாநாடுகளும் புரட்சிவாதிகளுக்கு வழங்கி வரும் உதவிகளை நிறுத்துவார்களானால் சிரியாவில் அரசியல் தீர்வு ஒன்று காணப்படுவது மிகவும் சாத்தியமே என்றார்.

## மக்கள் மீது அசாத் கருணை காட்டுவாரா

கடந்த வாரம் நியூயோர்க்கில் ஐ.நா. செயலாளர் நாயகம் கருத்து வெளியிடுகையில் டமாஸ்கஸ் அரசு அதன் மக்கள் மீது கருணை காட்ட வேண்டும் என்று வற்புறுத்தினார்.

## உலகத் தலைவர்களின் மண்டையை உடைக்கும் சங்கதி

சிரிய அவதான அமைப்பு என்ற மனித உரிமைகள் முகவர் நிலையம் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் துருக்கி எல்லையை அண்மித்துள்ள புரட்சிவாதிகளின் ஆதிக்கத்துள் உள்ள இட்லிப் பகுதியில் சல்கீன் என்ற நகரத்தின் மீது அரச படைகள் நடத்திய விமானத் தாக்குதலில் 21 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் எட்டு சிறுவர்களும் அடங்குவர் என்று கூறியது. அதே சமயம் சிரியாவின் ஹொம்ஸ் மாகாணத்தில் வீதியில் புரட்சிவாதிகள் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் 18 அரச படையினர் கொல்லப்பட்டனர் என்று பிரிட்டனிலுள்ள கண்காணிப்பு அமைப்பு அறிவித்துள்ளது.

அரச படைகள் நடத்திய விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் உடல்கள் பிக்கப் வாகனங்களில் குவிக்கப்பட்டிருந்ததாகவும் அந்த உடல்கள் எரிந்துபோயும் உறுப்புகள் சிதறிப்போயும் கிடப்பது தெரிந்ததாகவும் புரட்சியாளர்கள் சல்கீன் நகரில் வெளியிட்டிருந்த அறிக்கை தெரிவித்தது. கடந்த திங்கட்கிழமை மட்டும் சிரியா முழுவதுமாக 160 பேர் கொல்லப்பட்டதாகவும் இவர்களில் 112 பேர் பொதுமக்கள் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## லத்தீன் அமெரிக்க ஒத்துழைப்புக்கு அழைப்பு

சிரிய நெருக்கடிக்கு துரிதமான தீர்வொன்றை காண்பதற்கு லத்தீன் அமெரிக்க நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட முன் வர வேண்டும் என்று அரபு லீக்அழைப்பு விடுத்துள்ளது. தென் அமெரிக்கா மற்றும் அரபு நாடுகளின் உச்சி மாநாடு ஒன்றில் அரபு லீக்கின் செயலாளர் நாயகம் நபில் அல்- அராபி பேசும்போது, சிரியா நாடு இப்போது மூச்சுத்திணறல் பிரச்சினையில் சிக்கியுள்ளது. இதைத் தீர்த்து வைப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவும் துரதிர்ஷ்ட வசமாக இதுவரை பயனளிக்கவில்லை. ஆனால் நாம் மிக விரைவாக ஒரு தீர்மானத்துக்கு வந்தாக வேண்டும் என்று கூறினார்.

அரபு லீக்கும் தென் அமெரிக்க யூனியனைச் சேர்ந்த 30 நாடுகளின் தலைவர்கள் இதில் கலந்து கொண்டார்கள்.

> சிரியாவில் இடம்பெற்றுவரும் தற்போதைய மோதலில் கடந்த வாரம் அலெப்போ நகரில் டஸின் கணக்கில் பொதுமக்களும் சிறுவர்களும் கொல்லப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. அலெப்போவின் பல பகுதிகளை அரச படைகள் கைப்பற்றிவிட்டதாக அறிவித்துள்ள போதிலும் புரட்சிவாதிகள் விட்டுக்கொடுக்காமல் போராடி வருகின்றனர்.

கடந்த 18 மாத காலமாக இடம்பெற்று வரும் சிரிய மோதலில் இதுவரை சுமார் 30 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சிரியாவில் இருந்து வெளியேறி அகதிகளாகியுள்ள மக்களின் எண்ணிக்கை இந்தவருட முடிவுக்குள் 710,000 ஆக உயர்ந்துவிடும் என்று ஐ.நா அறிக்கையொன்று கூறுகின்றது. கடந்த வருடம் மட்டும் 75,000 பேர் அகதிகளாகியுள்ளார்கள் என்று அந்த அறிக்கை கூறியது.

## வெளியார் தலையீடு வேண்டாம்

ஈரான், சிரியாவின் பலம்மிக்க ஒரு நேச நாடு என்று ஈரானிய வெளியுறவு அமைச்சர் அலி அக்பர் சால ஹி கூறியுள்ளார். சிரியாவில் ஏற்பட்டுள்ள சிக்கலில் வெளிநாடுகள் எதுவும் தலையிடக்கூடாது என்றும் எச்சரித்தார்.

ஆஸ்திரேலிய தொலைக்காட்சிக்கு அவர் அளித்துள்ள பேட்டி ஒன்றில் சிரிய அரசு எதிர்த்தரப்பை அங்கீகரிக்க வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார். அதேபோல் எதிர்த்தரப்பினரும் அரசை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.

சிரியாவை அதை செய் இதைச் செய் என்று வெளி நாடுகள் வற்புறுத்தக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவர்கள் திட்டமிட்டே படகேற்றப்படுகின்றனரா?

*நீர்கொழும்பு கொச்சிக்கடையைச் சேர்ந்த சிங்களவர் ஆஸ்திரேலியாவுக்கு வந்தகாரணம் சிரிப்பானது. இதெல்லாம் கூடவா அரசியல் தஞ்சம் கோருவதற்கான காரணமாகக்கூடும் என்று நினைக்க வைப்பது. ஆஸ்திரேலியா வந்தமைக்கு அவர் கூறும் காரணம் "நான் 6 வருடங்களுக்கு முன்னர் ஒரு பெண்ணைக் காதலித்தேன். அவளுடைய தம்பி ஆள்களை வைத்துஎன்னை வெட்டினார். அதனால் இங்கு ஓடிவந்துவிட்டேன்" என்பதுதான்.*

கிறிஸ்மஸ் தீவு
தடுப்பிலிருந்து **ஜெயா.பி**

"நவ்றுக்கு அனுப்பினால் என்ன - பப்புவாக்கு அனுப்பினால் என்ன - இலங்கையில் சுதந்திரக்காற்று வீசும் மட்டும் நான் நாடு திரும்ப மாட்டேன்." கிறிஸ்மஸ் தீவு தடுப்பு முகாமின் எல்லை வேலி இரும்பு வலையைக் கைகளால் பற்றியபடி வெளியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் இலங்கையின் மட்டக்களப்பைச் சேர்ந்த சசிக்குமாரின் கருத்து இது.

ஆஸ்திரேலிய அரசு என்னதான் அகதிகளுக்கு புகலிடம் வழங்க முடியாது என்று அறிவித்துக் கொண்டிருந்தாலும் இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான் பர்மா போன்ற நாடுகளில் இருந்து அரசியல் தஞ்சம் கோரி நாளாந்தம் படகுகள் மூலம் வருவோரின் எண்ணிக்கை குறைந்த பாடாயில்லை.

உயிருக்கு ஆபத்தான படகுப் பயணத்தையும் ஆள்கடத்தல்காரர்களின் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தும் நோக்கில் ஆஸ்திரேலியா அரசு கடந்த ஓகஸ்ட் மாதம் 13 ஆம்திகதி தனது நாடாளுமன்றத்தில் சட்டமூலம் ஒன்றை நிறைவேற்றியது. அன்றையதினத்தின் பின்னர் ஆஸ்திரேலியா நோக்கி வரும் படகுகளில் இருப்பவர்களை நவ்று அல்லது பப்புவா போன்ற தீவுகளுக்கு அனுப்பி அங்கு தடுத்து வைத்து விசாரிப்பது என்பதே அந்தச் சட்டத்தின் சுருக்கம்.

அப்படி வருபவர்களை நவ்று தீவுக்கு அல்லது பப்புவா தீவுக்கு அனுப்பப்படுவதாகவும் அப்படி அனுப்பப்பட்ட பலரில் சிலர் இலங்கைக்குத் திரும்பிச் செல்கின்றனர் என்றும் செய்திகள் கூறுகின்றன. இது தமது திட்டத்துக்குக் கிடைத்த வெற்றி என்றும் இதனால் ஆஸ்திரேலியா நோக்கிப் படையெடுப்பவர்களின் எண்ணிக்கை குறையும் என்றும் இங்கிருக்கும் அதிகாரிகள் நம்புகிறார்கள். ஆனால் அப்படி நடப்பதாகத் தெரியவில்லை. தொடர்ந்தும் படகுகள் வந்து கொண்டேதான் இருக்கின்றன.

புதிய சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் கடந்த மாதம் சுமார் 50 பேர் வரையானோர் இலங்கை திரும்பியுள்ளனர். இவர்களில் அதிகமானோர் சிங்களவர்களே. இதனையடுத்து "நவ்று தீவுக்கு அனுப்பப்பட்டவுடன் இலங்கையர்கள் நாடு திரும்புகின்றனரே! அப்படியானால் தற்போது அவர்களுக்கு அங்கு உயிர் அச்சுறுத்தல் இல்லை என்றுதானே அர்த்தம்?" என்று ஆஸ்திரேலியாவின் எதிர்கட்சிகள் கேள்வி எழுப்புகின்றன.

"இலங்கையில் தமிழர்களே ஒடுக்கப்படுகின்றனர் என்பது உலகறிந்த விடயம். அதிலும் தமிழர்களே உயிர் அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றனர். சிங்களவர்கள் இலங்கையர்கள் தான். ஆனால் சிங்கள தேசத்தில் அவர்களுக்குப் பிரச்சினைகள் இல்லை. ஒரு சிலருக்கு அப்படி அச்சுறுத்தல் இருக்கின்றது. அப்படியானவர்கள் தூதரகங்கள் ஊடாக விண்ணப்பித்து அரசியல் தஞ்சம் பெற்று விடுகின்றனர். கப்பலில் ஆஸ்திரேலியா வரும் சிங்களவர்களில் 90 விழுக்காட்டினர் உண்மையில் பொருளாதார இலாபங்களுக்காகவே இங்கு வருகின்றனர் என்பதை அவர்களுடன் பேசும் போது புரிகிறது. எனவே வருடக் கணக்கில் அதற்காகக் காத்திருக்க வேண்டிவரும் என்பது தெரிந்ததும் அவர்கள் நாடு திரும்பப் பார்க்கிறார்கள். அவ்வாறே பொருளாதார நலன்களை நோக்காகக் கொண்டு இங்கு வரும் ஒரு சில தமிழர்களும்கூடத் தமது நோக்கம் சாத்தியப்படாது என்று தெரியும்போது இலங்கைக்குத்திரும்புகிறார்கள். அதை வைத்து கிறிஸ்மஸ் தீவில் உள்ள எல்லாத் தமிழர்களையும் அப்படிக் கணிக்க முடியாதே" என்பதுதான் இங்கு முகாமில் இருக்கும் தமிழர்களின் ஆதங்கம்.

அதேவேளை, இலங்கைக்குத் திரும்பிய பின்னர் சிங்களவர்களும் சரி தமிழர்களும் சரி தங்களுக்குள்ள அச்சுறுத்தல் குறித்து அங்கு வைத்து வாய்திறக்கப்போவதில்லை. ஊடகங்களே வாய்திறக்கமுடியாத நிலைக்கு தள்ளபட்டிருக்கும்போது எப்படி பொது மக்கள் பற்றி வாய் திறப்பார்கள்? என்பதும் அவர்களின் கேள்வியாக இருக்கிறது.

"2008ஆம் ஆண்டு பிள்ளையான் குழு என்னைக் கடத்திச் சென்றது. பின்னர் என்னை ஆயுதக்குழுவில் இணையுமாறு வற்புறுத்தினர். அவர்களிடமிருந்து ஒருவாறு தப்பித்து டோகாவுக்குச் சென்றேன். 2 வருடங்கள் கழித்து மீண்டும் இலங்கைக்குப் போனேன். போர் முடிந்து விட்டதுதானே நிம்மதியாக வாழலாம் என்று நினைத்தேன். ஆனால் மீண்டும் அவர்கள் தொல்லை தரத் தொடங்கினார்கள். பின்னர் கொழும்பில் கொஞ்சக் காலம் தலைமறைவாகியிருந்தேன். எவ்வளவு காலத்துக்குத்தான் தலைமறைவு வாழ்கை வாழ்வது? இதனை நினைத்தே நான் படகு ஏறினேன்" என்கிறார் சசிக்குமார்.

இங்கு வந்தால் சோதனைக்கு மேல் சோதனை என்றும் சலித்துக் கொள்கிறார் அவர். "எங்களை பப்புவா தீவுக்கு ஏற்றப்போகிறார்களாம். எவ்வளவு காலத்துக்குத்தான் நாம் ஓடிக்கொண்டே இருப்பது? எவ்வளவு காலத்துக்குதான் எமக்கு நிம்மதியற்ற வாழ்க்கை விதிக்கப்பட்டிருக்கிறது? என்னை நவ்றுக்கு ஏற்றினால் என்ன பாப்புவாக்கு ஏற்றினால் என்ன இலங்கையில் தமிழருக்குச் சுதந்திரக் காற்று வீசினால் மட்டும்தான் நான் அங்கு திரும்புவேன்" என்கிற அவரது குரலில் திடம் தெரிகிறது.

ஆனால், இந்தத் திடம் இங்கிருக்கும் சிங்கள இளைஞர்களிடம் இல்லை. 423ஆவது கப்பலில் வந்த சிங்கள இளைஞர் ஒருவர் கூறுகிறார், "தற்போது என்னையும் எனது படகில் வந்தவர்களையும் நவ்றுவுக்கு ஏற்றப்போகிறார்களாம். அங்கும் இதே மாதிரியான விசாரணையாம். 3 மாதங்களில் ஆஸ்திரேலியாவுக்கு கொண்டுபோய் விடுவினமாம். அப்படி இல்லாவிட்டால் பார்ப்போம்" என்கிறார் அவர். தான் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவானவன் என்று கூறும் அவர் அதனால்தான் இலங்கையில் தனக்கு அச்சுறுத்தல் என்றும் சொல்கிறார். "யாரால் அச்சுறுத்தல்?" என்றால் "ஜனாதிபதி மஹிந்தரால்" என்ற பதிலுடன் நழுவிச் சென்றுவிட்டார் அவர்.

இதுதான் ஆஸ்திரேலியா வரும் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் உள்ள வித்தியாசம்.

யாழ்ப்பாணம் சாவகச்சேரியை சேர்ந்த 35 வயது மதிக்கத்தக்க குடும்பஸ்தர் ஒருவர் தனது அறைக்கு முன்னால் யோசித்தபடி அமர்ந்திருக்கிறார். அவரையும் நவ்றுவுக்கு ஏற்றப் போகிறார்கள். "என்ன செய்வதென்று தெரியவில்லை" என்ற ஆதங்கத்துடன் இருக்கிறார் அவர். "இனி அங்கு விசாரணை என்று எத்தனை வருடங்கள் கழியுமோ தெரியவில்லை. சொந்த இடத்திலும் வாழ முடியவில்லை. வந்த இடத்திலும் வாழ வழியில்லை" என்று அவர் கவலைப்படுகிறார்.

அவரது மனைவியின் தகப்பனார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேச சபை ஒன்றின் தவிசாளராக இருக்கிறாராம். அவருடன்தான் இவரும் இவரது மனைவியும் தங்கியிருந்துள்ளார்கள். "ஒரு நாள் இரவு எமது வீடு இனந்தெரியாதநபர்களால்தாக்கப்பட்டது. இதனால் எனக்கு உயிர்ப் பயம் ஏற்பட்டது. நாட்டைவிட்டு வெளியேறி இங்கு வந்தேன். ஆனால் ஆஸ்திரேலியாவும் எங்களைக் கைவிட்டுவிட்டது" என்றுபுலம்பிக் கொண்டே இருக்கிறார் அவர்.

இதற்கு மாறாக, நீர்கொழும்பு கொச்சிக்கடையைச் சேர்ந்த சிங்களவர் ஆஸ்திரேலியாவுக்கு வந்த காரணம் சிரிப்பானது. இதெல்லாம் கூடவா அரசியல் தஞ்சம் கோருவதற்கான காரணமாகக் கூடும் என்று நினைக்க வைப்பது.

"நான் ஓகஸ்ட் 18ஆம் திகதி கிறிஸ்மஸ் தீவுக்கு வந்தேன். எங்களையும் நவ்றுக்கு ஏற்றப்போகிறார்களாம். நவ்றுக்கு அனுப்பினால் 3 மாதங்களில் ஆஸ்திரேலியா பொறுபேற்குமாம். வருடக்கணக்கில இருக்க வேண்டும் என்றாலும் நான் நறுவில் இருப்பேன்" என்ற அவரிடம், "சரி அப்படி என்னதான் உங்களுக்குப் பிரச்சினை?" என்று கேட்டால், "நான் 6 வருடங்களுக்கு முன்னர் ஒரு பெண்ணைக் காதலித்தேன். அவளுடைய தம்பி ஆள்களைவைத்துஎன்னைவெட்டினார். அதனால் இங்கு ஓடிவந்து விட்டேன்" என்றார். அதற்கு ஆதாரமாக வெட்டுக் காயங்களையும் காட்டுகிறார்.

அதற்குப் பின்னரும் அந்தத் தம்பியார் அவரை விட்டபாடில்லையாம். பொலிஸாரை வைத்தும் அவரை மிரட்டி வருகின்றாராம். "உங்களுக்கு ஏற்கனவே திருமணம் ஆகிவிட்டதா?" என்று கேட்டால், "ஆமாம்" என்று சாதாரணமாகச் சொல்கிறார்.

இவர் இலங்கையர்தான். ஆனாலும் அரசியல் தஞ்சம் கோரி ஆஸ்திரேலியா வந்திருக்கிறார். நவ்றுவில் இருக்கப் பிடிக்காமல் ஒருவேளை இவர் திரும்பிச் சென்றால், "இலங்கையர்கள் திரும்பிச் செல்கிறார்கள். அதனால் அவர்களின் அகதிக் கோரிக்கைகளில் நியாயம் இல்லை" என்று ஆஸ்திரேலிய எதிர்க் கட்சிகள் கூச்சலிடும். இதில் நியாயமாக தஞ்சம் கோரும் தமிழர்களின் வாழ்க்கையும் அடிபட்டுப் போகும்.

இதனால், இப்போது கிறிஸ்மஸ் தீவில் இருக்கும் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகம் எல்லாம், இப்படிப்பட்ட ஒரு நிலையை ஏற்படுத்த இலங்கை அரசே திட்டமிட்டு சிங்களவர்களை ஆஸ்திரேலியாவுக்கு கப்பல் ஏற்றுக்கிறதா என்பதுதான்.

## வரலாற்றுப் பாடம்

2009ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியா நோக்கி புறப்பட்ட கப்பல் ஒன்று இந்தோனேஷிய கடற்பரப்பில் மறிக்கப்பட்டது. 'மெராக்' என்ற அந்தக் கப்பலில் இருந்த சுமார் 253 அகதிகளும் 6 மாதங்களாக கப்பலை விட்டு இறங்க மறுத்துப் போராட்டம் நடத்தினார்கள். கடலிலேயே இருந்து ஆர்பாட்டம் செய்தனர்.

தங்களை ஆஸ்திரேலியா பொறுப்பேற்க வேண்டும் என்றும் போராட்டத்தைக் கைவிடவேண்டும் என்றால் இந்தோனேஷியாவில் வைத்தே அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தால் "அகதி" என்ற அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். ஆஸ்திரேலிய மற்றும் இந்தோனேஷிய அரசுகள் அவர்கள் கேட்டதற்கெல்லாம் தலையாட்டி, அவர்களைக் கப்பலைவிட்டு இறங்க வைத்தன.

இது நடந்து மூன்று ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் இன்னமும் அவர்கள் ஆஸ்திரேலியாவுக்கு வந்து சேர்ந்த பாடாக இல்லை. அவர்கள் அனைவரும் இந்தோனேஷியாவின் குடியகல்வு மற்றும் குடிவரவு திணைக்களத்தின் பராமரிப்பில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் விசாரணைகளின் பின்னர் குடியேறிகளுக்கான சர்வதேச அமைப்பான ஐ.ஓ.எம். அவர்களைப் பொறுப்பெடுத்தது. தனி நபர்களுக்குக் ஹோட்டல்களில் அறைகளும் குடும்பங்களுக்கு வீடுகளும் வழங்கப்பட்டன. ஆனால் வேறு வருமானங்களை அவர்கள் தேடமுடியாது. குழந்தைகளுக்கு கல்வியும் புகட்ட முடியாது. இதனால் சிறுவர்கள் குழந்தைகள் எனப் பலரும் அங்கு முடங்கியே இருக்கின்றனர்.

கடந்த மூன்று வருட காலப்பகுதியில் இரண்டு குடும்பங்களை மட்டுமே அகதிகளை ஏற்கும் நாடுகள் அங்கிருந்து பொறுபேற்றுள்ளன. 'மெராக்' கப்பலில் வந்த 27 வயதுடைய யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஜோசப் என்ற இளைஞர், லண்டனைத் தளமாக கொண்டு இயங்கும் 'பைனான்ஸிஸ்ரைம்' என்ற பத்திரிகைக்கு வழங்கி பேட்டி ஒன்றில், "நீண்ட காலமாகக் காத்திருக்கிறேன். ஆனால் இதுவரை அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக எனக்கு அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் அறிவிக்கவில்லை. இதனால் எனக்கு பயமாக உள்ளது. ஏனவே நான் எதற்காவும் காத்திருக்கப் போவதில்லை. கடலில் செத்தாலும் பரவாயில்லை மீண்டும் படகு மூலம் ஆஸ்திரேலியவுக்குப் புறப்படப் போகிறேன்" என்று தெரிவித்திருந்தார்.

இவர்களின் நிலைமை இப்படி இருக்கும் நிலையிலேயே தற்போது ஆஸ்திரேலியா வரும் அகதிகளை நவ்று மற்றும் பப்புவா தீவுகளுக்கு அனுப்புகிறார்கள். மூன்று மாதங்களில் அவர்களின் விசாரணைகள் முடிக்கப்பட்டு அவர்கள் ஆஸ்திரேலியாவின் பிரதான நிலப்பரப்புக்குள் உள்வாங்கப் படுவார்கள் என்று அவர்களுக்கு உறுதிமொழி வழங்கப்படுகிறது.

ஓகஸ்ட் மாதம் நிறைவேற்றபட்ட சட்டத்துக்கு அமைய கடந்த மாதம் மட்டும் சுமார் 80 அகதிகள் நவ்று மற்றும் பப்புவா தீவுகளில் உள்ள தடுப்பு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திணைக்களங்களாகும் அதிகாரசபைகள்

■ சுகந்தன்




"சமுர்த்தி அதிகாரசபை, தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை, உடரட்ட அபிவிருத்தி அதிகார சபை ஆகிய மூன்றையும் உள்ளடக்கியதே 'திவிநெகும' எனப்படும் வாழ்வெழுச்சித் திட்டமாகும்.

இலங்கையின் பல பாகங்களிலும் வறுமையால் பீடிக்கப்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள்.

இவர்கள் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்குடன் அன்றன்று உழைத்து அதில் கிடைக்கும் வருமானத்தின் மூலம் தமது உணவுத் தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

இவர்களது வாழ்வை முன்னேற்றும் முகமாக கொண்டுவரப்பட்டதே சமுர்த்தி அதிகார சபை ஆகும்.

1995 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி அப்போதைய ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க அம்மையாரால் இத்திட்டம் கொண்டுவரப்பட்டது.

இதேபோன்று 1996ஆம் ஆண்டு தெற்கு அபிவிருத்தி அதிகார சபையும், 2005 ஆம் ஆண்டு உடரட்ட அபிவிருத்தி அதிகார சபையும் நிறுவப்பட்டன.

கிராமங்கள் தோறும் மிகவும் குறைந்த வருமானமுடைய குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றை சிறு சிறு குழுக்களாக இணைத்து செயற்பட வைத்தலே சமுர்த்தி அதிகார சபையின் முதல் பணியாக இருந்தது.

இவ்வாறு சிறு குழுக்களாக இணைந்த மக்களிடையே தலைமைத்துவப் பண்புகளை வளர்த்து, அவர்கள் தங்கள் குடும்பங்களில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு அவர்களே தீர்வைக் காண்பதற்கு வழிகோலுதல் அதன் நோக்கம்.

இதைவிட இக்குழுக்களுக்கிடையே கலந்துரையாடல்களை நிகழ்த்துவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அந்த மக்களிடையே இலைமறை காயாக ஒழிந்து கிடக்கும் திறன்களை வெளிக்கொணர்ந்து அதன் மூலம் அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்தவும் திட்டமிடப்பட்டது.

அவர்கள் முன்வைக்கும் சிறு கைத்தொழில் முயற்சித் திட்டங்களை அவர்களது திறைமைக்கு ஏற்ப ஊக்குவித்தல். இவற்றுக்கு சமுர்த்தி வங்கிகள் மூலம் கடன்க்ள் வழங்கல் போன்ற செயற்பாடுகளை சமுர்த்தி அதிகார சபை மேற்கொள்கின்றது.

இந்தச் சமுர்த்தி வங்கியானது மற்றைய வங்கிகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டதொன்றாகும். இந்த வங்கி மத்திய வங்கியின் கீழ் நிர்வகிக்கப்படாததோடு சமுர்த்திப் பயனாளிகள் மட்டுமே இதில் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த வங்கி மூலம் பிணை காட்டி கடன்களைப் பெறவேண்டிய சிரமங்கள் இருப்பதில்லை.

மக்கள் தமக்கிடையே குழுக்களாக சேர்ந்து கடன்களைப் பெற முடியும். ஒருவர் பெறும் கடனுக்கு அவரின் குழுவிலுள்ள அங்கத்தவர்களே பொறுப்பாளிகளாவர்.

இதன் மூலம் ஆதனங்களோ அல்லது பிணை வழங்கக் கூடிய ஆளணிகளோ இல்லாத மிகவும் வறுமைப்பட்ட கிராமிய மட்டத்திலான குடும்பங்கள் தமக்கான சிறுதொழில் கடன்களைப் பெற வழியேற்பட்டது. சமுர்த்தி என்றால் சுபீட்சம், எனவே சுபீட்ச நிலையை நாட்டில் ஏற்படுத்துவதற்காகவும் சமூக பொருளாதார, கலாசார பண்பாட்டியல் துறைகளில் அபிவிருத்தியை ஏற்படுத்தும் முகமாகவும் கிராமிய மட்ட நிலையில் செயற்படுத்திய இந்தத் திட்டத்தின் மூலம், நாட்டின் சனத்தொகையின் சுமார் 30 வீதமாக இருந்த வறுமை நிலை படிப்படியாகக் குறைவடைந்து 7 வீதத்துக்கு வந்துள்ளதாக கூறுகிறார் சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகமும் சட்டத்தரணியுமான பந்துல திலகசிரி.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமுர்த்தி அதிகாரசபை, தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை, உடரட்ட அபிவிருத்தி அதிகார சபை ஆகிய மூன்றையும் உள்ளடக்கி மஹிந்த சிந்தனையின் கீழ் இவ்வருட வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டபடி 'திவிநெகும' எனப்படும் வாழ்வெழுச்சித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் யாது? சமுர்த்தி அதிகார சபையை திணைக்களம் ஆக்குவதன் தேவைதான் என்ன? அதனால் மக்களுக்குக் கிடைக்கும் நன்மை என்னவாக இருக்கும் என்பதே தற்போதைய கேள்விகளாகும்.

இதற்குப் பதிலளித்த சமுர்த்தி அதிகார சபைப் பணிப்பாளர் பந்துல திலக சிரி,

சமுர்த்தி அதிகார சபையில் உள்ள ஊழியர்களுக்கு அரச ஊழியர்களின் வரப்பிரசாதங்கள் கிடைக்கவில்லை, பென்ஷன், அரச வீட்டு உரிமை, போக்குவரத்து வசதி எனதுமக்கும் அந்த வசதிகள் தேவை என அவர்களால் எழுப்பப்பட்ட கோரிக்கைகளைத் தொடர்ந்தே அவற்றை வழங்க நாம் இணங்கினோம். அதன்பிரகாரமே நாம் சமுர்த்தி அதிகார சபையை திணைக்களங்களாக தரமுயர்த்துகிறோம் என்றார்.

எனவே சமுர்த்தி அதிகார சபை 'திவிநெகும' திட்டத்தின் கீழ் திணைக்களமாக மாற்றப்படின் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சுமார் பல்லாயிரக்கணக் கானோருக்கு, அரச உத்தியோகத்தர்களது சலுகைகள் வழங்கப்படும்.

அவர்களுக்கான ஊழியர் சேமலாபநிதி முறை மாற்றப்பட்டு பென்சன் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும். அரச உத்தியோகத்தர்களுக்கான கௌரவமும் இவர்களுக்கு கிட்டும்.

இதன் பிரகாரம் மேற்படி அதிகார சபைகளை திணைக்களங்களாக மாற்றுவதற்கான திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு மாகாண சபைகளிடம் அனுமதி பெறப்பட்டு வருகிறது.

ஆனால் இந்த அனுமதியை மாகாண சபைகள் வழங்கக்கூடாதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறி வருகிறது.

அதாவது இதுவரை இவை அதிகார சபைகளாக இருக்கும் போது, கிராமிய மட்ட மக்களுக்கு மாகாண சபைகள் மூலம் சேவைகளை வழங்க முடிந்தது.

ஆனால் இப்போது சமுர்த்தி அதிகார சபைகள் உட்பட மூன்று அதிகார சபைகள் திணைக்களங்களாக மாற்றப்படின் (திவிநெகும திட்டத்தின் கீழ்) அது மத்திய அரசின் கீழே சென்றுவிடும். ஏற்கனவே காணி அதிகாரம் மற்றும் பொலிஸ் அதிகாரம் போன்றவற்றை இழந்து தவிக்கும் மாகாண சபையிடமிருந்து தற்போது சமுர்த்தி அதிகார சபை மூலம் கிராம மட்ட மக்களுக்கு சேவைகளை வழங்கும் அதிகாரமும் பறித்தெடுக்கப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தண்டாயுதபாணி குற்றஞ்சாட்டுகிறார்.

இருப்பினும் தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் எட்டு மாகாண சபைகளிலும் திவிநெகும திட்டத்துக்கான அங்கீகாரம் அரசால் பெறப்பட்டுவிட்டது. கிழக்கு மாகாணத்தில் எதிர்க்கட்சிகளின் பலத்த எதிர்ப்புக்கும் மத்தியில் இத்திட்டத்துக்கு அனுமதி கிடைத்துள்ளது.

ஆனால் வடக்கில் மாகாண சபை இயங்காத நிலையில் இதற்கான அனுமதியைப் பெறுவதில் அரசு திக்குமுக்காடி வருகிறது.

வடக்கில் மாகாண ஆளுநரின் அனுமதியை மட்டும் வைத்துக்கொண்டு இத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முனைவதாகத் தெரிகிறது. மக்கள் பிரதிநிதி அல்லாமல் வெறுமனே ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆளுநரின் கருத்து எவ்வாறு வடக்கு மக்களின் கருத்தாக அமையும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதற்கு ஆதரவாக சரத்பொன்சேகாவும் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

எது எவ்வாறாயினும் ஓர் அரசு ஆட்சியில் இருக்கும் போது கொண்டுவரும் அபிவிருத்தித் திட்டத்தை அடுத்தமுறை ஆட்சிக்கு வரும் வேறு அரசு, முன்னைய அரசின் திட்டங்களை மாற்றி சில முன்னேற்றங்களுடன் புதிய திட்டத்தை கொண்டு வருவது வழமை. அதேபோலவே முன்னர் 1995ஆம் ஆண்டு சந்திரிகா அம்மையார் கொண்டு வந்த சமுர்த்தித் திட்டத்தை தற்போது ஆட்சியில் உள்ள மஹிந்த அரசு 'திவிநெகும' திட்டமாக தனது மஹிந்த சிந்தனையின் படி மாற்றியமைக்கவுள்ளது.

'அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா' என்று இத்திட்டத்தையும் எடுத்துக்கொண்டாலும் தமிழர்கள் தமக்குத் தேவை என போராடும் அதிகாரப் பகிர்வுக்கு மாறாக இத்திட்டம் இருக்கும். ஏற்கனவே மாகாண சபைகளுக்கு கீழ் உள்ள இந்த சிறிய அதிகாரத்தைக்கூட மத்திய அரசின் கீழ் குவிக்கவே இது வழி கோலுகிறது.

மேலதிகமான அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதை விடுத்து இருக்கும் அதிகாரத்தையும் பறிப்பது எதிர்காலத்தில் அதிகாரப் பகிர்வை கேட்கும் சிறுபான்மையினரது கோரிக்கைகளுக்கு வலுச் சேர்க்குமா என்பது புரியாத புதிராகவே உள்ளது. எது எப்படி அமைந்தாலும் 'திவிநெகும' திட்டத்தின் மூலம் கிராமிய மட்ட மக்கள் நன்மையடைவர் என்பதில் ஐயமில்லை. ★

# பெட்டைப் புலம்பல்...

(19ஆம் பக்கத் தொடர்ச்சி....)

புலம்பல் புலம்பும் இவர்கள் வெறும் மரங்கள் எனப் பேசுகிறான். இது சமூகத்துக்கு பாரதி பாஞ்சாலி சபதத்தின் ஊடாகச் சொல்லும் மேலுமொரு செய்தி.

சமூகத்தில் சகுனி, துரியோதனன், துச்சாதனன் போன்ற துஷ்டர்கள் இருக்கத்தான் செய்வார்கள். பாஞ்சாலி போன்ற அப்பாவிப் பெண்கள் மேல் இவர்களது பார்வை பட்டால் பெண்கள் பாஞ்சாலியைப்போல் துணிவுடன் எதிர்த்துக் கேள்வி கேட்க வேண்டும். அதையும் மீறி கைகள் படுமானால் சமூகம் அவர்களை எதிர்கொண்டு வீழ்த்தவேண்டும் இது பாரதியின் பார்வை- பாரதியின் கனவு.

இன்றைய எமது சமூகத்திலே பெண்களுக்கு எதிராக ஏராளமான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. துஷ்பிரயோகங்கள், பாலியல் சேஷ்டைகள், பாலியல் துன்புறுத்தல்கள், வன்புணர்வுகள் என பல்வேறு தரப்பினரால் மேற்கொள்ளப்படுகின்ற இப்படியான செயற்பாடுகளால் பெண்கள்- [illegible] தைப்படுத்தப்[illegible] பெண்களைத் தீண்டும் தீயவர்களைப் பார்த்து பல சந்தர்ப்பங்களில் சமூகம் பொங்கி எழுந்து சீறியது - குமுறியது- திட்டியது. அது மட்டுந்தான். அத்தோடு அவர்களது சீற்றம் தீர்ந்து விடுகிறது. இவர்களைத் தான் பாரதி "பொட்டைப்புலம்பல்" புலம்புவர்கள் என்றும், "நெட்டை மரங்கள்" என்றும் திட்டித்தீர்த்தான்.

அநீதிக்கு எதிராகக்குரல் கொடுப்[illegible]மல்- வாய் வீரர்களாக [illegible]ல்- செயல் வீரராக மாறித் தீயவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பது பாரதியின் கனவு. வெறும் மரங்களென நிற்காமல் மனிதர்களாக மாறவேண்டும். பாதிக்கப்பட்ட பெண்கள்பாஞ்சாலிபோன்று "சபதம்" கொள்ள வேண்டும். அறிவும்- உணர்வும் கொண்ட மனிதர்களாக எப்பொழுது மாறுகின்றோமோ, அப்போது சமூக அநீதிகள் அழியும், நீதி பிறக்கும், சமூகம் விடுதலை காணும், நாடு இன்பமுறும். "இந்த நானில முற்றும் நல்லின்பத்தில் வாழ்க!" என்ற பாரதியின் வாழ்த்தும் அப்போது பலிக்கும்! உண்மைச் சுதந்திர விடுதலை கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் தாவர உணவுகளை மட்டுமே உண்ணும் பகீரா கிப்லிங்கி சிலந்தி



தாவர உணவை மட்டும் உண்ணும் சிலந்தி வகை ஒன்று பற்றிய தகவல்களை அறிவியலாளர்கள் தற்போது அறிவித்துள்ளனர்.

ERµö Q " ¼ [ Q (Bagheera kiplingi) எனப்படும் இந்த வகை சிலந்திகள் நடு அமெரிக்காவிலும் மெக்சிக்கோவிலும் வாழ்ந்து வருகின்றன. இவையே சிலந்தி வகைகளில் தாவர உணவை மட்டும் உண்பவை. இவற்றைவிட ஏனைய இதுவரையில் அறியப்பட்ட கிட்டத்தட்ட 40000 சிலந்தி வகைகள் அனைத்தும் ஊனுண்ணி வகைகளாகும். இது குறித்த ஆய்வுக் கட்டுரை நடப்பு உயிரியல் என்ற அறிவியல் இதழில் வெளியிடப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்காவில் பென்சில் வேனியாவின் விலனோவா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ராபர்ட் கறி என்பவரின் தலைமையில் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

பாயும் சிலந்தி தேள் வகுப்பு, வகுப்பைச் சேர்ந்த இவை 5-6 மில்லி மீற்றர் நீளமானவை. புரதங்கள் நிறைந்த அக்காசியா வகைத் தாவரங்களின் குருத்துக்களையே இவை பெரும்பாலும் உண்கின்றன. ஆனாலும் இந்த மரத்தின் இலைகளை அடைவதற்கு இந்தச் சிலந்தி அந்த மரங்களின் துளைகளில் வாழும் எறும்புகளை விலக்கியே வர வேண்டியிருக்கிறது.

இந்த வகை சிலந்திகளின் ஊண் உண்ணாமை முதல் தடவையாகக் கொஸ்டா ரிக்காவில் 2001 ஆம் ஆண்டில் எரிக் ஒல்சென் என்பவரால் கண்பிடிக்கப்பட்டது. பின்னர் 2007 ஆம் ஆண்டில் கிறிஸ்டோபர் மீகன் என்பவரால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பின்னர் தற்போது பேராசிரியர் ஹரியின் தலைமையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. ராபர்ட் ஹரி இது குறித்துக் கருத்து தெரிவிக்கையில், தாவரங்களை மட்டுமே தேடிச் செல்லும் சிலந்தி உலகில் இதுவொன்றே எனத் தெரிவித்தார்.

இவை பாயும் சிலந்திகளாதலால் தமது உணவுக்காக வலைகளைப் பின்ன வேண்டியதில்லை. அவ்வப்போது எறும்புகளால் அக்கேசியா தாவரங்கள் சூழப்படும் போது மாத்திரம் கீழ் இறங்கிய பின்னர் எறும்புகள் திரும்பி விட அவையும் மீண்டும் ஏறிவிடுகின்றன. அத்துடன் அவற்றுக்குப் போஷணைக் குறைபாடு ஏற்படும் இடத்து எறும்புகளில் குடம்பிகளை உடைத்து அதன் சாற்றையும் குடிக்கின்றன. அக்காசியாக்கள் ஆண்டு முழுவதும் இலைகளைத் தருவதால் இந்தச் சிலந்திகளுக்கு உணவுக்குப் பஞ்சமில்லை என்று தெரிவித்தார் பேராசிரியர் ராபர்ட் ஹரி.

1717 FOLLOW US ON www.mobitel.lk
மத்திய கிழக்கு உட்பட 50 நாடுகளுக்கு
ரூ. 100 இற்கு ரீலோட் செய்யும் போது
02 நிமிடங்களுக்கான IDD
நிமிடத்திற்கு 50 சதம்
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 433
இக் கொடுப்பனவு 2012 ஒக்டோபர் 31 வரை மட்டுமே செல்லுபடியாகும்.
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது. அரச வரிகள் மற்றும் தீர்வைகளுக்கு உட்பட்டது.
Sri Lanka Telecom
Mobitel
We Care. Always.

உங்களுக்கான ஆடம்பரமான வீடு யாழ்ப்பாணத்தில்
எமது அபார்ட்மெண்ட் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள அழையுங்கள்
0714 960 160



TULASI MAHAL
கட்டுமானப் பணி நடைபெறுகின்றது. 2013 ஆம் ஆண்டு ஒக்டோபரில் பூர்த்தியாகும்.
071 8179035
பெனின்சுலர் புரொபர்டி டிவலபர்ஸ் பிரைவேட் லிமிடட்
இல. 10, அல்பர்ட் கிரசண்ட், கொழும்பு 7.
email : tulasimahal@gmail.com
Sanken
www.tulasimahal.lk

IELTS™

IELTS test in Jaffna on 27 October 2012

About the test

International English Language Testing System (IELTS) is an English proficiency test that opens doors to a host of opportunities including university placement and migration.


The British Council provides FREE study support to help you through your IELTS test:

- FREE practice work book
- FREE 30-hour online preparation course
- Preparation material at the Jaffna public library*

Register now for your IELTS at the British Council or through any of our registration centres islandwide
www.britishcouncil.org/srilanka-exams-ielts-registration-centres.htm

For more information please call us on (011) 7521521

*Limited collection




BRITISH COUNCIL

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# அமிலத்தினால் பல நன்மைகள் உண்டு

அமிலங்கள் குறிப்பாக நமது உடலில் உள்ள உயிரணுக்களை ஒன்று சேர்த்து பிணைப்பதாகும். இதனால் புதிய செல்களை உற்பத்தி செய்யவும், அழிந்த செல்களை மாற்றவும் விற்றமின் சி துணை புரிவதாக மருத்துவ வல்லுநர்கள் கூறுகின்றனர். விற்றமின் சி பற்றாக்குறையால் முடியில் நிறமாற்றம், முடி உதிர்தல், தோலில் ரத்த கசிவு, கறுப்பு புள்ளிகள் தோன்றுதல் போன்ற நிலைகள் ஏற்படும். இதற்கு விற்றமின் சி அதிக முள்ள உணவுகளை கொடுத்தால் எளிதில் குணப்படுத்தலாம். விற்றமின் சி இருக்கும் உணவுகளை நாம் சாப்பிடுவதால் பல்வேறு நன்மைகள் உண்டாகிறது. குறிப்பாக இது உணவிலுள்ள இரும்புசத்தை ஜீரணிக்க உதவுகிறது. மேலும் விற்றமின் சி குறைவதால் ஜலதோஷமும் ஏற்படும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். தற்போது மூளைப் புற்றுநோய் கட்டிகளை உடைப்பதில் விற்றமின் சி முக்கிய பங்கு வகிப்பதும் தெரியவந்துள்ளது.

அதிகளவு விற்றமின் சி கொடுக்கப்பட்டால் புற்றுநோய் கட்டி உடைய தொடங்குகிறது என்றும், அதன் பின் ரோடியோ தெரப சிகிச்சை மேற்கொள்வதன் மூலம் நல்ல பயனைப் பெறலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.




# எறுப்புகளின் செயற்பாடு



உணவு தேடிச் செல்லும் எறும்புகளைப் பார்த்திருப்பீர்கள். தங்கள் வசிப்பிடத்திலிருந்து வெகு தொலைவுக்கு இவை உணவு தேடிச் செல்லும்.

ஏதாவது உணவு கிடைத்தால் அதை எடுத்துக்கொண்டு மிகச் சரியாக தங்கள் வசிப்பிடத்துக்குத் திரும்பிவரும்.

இவ்வளவு தொலைவில் தங்கள் இடம் இருக்கிறது என்று இவற்றுக்கு எப்படித் துல்லியமாகத் தெரிகிறது?

இது குறித்து சில விஞ்ஞானிகள் ஆய்வு செய்தபோது ஒரு சுவாரஸ்யமான உண்மை தெரிய வந்தது. எறும்புகள் நடக்கும்போது தாங்கள் எத்தனை காலடிகள் வைத்து நடக்கிறோம் என்று ஒரு விதமாகக் கணக்கு வைத்துக்கொள்வதுண்டாம். திரும்பி வரும்போதும் அத்தனை அடிகள் வைத்து தங்கள் இடத்தை அடைகின்றனவாம். உணவு சேகரித்து, வசிப்பிடத்துக்குத் திரும்பிச் செல்லும் எறும்புகளை ஆய்வு செய்தபோதுதான் இது தெரிந்தது.

விஞ்ஞானிகள் சில எறும்புகளின் கால்களில் நுட்பமான, மிகச் சிறிய குச்சிகளை வைத்துக் கட்டியுள்ளனர். அப்போது அந்த எறும்புகளின் கால்கள் சற்று நீளக் கால்களாகிவிட்டன.

சில எறும்புகளின் கால்களைத் துண்டித்துச் சிறிதாக்கினார்கள். நீளக் கால்கள் உள்ள எறும்புகள் நடந்து நடந்து தங்கள் இடத்திற்கு அப்பால் சென்றுவிட்டன. சிறிய கால்கள் உள்ள எறும்புகள் தங்கள் இடத்தை அடையவே இல்லை என்று ஆய்வில் தெரிவித்தனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்களைப் பாதுகாக்கும் எலிகள்

எலிகள் கொறித்து உண்ணும் பாலூட்டி இனத்தைச் சேர்ந்தவை. அணிலும், முள்ளம் பன்றியும் இதே இனத்தைச் சேர்ந்தவைதான். மேல் தாடையில் உள்ள வெட்டுப் பற்கள் தொடர்ந்து வளர்ந்துகொண்டிருப்பதுதான் இவற்றின் முக்கியமான சிறப்பம்சம். இந்தப் பற்கள் தாமாகவே கூர்மையடையும். வெட்டுப் பற்களின் முன் பகுதியில் மட்டுமே எனாமல் இருக்கும். அதனால் தொடர்ந்து பயன்படுத்தும்போது, அந்தப் பற்களின் பின்புறம் தேய்ந்துகொண்டிருக்கும். அப்படித்தான் பற்கள் உளிபோன்று கூர்மையாகின்றன. நமது முன் பற்களையும் வெட்டுப் பற்கள் என்று சொல்லலாம்.

என்றாலும் அவை எலிகளின் வெட்டுப் பற்களைப் போன்றவை அல்ல. கொறித்துண்ணும் இனத்தைச் சேர்ந்தவற்றின் முன் பற்கள் தொடர்ந்து வளர்ந்துகொண்டிருக்கும் எனவே அவற்றைத் தொடர்ந்து பயன்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். இல்லை என்றால் அந்த முன் பற்கள் மிகவும் நீளமாக வளர்ந்துவிடும். பிறகு எதையும் கடிப்பதற்கு இயலாமல் போய்விடும். எப்போதாவது, மேல் வரிசை வெட்டுப் பற்கள் வளர்ந்து வாயைத் துளைத்துக் கொண்டு கீழே வந்துவிடுவதும் உண்டு. எனவே, எதையாவது கடித்துக் கொண்டிருப்பதைத் தவிர எலிகளுக்கு வேறு வழி இல்லை. முக்கியமாக, எலிகள் மென்மையான உணவுகளையே அதிகம் தின்றுகொண்டிருக்கும் போது பற்களின் நீளம் அதிகமாகும். அதுபோன்ற சூழ்நிலைகளில் மரம், பிளாஸ்டிக், கம்பி ஆகியவற்றைக் கடித்துக் கடித்துப் பற்களின் நீளம் அதிகரிக்காமல் எலிகள் பார்த்துக்கொள்ளும்.


## சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிதியத்தின் வெளியீடுகள்
(LAW & SOCIETY TRUST PUBLICATIONS)

**இலங்கையில ஆட்கொணர்வு எழுத்தாணை**
அசாதாரண நிலைமைகளில் இவ்வெழுத்தாணை தொடர்பிலான கோட்பாட்டு அடிப்படை மற்றும் நடைமுறைப் பிரயோகம்
கிஸாலி பின்ரோ ஜயவர்த்தன/ ஜெயந்த டி அல்மெய்டா குணரட்ண - ரூ. 250/-

**மனித உரிமைகள் தொடர்பான சவால்களும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும்**
பா. ஸ்கந்தக்குமார் - ரூ. 300/-

**உயர் நீதிமன்றத்தின் அடிப்படை உரிமைகள் நியாயாதிக்க நியதிகளின் கீழ் சுதந்திரத்திற்கான உரிமையின் நீதியியல் பதிலளிப்பு - (2000-2007)** மதுஸிக்கா ஜயசந்திரா/டினேஸா சமரட்ண
தொகுப்பாளர்: கிஸாலி பின்ரோ ஜயவர்த்தன - ரூ. 250/-

**இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார தகுதிநிலை**
தொகுப்பாசிரியர்: பா. ஸ்கந்தகுமார் - ரூ. 250/-

**"கைவிடப்பட்ட மறக்கப்பட்ட": இலங்கை பெண் தொழிலாளர்கள்**
தொகுப்பாசிரியர்: பா. ஸ்கந்தகுமார் - ரூ. 250/-

**இலங்கையில் மொழியுரிமைகள்: தமிழை ஓர் அரசகரும மொழியாக நடைமுறைப்படுத்தல்**
தொகுப்பாசிரியர்: பா. ஸ்கந்தகுமார் - ரூ. 350/-

**இலங்கை: மனித உரிமைகளின் நிலை**
இவ் அறிக்கை இலங்கையில் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான நிலமைகளை வருடாந்தம் வெளிப்படுத்துவதுடன் அவை தொடர்பில் சர்வதேச மற்றும் அடிப்படை உரிமைகளுக்கான கடப்பாடுகளை இலங்கை எந்தளவிற்கு உறுதிப்படுத்தியுள்ளது என்பதையும் மதிப்பிட முயற்சிக்கின்றது.

LAW & SOCIETY TRUST
No. 3, Kynsey Terrace,
Colombo 8, Sri Lanka.
Tel : +94 11 2684845 2691228
Fax : +94 11 2686843
E-mail Publications.lst@gmail.com
Web : www.lawandsocietytrust.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடல் வெப்பம் அதிகரிப்பதால் மீன்களின் உடல் எடை குறைகிறது



பருவநிலை மாற்றத்தாலும் கடல் வெப்பம் அதிகரிப்பதாலும் மீன்களின் உடல் எடை குறைந்துகொண்டே வருகிறது என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

50 ஆண்டுகளில் மீன்களின் எடை 20 சதவீதம் வரை குறைந்துவிடும் என்று கூறியுள்ளனர்.

கடல் வெப்பம் தொடர்பாக கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் மீன்வள ஆய்வு மையம் சமீபத்தில் ஒரு ஆய்வு நடத்தியது.

உலகம் முழுவதும் பருவநிலை மாற்றம் மற்றும் கடல் வெப்பம் அதிகரிப்பால் கடல் உயிரினங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றி தீவிரமாக ஆராயப்பட்டது.

கம்ப்யூட்டர் உதவியுடன் 600,க்கும் மேற்பட்ட கடல் மீன் வகைகளின் மாதிரிகள் உருவாக்கப்பட்டு ஆய்வு நடத்தப்பட்டது.

இதில் தெரியவந்த தகவல்கள் பற்றி ஆய்வு குழு தலைவர் பேராசிரியர் வில்லியம் சியூங் கூறியதாவது:

சுற்றுச்சூழல் பாதிப்பு காரணமாக உலகம் முழுவதும் பருவநிலையில் பெருத்த மாற்றங்கள் ஏற்பட்டு வருகிறது. கடல் வெப்பமும் கணிசமாக அதிகரித்துள்ளது.

இதனால், மீன்களின் வாழ்க்கை முறை பாதிக்கப்படுவது தெரிந்ததே. கடல் வெப்பத்தால் மீன்களின் உடல் வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது என தற்போது தெரியவந்துள்ளது.



# பனிக்கட்டி மழை எவ்வாறு பொழிகிறது?

பூமிப் பரப்பிலிருந்து மேலே உயர்ந்து செல்லும் வெப்ப நீராவி மிக விரைவில் குளிர்வடையும்போதுதான் பனிக்கட்டி மழை உண்டாகிறது என்று பெரும்பாலான விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். சூடான நீராவி பூமியிலிருந்து ஏறத்தாழ 1000 - 2000 மீற்றர் உயரத்தை அடையும்போது அது, மேலிருந்து கீழே வந்துகொண்டிருக்கும் குளிர்ந்த காற்றுடன் கலக்கிறது. இந்தச் சூழ்நிலையில் நீராவி சட்டென்று குளிர்ந்து மிகச் சிறிய பனிக்கட்டித் துண்டுகளாக மாற்றமடைகிறது. இந்தச் செயல்பாடு திரும்பத் திரும்ப நிகழும்போது, பனிக்கட்டித் துண்டுகளின் பருமனும் எடையும் அதிகரிக்கிறது, கீழ்நோக்கிப் பொழிகிறது. நம் நாட்டில் அரிதாக எப்போதாவதுதான் பனிக்கட்டி மழை பொழிகிறது. ஆனால், குளிர் நாடுகளில் பனிக்கட்டி மழை என்பது சாதாரணம். பனிக்கட்டி மழையின் காரணமாக சில ஐரோப்பிய நாடுகளில் விளை பயிர்கள் பெருமளவில் நாசமடைவது உண்டு. திராட்சைத் தோட்டங்கள்தான் அதிக அளவில் அழியும்.

- பொதுவாக, அதிக பருமன் இல்லாத பனிக்கட்டிகள்தான் மழையாகப் பொழியும். ஆனால் சில சந்தர்ப்பங்களில் அதிக பருமனுடைய பனிக்கட்டிகள் பொழியும். 1889 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நியூ செத் வெயில் எனும் இடத்தில் பொழிந்த பனிக்கட்டி மழையின் ஒவ்வொரு கட்டியும் ஒரு கிரிக்கெட் பந்து அளவு பெரிதாக இருந்தது. சிறிய பனிக்கட்டிகள்கூட அதிக உயரத்திலிருந்து வேகத்துடன் வந்து வீழ்வதால், மனிதர்களுக்கும் கட்டடங்களுக்கும் அபாயம் ஏற்படும். பனிக்கட்டி மழை பெரிய பரப்பளவுள்ள இடத்தில் பொழியாது. சிறிய இடத்தை மையம் கொண்டுதான் பொழியும்.












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மனிதனின் அழிவின் பின்னும் வாழப்போகும் கரப்பான் பூச்சி

அணுகுண்டு ஒன்று வெடித்து பெரும் உயிர் அழிவு ஏற்பட்ட பின் சுடுகாடாக மாறியிருக்கும் பிராந்தியத்தை பார்க்க கூடிய ஒரு உயிரினம் ஒன்று உள்ளது என்றால் அது வீட்டில் வாழும் கரப்பான் பூச்சிதான்.

கரப்பான் பூச்சி மனிதனை விட பல ஆயிரம் மடங்கு கதிர் வீச்சை தாங்கிக் கொள்ளும் ஆற்றல் படைத்தது. மனிதனின் அழிவின் பின்னும் வாழப்போகும் இவை தோன்றியது மனித இனம் தோன்றுவதற்கு முன். அதாவது 350 மில்லியன் வருடங்களுக்கு முன் தோன்றியவை. உலகின் துருவப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய எல்லாப் பகுதிகளிலும் வாழும் கரப்பான் பூச்சியின் தாயகம் ஜேர்மனி நாடாக இருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர்களின் கணிப்பாகும்.

தற்போது உலகில் சுமார் 3, 490 கரப்பான் இனங்கள் வாழ்வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவை ஆறு குடும்பங்களாக வகைப்படுத் தப்பட்டுள்ளன. கரப்பான் பூச்சி தலை நெஞ்சு வயிறு எனும் மூன்று பிரதான பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இவற்றிற்கு மூன்று சோடி கால்களும் ஒரு சோடி உணர்கொம்பும் உண்டு. கரப்பான் பூச்சிக்கு முதுகெலும்பு கிடையாது. இரண்டு சோடி அல்லது ஒரு சோடி சிறகுகள் காணப்பட்டாலும் சில கரப்பான் பூச்சிக்கு சிறகுகள் கிடையாது. கரப்பான் பூச்சியின் இரத்தம் வெள்ளை நிறமுடையது. இவற்றால் தலை துண்டிக்கப் பட்டாலும் சுவாசிக்க முடியும். சில கரப்பான் பூச்சிகளால் வளி இல்லாமல் 45 நிமிடங்கள் வாழமுடியும்.

உலகின் மிகப்பெரிய கரப்பான் பூச்சி இனம் Giant burrowing cockroach ஆகும். இது ஆஸ்திரேலியாவில் காணப்படுகின்றது.இது 9 சென்ரி மீற்றர்வரை வளரக்கூடியது. இதன் நிறை 30 கிராமை விட அதிகமாக இருக்கும்.

இந்தக் கரப்பான் நிலத்தை 3 அடி(ஒரு மீற்றர்) அழத்துக்கு தோண்டி வசிக்கின்றது. இதன் காரணமாகவே இதற்கு Giant burrowing cockroach என பெயர் வந்தது. இதற்கு சிறகுகள் கிடையாது.

கரப்பான் பூச்சியின் உணர்கொம்புகள் சூழலை அறிய உதவுகின்றது. இரவில் இருட்டில் உணவு வேட்டையை செய்யும். இவை எந்த பாகுபாடுமில்லாமல் எல்லாவிதமான உணவையும் வெட்டியும் அரைத்தும் உண்கின்றன. அப்படி உணவுப் பஞ்சம் ஏற்பட்டால் காகிதம் சவர்க்காரம் போன்றவை கூட உணவாகும். இதற்கு இதன் வலிமை வாய்ந்த தாடைகள் உதவி செய்கின்றன. சில சமயம் உணவே கிடைக்காமல் கரப்பான் பூச்சியினால் மூன்று மாதங்கள்வரை உயிர் வாழ முடியும்.

### ஆஸ்துமா ஆபத்து கரப்பான் பூச்சிகளால் ?

வீடுகளில் அதிக அளவில் கரப்பான் பூச்சிகள், எலிகள் உள்ளதா? உடனடியாக அவற்றை ஒழிக்க முயற்சி எடுங்கள். இல்லாவிட்டால், அவற்றின் மூலம் உங்கள் குழந்தைகளுக்கு ஆஸ்துமா, அலர்ஜி போன்ற நோய்கள் ஏற்படும் ஆபத்து உள்ளதாக புதிய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

வீசிங் எனப்படும் மூச்சுத் திணறல், கடுமையான காய்ச்சல், எக்ஸிமா எனப்படும் ஒவ்வாமை நோய் போன்றவை 3 வயதுக்கும் குறைவான குழந்தைகளுக்கு பரவுவதற்கு கரப்பான் பூச்சிகளும், எலிகள் மூலம் வெளிப்படும் ஒருவகை புரோட்டீனும் காரணமாக அமைவதாக கொலம்பியா குழந்தைகள் சுற்றுப்புறச் சூழல் சுகாதார மையத்தின் ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

கரப்பான் பூச்சிகள், எலிகளால் உடல் நலத்துக்கு ஏற்படும் ஆபத்துகள் குறித்தும், உடல் நிலையில் ஏற்படும் அறிகுறிகள் பற்றியும் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு அறிக்கையை வெளியிட்டனர்.

வீட்டுக்குள் உருவாகும் ஒவ்வாமையில் கரப்பான் பூச்சிகளும், எலிகளும் முக்கியப் பங்கு வகிப்பது கண்டறியப்பட்டது. அதிலும் 3 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு இந்தப் பாதிப்புகள் ஏற்படுவதற்கு அவை காரணமாக இருப்பது தெரிய வந்தது.

### கரப்பான் பூச்சியின் மூளையில் நுண்ணுயிர் எதிர்ப்பு ஆற்றல்

கரப்பான் பூச்சியும் வெட்டுக்கிளியும் மனிதரின் உயிர் காக்கும் மருத்துவர்களாக மாறும் நாள் தொலைவில் இல்லை என இங்கிலாந்தில் உள்ள நாட்டிங்கம் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர் சைமன் லீ என்பவரின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இப்பூச்சிகளின் மூளையில் காணப்படுகின்ற வேதிக் கூறுகள் பல தீங்குதரும் நுண்ணுயிரிகளைக் கொல்லும் தன்மை கொண்டுள்ளன என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கரப்பான் பூச்சி அழுக்கு நிறைந்த சூழலிலும் உயிர் வாழும் தன்மையுடையது. அங்கே தொற்றுநோய்களைப் பரப்பும் நுண்ணுயிரிகள் நிறைந்திருக்கும். இருப்பினும் அந்த நுண்ணுயிரிகளை எதிர்க்கும் சக்தி கரப்பான் பூச்சியின் மூளைப் பகுதியில் காணப்படும் வேதிக் கூறுகளுக்கு உள்ளது.

கரப்பான் பூச்சியின் நரம்பு மண்டலம் நுண்ணுயிரிகளின் தாக்குதலிலிருந்து காக்கப்படுவது வியப்பைத் தருகிறது என்று அறிவியலாளர் கருதுகின்றனர். நரம்பு மண்டலம் நுண்ணுயிரிகளால் தாக்கப்பட்டால் சாவு உறுதி. ஆனால் கரப்பான் பூச்சியிடம் நுண்ணுயிரி எதிர்ப்புத் திறன் மிகுதியாகவே உள்ளது. கரப்பான் பூச்சியின் மூளைப் பகுதியிலிருந்து பெறப்படும் சிற்றளவிலான வேதிக் கூறுகள் நுண்ணுயிரிகளைக் கொல்வதில் 90% திறம் கொண்டவையாக உள்ளனவாம்.

இக்கண்டுபிடிப்பின் விளைவாக மருத்துவத் துறை பயன்பெறும் என்றாலும் அதற்கு சில ஆண்டுகள் செல்லும் என்று ஆய்வாளர் கூறுகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org